வணிகத்தளிர்

VANIKATHALIR

1989 1990

075

4-M

திருக்குடும்பக் கன்னியர் மடம், யாழ்ப்பாணம்

HOLY FAMILY CONVENT

JAFFNA

தளிர் 2

இன்றைய அறிமுகம் நாளைய நாகரீகம்

சோபனா ரெக்ஸ்ரைல்ஸ்

16, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

யாழ் நகரில் தரமிக்க

வெளிநாட்டு, உள்நாட்டு

ஜவுளி வகைகளையும்

மற்றும்

✱ பட்டுப் புடவைகளையும்

ஆடவர்களுக்கான

சேட்டிங் சூட்டிங்

மற்றும்

சாறி வகைகள்

றெடிமேட் ஆடைகள்

அனைத்தையும்

மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

Dealers in

TEXTILES & FANCY GOODS

Shobana Textiles

16, GRAND BAZAAR, JAFFNA.

14534

வணிகத் தளிர்

VANIKATH THALIR

1989 1990

இதழாசிரியர்:

செல்வி. ஷர்மிளா அனீஸ்

COMMERCE STUDENTS ASSOCIATION,
J. / HOLY FAMILY CONVENT,
ENGLISH SCHOOL,
JAFFNA.

வர்த்தக மாணவர் மன்றம்,
யா./ திருக்குடும்பக் கன்னியர் மடம்,
ஆங்கிலப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

தளிரின் உள்ளே ......

		பக்கம்
1)	இலங்கை வங்கி தேசியச் சொத்து — அ. மிராக்கா	2
2)	வங்கி அட்டைகள் — R. லங்காதுரை	6
3)	இரண்டாந்தர பங்குச் சந்தைத் தொழிற்பாடு — தே. ஜெயராமன்	15
4)	வெளிநாட்டு வியாபாரத்தில் ஏற்றுமதி நடைமுறை பற்றிய நோக்கு — இ. வாசுகி	19
5)	சர்வதேச தொடர்பாடல் பற்றி தொகுப்பு ரீதியிலான ஒரு கண்ணோட்டம் — அ. ஷர்மிளா	27
6)	நிறுவனங்களும் அதன் மூலதனத்திற்குப் பங்களிப்புச் செய்தோரும் — ச, சசிகலா	34
7)	சுங்கத் தீர்வையற்ற வர்த்தகக் கடைத் தொகுதிகள் — இ. மரிஷா ஜெஸ்மின்	39
8)	வாடகைக் கொள்வனவு முறை கணக்குகள் — T. ராஜரட்ணம்	43
9)	பங்குடமைக் கலைப்பு — கி. அனெற் செல்வினி	56
10)	கணக்கியல் எண்ணக்கருக்களால் உருவாகும் நடைமுறைப் பிரச்சனைகள் — சி. இமாகியுலேற்று	62
11)	விகிதப் பகுப்பாய்வு — யோ. அன்ரனட்சாந்தி	65
12)	ஒழுங்கு படுத்தும் கணக்கு — ம. ஆன் பிலோமினா	70
13)	மாற்றுண்டியல் — லா. வீணா	76
14)	தேசிய வருமானம் என்ற கண்ணோட்டத்தில் அதை மதிப்பீடு செய்வதில் இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளில் காணப்படும் குறைபாடுகளும் அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகளும் — ஜெ. அகல்யா	82
15)	இலங்கையின் சர்வதேச வர்த்தகம் பற்றிய போக்கு — க. கலாகரன்	86
16)	பொருளாதார அமைப்பு முறைகள் — மை. ரோஸ்மேரி	99
17)	செந்தமிழில் செம்மையாக்கம் — வ. யுகசாந்தி	105
18)	புறநானூற்றின் ஊடாக சங்க கால மக்களின் வாழ்க்கை — யே. எழிலரசி	108
19)	இறைவனின் வார்த்தை — ச. மேரி தயாளினி	112
20)	விஞ்ஞான முறையும் விஞ்ஞான முறையில் நோக்கலும் — யோ. ஜெசிற்று	118
21)	சமூகவிஞ்ஞானத்தில் புள்ளிவிபரவியலின் பங்கு — பெ. யூலியற் வதனி	124

சமர்ப்பணம்

கல்விப் பெருஞ்செல்வம் காத்துவந்து காலமெல்லாம்
நல்வித்தை போதித்த நாயகியே! நற்கிறேஸே!
எம்மைப் பிரிந்தனையே! இம்மலரை உன்னடிக்கே
செம்மைபெற வைத்தோம் சிறப்பு.

"அன்னயாவினும் புண்ணியங்கோடி ஆங்கோர்
ஏழைக்கெழுத்தறிவித்தல்"

அதிபர் ஆசியுரை

திருக்குடும்பக் கன்னியர் மடவர்த்தக மன்றத்தின் சஞ்சிகையாகிய வணிகத் தளிரின் இரண்டாவது இதழ் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். வர்த்தகத் துறை மாணவியரினதும் ஆசிரியரதும் இடைவிடா முயற்சியால் உருவாகிய இச் சஞ்சிகை அவர்களது ஊக்கத்திற்கு ஈடுபாட்டிற்கும் ஒரு சான்றாகும். பலவித இடர்பாடுகள், நெருக்கடிகள் இருந்த போதிலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் துணிந்து செயலாற்றிய மன்றத்திற்கு எனது பாராட்டுக்கள்.

எமது பாடசாலையில் வர்த்தகத்துறையை நாடும் மாணவியர் தொகை அதிகரித்து வரும் இந்நாளில் இத்தகைய ஒரு சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதால் மாணவியர் பல நன்மைகளை அடைந்துகொள்ள ஏதுவாகிறது. வெறும் புத்தகப் பூச்சிகளாக இல்லாமல் சுயசிந்தனையை வளர்க்கவும், தமது கருத்துக்களுக்கு உருவம் கொடுக்கவும் துணைபுரிவது மட்டுமல்லாது, தமது துறைபற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், தமது ஆற்றல்களை வளர்ப்பதற்கும் இது அவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்கின்றது.

ஆண்டொரு மலராக மலரும் இவ்வேடு, ஆண்டொரு வண்ணமாக வளர்ச்சியடைந்து பாடசாலையில் மட்டுமல்லாது, அதற்கு வெளியிலும் வர்த்தக மாணவரின் அபிமானத்தைப் பெற்று விளங்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

இச்சஞ்சிகையை வெளியிடுவதற்கு அயராது பாடுபட்ட மன்றப் பொறுப்பாளர் திருமதி பராசசிங்கம் அவர்களையும் நிர்வாகக் குழுவினரையும் நான் விசேட விதத்தில் பாராட்டுகின்றேன்.

Our Principal

Sr. YOLANDE B. A. (Ceylon)
Dlp. in Ed.

யாழ் மாவட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளரின்

வாழ்த்துச் செய்தி

''வணிகத் தளிர்'' என்ற இரண்டாவது மலர் யாழ்/ திருக்குடும்பக் கன்னியர்மட ஆங்கிலப் பாடசாலை வர்த்தக மன்றத்தினரின் முயற்சியால் வெளிவருவதை அறிந்து பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் வணிகத்துறை வளர்ச்சியின் பங்கு மிக முக்கியமானதெனக் கருதப்படுகின்றது. இத்துறை வல்லுனர்களை உருவாக்குவதில், வர்த்தகத் துறைப் போதனைகளை உடைய கல்லூரிகளின் சிறந்தசேவை பெரிதும் வேண்டப்படுகின்றது.

மாணவர் தம் ஆற்றல்களை வெளிக் கொணர்ந்து கட்டுரை வடிவமாக்கி, மலரில் மணம் பரப்ப விடும் முயற்சி, ஏனைய மாணவருக்கு ஓர் உற்சாகத்தை ஏற்படுத்தும் செயலாகவும், ஆர்வமுள்ளோருக்குப் புதிய கருத்துக்களை அறிய உதவும் தொழிற்பாடாகவும் அமைகிறது.

துணைப்பாடவிதான முயற்சியாக அமையும் இது போன்ற முயற்சிகள் கல்லூரிகளின் வளர்ச்சியிலும், மாணவர்களின் எழுச்சியிலும வியத்தகு முன்னேற்றங்களை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமேயில்லை.

எனவே 'வணிகத் தளிர்' ஆண்டு தோறும் வெளி வந்து புத்தம் புதிய சிந்தனைகளை வர்த்தகக் கல்வித் துறைக்குத் தந்து எழுச்சி பெற வேண்டுமென்று வாழ்த்துகிறேன். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய அனைவரினதும் பங்களிப்பு இன்று போல் என்றும் ஓங்குவதாக.

செல்வி. தி. பெரியதம்பி

பிரதிக் கல்விப்பணிப்பாளர்.
யாழ் மாவட்டம்.
1989 - 12 - 15

1988 ஆம் ஆண்டு
பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்

முகாமிப்புக் கற்கைத்துறை

கிறிஸ்ரவின் யோசப் மரியான்.

இமாக்குலேட்டா சில்வஸ்ரர்.

வணிகவியற்றுறை

பே ய்சி அனுஷா. அந்தோனிப்பிள்ளை

1988 ஆம் ஆண்டு

க. பொ. த (உ.த) பரீட்சையில் 4 பாடங்களிலும் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைப் புள்ளிகள் பெற்றவர்கள்

டொறின் விஜேதினி மரியதாசன்

மேரி திரேசா இமல்டா மரியநாயகம்

ஜேசியா மாலினி வன்னியசிங்கம்

பவானி மாசிலாமணி

அன்றனட் சாந்தி யோசப்

சசிகலா சிவசுப்ரமணியம்

ஸ்ரீஸ்காந்த ரஜனி அழகராஜா

ஜூட்வின் கிறிஸ்ரா மரியதாஸ்

அனற் செல்வினி கிறிஸ்தோப்பர்

ஜூட்வின் சாமளா அலெக்சாண்டர்

பேணி அந்தோனிப்பிள்ளை

திமதி யேசுதாசன்

பேனடேட் கலாவதி, சம்பூரணம்

சுதாஜினி மாசிலாமணி

நிலாணி குலநாயகம்

மக்டலின் அலெக்ஸ்டீனா இம்மானுவல்

சாமினி கரோலின் செல்வநாயகம்

மஞ்சுளா திருநாவுக்கரசு

மேரி சுதாஷினி மரியதாசன்

அருளேஸ்வரி யேசுதாசன்

அனித்தா அன்புராஜா

அமலராணி அமிர்தானந்தன்

வர்த்தகத் துறைக் கல்வி அதிகாரி அவர்களின்

ஆசிச் செய்தி

கடந்த இரண்டு ஆண்டுகளாக யாழ் / திருக்குடும்பக் கன்னியர்மட ஆங்கிலப் பாடசாலை வர்த்தக மன்றத்தினரிடையே ஒரு எழுச்சியைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

சென்ற ஆண்டு அவர்களுடைய மன்ற வெளியீடாக வெளி வந்த ''வணிகத் தளிர்'' என்ற மலர் இவ்வாண்டு இரண்டாவது மலராக மணம் பரப்புகிறது.

மலரில் வெளியிடப்பட்டுள்ள ஆக்கங்களின் மூலம் மாணவரிடையே வர்த்தகக் கல்வியின் அறிவு எவ்வாறு செறிவுற்றிருக்கிறது என்பதைக் காணக் கூடியதாக உள்ளது,

முன்பு போலல்லாது வர்த்தகக் கல்வி அறிவியற் சிந்தனைகளை உள்ளடக்கியதாக அபிவிருத்தியடைந்து வருகின்றது. இத்துறையிற் துறை தேய்ந்த வல்லுனர்களின் தேவையும் நாட்டின் அபிவிருத்திக்குப் பெரிதும் வேண்டப் படுகின்றது.

இன்று இத்துறை சார்ந்த, சஞ்சிகைகளும், மலர்களும், வெளியீடுகளும் பெருகி வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. ''வணிகத்தளிர்'' மூலம் தமது பங்களிப்பைச் செய்திருக்கும் இக்கல்லூரி மன்றத்தினரதும், அதிபர், ஆசிரியர்களினதும் பெரு முயற்சியைப் பாராட்டுவதோடு மேன் மேலும் இத் தொண்டு வளர வேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன்,

சி. சிவராசா

கல்வியதிகாரி
(வர்த்தகம்)
1989 - 12 18

மன்றப் பொறுப்பாசிரியையின்

நல்லாசிகள்

எங்கள் கல்லூரியின் வணிக மாணவ மன்றத்தினர் சென்ற ஆண்டு தம் ஆரம்ப முயற்சியாக ''வணிகத்தளிர்'' என்ற மலரை அரும்பாக வெளிக் கொணர்ந் தனர். அதன் சிறப்பைப் பற்றி பலரும் பாராட்டி வாழ்த்துரை வழங்கினர் அதன் உள்ளடக்கமான கட்டுரைகளும் பிற அம்சங்களும் கற்போருக்குக் களி பேருவகை அளித்ததால் அடுத்து வரப்போகும் இவ்வாண்டு ''வணிகத்தளிரை'' ஆவலோடு எதிர் பார்த்து நிற்கின்றனரென்பதில் சந்தேகமேயில்லை.

இந்த இரண்டாவது மலரை வெளிக்கொணர்ந்து முன்னையதிலும் சிறப்பாக ''நூல் படித்த மனத்தவர்க்கு விருந்துவைக்க வேண்டுமென்ற,, பேரவாவினால் மன்றத் தினர் அரிதின் முயன்று செயற்பட்டிருக்கின்றனர் மலரின் வளர்ச்சிக்காக அறிவு நீர் வார்த்துச் சிந்தனை எருப்போட்டுச் சந்தேகங்களை பிடுங்கிச் செழிப்புறச் செய் திருக்கின்றனர். மன்றத்தின் முன்னேற்றப்பாதையில் அவர்கள் எடுத்துவைக்கும் ஒவ் வொரு அடியும் உறுதியானதாக, உழைப்பு மிக்கதாக, ஊக்கமும் ஆக்கமுமுள்ள தாக இருப்பதைக் காணும் போது அதன் ஒளிமயமான எதிர்காலம் உள்ளத்தில் தெரிகின்றது. மாணவிகளின் எண்ணங்கள் நல்ல செயல்வடிவம் பெற்று அச்சுவாகன மேறி இம்மலருடாகக் கற்போர் தம்கைகளிலே தவழ்ந்து வருகிறது. அதனை உவகை யோடு வரவேற்று உள்ளம்பூரிப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கை வங்கியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் மன்ற மாணவி ஒருவர் யாழ் மாவட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுப்பரிசில் பெற்றமை எங்கள் மன்றத்திற்கு தனித்துவத்தைப் பெற் றுத்தந்திருக்கின்றது.

இம்மலரை வெளிக்கொணர்வதில் அதிபர் அவர்கள் காட்டிய ஆர்வத் திற்கும் சக ஆசிரியர்களின் ஒத்துழைப்பிற்கும் மன்றத்தின் சார்பாக நன்றி கூறுவது எனது பணிவான கடமையாகும். தொண்டு பெருகவும், தூய்மை ஒளிரவும், அறிவும், ஆற்றலும், மனப்பாங்கும் கல்வியோடு ஒன்றிப்போகவும் தூய அன்னையின் திருவடிகளை இறைஞ்சி வேண்டுகின்றேன்.

''காவியம் செய்வோம், நல்ல காடு வளர்ப்போம்,
கலை வளர்ப்போம், கொல்லர் உலை வளர்ப்போம்.
ஓவியம் செய்வோம், நல்ல ஊசிகள் செய்வோம்.
உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்.,,

லெ. பரராசசிங்கம்

1989 - 12 - 4

இதழாசிரியர்
இதயமதிலிருந்து . . .

எமது பாடசாலையான யாழ் திருக்குடும்பக் கன்னியர் மட ஆங்கிலப் பாடசாலையின் வணிக மன்றத்தின் வருடாந்த வெளியீடான ''வணிகத் தளிர்'' என்ற சஞ்சிகையின் இரண்டாவது இதழை வெளியிடுவதில் மிகமிக மகிழ்ச்சியடைகின்றோம்.

இன்றைய சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட இம் மலரின் தாமத வெளியீட்டிற்காக நாம் மிகவும் வருந்துகின்றோம். இன்றைய கால கட்டத்தில் எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் அதிபரின் உயரிய ஆலோசனையாலும், மன்ற ஆசிரியர்களின் ஆக்க ஊக்கங்களினாலும். குறிப்பாக மன்ற மாணவிகளின் அயராத முயற்சியாலும் இச்சஞ்சிகையானது உங்கள் கைகளில் தவழுகின்றது.

மேலும் இம்மலருக்குச் சிறப்புக் கட்டுரைகளை வழங்கிய அறிஞர்களும், இத்தளிர் வளர்வதற்கு நிதியுதவி புரித்த பெரியோர்களும், குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்ட வஸ்தியன் அச்சகத்தினரும், இம்மலர் சிறந்த முறையில் வெளிவந்ததற்குக் காரணமாகிறார்கள்.

இச்சஞ்சிகையில் காணப்படுகின்ற ஆக்கங்கள் அண்மைக்கால நிகழ்வுகளின் வெளிப்பாடாகும் இவ்வாக்கங்கள் வர்த்தக கலை மாணவர்களுக்கு பல துறையிலும் பல வகையிலும் பயன்படக் கூடியதாக இருப்பதோடு, பரீட்சைக்கு ஒரு துணைக்கருவியாகவும் இருக்கும் என நம்புகின்றோம்.

இத்தளிர் வளர்வதற்கு உறுதுணையாக இருந்த சகலருக்கும் எம் மன்றத்தின் சார்பில் நன்றி கூறி எங்கள் அடுத்த இதழிற்கும் உங்கள் ஆதரவும் நல்லாசிகளும் இருந்தால் நிச்சயமாக இதைவிடத் தரமான ஆக்கங்களை உங்களுக்குத் தரமுடியும் எனக் கூறுவதுடன் இம்மலர் என்றும் வெளிவருவதற்கு தங்கள் அனைவரினதும் ஆதரவையும் வேண்டி நிற்கின்றோம்.

வணிக மாணவ மன்ற நிர்வாகக் குழு

1989 - 1990

காப்பாளர்	அருட்செல்வி யோலண்ட் (அதிபர்)
துணைக்காப்பாளர்	அருட் செல்வி அன்ரனெற் (உப அதிபர்
மன்றப் பொறுப்பாசிரியர் :-	திருமதி. லெ. பரராஜசிங்கம்
துணையாசிரியர்கள்	செலவி. வ. இம்மானுவல்
	திருமதி. சி. ராஜரட்ணம்
	திருமதி. ர. அச்சுதம்பிள்ளை
	திருமதி. தி. ஜெயப்பிரகாசம்
	திருமதி. எ. சவுந்தரம்
	திருமதி. நி. தெய்வேந்திரா
	திருமதி. ப. சிவபாலன்
	அருட்சகோதரி ஸ்டெல்லா புஷ்பம்
	செல்வி. பூ. பெனடிக்ற்
தலைவர்	செல்வி. இ. வாசுகி
உப தலைவர்	செல்வி. ம. ஆன் பீலோமினா
செயலாளர்	செல்வி. பெ. யூலியற் வதனி
உப செயலாளர்	செல்வி. இ. மேரிஸ்ரெலா
இதழாசிரியர்	செல்வி. க. மைதிலி
	செல்வி. அ. ஷர்மிளா
பொருளாளர்	செல்வி. ச. சசிகலா
உப பொருளாளர்	செல்வி. வி. ஜனனி
விளம்பரப் பொறுப்பாளர்கள்	செல்வி. சி. நிரியா ஷாமலின்
	செல்வி. மை. ரோஸ்மேரி
	செல்வி. செ. யூட் இறின்ரீனு

இருப்பவர்கள்; (இ ⟶ வ)

செல்வி பூ. பெனடிக்ற், திருமதி இ. ஜெயப்பிரகாசம், செல்வி இ. வாசுகி (தலைவர்), அருட்செல்வி அன்ரனெற் (உபஅதிபர்), அருட்செல்வி யோலண்ட் (அதிபர்), திருமதி வெ. பாராசசிங்கம் (பொறுப்பாசிரியர்) வர்த்தக மன்றம், இருமதி சி. ரஜரட்டணம், திருமதி ர. அச்சுதம்பிள்ளை, செல்வி வ. இம்மனுவல்

நிற்பவர்கள்: (இ ⟶ வ) ⟶ 6

செல்வி பெ. யூலியற் வதனி (செயலாளர்), செல்வி ச. சசிகலா (பொருளாளர்), செல்வி செ. யூடிகிறிஸ்ரீனு (விளம்பரப் பொறுப்பாளர்), செல்வி சி, றீஜியா ஷாமலின் (விளம்பரப் பொறுப்பாளர்), செல்வி மை. றேஸ்மேரி (விளம்பரப் பொறுப்பாளர்)

செல்வி அ. ஷர்மிளா (இதழாசிரியர்), செல்வி வி. ஜானகி (உப பொருளாளர்), செல்வி இ. மேரிஸ்ரெலா (உப செயலாளர்), செல்வி ம. ஆன்பிலோமினு (உப தலைவர்), செல்வி க, மைதிலி (இதழாசிரியர்)

இலங்கை வங்கியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு இலங்கை வங்கி கல்வி அமைச்சுடன் இணைந்து நடத்திய கட்டுரைப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான முதற் பரிசைப் பெற்ற கட்டுரை



இலங்கை வங்கி தேசியச் சொத்து

அ. மிராக்கா
(வருடம் 12 வர்த்தகம்)

இலங்கை வங்கியின் வரலாற்றில் இவ்வாண்டு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அது தோன்றிய காலத்திலிருந்து உறுதியுடன் வளர்ந்து, செழிப்புடன் உள்நாட்டிலும் பிறநாடுகளிலும் கிளை ஓச்சி துணிவுடன் ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து இவ்வாண்டு பொன்விழாக் காண்கிறது. அது ஆளுமை உள்ள பல நிர்வாகிகளாலும் கடமை உணர்வுமிக்க ஊழியர்களினாலும் கட்டியெழுப்பப்பட்ட கண்ணியமான வரலாற்றினை உடையது. உலகில் மேலோங்கி நிற்கும் வங்கிகளுள் வைத்து எண்ணப்படும் பெற்றி வாய்ந்ததாய் நிதிவளமும் நிர்வாகத்திறனும் பிற நலனும் உடையதான ஒரு தேசியச் சொத்தாக அது மிளிர்கின்றது. அதன் பணிகள் பல திறப்பட்டன. கிராம மட்டத்திலும் நகர மட்டத்திலும் அது ஆற்றிய ஆற்றும் ஆற்றப் போகும் வளர்ச்சிச் செயற்பாடுகள் அனந்தம் - அவற்றை விபரிப்பதும் அது எவ்வாறு எங்கள் தேசியச் சொத்தாகத் திகழ்கிறது என்பதை விளக்குவதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கை வங்கி 1939ம் ஆண்டு ஆகஸ்ட் 1ம் திகதி 53ம் இலக்க கட்டளைச் சட்டப்படி நிறுவன ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது காலனித்துவ ஆட்சியின் போது வெளிநாட்டு வங்கிகளில் நிதியை வைப்புச் செய்வது முடியாத காரியமாக இருந்தது. இதனால் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கஷ்டத்தை அனுபவித்தனர். சேர் சொராப்ஜி பொச் கண்டவல (Sir Soorabiji Pochkandawala) என்ற

இந்திய வங்கியாளரின் தலைமையில் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு உள்ளூர் வியாபாரிகளுக்கென வங்கி வசதியை செய்து கொடுக்க வேண்டுமெனச் சிபார்சு செய்தது அதன் காரணமாக ஐம்பத்து மூன்றும் இலக்க கட்டளைச் சட்டத்தின்படி 1939ம் ஆண்டில் இலங்கை வங்கி நிறுவப்பட்டது.

இன்று இவ்வங்கி இலங்கையருக்குச் சொந்தமான முதலாவது வணிக வங்கியாகவும் ஆகக் கூடுதலான கிளைகளைக்கொண்டு வங்கித் தொழிற்பாட்டை மேற்கொள்ளும் நிறுவனமாகவும், மொத்தமாகத் திரட்டப்படும் வைப்பில் கூடுதலான பங்கிற்குப் பொறுப்பாக உள்ள வங்கியாகவும் செயற்படுகின்றது.

''தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வு இலாச்
செல்வரும் சேர்வது நாடு''

என்பது பொய்யா மொழிப் புலவரின் மெய்யான வார்த்தை. ஒரு நாடு நாடாக இருக்கவேண்டுமானால் சகல செல்வங்களும் பெற்றிருக்க வேண்டும் என்பது வள்ளுவர் வாய்மொழி. எனவே செல்வ வளம் தேங்கி நிறகும் களஞ்சியங்களாகிய வங்கிகள் ஒரு நாட்டின் தேசியச் சொத்துக்களாகும். அவற்றுள் இன்று பொன்விழாக் கொண்டாடும் இலங்கை வங்கி இலங்கையருக்கென முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட நிதி வழங்கும் தேசியச் சொத்தாகத் திகழ்கின்றது.

பல்வேறு வைப்புக்கள் மூலமும் பெருந்தொகைப் பணத்தை திரட்டுவதன் மூலமும் மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்கி அவர்களின் எதிர்கால வாழ்வை வளம்பெற வைப்பதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் சுபீட்சத்திற்கும் அளப்பரிய சேவை செய்தும் வருகின்றது.

''இயற்றலும் நாட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு''

அதாவது வருவாயை மென்மேலும் பெருக்குதலும், அவற்றை ஒன்று சேர்த்தலும், காப்பாற்றுதலும், காப்பாற்றியவற்றை நல்லவழியில் செலவுசெய்தலும் அரசின் கடமை இத்தகைய அரசைப்போன்று பொறுப்பான உன்னதமான சேவையை இலங்கை வங்கி ஆற்றிவருகின்றது.

அரசாங்கத்தினதும்' பொதுமக்களினதும் உடமையாக இருந்த இலங்கை வங்கி 1961ம் ஆண்டின் 65ம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ் தேசியமயமாக்கப்பட்டு அரசாங்கத்தின் உடமையாகி நாட்டு மக்களை வளம்படுத்தும் நிதித்தேக்கமாகச் செயல்பட்டு வருகின்றது. நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு வேண்டிய கடன்களை அளிப்பதன் மூலம் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை உறுதி நிலைப்படுத்துகிறது.

தொழில் வாய்ப்பின்றி, வருமானம் குன்றியிருந்த கைத்தொழிலாளர்களும், வர்த்தகர்களும் கடன்களைப் பெற்றுத் தங்கள் தங்கள் தொழில் முயற்சிகளை விஸ்தரிப்பதற்கு இவ்வங்கியின் கடன்வசதி ஒரு முக்கிய ஊக்குவிப்பாக இருக்கின்றது. அரச ஈட்டு வங்கி போன்ற நீண்ட கால கொடுகடன் நிறுவனங்களுக்கும் கடன் கொடுத்து உதவுகின்றது. அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்திலும், கொழும்பிலுள்ள ஒரு விடுதியகத்திலும் விடுதியகக் கூட்டுத்தாபனத்திலும் முதலீடு செய்துள்ளது.

தேவைக்கேற்ப குறுகிய காலக்கடன்களாகவும், நீண்டகாலக் கடன்களாகவும் வழங்கிவருகின்றது. இன்று நம்நாட்டில் பல்வேறுநிலைகளில் அதிசயிக்கத்தக்க வளர்ச்சி அடைந்தமைக்கு இலங்கை வங்கியின் நிதியளிப்பே காரணம் என்று கூறினால் அதுமிகையாகாது.

இவ்வங்கி ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தி ஒன்பதிலிருந்து-ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்திரெண்டுவரை வர்த்தகக் கடன்களையே கூடுதலாக இவ் வங்கி வழங்கி வந்தது. ஆனால் ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து இரண்டில் கிராமிய மட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்ட விவசாய சேவை நிலையங்களில் ஒவ்வொரு கிளைகளைத் திறந்து அக்கிளைகளின் ஊடாக அதிகளவு கடன்களை வழங்கி வருகிறது. இதனால்தான் இன்று இலங்கை வங்கியால் வழங்கப்படும் கடனில் விவசாயக் கடனின் பங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

வைப்புக்களை ஏற்றல்,கடன் வழங்கல் என்பதைவிட வணிக வங்கித் தொழிற்பாடுகளான பணத்தை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அனுப்ப உதவுதல், பிரயாணிகள் காசோலை வழங்கல், வாடிக்கையாளரின் பிரதிகர்த்தா சேவை பிறநாட்டு வியாபாரம் சம்பந்தமான சகல நடவடிக்கைகளிலும் பங்கேற்று நாட்டு மக்களுக்கு மகத்தான பணியாற்றி இன்று மக்கள் விரும்பும் ஒரேயொரு தனித்துவம்மிக்க நிறுவனமாக தேசிய சொத்தாக இவ்வங்கி மிளிர்கின்றது.

பல்வேறு இலட்சியங்களை நோக்கமாகக் கொண்டபலதரப்பட்ட கணக்குகளை ஆரம்பித்து அதன்மூலம் பெருந்தொகையான வைப்புக்களை உருவாக்கிஅவ்வைப்புக்களை நாட்டின் பயன்தரககூடிய துறைகளில் முதலிட்டு இன்று நம் இலங்கையின் ஈடிணையற்ற ஒரு தேசிய சொத்தாகத் திகழ்கிறது.

''செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்'' என்பது போன்று வங்கிக்கழகு வளமாய் மக்களுக்கு உதவுதல் என்பதற்கொப்ப காலத்திற்குக் காலம் பல புதுப் புதுத் திட்டங்களைச் செயற்படுத்தி வெற்றி கண்டுவருகின்றது.

''சிறிதளவு செலவு ஆனால் பெருமளவு நன்மை'' அளிக்கும் இலங்கை வங்கியின் தேசிய ஓய்வூதியத்திட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். இத்தகைய அதிசிறந்த திட்டத்தின் மூலம் நாட்டு மக்கள் தம் எதிர்காலத்தை வளம்படுத்திக்கொள்ள வாய்ப்பளிப்பதுடன் இவ்வாறு சேமிக்கப்பட்ட பணம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் முதலீடாகவும் திகழ்கின்றது.

அடுத்து 1981 இல் உருவாக்கப்பட்ட தேசிய அறக்கொடைத் திட்டமும் இளஞ்சிறுர்களின் எதிர்காலத்தை திட்டமிட்டு வழிநடத்த ஏற்ற ஒரு சிறந்த திட்டமாகும். இவ் அறக்கொடைத் திட்டம் பருவமடையாதவர், வயது வந்தோர் யாவரும் ஆரம்பித்து அளப்பரிய நன்மைகளைப் பெறக்கூடிய திட்டமாகும்.

மேலும் முதல் முறையாக காப்புறுதிச் சேவையில் ஈடுபட்ட ஒரேயொரு வணிக வங்கி என்ற பெருமையும் இலங்கை வங்கியையே சாரும்.

மேலும் இலங்கையர் வெளிநாட்டில் உழைக்கும் பணத்தைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தும் நோக்கமாக ''வதியாதார் அந்நிய நாணயக் கணக்கு

களை'' ஆரம்பித்து வெளிநாட்டில் உழைப்பவர்களின் பணத்தை திரட்டுவதற்கும் சிறந்த முதலீடாக்குவதற்கும் வழிவகுத்த பெருமையும் இவ்வங்கியையே சாரும்.

இலங்கையருக்குரிய சுதேச வங்கிகளுள் ''பயணிகள் காசோலை'' வழங்கிய தனிப் பெருமையும் இவ்வங்கிக்கே சாரும். இத்திட்டத்தின்மூலம் பயணிகள் பாது காப்பாகத் தேவையான இடத்தில் தேவைப்படும் தொகையைப் பெற்றுத் தமது தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கின்றது. எனவே இத்தகைய பல அரிய திட்டங்களைச் செயல்படுத்தி வெற்றி கண்டதினால் மக்கள் மனதில் நீக்காத இடத்தைப் பெற்றதோடமையாது நாட்டின் அபிவிருத்திக்கும் பெரும் பங்காற்றி யும் வருகின்றது.

1987ல் ஆரப்பிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சேமிப்புத்திட்டம் எதிர் காலத்தில் குழந்தைகளின் மேற்கல்வி திருமணம் போன்றவற்றிற்கு ஊன்றுகோலாக அமைகின்றது.

அண்மைக்காலத்தில் முகவர் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கும் வர்த்தகர் களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் சிறிய அளவு கடன்தொகைகளை வழங்கும் புதிய நடைமுறையாக ''சமூக ஊக்குவிப்புக் கடன்'' என்ற பெயரில் இலகுவாகக் கடன்பெறும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்வரிய திட்டத்தினால் நாட்டு மக்கள் பெருமளவு பயனை அனுபவிக்கக்கூடியதாக இருக்கின்றது.

மற்றும் சுதேச வளங்களைப் பயன்படுத்தும் நடைமுறையை ஊக்குவிக்கும் முகமாக பனையோலைப் பாவனையாயாளர்களுக்கும் கடன் வழங்கும் திட்டத்தையும் செயற்படுத்துகின்றது.

வர்த்தகர்கள், வியாபார ஸ்தாபனங்கள் ஆகியவற்றை மையமாக வைத்து ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வங்கி தற்போது கிராமங்கள் தோறும் விவசாயிகள் சிறுகைத்தொழிலாளர்கள் அன்றாட பாட்டாளிகள் வரை தமது சேவையை விஸ்த ரித்துள்ளது அவ்வாறான சேவை விஸ்தரிப்பின் ஓர் அங்கமாகவே இலங்கை வங்கி யின் தொடர்ச்சியான ஐம்பது ஆண்டுகால சேவை பூர்த்தியை முன்னிட்டு அறிமு கப்படுத்தப்பட்ட ''சேமிப்புச் சான்றிதழ்'' திட்டமாகும். சேமிப்பைத் தூண்டி கவ ர்ச்சிகரமான வட்டியை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இலங்கை வங்கியின் உப ஸ்தாபனங்களான இலங்கை வியாபார வங்கி லிமிட்டெட்டும் ஆதன அபிவிருத்தி வங்கியும் அளப்பரிய சேவைகளாற்றி வருகின் றன.

அண்மைக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ''காசோலை உத்தரவாத அட் டைகளை வழங்குதல்'' இவ்வங்கியால் மேற்கொள்டப்பட்ட அரிய திட்டமாகும்.

இன்று இவ்வங்கி பணச் சந்தை கருவிகளுள் முன்னணியாக விளங்குகின் றது. தற்காலத்தில் பலநவீன முறைகளைக் கையாண்டு காலத்தையும் வேலைப்பளு வையும் நீக்க மேற்கொண்ட நடவடிக்கை பெருமைக்கும், போற்றுதற்கும் உரியனவா கும். காந்தக் காசோலைகள் கணனிகள் உபயோகம் ரெலர் முறைகள் என்பன இந் நவீன கருவிகளுள் சிலவாகும்.

இலங்கை வங்கியானது தனது ஐம்பதாண்டு காலத்தில் எந்தவொரு வங்கியும் சாதித்துக்கொள்ள முடியாத சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. காலத்திற்குக் காலம் பல புதுப்புதுத் திட்டங்களைச் செயல்படுத்தி அதன் மூலம் மக்களைக் கவர்ந்த ஒரேயொரு வங்கியாக மிளிர்கின்றது. ''நாட்டின் தேட்டம் நல்ல வங்கிகளே'' என்பதற்கு இலங்கை வங்கி ஒரு எடுத்துக்காட்டாகும். ''ஊருணி நீர்நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு'' என்பதற்கொப்பவும் ''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தாற்போல்'' என்பதற்கொப்பவும் இலங்கை வங்கி இன்று நாட்டின் தனியொரு தேசியச் சொத்தாக விளங்கி நாடெங்கணும் மணம் பரப்புகின்றது.

இலங்கையின் தேசிய அபிவிருத்தியின் முன்னேற்றத்திற்கும் இவ்வங்கி ஒரு கருத்துமிக்க பங்காளராக இருந்துவந்திருக்கிறது, பொருளாதாரத் தளர்வு ஏற்பட்டபோதெல்லாம்-சந்தைத் தலைவர்களாகத் துணிந்து நின்றிருக்கின்றது. வெளிநாட்டு வங்கிகளும் உள்ளூர் வங்கிகளும் அச்சுறுத்தலைக் கொடுத்தபோதும் சளைக்காது தொண்டாற்றியிருக்கின்றது. இலாபங்கள் பாரதூரமான அளவில் வீழ்ச்சியடைந்தபோதும் தாக்குப்பிடித்துச் சமாளித்திருக்கிறது.

வங்கியாளர்களின் பெருமுயற்சியாலும் வாடிக்கையாளர்களின் ஒத்தாசையாலும் இதுவரை வளர்ந்து ஓங்கியது போல என்றும் வளரட்டும்,

கைத்தொழில் சிறப்பதற்கும்
கமத்தொழில் செழிப்பதற்கும்
எத்தொழில் செய்வதற்கும்
ஏற்றமாய் வாழ்வதற்கும்
நித்தமும் நிதியம் தந்து
நிலைபெறச் செய்யும் வங்கி
உத்தம இலங்கை வங்கி
இது இந்த நாட்டின் சொத்து
என்று போற்றுவோம், வாழ்த்துவோம் - புகழுவோம்

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் முயற்சிகளில் 1988 இறுதிவரையில் 54626 பேர் வேலை வாய்ப்பை பெற்றனர். இவ் ஆண்டில் ஆணைக் குழுவின் தொழில் முயற்சிகளின் மொத்த ஏற்றுமதி வரவுகள் 9516 மில்லியன் ரூபாவாகும்.

இலங்கையில் செயல்படும் சில வணிக வங்கிகளினால்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ள

வங்கி அட்டைகள்

Mr. R. Lankadurai B. Com. (Cey.)
Seneior Lecturer in Commerce
Technical College, Jaffna,

இலங்கையின் வங்கி அமைப்பில் பல நவீன மாற்றங்கள் அண்மைக் காலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 1977 ஆம் ஆண்டில் பதவியேற்ற அரசாங்கம் கடைப்பிடித்த தாராள கொள்கையின் பிரதிபலனாக பலநவீன மாற்றங்கள் வங்கித் துறையில் அறிமுகப் படுத்தப்பட்டன. பிறநாட்டு வணிகவங்கிகளின் கிளைகள் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டதும் வணிகவங்கிகளுக்கு அன்னிய நாணயங்களை வைப்பாக ஏற்று கடன்களை வழங்கும் அதிகாரம வழங்கப்பட்டமையும் 71 ஆம் ஆண்டுபதவிக்கு வந்த அரசாங்கத்தின் தாராள கொள்கையின் பிரதிபலிப்புகளாக அமைகின்றன. இம் மாற்றங்கள் இலங்கை வங்கியின் அமைப்பின் நவீனமயப்படுத்தலுக்கும் துரித வளர்ச்சிக்கும் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தின. இலங்கையில் செயற்படும் வணிகவங்கிகளின் செயல்பாட்டை நவீனமயப்படுத்தும் ஒரு அம்சமாக சில வணிக வங்கிகள் வங்கி அட்டைகளை அறிமுகப்படுத்தியுள்ளன. முதிர்ச்சியடைந்த பொருளாதாரங்களையுடைய நாடுகளில் செயல்படும வணிக வங்கிகளின் பாணியிலேயே இவ்வட்டைகள் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை வங்கி சீ பாங் விசா அட்டை (Cey Bank Visa Card) காசோலை உத்தரவாத அட்டை (Cheque Quarantee Card) இலத்திரனியல் ரெலர் அட்டை (Electronic Teller Card) ஆகிய வற்றையும் சம்பத் வங்கி மாஸ்டர் அட்டை (Master Card) இலத்திரனியல் ரெலர் அட்டையையும் கற்றன் நஸனல் வங்கி இன்ரோ அட்டை (Intro Card) காசோலை பணமாக மாற்றும் அட்டை (Cheque Encashment Card) ஆகியவற்றையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கை வங்கியின் விசா அட்டை:-

இலங்கைவங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விசா அட்டை நுகர்வோர் பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்கு ஓர் கொடுப்பனவு முறையாக அமைகின்றது. இதனை வங்கியிடமிருந்து பெறுகின்றவர்கள் வங்கியினால் அங்கி

கரிக்கப்பட்டளவு தொகைக்கு அதனல் அங்கிகரிக்கப்பட்ட வியாபாரிகளிடம் இவ் வட்டையை சமர்ப்பித்து பொருட்களையும் சேவைகளையும் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யலாம். இவ்வாறு நுகர்வோரினல் கடனுக்கு கொள்வனவு செய்ய லாம். இவ்வாறு நுகர்வோரினல் கடனுக்கு கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் சேவைகளுக்கு கொடுக்கமதியான பணத்திற்கு வங்கி உத்தரவாதத்தை அளிக்கின் றது. இலங்கை வங்கியினல் செயல்படுத்தப்படும் இவ்வட்டை சர்வதேச விசா நிறுவ னத்தின் அங்கிகாரத்துடன் செயல்படுத்தப்படுகின்றது. உலகின் பலநாடுகளிலும் உள்ள 20 ஆயிரம் வங்கிகளினுலும் நிதிநிறுவனங்களினுலும் இணைந்து உருவாக்கப் பட்ட அமைப்பே சர்வதேச விசா நிறுவனமாகும். தற்போது இலங்கை வங்கிக்கு இவ்வட்டையை பாவனையில் ஈடுபடுத்தும் அனுமதி சர்வதேச விசா நிறுவனத்தினல் வழங்கப்பட்டிருப்பதினுல் இலங்கை வங்கி இவ்வுலக பங்குடமையின் அங்கத்தவளுக சேர்க்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 162 நாடுகளில் இவ்வட்டை பாவனையிலே ஈடுபடுத் தப்பட்டு 5½ மில்லியன் வியாபாரிகள் இவ்வட்டையை ஏற்றுக்கொண்டு நுகர்வோருக்கு பொருட்களையும் சேவைகளையும் கடன் அடிப்படையில் வழங்குகின்றனர். இவ் வட்டை ஐந்து பெரும் பிரிவுகளாக பாகுபடுத்தப்படும்.

1) உள்நாட்டு தங்க அட்டை (Domestic Gold Gard)

2) உள்நாட்டு கிளாஸிக் அட்டை (Domestic Classic Card)

3) சர்வதேச தங்க அட்டை (International Gold Card)

4) சர்வதேச கிளாஸிக் அட்டை (International Classic Card)

5) வியாபார அட்டை (Business Card)

என ஐந்துவகையாக இது செயல்படுத்தப்படும். உள் நாட்டு தங்க அட்டையும், உள்நாட்டு கிளாஸிக் அட்டையும் உள்ளூர் பாவனையில் ஈடுபத்தப்படலாம். சர்வ தேச அடிப்படையில் பாவனையில் ஈடுபடுத்தப்படலாம். வியாபார அட்டை என்பது கொம்பனிகள் போன்ற நிறுவனங்களால் மட்டும் ஈடுபடுத்தப்படலாம. கிளாஸிக் அட்டையை வங்கியிடமிருந்து பெறுபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட நலன்கள் மட்டுமே வழங்கப்படும் ஆனல் தங்க அட்டையை பெறுபவர்களுக்கு கொள்வனவுக் கான உச்சத்தொகை கூடுதலாக இருப்பதுடன் அவர்களுக்கு பிரயாண வசதிகள், காப்புறுதி வசதிகள் போன்றவையும் அளிக்கப்படும். உள்நாட்டு பாவனைக்கான அட்டைகளை இலங்கை வங்கி நாட்டில் பரவலாக செயல்படுத்துவதற்கு உத்தேசித் திருக்கின்ற பொழுது சர்வதேச ரீதியிலான அட்டை ஆரம்பத்தில் லண்டனிலும், மாலைதீவிலும் உள்ள வங்கியின் கிளைகளினல் மட்டும் செயல்படுத்தப்படும்.

I. சீ பாங் விசா அட்டையின் இயல்புகள் (Cey Bank Visa Card)

இலங்கை வங்கியின் சீ பாங் அட்டை சர்வதேச பிரமாணங்களுக்கு ஏற்றள வில் தயாரிக்கப்பட்டுள்ளது. பிளாஸ்டிக்கினல் உருவாக்கப்பட்டு பல தொழில் நுட்பங்களை உள்ளடக்கியதாக இவ்வட்டை காணப்படுகின்றது. இலங்கை வங்கி

இலச்சனை ஒரு கோணத்திலும், மறு கோணத்தில் விசா சின்னத்தையும் ஏந்தி இலங்கைவங்கியின் தலைமையகத்தின் சாயலை பின்னணியில் கொண்டுள்ளது. இதனை பிரதிபண்ண இயலாத அளவிற்கு தொழில்நுட்ப அடிப்படையில் தயார் செய்யப் பட்டுள்ளது. இவ்வட்டையில் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் ஆவன

1) அட்டை உரிமையாளரின் பெயர்

2) கடன் அட்டை இலக்கம்

3) செல்லுபடியாகும் காலம்

4) ஒளியின் பிரகாசத்திற்கு ஏற்ற நிறம் மாறும் ஒரு பறவையின் சின்னம்

5) பின்புறத்தில் சிலதகவல்களை ஏந்திய காந்தத்தகடு

6) அட்டை உரிமையாளரின் கையொப்பம்

இவ்வட்டைக்கு உரித்தானவர்களை தேர்ந்தெடுக்கும் முறை

இவ்வட்டையை பெற விரும்புவோர் கண்டிப்பாக வங்கியின் வாடிக்கையாளராக இருத்தல் வேண்டுமென்ற நியதி இல்லை. இதனை பெற விரும்பிய எவரும் இலங்கை வங்கிக்கு மனுச் செய்யலாம். வருவாணம் குறைந்தவர்களும் இவ்வட்டைகளின் வசதிகளை அனுபவிப்பதற்காக மாதாந்தம் 3 ஆயிரம் அல்லது அதற்கு குறைந்த வருமானத்தை பெறுகின்றவர்களும் இவ்வட்டையை பெறுவதற்கு அனுமதிககப்படுகின்றனர். ஆனல் இவ்வாறு வருமானம் குறைந்தவர்கள் கூடுதலான வைப்புக்களை வங்கியில் இடுதல் வேண்டும், அல்லது தகுந்த பெறுவதியான பொறுப்புக்களை வங்கியிடம் ஒப்படைத்தல் வேண்டும். வருமானம் மிகவும் கூடியவர்களுக்கு மட்டுமே வங்கியினல் தங்க அட்டை வழங்கப்படும், ஏனையோருக்கு கிளாஸிக் அட்டையே வழங்கப்படும். ஆனல் மனுச் செய்கிற சகலருக்கும் வங்கி அட்டையை வழங்கும் என்பதை கண்டிப்பாக எதிர்பார்க்க இயலாது. இவ்வட்டையை பெற விரும்புவோர் அட்டைக்கான விண்ணப்பத்தை அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பிக்கின்றவர்களின் தொழில், வருமானம், நம்பிக்கை, நாணயம் மற்றும் வேறு சில தரவுகளை கருத்திற் கொண்டு, விண்ணப்பதாரர் இதனை வைத்திருப்பதற்கு தகமையுடையவரா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும். வங்கி முகாமையாளரின் சிபாரிசுடன் கொழும்பில் வங்கியின் தலைமையகத்தின் 22ம் மாடியில் அமைந்துள்ள சீ பாங் அட்டை நிலையத்திற்கு சம்பந்தப்பட்டவரின் விண்ணப்பம் அனுப்பப்படும். அங்கு விண்ணப்பதாரருக்கு இந்த அட்டைமூலம் எவ்வளவு கடன்வசதி வழங்க முடியும் அல்லது முடியாது என்பதை கணனியின் உதவியுடன் ஆராய்ந்து கடன் எல்லையை தீர்மானித்து விண்ணப்பதாரருக்கு வங்கிகிளைமூலம் அறிவிக்கப்படும், அதன்படி வங்கியின் சில விதிமுறைகளுக்கு அமைய ஒரு குறிப்பிட்டளவு தொகை ஒரு குறிப்பிட்ட காலத்தில் செலுத்த ஏதுவாக அவர் ஒப்பந்தம் செய்து கொள்ளும் பட்சத்தில் சீ பாங் அட்டைக்கு அவர் உரிமையாளர் ஆவார் அவ்வாறே வேறு சில விதிமுறைகளுக்கு அமைய வியாபாரிகளும் நியமிக்கப்படுவார்கள் இவ்வியாபாரி

களே. சீ பாங்க அட்டைகளை பெற்று சேவைகளை வழங்கலோ பொருட்களை விற்கவோ அனுமதிக்கப்படுவர் எனவே இந்த ஒப்பந்தங்கள் அட்டை உரிமையாளருக்கும் வங்கிக்கு இடப்பட்டதாகவும் அதே போன்று வியாபாரிகளுக்கும் வங்கிக்கும் இடப்பட்டதாகவும் அமையும். அட்டை உரிமையாளரின் கடன் எல்லையை வியாபாரியோ அதே போன்று வியாபாரி எல்லையை உரிமையாளரோ அறிய வேண்டிய அவசியம் இல்லை.

இவ்வட்டை செயற்படுத்தப்படும் முறை

இலங்கையிடமிருந்து இவ்வட்டையை பெறுகின்றவர்கள் அதனால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகளிடம் அதனை சமர்ப்பித்து பொருட்களை கடனுக்கு கொள்வனவு செய்யலாம் இவ்வட்டை மூலம் பெறப்படும் சேவைகள் அல்லது பொருட்களுக்கான முழுத்தொகைக்கும் குறிப்பிட்ட வியாபாரிக்கு அல்லது நிறுவனத்திற்கு வங்கி உத்தரவாதம் அளிக்கின்றது. எனவே எவ்வித ஐயப்பாடுகளுமின்றி வியாபாரிகள் அட்டை உடையோருக்கு பொருட்களை அல்லது சேவைகளை வழங்கலாம் விற்பனை நிலையங்களின் தன்மையை பொறுத்து ஒவ்வொரு தனிப்பட்ட நிலையங்களும் வங்கியினால் ஓர் எல்லை நியமிக்கப்பட்டிருக்கும். இவ்வட்டை உரிமையாளர்கள் வங்கிக்கு ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் பணத்தை திருப்பி செலுத்த வகை செய்து கொடுததுள்ளமையால் எவ்வித அச்சமுமின்றி பல பொருட்களையும் கொள்வனவு செய்யலாம். இவ்வட்டைக்கு உரித்தானவர் தனது சார்பில் பிறிதொருவரை நியமித்து அவரையும் இவ்வட்டையின் ஊடாக பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்யும் அனுமதியை வழங்கலாம். ஆனால் அவர் கொள்வனவு செய்யும் தொகைகளுக்கும் அவரால் வங்கிக்கு ஏற்படும் சகல நட்டங்களுக்கும், பொறுப்புக்களுக்கும் அட்டையின் பிரதம உரிமையாளரே பொறுப்பாளியாக கருதப்படுவார். இவ்வட்டையின் பாவனையில் ஈடுபடுத்தும் ஒவ்வொருவரது பேரிலும் ஓர் கணக்கு வங்கியினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும். அட்டையின் உரிமையாளர் கொள்வனவு செய்யும் பொருட்கள் சேவைகளுக்கான பணம் அல்லது ஏனைய பொறுப்புக்கள் அல்லது நடவடிக்கைகளினால் வங்கிக்கு ஏற்படும் நட்டங்கள் ஆகியவையாவும் இக்கணக்கில் வரவு வைக்கப்படும். ஒவ்வொரு மாதத்திலும் அட்டை உரிமையாளரிடமிருந்து வருமதியான தொகை தொடர்பான ஒரு விபரக்கூற்று வங்கியினால் அனுப்பி வைக்கப்படும். இக்கூற்று கிடைத்து 14 நாட்களுக்குள் செலுத்தி மிகுதியை வசதிப்படி செலுத்தலாம். அவை வருமதியாக இருக்கும். முழுத்தொகையும் கூற்று கிடைத்து 14 நாட்களுக்குள் செலுத்தப்பட்டால் வட்டி எதுவும் அறவிடப்படமாட்டாது. அல்லது வருமதியான தொகையில் 2.5 சதவீத வட்டி அறவிடப்படும். இவ்வாறு அட்டை உரிமையாளர்களினால் செலுத்தப்படும் பணம் வியாபாரி வங்கிக்கு அனுப்பும் விற்பனை கூற்று விபரத்தில் படி வியாபாரியின் கணக்கில் வங்கியினால் இடப்படும் வங்கியில் கணக்கு அற்ற வியாபாரிகளுக்கு வங்கி கட்டளைமூலம் பணம் செலுத்தப்படும்.

அட்டையையும் அது தொடர்பான சகல விபரங்களையும் இரகசியமாகவும் பாதுகாவலாகவும் வைத்திருப்பது பிரதம உரிமையாளரின் கடமையாகும். அட்டை தொலைக்கப்பட்டால் அது தொடர்பான சகல விபரங்களும் உரிமையாளரினால் கிளை

வங்கிக்கு அல்லது கொழும்பிலுள்ள தலைமை காரியாலயத்துக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். உரிமையாளருக்கு அட்டையின் மீது இருக்கும் சகல உரிமைகளையும் தற்காலிகமாக நிறுத்திவைபதற்கோ அல்லது முற்றாக இரத்துச் செய்வதற்கோ வங்கிக்கு உரிமையுண்டு. அவ்வாறு இரத்துச் செய்யப்படும் சந்தர்பத்தில் சகல அட்டைகளும் உரிமையாளர்களினால் வங்கியில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். உரிமையாளரும் எந்த சந்தர்ப்பத்திலும் தனக்கும் வங்கிக்கும் இடையில் ஏற்படும் ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவரலாம். அவ்வாறு முடிவுக்கு கொண்டு வரும் சந்தர்பத்தில் கொடுக்குமதியாக இருக்கும் சகல தொகைகளையும் அட்டைகளையும் வங்கியில் ஒப்படைத்தல் வேண்டும். ஏற்கனவே உரிமையாளருடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையை மாற்றி அமைப்பதற்கும் வங்கிக்கு பூரண உரிமையுண்டு.

சீ பாங் அட்டையின் அனுகூலங்கள்

(I) அட்டையின் உரிமையாளருக்கு ஏற்படும் அனுகூலங்கள்:-

1) வங்கியினால் வழங்கப்படும் இவ்வட்டைகள் உரிமையாளனை வியாபாரிகளுக்கு அறிமுகபடுத்துகிறது. இதனால் சிரமமின்றி உரிமையாளன் வியாபாரிகளிடமிருந்துபொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்யலாம்.

2) வங்கி அட்டையை சமர்பித்து பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதனால் பணத்தைக் கொண்டு செல்லவேண்டிய அவசியம் ஏற்படாது

3) கடன் அடிப்படையில் கொள்வனவு மேற்கொள்ளப்படுவதினால் தற்காலிகமாக ஏற்படும் நிதிப்பிரச்சனையை தீர்த்துக்கொள்ளலாம்.

4) பொருட்களின் விலை வங்கியினால் குறித்து வழங்கப்படுவதால் அதிகரித்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்யும் நிலை ஏற்படாது.

5) பொருட்கள் சேவைகள் விற்பனை செய்யும் நிறுவனங்களின் விபரங்கள் வங்கியினால் அட்டையின் உரிமையாளருக்கு வழங்கப்படுவதனால் நிறுவனங்களை தேடிஅலையும் சிரமம் தவிர்க்கப்படும்.

6) மிகவும் குறைந்த பட்சதொகையான 250 ரூபாவை செலுத்தி இக்கடன் அட்டை திட்டத்தில் சேர்த்து கொள்ளலாம்.

7) வங்கியின் கூற்று கிடைத்து 14 நாட்களுக்குள் பணம் வங்கிக்கு செலுத்தப்பட்டால் வட்டி செலுத்தவேண்டியதில்லை.

8) வங்கி கூற்று கிடைத்து 14 நாட்களுக்கு பின்பு பணம் செலுத்தப்பட்டாலும் மிகவும் குறைந்த வீத வட்டியான 2.5 வீத அறவிடப்பட வேண்டும்.

9) வசதிக்கேற்றவாறு பணத்தை திருப்பி செலுத்தும் நிபந்தனைகள் வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

10) பிறப்பிக்கப்படும் காசோலைகளுக்கு உத்தரவாதமாக மாற்றுவதற்கு உதவியாகவும் இவ்வட்டையை ஈடுபடுத்தலாம்.

(I) 2 வியாபாரிக்கு ஏற்படும் அனுகூலங்கள்

1) கடன் அடிப்படையில் பொருள் விற்பனை செய்யப்படுவதால் விற்பனை அதிகரிக்கும்.

2) விற்பனை அதிகரிப்பதால் லாபம் அதிகரிக்கும்:

3) வாடிக்கையாளரிடமிருந்து பணத்தை சேர்க்கும் சிரமத்திலிருந்து வியாபாரி விடுவிக்கப்படுகின்றான்.

4) வருமதியான பணம் தொடர்பான உத்தரவாதம் வங்கியினால் அளிக்கப்படுகின்றது.

5) வியாபாரிக்கு உரித்தான பணம் வங்கியில் இடப்படுவதால் அதற்கு கூடுதலான பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது.

6) விற்பனை செய்யும் பொருள் தொடர்பான பதிவுகள் வியாபாரிக்கு வங்கியினால் ஏற்படுத்தப்படுவதனால் மோசடிகள் தவிர்க்கப்பட்டு கூடிய நிர்வாக நிதிக்கட்டுபாடுகளையும் நிறுவனத்தில் ஏற்படுத்தலாம்.

(I) 3 பொருளாதாரத்திற்கு ஏற்படும் அனுகூலங்கள்

1) பணமின்றி கடன் அடிப்படையில் பொருள் கொள்வனவு, விற்பனவு மேற்கொள்ளப்படுவதனால் பணப்புழக்கம் தவிர்க்கப்படும்.

2) வியாபாரிகளும் நுகர்வோரும் வங்கியில் கணக்குகளை ஏற்படுத்துவதால் வங்கி முறையின் வளர்ச்சி துரிதப்படுத்தப்படும்

3) உள் நாட்டு வியாபாரம் விருத்தியடையும்

4) சர்வதேச புகழ்பெற்ற விசா நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவதனால் சர்வதேச கொடுப்பனவுகளை சுலபமாக மேற்கொள்ளலாம்

5) சர்வதேச கொடுப்பனவுகள் சுலபமாக மேற்கொள்ளப்படுவதால் சர்வதேச வியாபாரம் விருத்தியடையும்

1 (4) வங்கிக்கு ஏற்படும் அனுகூலங்கள்

1) கடன் அட்டை வழங்கப்படுவதினால் வங்கியின் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்

2) வங்கியின் இச்சேவையினால் அதன் நன்மதிப்பு அதிகரிக்கும்

3) கடன் அட்டை பெறுகின்றவர்கள் வங்கியில் வைப்புக்களை இடுவதினால் வைப்புக்கள் அதிகரிக்கும்.

4) வருமதியான பணத்திற்கு வட்டி அறவிடப்படுவதனால் வங்கியின் வருமானம் அதிகரிக்கும்.

5) சர்வதேச நன்மதிப்பை அனுபவிக்கும் சர்வதேச விசா நிறுவனத்துடன் இணைந்து இலங்கை வங்கி இதனை செயற்படுத்துவதனால் இந் நிறுவனத்தினால் அனுபவிக்கப்படும் நன்மதிப்பை சர்வதேசரீதியாக இலங்கை வங்கியும் அநுபவிக்கலாம்.

2 இலங்கை வங்கியின் காசோலை உத்தரவாத அட்டை

இவ்வட்டை இலங்கை வங்கியினால் சொந்தக்கணக்குகளை வைத்திருக்கும் தெரிந்தெடுக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. இதனூடாக வாடிக்கையாளனால் பிறப்பிக்கப்படும் காசோலைகள் பொருட்களை அல்லது சேவைக் கொள்வனவு செய்வதற்கு வியாபார நிறுவனங்களினால் தயக்கமில்லாது ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு வழிவகுக்கின்றது. வாடிக்கையாளனால் காசோலையில் குறிப்பிட்ட தொகைக்கு இவ்வட்டையினூடாக உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது. வங்கியினால் வழங்கப்படும் இவ்வட்டையை உடைமையாக வைத்திருக்கும் வாடிக்கையாளன் தன்னால் பிறப்பிக்கப்பட்ட காசோலைகளைக் கொடுப்பனவுக்காக வியாபார நிறுவனங்களில் சமர்பிக்கும் பொழுது இவ்வட்டையையும் சமர்ப்பிக்கலாம். உணவு விடுதிகள் உயர்சந்தைகள், பகுதிக்கடைகள், வைத்தியசாலைகள், பெற்றோல் நிரப்பும் நிறுவனங்கள் போன்றவற்றில் பொருட்களைக் கொள்வனவுச் செய்யும் போது காசோலைகளுடன் இவ்வட்டையையும் சமர்ப்பிக்கலாம். அவர் நிறுவனத்திற்கு காசோலை சமர்ப்பிக்கும் பொழுது காசோலையின் பின்பக்கத்தில் உத்தரவாத அட்டையின் இலக்கத்தைககுறித்து அதன் கீழே தனது கையொப்பத்தை இடுவார் வியாபாரிகள் காசோலைகளை ஏற்றுக்கொள்ளும் போது காசோலையில் இடப்பட்ட கையொப்பம் காசோலை உத்தரவாத அட்டையில் இடப்பட்ட கையொப்பத்திற்கு சமமானதாக இருக்கின்றதா என்பதனைப் பரிசீலனை செய்வதுடன் வாடிக்கையாளன் காசோலையின் பின்பக்கத்தில் உத்தரவாத அட்டையின் இலக்கத்தை எழுதி தனது கையொப்பத்தை இடுகிறார் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். வங்கியினால் உத்தரவாதம் செய்யப்படும், ஆகக் கூடுதலான தொகை உத்தரவாத அட்டையில் குறிக்கப்பட்டிருக்கும். இவ்வாறு வங்கியின் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பதனால் காசோலைக்கான பணக்கொடுப்பனவு உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இது வியாபாரிகளுக்கும் வாடிக்கையாளருக்கும் வசதியாக அமைகின்றது.

3 இலத்திரனியல் ரெலர் அட்டை
Electronic Teller card

வாடிக்கையாளர்கள் தமது வங்கிவைப்புக்களிலிருந்து சிரமமின்றி பணத்தைப் பெறுவதற்காக வங்கி அமைப்பு பெருமளவு வளர்ச்சியடைந்த நாடுகளில் இம்முறை பல வருடகாலமாக கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் முதல்முறையாக இம்முறை 1956 ஆம் ஆண்டு ஹொங்கொங் அன்ட ஷாங்காய் வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து சம்பத் வங்கியும், இலங்கை வங்கியும் இதனை அறிமுகப்படுத்தியுள்ளன. தமக்கு வேண்டிய தொகையை ரெலர் அட்டையில் குறித்து இலத்திரனியல் இயந்திரத்தினூடாக இடுவதன் மூலம் பணத்தை பெற்றுக் கொள்ளலாம். இது 24 மணித்தியாலமும் வாடிக்கையாளர்கள் தாமாகவே பணத்தினைப் பெற்றுக்கொள்ள வசதி அளிக்கின்றது.

4 சம்பத் வங்கியின் மாஸ்டர் அட்டை (Master Card)

இலங்கை வங்கியினால அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விசா அட்டையைபோன்று மாஸ்டர் அட்டை சம்பத் வங்கியினால் 89ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் பொருட்களை கடனுக்கு கொள்வனவு செய்வது இவ்வட்டையினூடாக வசதிப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச அடிப்படையில் செயல் படும் சர்வதேச மாஸ்டர் அட்டை நிறுவனத்துடன் இணைந்தே சம்பத்வங்கி இவ் வட்டையை இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ளது. பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்கு மட்டுமன்றி சம்பத் வங்கியிலுள்ள சேமிப்பு கணக்கு, நடைமுறை கணக்கு ஆகியவற்றிலிருந்தும் பணத்தை எடுப்பதற்கும் இவ்வட்டை யைப் பாவிக்கலாம். இலவசமாக விபத்து காப்புறுதிவசதி, தரகு இல்லாத பிரயாணி களின் காசோலை ஆகிய வசதிகளும் இவ்வட்டையின் உரிமையாளர்களுக்கு வழங்கப் படும், அட்டையின் பிரதம உரிமையாளருக்கு ஒரு அட்டை வழங்கப்படுவதுடன் அவரது சார்பில் பிறிதொருவருக்கும் அட்டை ஒன்று வழங்கப்படும். உதாரணமாக கணவன் அட்டையின் பிரதம உரிமையாளராக இருந்தால் மனைவியின் பாவனைக்கும் ஓர் அட்டை வழங்கப்படும். ஏறத்தாழ இலங்கை வங்கியின் விசா அட்டையைப் போன்றே செயல்படுத்தப்படும். இவ்வட்டைத் திட்டத்தில் குறைந்தபட்ச தொகை யாக 250 ரூபாவை செலுத்தி சேர்ந்து கொள்ளலாம். ஏறத்தாழ 170 நாடுகளிலுள்ள 143 மில்லியன் மக்கள் இவ்வட்டையின் பலாபலனை அனுபவிக்கின்றனர்.

5 ஹட்டன் நெஷனல் வங்கியின் இன்ரோ அட்டை (Intro Card)

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றிருக்கும் இலங்கை யரின் வசதிக்காக ஹட்டன் நெஷனல் வங்கி இன்ரோ அட்டையை அறிமுகப்படுத் தியுள்ளது. இவ்வட்டையின் உரிமையாளரைப் பிறநாட்டு வங்கி ஒன்றிற்கு இவ் வட்டை அறிமுகம் செய்யும் காரணத்தினால் இது அறிமுகஅட்டை என அழைக்

கப்படுகின்றது. இதனை மத்திய கிழக்கிலிருந்து தமது இல்லத்திற்கு பாதுகாப்பாகவும் நம்பிக்கையுடனும் பணத்தை அனுப்பிவைக்க ஏற்ற வழிகாட்டி என அது குறிப்பிடுகின்றது. இவ் இன்ரோ அட்டையை வைத்திருப்பவர் வங்கி குறிப்பிட்டுள்ள 10 மத்தியகிழக்கு நாடுகளில் குறிப்பிட்ட 33 வங்கி/நிதி நிறுவனங்களில் ஒன்றில் றியால், அமெரிக்கடொலர், டினர், டிர்ஹம்ஸ் அல்லது அவர் விரும்பும் நாணயத்துடன் எச். என். பி. இன்ரோ அட்டையினையும் கொடுத்துத் தனது வங்கி ஆணையின் பெறுமதியையும் அமெரிக்க டாலரிலா அல்லது இலங்கை ரூபாவிலா வங்கி ஆணை பிறப்பிக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டால் போதும், சில நிமிடங்களில் வங்கி ஆணை அவரிடம் கொடுக்கப்படும். அதனைத் தனது இல்லத்திற்கு அல்லது தான் கணக்கு வைத்துள்ள ஹட்டன் நெஷனல் வங்கிக்கிளைக்கு அனுப்பினால் போதுமானது இன்ரோ அட்டையில் யாருக்கு, எங்கு, வங்கி ஆணை எழுதுவது போன்ற சகல தகவல்களும் இருப்பதால் குறிப்பிட்ட மத்திய கிழக்கு வங்கிகள் அத்தகவல்களிற்காக பத்திரங்களை நிரப்பித்தரும்படி வேண்டுவதில்லை.

ஹட்டன் நெஷனல் வங்கியில் சமர்ப்பிக்கப்படும் இவ் வங்கி ஆணைகளைக் காசாக்கப்பெற வழமையான 2 — 3 வாரகால தாமதமும் கியூ முறையில் நின்று சிரமப்படவும் கொழும்பு வங்கிகளிற்குப் பிரயாணம் செய்யவும் வேண்டிய அவசியமில்லை. இலங்கையிலுள்ள மத்திய கிழக்கில் வேலை பார்ப்பவருக்கு உரியவர் தனியான கணக்கையோ ஹட்டன் நெஷனல் வங்கியில் வைத்திருந்தால் மட்டுமே இந்நன்மையையடைய முடியும்.

ஹட்டன் நெஷனல் வங்கியின் காசோலையைப் பணமாக மாற்றுவதற்கான அட்டை (Cheque Encashment Card)

ஹட்டன் நெஷனல் வங்கியில் கணக்குகளை வைத்திருக்கும் வாடிக்கையாளரின் வசதிக்காக இது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ் வட்டையை வைத்திருக்கும் வங்கியின் வாடிக்கையாளன் தான் பிறப்பிக்கும் காசோலையை தனது தேவைகளுக்காக நாட்டிலுள்ள 33 வங்கியின் கிளைகளிலும் மாற்றி எடுக்கும் வசதியை அளிக்கிறது, வங்கியின் எக்கிளையில் கணக்கு வைத்திருக்கிறவரும் அதன் வேறு எந்தக் கிளையிலும் இவ்வட்டையின் உதவியுடன் காசோலையை மாற்றியெடுக்கலாம். இதனால் பெரும் தொகைப் பணத்தை ஓர் இடத்திலிருந்து வேறொரு இடத்துக்கு பெரும் ஆபத்துடன் எடுத்துச் செல்லும் நிற் பந்தம் தவிர்க்கப்படுகின்றது இவ்வாறு இவ்வங்கிகளினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அட்டைத் திட்டங்கள் இலங்கையில் செயல்படும் ஏனைய வணிக வங்கிகளினாலும் கடைப்பிடிக்கப்பட்டு வங்கித்துறை பேலும் நவீன மயமாக்கப்படும் எனவும் பொதுமக்களுக்குக் கூடுதலான வசதிகள் அளிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது

இரண்டாந்தர பங்குச் சந்தைத் தொழிற்பாடு

(Secondary Market Operations)

தே. ஜெயராமன் B. Com (Hons) MBA
(வணிக முகாமைத்துவத்துறை)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

எந்த ஒரு மனிதனும் தனது உழைப்பில் ஒருபகுதியினை எதிர்காலத்தேவை கருதி சேமிக்க விரும்புகிறான். இதன் பொருட்டு சரியான முதலீட்டினைத் தெரிந்து கொள்ள ஆர்வமும் விருப்பமும் உடையவனுக்குக் காணப்படுவது இயல்பானதாகும் இலங்கையைப் பொறுத்து பல்வேறு வகையான முதலீட்டு வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. வங்கியில் முதலீடு செய்யலாம் வங்கியில் முதலீடு செய்கையில் வட்டியினை உழைக்கமுடியும். ஆதனங்களில் முதலீடு செய்யலாம். இத்தகைய சந்தர்ப்பத்தில் அதனுடைய கொள்விலைக்கும் விற்பனைவிலைக்கும் இடையிலுள்ள வித்தியாசம் இலாபமாகக் காணப்படும். இவ்விரண்டு வகையான முதலீட்டு வாய்ப்பினைவிட, தற்போது பங்குகளைக் கொள்வனவு செய்வதன் மூலமும் முதலீட்டினை மேற்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட இரண்டு வகையான முதலீடுகளையும் விட பங்குகளில் முதலீடு செய்வதன்மூலம் ஒருவர் இரண்டு வகையான அனுகூலங்களை அனுபவிக்கமுடியும் பங்குலாபத்தினையும், பங்குகளின் விலை அதிகரிப்பதினால் ஏற்படும் மிகையையும் பெறக்கூடியதாக இருக்கும். அவ்வகையில் இன்று பங்குகளில் முதலீடு செய்வது முக்கியத்துவம் பெற்றுள்ளது கம்பனிகளின் வளர்ச்சியும், அதன் மூலம் பங்குச்சந்தையில் ஏற்பட்ட அபிவிருத்தியும் பங்குகளில் முதலீடு செய்வதற்கான அதிகரித்த வாய்ப்பினை வழங்கியுள்ளது.

இரண்டு வகையான பங்குச்சந்தைகள் காணப்படுகின்றன.

(அ) முதலாந்தர பங்குச்சந்தை (Primary Market)

(ஆ) இரண்டாந்தர பங்குச்சந்தை (Secondary Market)

முதலாந்தர பங்குச்சந்தை எனப்படுவது மூலதனத்தை அதிகரிக்கும் பொருட்டு பொதுமக்களுக்குப் புதியபங்குகளை வழங்குவதுடன் அல்லது உரித்து வழங்குவதுடன் தொடர்புடைய செயற்பாடுகளை உள்ளடக்கிய சந்தையாகும்.

இரண்டாந்தர பங்குச்சந்தை எனப்படுவது ஏற்கனவே வழங்கப்பட்ட பங்குகளின் விற்பனைக் கொள்வனவு தொடர்பான செயற்பாடுகளைக் கொண்டசந்தையைக் குறிக்கும்.

இவ்கட்டுரை மூலம் இரண்டாந்தர பங்குச்சந்தையுடன் தொடர்புடைய செயற்பாடுகள் பற்றி ஆராயப்படவுள்ளது.

இரண்டாந்தர பங்குச்சந்தை செயற்பாடுகள் கொழும்பு மக்கினன்ஸ் கட்டிடத்திலுள்ள கொழும்பு ஆவணமாற்று (உத்தரவாத) லிமிட்டெட் நிறுவனத்திலுள்ள வியாபாரதளத்தில் மேற்கொள்ளப்படும். இச்சந்தைத் தொழிற்பாடுகள் பொது வர்த்தகவிடுமுறை தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் காலை 9.30 தொடக்கம் 11.30 வரை நடைபெறும். ஏனைய சந்தைகளைப் போலல்லாது இச்சந்தையில் பங்குகளைக் கொள்வனவு அல்லது விற்பனை செய்ய விரும்புவோர் ஒருதரகர்மூலமே தமது செயற்பாடுகளை நிறைவேற்ற முடியும். தனிப்பட்ட ஒருவரோ அல்லது நிறுவனங்களோ இத்தரகர்கள் மூலம் தமது பங்குகளை விற்பனை செய்யமுடியும் அல்லது கொள்வனவு செய்யமுடியும்.

தற்போது எட்டுத் தரகு நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவையாவன,

(i) பாட்லீட் அன் கம்பனி லிமிட்
(Bart leet & Company Ltd)

(ii) போர்ப்ஸ் அன் வோக்கர் லிமிட்டெட்
(Forbes & Walker Ltd)

(iii) ஜோன் கீல்ஸ் லிமிட்டெட்
(John Keels Ltd)

(iv) மேர்க்கன்டைல் ஸ்டொக் புரோக்கர்ஸ் லிமிட்
(Mercantile Stock Brokers Ltd)

(v) ஸ்கிரன்டிப் ட்றஸ்ற் சேர்விஸ் லிமிட்
(Serendib Trust Services Ltd)

(vi) சோம்வலி அன் கம்பனி லிமிட்
(Somerville & Company Ltd)

(vii) J. B. ஸ்டொக் புரோக்கர்ஸ் அன் பினன்சியல் சேர்விஸ் (PVT) லிமிட்

(viii) சிற்றி இன்வெஸ்ற்மென்ற் சேர்விஸ் (PVT) லிமிட்
(City Investment Services (PVT) Ltd)

இத்தரகு நிறுவனங்கள் இரண்டு வகையில் முதலீட்டாளர்களுக்கு உதவுகிறது.

(அ) சரியான கம்பனியில் பங்குகளை கொள்வனவு செய்வது சம்பந்தமாக ஆலோசனையை வழங்குதல்;

(ஆ) பங்குகள் கொள்வனவு, விற்பனையின் போது ஏற்படும் கைமாற்றம் தொடர்பான பதிவுகள், மாற்றங்களினை புத்தகத்தில்பதிதல்.

எவ்வாறு இப்பங்குகள் கொள்வனவு, விற்பனை நடைபெறுகிறது என எடுத்து நோக்குவோம். பங்குகளை கொள்வனவு செய்ய விரும்புவோரும் விற்பனை செய்ய விரும்புவோரும் தரகர்களும் இவ்வியாபாரத் தளத்தில் ஒன்று கூடுவர். பங்குகளைக் கொள்வனவு செயய விரும்புவோரின் கட்டளைகளும், பங்குகளை விற்க விரும்புவோரின் அளிப்புகளும் பகிரங்கமாக ஒரு கரும்பலகையில் வெளியிடப்படும் இடத்தினையே வியாபாரதளம் (Trading Floor) என அழைப்பர். பங்குகளை கொள்வனவு செய்ய விரும்புவோர் தரகர்மூலம் கம்பனிகளின் நிதிநிலையை கருத்தில் கொண்டு, எந்த கம்பனியில் பங்குகளை கொள்வனவு செய்தல் லாபகரமானது என்பதனைக் கருத்தில் கொண்டு பங்குகளை கொள்வனவு செய்வது பற்றிய தீர்மானத்தை தரகர் மூலம் விளம்பர பலகைக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறே பங்குகளை விற்பனை செய்ய உள்ளோரும் அது பற்றிய விபரத்தை தரகர் மூலம் அறிவிப்பு பலகையில் பார்வைக்கு வைப்பர். பங்குகளை வாங்குபவர் அல்லது விற்பவர் பொதுவான விலைக்கு அதனை விற்க அல்லது வாங்க உடன்படும் பட்சத்தில் அவர்கள் அதனை அறிவிப்புப் பலகையில் குறிப்புக்கள் எழுதுவோருக்குத் தெரிவிக்க வேண்டும். இதுவே பங்கிற்கான விலையாகும். இத்தகைய விலையானது பகிரங்கமாக பங்கு மாற்று வணிக மண்டபத்திலேயே நிர்ணயிக்கப்பட வேண்டும். இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட தரகர் நிறுவனங்கள் பங்குகள் விற்பனை கொள்வனவாளருக்கு முறையே பங்கு கைமாற்று சம்பந்தமான ஒப்பந்தக்குறிப்பினை (Contract Note) வழங்குவார்கள். இதனை பங்கு கைமாற்றம் நடந்து 24 மணித்தியாலங்களுக்குள் தரகர் நிறுவனம் முறையே பங்குகளை கொள்வனவு விற்பனை செய்தோருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இதனைத் தொடர்ந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். பங்குகளை கொள்வனவு செய்தோர் கொள்வனவு செய்த பங்குகளிற்கான பெறுமதியைவிட மேலதிகமாக 1% யை முத்திரை வரியாகவும், 1.5% யை தரகுப் பணமாக தரகர் நிறுவனத்திற்குச் செலுத்தல் வேண்டும். பங்கினை விற்பனை செய்தோர் தரகுப் பணமாக 1.5% யை வழங்குதல் வேண்டும். முத்திரை வரியாகம் பெற்ற 1% உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படும். தரகுப்பணப் (Brokerage fee) தரகர் நிறுவனம் வழங்கிய சேவைக்காக அறவிடப்படும். பங்குகள் கொள்வனவு விற்பனை சம்பந்தமான கொடுப்பளவுகள் முறையே ஒவ்வொருமாத இரண்டாம், நான்காம் வெள்ளிக்கிழமைகளில் அல்லது முன்னதாக கொடுத்துத் தீர்க்கப்படல் வேண்டும்.

கீழ்வரும் உதாரணம் பங்குகளின் முதலீட்டின் மூலம் எவ்வாறு ஒருவர் லாபத்தினை உழைக்கமுடியும் என எடுத்துக் காட்டப்படுகிறது.

உ + ம்: A என்பவர் 1000 பங்குகளை ABC கம்பனியில் 10/50 வீதம் கொள்வனவு செய்து, குறிப்பிட்ட காலத்தின்பின் விற்பனை செய்கிறார்.

மொத்த முதலீடு		ரூபா 10, 762. 50
கழி முத்திரை வரி @ 1%	105. 00	
தரகுக்கட்டணம் @ 1.5 %	157. 50	262. 50
தேறிய முதலீட்டுத்தொகை ரூபா		10, 500. 00
கூட்டு பங்கிலாபம் @ 15 %	1500. 00	
மூலதனலாபம்	500. 00	2000. 00
கழி விற்பனை தரகு @ 1.5 %		165. 00
		ரூபா 1835. 00

கிடைக்கப்பெற்ற தேறிய தொகை ரூபா 12, 335 00

A யின் தேறியலாபம் = ரூபா 12335 — ரூபா 10, 762 50

= ரூபா 1572 50

எனவே இரண்டாம் தரபங்குச்சந்தைத் தொழிற்பாடனது பங்குகொள்வனவு செய்யவும், ஏற்கனவே கொள்வனவு செய்த பங்குகளை விற்பனை செய்வதற்கும் போதிய வசதியை வழங்குகிறது. இது பங்குகளில் முதலீடு செய்தவர்களுக்கு உதவிசெய்கிறது. இவ் இரண்டாந்தர பங்குச்சந்தை செயற்பாடுகளின் கடந்தகால தரவுகள் அதனுடைய வளர்ச்சியையும், அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைகிறது.

	1988	1987	1986	1985	1984
வருடாந்த புரள்வு	380,002,961	356,514,400	140,884,194	79,019134	18,195,078
வியாபார நாட்கள்	236	230	233	238	121
சராசரிநாளாந்த புரள்வு	1,610,182	1,458,758	602,721	332,013	150,372
விற்பனை செய் யப்பட்டபங்குகள்	13,204,532	17,323,408	6,086,694	4,774,462	—
செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்	13,027	14,964	8525	4148	1224

மேலுள்ள அட்டவணையை நோக்கும் போது, இரண்டாந்தர பங்குசந்தைத் தொழிற்பாடுகள் ஒவ்வொருவருடமும் அதிகரித்து செல்கின்றது என்ற முடிவுக்கு வரக் கூடியதாக உள்ளது.

குறிப்பு: வர்த்தகமும் நிதியும் பாடத்தினைக் கற்கும் க. பொ. த. (உ/த) வகுப்பு மாணவரைக் கருத்தில் கொண்டு இது எழுதப்பட்டது.

— கட்டுரையாளர் —

வெளிநாட்டு வியாபாரத்தில் ஏற்றுமதியாளருக்கும், இறக்குமதியாளர்க்கும் இடையில் பொருட்களுக்கு விலை இடுவதன் மூலம் ஏற்படும் உடன்படிக்கையை இன்கோரேம்ஸ் (Incoterms) என அழைக்கப்படும்.

வெளிநாட்டு வியாபாரத்தில்

ஏற்றுமதி நடைமுறை பற்றிய நோக்கு

இ. வாசுகி
வருடம் (13 வர்த்தகம்)

ஒவ்வொரு நாடும் அதன் இயற்கை அமைப்புக்காரணமாகவும் அதிகரித்த தேவைகள் காரணமாகவும் தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பிறநாடுகளில் இருந்து பண்டங்களைப் பெற்று அதற்காக பிறநாடுகளுக்குப் பண்டங்களை வழங்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. இவ்வகையில் ஒரு நாடு ஏனைய நாடுகளுடன் பணத்திற்கு அல்லது பணபெறுமதிக்கு வியாபாரத்தில் ஈடுபடல் வெளிநாட்டு வியாபாரம் என அழைக்கப்படும். இதிலிருந்து ஏற்றுமதி வியாபாரத்தை வரையறுத்தால் ஒரு நாடு ஏனைய நாடுகளுக்கு பணத்திற்கு அல்லது பணப்பெறுமதிக்கு பொருட்களை வழங்குதல் ஏற்றுமதி வியாபாரம் எனப்படும்.

இலங்கையிலிருந்து பொருட்களை ஏற்றுமதி செய்வது தொடர்பான நடைமுறையை நோக்குவோம்.

1. ஏற்றுமதியாளராகப் பதிவு செய்தலும் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளுதலும்

மரபுரீதியான பொருட்களையும், சில மரபுரீதியற்ற பொருட்களையும் ஏற்றுமதி செய்ய விரும்புவோர் இறக்குமதிகள், ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கமைய தம்மை ஏற்றுமதியாளராகப் பதிவு செய்ய வேண்டும். வர்த்தக ரீதியிலான ஏற்றுமதிக்கும் வர்த்தக ரீதியற்ற ஏற்றுமதிக்கும் உரிய விண்ணப்பப்படிவங்களில் உரிய அமைப்புகளிடம் விண்ணப்பித்து அனுமதியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

உதாரணம்:

பொருட்கள்	அனுமதிப்பத்திரம் வழங்கும் அமைப்பு
தேயிலை	இலங்கைத் தேயிலை சபை
இறப்பர்	பண்டக் கொள்வனவுத் திணைக்களம்
தெங்கு உற்பத்திப் பொருள்	தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

இரத்தினக் கற்கள்	இரத்தினக்கல் கூட்டுஸ்தாபனம்
தைத்த ஆடைகள்	புடவைக் கைத்தொழில் அமைச்சு
வாசனைத்திரவியம்	இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்
கடலுணவுப் பொருட்கள்	கடற்றொழில் அமைச்சு / கடற்றொழில் கூட்டுதத்தாபனம்
அரிசி	வர்த்தக கப்பற்துறை அமைச்சு / உணவு திணைக்களம்
மருந்து வகைகள்	மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்
மரக்கறி வகைகள்	வர்த்தக கப்பற்துறையமைச்சு

2. வெளிநாட்டு சந்தையாராய்ச்சியும் விளம்பரம் செய்தலும்

வெளிநாட்டு சந்தையில் பொருள், நுகர்வோர் போட்டியாளர் பற்றிய ஆய்வினை மேற்கொள்வதுடன் ஏற்றுமதிப் பொருட்களைப் பற்றிய விளம்பரங்களையும் மேற்கொள்ளல் வேண்டும். இலங்கை ஏற்றுமதிய ளர்கள் தமக்குத் தேவையான வெளிநாட்டு சந்தைத் தகவல்களை பின்வரும் மூலங்களில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

i) இலங்கை இறக்குமதியாளர் ஏற்றுமதியாளர் உற்பத்தியாளர் சங்கம்

ii) வர்த்தகத் திணைக்களம்

iii) ஏற்றுமதி அபிவிருத்திச்சபை

iv) வணிகக் கழகம்

v) வர்த்தக கப்பற்துறையமைச்சின் வர்த்தக தகவல் சேவைப்பிரிவு

vi) வியாபாரத் தூதுவர்கள்

vii) உள்நாட்டிலுள்ள வெளிநாட்டு நிறுவனங்கள்

3. இறக்குமதியாளரிடமிருந்து விலை விசாரணைக் கடிதத்தைப் பெறலும் கூறுவிலைக் கடிதத்தை அனுப்புதலும்

ஏற்றுமதியாளர் இறக்குமதியாளரிடமிருந்து விலை விசாரணைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு அதற்கு பின்வரும் விலைகளில் ஏதனுமொன்றைக் குறிப்பிடலாம்.

i) தளவிலை	Loco Price
ii) லொறியில் ஏற்றும் வரை இலவசம்	Free On Lorry Or Truck
iii) புகைவண்டி நிலைய விலை	At Station
iv) புகைவண்டி நிலையம் மட்டும் இலவசம்	Free On Rail F. O. R.
v) துறைவரை இலவசம்	Free On Dock F. O. D.
vi) கப்பல் அருகுவரை இலவசம்	Free Along Side Ship F.A.S.
vii) கப்பல் தளம்மட்டும் இலவசம்	Free On Board F. O. B.
(vi) விலையும் கேள்வும்	Cost and Freight. C, & F.
(ix) விலை ஈடு கேள்வு.	Cost Insurance & Freight C. I. & F.
(x) விலை ஈடு கேள்வு வட்டி.	Cost Insurance Freight & Interest C. I. F. & I.
xi) விலை ஈடு கேள்வு பணிசை வட்டி	Cost Insurancc Freight Commision & Interest C. I. F. C. & I.
xii) கப்பலால் இறக்கும் வரை இலவசம்	Ex — Ship.
iii) இறேகுவரை இலவசம்	Ex – Quay
xiv முறியில் அல்லது பந்தத்தில்	In Bond
xv) முற்றும் இலவசம்	Franco — Rendu

இவ்விலையிடல் முறைகளில் கப்பல் தளம் மட்டும் இலவசம் (F.O.B) என்ற விலையே அதிகளவில் பயன்படுத்தப்படும். விலையிடல் முறையாகும். இவ்விலையிடல் முறை இரு காரணங்களுக்காக அவசியம்.

(i) பொருட்கள் தொடர்பான செலவுகளை யார் பொறுப்பேற்பது.

ii) பொருட்களை அனுப்பும் போது ஏற்படும் இழப்புக்களை யார் பொறுப்பேற்பது என்பது தொடர்பாக அவசியமாகின்றது.

4 <u>இறக்குமதியாளரிடமிருந்து உறுதிப்படுத்தப்பட்ட கட்டளை அட்டவணையைப் பெற்றுக் கொள்ளலும் அதற்கமைய பொருட்களைத் திரட்டிப் பொதியிடுதலும்.</u>

ஏற்றுமதியாளரால் அனுப்பப்பட்ட கூறுவிலைகளை இறக்குமதியாளர் ஏற்றுக் கொண்டு பொருட்களை அனுப்புமாறு ஏற்றுமதியாளருககு கட்டளையை அனுப்பி வைப்பர். இவ்வாறு அனுப்பப்படும் கட்டளை தரவாணை எனப்படும். தரவாணையில்

குறிப்பிடப்பட்ட பொருட்களை ஒன்று சேர்த்து பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு பொருட்கள் பொதியிடப்படல் வேண்டும்.

(1) இறக்குமதியாளரினால் தெரிவிக்கப்பட்ட அடையாளங்கள் இடப்பட்டு இறக்குமதியாளரது அறிவுறுத்தல்களுக்கமைய பொருட்கள் பொதியிடப்படல் வேண்டும்:

(2) கப்பல் கம்பனியில் அல்லது விமானக்கம்பனியினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையில் பொதியிடல் வேண்டும்.

(3) பொதிகளில் மொத்த நிறை, தேறிய நிறை. தாரக நிறை குறிப்பிடப்பட்டிருத்த வேண்டும்.

5 கப்பலை ஒழுங்கு செய்தலும் கப்பல் கட்டளையைப் பெற்றுக் கொள்ளுதலும்.

ஏற்றுமதியாளரால் கப்பல் ஒழுங்கு செய்யப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் ஏற்றுமதியாளரே கப்பலை ஒழுங்கு செய்ய வேண்டும். ஒழுங்கு செய்யப்பட்ட கப்பல் கம்பனி ஏற்றுமதியாளரது சுமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டு அவற்றைகுறிப்பிட்ட துறை முகத்திற்கு எடுத்துச் செல்லுமாறு கப்பல் தலைவனுக்கு கட்டளையை வழங்கும் இக்கப்பல் கட்டளை ஏற்றுமதியாளரிடம் வழங்கப்படும்.

6 காப்புறுதி செய்தலும் காப்புறுதிச் சான்றுப் பத்திரம் பெற்றுக் கொள்ளலும்.

ஏற்றுமதியாளர் காப்புறுதி செய்ய வேண்டி இருப்பின் காப்புறுதி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு காப்புறுதி செய்தல் வேண்டும். காப்புறுதி செய்தமைக்கான அத்தாட்சியாக காப்புறுதிச் சான்றுப் பத்திரம் காப்புறுதி நிறுவனத்தால் வழங்கப்படும்.

7 விற்பனைப் பட்டியலைத் தயாரித்தல்

ஏற்றுமதியாளர் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் பற்றிய விலைகள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய பத்திரத்தைத் தயாரித்தல் வேண்டும், இதில் பொதி கட்டுதல் தொடர்பான செலவு, காப்புறுதிக்கட்டணம், கப்பற் கூலி ஆகியவை குறிப்பிடப்படல் வேண்டும்.

8 ஏற்றுமதிப் பதிவுப் பத்திரம் தயாரித்தல் சுமைகளை துறை முகத்திற்கு அனுப்பி வைத்தல்.

ஏற்றுமதியாளர் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பான விபரங்களை சுங்கப்பகுதிக்கு வெளிப்படுத்தும் பத்திரம் ஏற்றுமதிப்பதிவு பத்திரம் ஆகும்.

துறைமுக அதிகார சபையுடன் தொடர்பு கொண்டு சுமைகளை அனுப்புவதற்கு அனுமதி பெறவேண்டும் சுமைகளுடன் கப்பற் கட்டளையையும் அனுப்புதல் வேண்டும்· துறைமுகஅதிகாரசபை சுமைகளைக் கப்பலில் ஏற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்'

9 கப்பற் தலைவன் பற்றுச்சீட்டினை பெறுதல்.

சுமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டு அதற்கு அத்தாட்சியாக கப்பல் தலைவனினால் வழங்கப்படும் பத்திரமே கப்பற் தலைவன் பற்றுச்சீட்டு ஆகும். இது இரு வகைப்படும்,

(அ) தூய கப்பற் தலைவன் பற்றுச்சீட்டு:

ஒப்படைக்கப்பட்ட சுமைகள் பாதுகாப்பான முறையில் பொதி செய்யப்பட்டிருப்பின் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தூய கப்பற் தலைவன் பற்றுச்சீட்டாகும்

(ஆ) குறையுடைய கப்பற் தலைவன் பற்றுச்சீட்டு

ஒப்படைக்கப்பட்ட சுமைகளில் குறைபாடுகள் காணப்படின் அவை பற்றி பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டால் வழங்கப்படும் பற்றுச்சீட்டு குறையுடைய கப்பற்தலைவன் பற்றுச்சீட்டு எனப்படும்.

10 சுமைச் சீட்டுப் பெறல்

கப்பற் தலைவன் பற்றுச்சீட்டினை கப்பல் கம்பனியிடம் அல்லது முகவர் நிலையத்திடம் ஒப்படைத்து சுமைச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சுமைச்சீட்டு என்பது சுமைகள் பொறுப்பேற்கப்பட்டமைக்கு அத்தாட்சியாக கப்பல் கம்பனியினால் ஏற்றுமதியாளருக்கு வழங்கும் பத்திரம் இது இரு வகைப்படும்,

அ) தூய சுமைச் சீட்டு

கப்பற் தலைவனினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தூயதாயின் சுமைச்சீட்டும் தூயதாகும்,

ஆ) குறையுடை சுமைச் சீட்டு

கப்பற் தலைவன் பற்றுச்சீட்டுக் குறையுடையதாயின் சுமைச்சீட்டும் குறையுடைய சுமைச்சீட்டாகும். ஆனால் தூய சுமைச்சீட்டை நட்ட ஈட்டுக் கடிதம் ஒன்றை வழங்கிப் பெறலாம்.

சுமைச்சீட்டில் பின்வரும் விபரங்கள் இடம் பெறும்,

1) கப்பல் கம்பனி பற்றிய விபரம்.

2) ஏற்றுமதியாளர் விபரம்.

3) இறக்குமதியாளர் விபரம்.

4) பொருட்கள் பற்றிய விபரம் — கட்டுக்களில் இடப்பட்டுள்ள அடையாளம்.

5) சுமைகள் பொறுப்பேற்கப்பட்ட துறைமுகமும் இறக்கப்படும் துறை முகமும்

6) செலுத்தப்பட்ட கப்பற்கேழ்வு பற்றிய விபரம்.

இதன் உபயோகம் வருமாறு

i. கப்பல் கம்பனி சுமைகளைப் பொறுப்பேற்றுச் கொண்டமைக்கான ஆதாரம்

ii. கப்பற் கேழ்வு தொடர்பான விபரங்களைப் பெறலாம்

iii. இறக்குமதியாளர் சுமைகளை சுங்கப்பகுதியில் இருந்து விலக்குவதற்கு பயன்படுகிறது

11 விசேட பத்திரங்களைப் பெற்றுக் கொள்வனவாளனுக்கு அனுப்பி வைத்தல்.

ஏற்றுமதியாளருக்கும் இறக்குமதியாளருக்கும் உபயோகமானதும் சட்டத்தின் பிரகாரமும் பின்வரும் பத்திரங்களைப் பெறல், வேண்டும்.

1) உற்பத்தி விபரப் பத்திரம்

ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் எந்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவை என்பதை உறுதிப்படுத்த வழங்கப்படும் பத்திரமே உற்பத்தி விபரப் பத்திரம் அல்லது உற்பத்தி நாட்டுச்சான்றிதழ் எனப்படும். இப்பத்திரம் இலங்கையில் பொருட்களின் தன்மையைப் பொறுத்து இலங்கை வணிகக் கழகம் வர்த்தகத் திணைக்களம் புடைவைக் கைத்தொழில் அமைச்சு ஆகிய அமைப்புக்களிடம் பெற்றுக்கொள்ளலாம். இது முன்னுரிமைத்தீர்வைச் சலுகைகளை இறக்குமதியாளர் பெறவும் தடை விதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதைத் தடுக்கவும் உதவுகின்றது.

பிறநாட்டுப் பிரதிநிதி சாட்சிப்பத்திரம்:

ஏற்றுமதியாளர் விற்பனைப்பட்டியலில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் பெறுமதிகள் அனைத்தும் சரியானது என ஏற்றுமதிநாட்டிலுள்ள இறக்குமதியாளர் நாட்டுப் பிரதிநிதி உறுதிப்படுத்தி வழங்கும் பத்திரமே பிறநாட்டு பிரதிநிதி சாட்சிப்பத்திரம் ஆகும். இப்பத்திரம் இறக்குமதியாளர் நாட்டில் பெறுமான விகித தீர்வை விதிப்பதற்கும் இறக்குமதியாளர் காலவிரயம் இன்றி சுங்கப் பகுதியில் இருந்து பொருட்களை மீட்கவும் உபயோகிக்கப்படுகின்றது.

தர நிர்ணயப் பத்திரம்

ஏற்றுமதியாகும் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் பத்திரம் தர நிர்ணயப் பத்திரம் ஆகும். இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் தரத்திற்கமைய இருப்பின் இப்பத்திரம் வழங்கப்படும்.

நிறை அளவைகள் பற்றிய பத்திரம்

ஏற்றுமதியாகும் பொருட்களின் நிறை அளவையை உறுதிப்படுத்தி இலங்கை வணிகக் கழகத்தினால் வழங்கப்படும் பத்திரமே நிறை அளவைகள் பற்றிய பத்திரம் ஆகும். இப்பத்திரம் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் நிறை அளவையை உறுதிப்படுத்தி கப்பல் கம்பனிக்கு கப்பற் கேள்வைச் செலுத்துவதற்கும் இறக்குமதியாளர் நாட்டிலோ ஏற்றுமதியாளர்நாட்டிலோ தீர்வை விதிப்பதற்கும் பயன்படும்.

பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட பின் ஏற்றுமதியாளர்

i) விற்பனைப் பட்டியல்

ii) சுமைச் சீட்டு

iii) தர நிர்ணயப் பத்திரம்

iv) நிறை அளவைகள் பற்றிய பத்திரம்

v) உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்

vi) நட்ட ஈட்டுச் சான்றுப்பத்திரம்

vii) பிறநாட்டு பிரதிநிதி சாட்சிப் பத்திரம்

ஆகிய ஆவணங்களை நேரடியாக அல்லது வங்கி ஒன்றின் ஊடாக இறக்குமதியாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இறக்குமதியாளருக்கும் ஏற்றுமதியாளருக்கும் இடையேயான தொடர்பைப் பொறுத்து அல்லது பொருட்களின் பெறுமானத்தை அல்லது ஏற்றுமதி இறக்குமதி கொடுப்பனவு தொடர்பான நிபந்தனைகளைப் பொறுத்து ஏற்றுமதியாளன் பொருட்களுக்கான பெறுவனவைப் பெற்றுக் கொள்வர். ஏற்றுமதியாளர் பணம் தொடர்பாக இரு முறைகள் பின்பற்றப் படுகின்றன

1. கட்டளையுடன் காசு முறை

இறக்குமதியாளர் ஏற்றுமதியாளருக்கு கட்டளை அனுப்பப்படும் சந்தர்ப்பத்திலேயே அதற்கான கொடுப்பனவையும் சேர்த்து அனுப்பிவைக்கும் முறை கட்டளையுடன் காசு முறை ஆகும்.

* வங்கி ஆணை
* சர்வதேசக் காசுக் கட்டளை
* காசோலை
* தபால் மாற்றீடு
* தொலை பன்னி மாற்றீடு ஆகிய வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன

2. ஏற்றுமதிக்குப் பின்னர் பணம் பெறல்

ஏற்றுமதியாளர் பொருட்களை அனுப்பியதன் பின் பணம பெறுதல் தொடர்பாக பின்வரும் வழிமுறைகளை கையாளலாம்.

* நாணயக் கடிதம் அல்லது கொடுகடன் பத்திரம் அல்லது ஆவணக் கடிதம்
* திறந்த புத்தகக் கணக்கு முறை
* ஏற்றுமதி காரணிப்படுத்தல்
* மாற்றுண்டியல் மூலம் பணம் பெறல்

ஊழியர் சேமலாப நிதியத்தில் ஏற்படுத்தப்பட இருக்கும் மாற்றம் அரசாங்க ஊழியர் சேமலாப நிதியத்தினை ஓய்வூதியதிட்டமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஓய்வூதியமாக மாற்றப்பட்டதும் ஊழியர் இளைபாறும்போது மொத்தத்தொகையை பெறுவதற்குப் பதிலாக மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஓய்வூதியமாகப் பெற்றுக் கொள்வர்.

சர்வதேச தொடர்பாடல்

பற்றி தொகுப்பு ரீதியிலான

ஒரு கண்ணோட்டம்

அ. ஷர்மிளா
வருடம் 12 (வர்த்தகம்)

இரு பகுதியினர் தமக்கிடையே எண்ணங்கள், உணர்ச்சிகள், தகவல்கள், ஆலோசனைகள், செய்திகள் ஆகிய மற்றைப் பரிமாற்றிக் கொள்கின்ற செயற்பாட்டினையே தொடர்பாடல் என்பர். இத் தொடர்பாடலுக்கு பயன்படுத்துகின்ற சாதனங்கள் தொடர்பு கொள்ளல் சாதன்ங்கள் எனப்படும்.

மனித சமுதாயம் ஆரம்பித்து வளர்ச்சியடைந்த காலம் தொட்டு பல்வேறுபட்ட தொடர்பு முறைகள் காணப்பட்டு வந்துள்ளன. ஆனால் ஆரம்பகாலத்தில் காணப்பட்ட தொடர்பு முறைகளில் பல குறைபாடுகள் காணப்பட்டன; செய்திகள் அனுப்பப்படும்போது அது சென்றடைவதற்கு தாமதம் ஏற்பட்டது. ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு செய்திகளை அனுப்ப முடியாமல் மக்கள் அல்லல் பட்டனர்.

18ம் நூற்றாண்டின் இறுதியில் ஐக்கிய ராச்சியத்தில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியினால் கைத்தொழில்கள் இயந்திரமயமாக்கப்பட்டதால் வர்த்தகம் பெருகி செய்திகளை விரைவாகவும், முறையாகவும் அனுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டது. ஐக்கிய ராச்சியத்தின் கில் (Kill) என்பவர் வர்த்தக நோக்கங்களை விருத்தி செய்வதற்காக தபால் முறையை அறிமுகப்படுத்தினார். இம்முறை பின்பு அந்நாட்டு அரசாங்கத்தினால் சிறந்த முறையெனக் கருதப்பட்டு கையேற்கப்பட்டு நடாத்தப்பட்டது. இத்தபால் முறை வர்த்தக கைத்தொழில் அபிவிருத்திகளை வெளிநாட்டுக்குப் பரப்பும் நோக்குடன் காலப்போக்கில் வெளிநாட்டுத் தபால்ச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இதே போன்று உலகின் விஞ்ஞான முன்னேற்றத்தினால் பல புதிய தொடர்பாடல் சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு தொடர்பாடல் இன்று வளர்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்றது.

பொதுவாக கீழ்வரும் வழிகளில் தொடர்புகளை மேற்கொள்ளலாம்.

1) தாய்மொழி மூலம் — தொலைபேசி, கூட்டங்கள், இன்டர்கொம்

2) எழுத்து மூலம் — கடிதம், தந்தி

3) காட்சி மூலம் – திரைப்படங்கள், வரைபடங்கள்

4) இயந்திரம் மூலம் — Telex Tele-Prienter, Facsimile

5) சைகை மூலம் — அழைப்புமணி, ஒளி (Light)

தொடர்பு கொள்ளல் 2 வகைப்படும்

1) உள்ளகத் தொடர்பு கொள்ளல்

2 வெளியகத் தொடர்பு கொள்ளல்

உள்ளகத் தொடர்பு கொள்ளல்

நிறுவனமொன்று அதன் பகுதிக்குள் மாத்திரம் தகவல்களைப் பரிமாற்றிக் கொள்கின்ற செயற்பாட்டினையே உள்ளகத் தொடர்பு கொள்ளல் என்பர். இவ்வுள்ளகத் தொடர்பு கொள்ளலுக்கு பயன் படுத்துகின்ற சாதனங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

I. அறிவித்தல் பலகை (Notice Board)

நிறுவனமொன்று தனது பணியாளருக்கு அல்லது தொடர்பானவர்களுக்கு அறிவிப்பதற்காக தகவலை எழுத்துருவில் ஆக்கி எல்லோரும் பார்வையிடக் கூடியதான ஒரு பொது இடத்தில் தொங்கவிடப்பட்டிருப்பின் அது அறிவித்தல் பலகை எனப்படும்.

II. சுற்றறிக்கைகள் (Circulation)

ஒரு நிறுவனத்திலுள்ள தொழிலாளருக்கு அவர்களுடைய சேவை தொடர்பான பலவகைத் தகவல்களை அறிவிப்பதற்கு இவை பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் இத்தகவலை பார்வையிட்டதனை உறுதிப்படுத்தி கையொப்பமிடுவர்.

II. சிற்றாழியர் மூலம்

மேல்மட்ட முகாமை காரியாலய உதவியாளரினூடாக வாய் மூலம் அல்லது எழுத்து மூலம் தகவல் அனுப்பப்படுவதனைக் குறிப்பிடலாம்.

4. கூட்டங்கள் (Meeting)

மேல்மட்ட முகாமையினால் கீழ்மட்ட பணியாளருக்கு ஓரிடத்திலிருந்து தகவல் அளிக்கப்படுவதனையே குறிக்கும்.

5 இன்டர் கொம் (Inter Com)

தொலைபேசி போன்று கேபிள்களினூடாக உள்ளகத்துடன் தொடர்பு கொள்ளும் சாதனமாக இது காணப்படுகின்றது. இச்சாதனத்தைப் பயன்படுத்தினாலும்,

இதற்கு கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை. உள்ளகத்தைத் தவிர வெளியகத்துடன் தொடர்பு கொள்ள முடியாது.

வெளியகத் தொடர்பு கொள்ளல்

நிறுவனமொன்று தனது பகுதிக்கு அப்பால் மேற்கொள்கின்ற தொடர்பு கொள்ளலையே வெளியகத் தொடர்பு கொள்ளல் என்பர். நிறுவனம் தனது கிளைகளுடன் அல்லது ஏனைய நிறுவனங்களுடன் அல்லது ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் மேற்கொள்ளப்படுகின்ற தொடர்பு கொள்ளலாக இது காணப்படுகின்றது. வெளியகத் தொடர்பு கொள்ளலுக்கு பயன்படுத்துகின்ற சாதனங்களாக கீழ்வருவன காணப்படுகின்றன.

I. தொலைபேசி (Tele-Phone)

இருபகுதியினர் தொலைபேசி மூலம் தகவல் பரிமாற்றப்படுவதனையே இது குறிக்கின்றது. உலக நாடுகளுக்கிடையேகூட தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஒருவரோடு ஒருவர் முகமுகமாய் உரையாடுவது போன்று கருத்துக்களை பரிமாறி முடிவுகளை மேற்கொள்வது சாத்தியமாக இருப்பதால் மக்களால் பெரிதும் விரும்பப்படும் சாதனமாக அமைகின்றது. இத்தொலைபேசி தொடர்பு கொள்ளல் கீழ்வருமாறு இருவகையாகக் காணப்படுகின்றது.

i) நேர்வழித் தொலைபேசித் தொடர்பு கொள்ளல்

ஒருவர் இன்னொருவரின் தொலைபேசி இலக்கத்தினை தனது தொலைபேசியில் தொடர்பு கொள்வதன் மூலம் இன்னொருவரிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருப்பின் அதனையே நேர்வழித் தொலைபேசி தொடர்பு கொள்ளல் என்பர். பொதுவாக ஒரே ஊருக்குள் பேசும் போது இம்முறை கடைப்பிடிக்கப்படுகின்றது.

A ⟶ B

ii) மாற்றுவழித் தொலைபேசித் தொடர்பு கொள்ளல்

ஒருவர் தனது தொலைபேசியில் இன்னொருவரின் தொலைபேசி இலக்கத்துடன். நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் தொலைபேசிப்பரிவர்த்தனை நிலையத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் இன்னொருவருடன் தொடர்பு கொள்வாராயின் அதனையே மாற்றுவழித் தொலைபேசி தொடர்பு கொள்ளல் என்பர். ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுடன் கதைக்கும் போது பெரும்பாலும் இம்முறை பின்பற்றப்படுகின்றது.

(A ⟶ பரிவர்த்தனை நிலையம் ⟶ B)

II) ரெலி - ரெலிபோன் (Tele Tele Phone)

தொலைபேசியில் ஒலிகள் மட்டுமன்றி உருவங்களும் இடம் நகர்த்தப்படுவதற்கு இத்தொலைபேசி உதவுகின்றது. இது உலகில் குறைவாகவே நடைமுறையில் உள்ளது இதற்குகூடுதலான கட்டணங்கள் அறவிடப்படுகின்றது.

III) தொலையச்சு (Telex)

தொலைக்காட்சி, வானொலி போன்று தகவல்கள் நுண் அலைகளாக ரெலக்ஸ் கருவியின் மூலம் இடம் நகர்த்துவதற்கு உதவுகின்றது. ரெலக்ஸ் கருவியினுள் தகவல் உட்புகுத்துவதன் மூலம் இன்னொரு ரெலக்ஸ கருவியில் இத்தகவல் பதிவு செய்யப்படுகிறது. தொலை தொடர்புத் திணைக்களமே ஆரம்பத்தில் இத்தகவல் பரிமாற்றத்தினை செயற்படுத்தினாலும் தற்போது சில தனியார் நிறுவனங்களும் (உ+ம் :-குளோபல்) இத்தகவல் பரிமாற்றத்தினை செயற்படுத்துகின்றது. இலங்கையில் வெளி நாட்டு தொடர்பு கொள்ளலுக்கு இது அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது. இது பெரிதும் விரும்பப்படுவதற்கான காரணம்,

i) விரைவானது.

ii) ஆதாரமுடையது

iii) பயனுடன் ஒப்பிடும்போது சிக்கனமானது.

VI) தந்தி(Tele Gram)

தகவல் விரைவாக அனுப்பவேண்டியிருக்கின்ற சந்தர்ப்பத்தில் தபால் கந்தோரூடாக அனுப்பப்படுகின்ற ஒருதொடர்பு கொள்ளல் முறையினையே இதுகுறிக்கின்றது தொலைபேசியை விடக் குறைந்த செலவில் செய்திகளை அனுப்புவதற்கு தந்திசிறந்த மார்க்கமாகும். தந்திச்செய்திகள் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

v) கடல் வழித் தந்தி (Cable)

கடல் கடந்து செய்திகளை அனுப்புவதற்குப் பயன்படுத்தும் சாதனம் கடல் வழித்தந்தி ஆகும். பல நாடுகள் கடலுக்கு கீழான கம்பிகளாலும் வேறு சிலநாடுகள் ஆகாயமார்க்கமாக கம்பிகளாலும் இணைக்கப்பட்டுள்ளன இச்சாதனத்தைப் பயன்படுத்தி அஞ்சலகம் ஊடாகச் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள முடிகின்றது. தகவல் அனுப்புகின்ற இடத்திலும பெறுகின்ற இடத்திலும் பணியாளர் பணிபுரிவர்.

vi) கடிதம் (Letter)

தபால் கந்தோரூடாக இக்கடிதத்தகவல் பரிவர்த்தனை நடைபெறுகின்றது இக்கடிதம் கீழ்வருமாறு காணப்படலாம்.

i) சாதாரண தபால்.

ii) பதிவுத் தபால்

சாதாரணத் தபாலைவிட பதிவுத்தபால் முத்திரைக்கட்டணம் கூடியதாகக் காணப்பட்டாலும் தகவல் அனுப்பியோருக்கும், தகவல்பெற்றோருக்கும் இதுசான்றாகக் காணப்படுகின்றது.

vii) தகவல் தட்டச்சுப் பொறி (Tele Prienter)

தகவல் தட்டச்சுப்பொறி மூலம் இலங்கையில் தபால் கந்தோர்களுக்கிடையில் தகவலைப் பரிமாற்றுவதற்கு பயன்படுத்துகின்ற தொடர்பு சாதனத்தையே இது குறிக்கின்றது.

viii) பேசிமைல் (Facsimile)

நேரடிச் சுழற்சி தொலைபேசி வசதிகளைக் கொண்டவர்களால் இந்த இயந்திரத்தை பயன்படுத்தக் கூடியதாக இருக்கும். செய்தியை அனுப்புபவரிடமும் பெறுபவரிடமும் இவ்வியந்திரம் இருத்தல் வேண்டும். ஆவணத்தை இந்த இயந்திரத்தில் பதிந்தால் அது மறுமுனையில் நிழற்பட பிரதி ஒன்றினை உருவாக்கும். ஒரு நிமிடத்திற்குள் செய்திகளை அனுப்பிவிடும்.

ix) இன்மாசட் (Inmasat)

தரையில் இருந்து கொண்டு கப்பலில் உள்ளோரிடம் தொலை பேசி மூலம் தொடர்பு கொள்ளலுக்கு உதவுகின்ற தொடர்பு சாதனத்தையே இது குறிக்கின்றது.

x) றேடியோ கார் (Radio Car)

வாடகைக் கார்களுக்கு றேடியோத் தகவல்களைக் கொடுத்துச் சேவையை உடன் பெறுகின்ற ஒரு முறை இதுவாகும் இக்கார்களில றேடியோ சாதனம் காணப்படும் வீட்டிலிருந்து தொலைபேசி மூலம் வாடகைக் கார் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள, நிறுவனம் றேடியோ கருவி மூலம் சேவையில் ஈடுபட்டிருக்கும் தமது காருக்கு செய்தி அனுப்பும். அது குறிப்பிட்ட இடத்திற்கு உடனடியாக விரையும். இலங்கையில் இது அதிகமாக பொலிஸ் கார்களிலேயே பொருத்தப்பட்டுள்ளது.

ix செய்மதித் தொடர்பு கொள்ளல் (Sat Light)

பூமியின் ஈர்ப்பு சக்திக்கு அப்பால் செய்மதிகளை அனுப்புவதன் மூலம் பூமியில் உள்ள தகவல்களை செய்மதிகளின் மூலம் இலகுவாகத் திரட்டிக் கொள்ளக் கூடியதாக உள்ளது. இலங்கையில் இது தொடர்பான காரியாலயம் பாதுக்கையில் உள்ளது.

xii) கம்பியில்லாத் தந்தி (Wire Less)

தொலைபேசி, கடல்தந்தி போன்றல்லாது இக்கருவியினூடாக கம்பிகள் இல்லாது வானொலித் தொடர்பு ஏற்படுத்தப்படுகின்றது இதனால் ஒரே இடத்தில் நிலைகொண்டிருப்பவற்றுடன் மட்டுமின்றி, தரையிலிருந்து விமானங்கள், கப்பல்கள் என்பவற்றுடனும் பயணம் செய்யும் வாகனங்களுடனும் செய்தி பரிமாறிக் கொள்ள முடிகின்றது.

xiii பேசும் கடிகாரம்.

தொலைபேசியில் குறிக்கப்பட்ட இலக்கத்துடன் தொடர்பு கொண்டு சரியான நேரத்தினை அறிவதற்கு உதவுகின்ற சாதனமே இதுவாகும்.

xvi முத்திரை இடும் பொறி

அஞ்சற் திணைக்களத்தின் அனுமதியுடனும் அவர்கள் மேற்பார்வையின் கீழும் இயந்திரங்கள் தனியாரால் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் தாம் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ள தொகையை இவர்கள் முற்பணமாக அஞ்சல் அலுவலகத்திற்கு செலுத்துதல் வேண்டும் கடிதங்கள் அனுப்பும் போதோ அல்லது வேறு வகைகளில் முத்திரையை பயன்படுத்த வேண்டி இருக்கும் போதோ இவ் வியந்திரத்தைப் பயன்படுத்தி முத்திரை இடலாம்.

xv) தரவு நிரற்படுத்தல் அமைப்பு. (Data Processing Net Work)

களஞ்சிய சாலைகளில் மேற்கொள்ளப்படும் கொள்வனவுகள் விற்பனைகள் என்பவை இம்முறையின் கீழ் நிரற்படுத்தப்படுகின்றன. இவ்வாறு நிரற்படுத்துவதனால் வாடிக்கையாளருக்கு ஏற்படக்கூடிய தாமதங்களை தவிர்க்க முடிகின்றது. கொள்வனவுப் பகுதியும் விற்பனவுப் பகுதியும் ஒரே கணனியைப் பயன்படுத்தும் போது கொள்வனவுப் பகுதியிலிருந்து அனுப்பப்படும் தகவலை விற்பனவுப் பகுதியிலும் காட்டும்.

xvi) தகவல் வங்கிகளும் நினைவு மீட்டல் முறைகளும்

கணனியின் ஞாபகப் பகுதியில் தகவல் நிரற்படுத்தப்பட்டுச் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும். தேவை ஏற்படும் போது பொருத்தமான தகவல்களை நினைவிலிருந்து மீட்பதற்கான ஏற்பாடுகளும் காணப்படுகின்றன.

xvii நாணயத் தொலைபேசி.

குறிக்கப்பட்ட பெறுமதியுள்ள நாணயத்தினை தொலை பேசிக்குள் உட்புகுத்துவதன் மூலம் தொலைபேசிச் சேவையினைப் பெறக்கூடியதாக இருந்தால் அதனையே நாணயத் தொலைபேசி என்பர்.

தொலைபேசி விபரக் கொத்து.

தொலைபேசி தொடர்பு கொள்ளலுக்குத் தேவையான இலக்கத்தினை பெற்றுக் கொள்வதற்கு தொலைபேசி இலக்கங்களை உள்ளடக்கியதாக காணப்படுவதே தொலைபேசி விபரக் கொத்தாகும். ஆரம்பத்தில் தொலை தொடர்புத் திணைக்களமே இத்தொலைபேசி விபரக் கொத்தினை வெளியிட்டது. தற்போது தனியார் துறையினரைச் சார்ந்த G. T. E. நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. இவ்விபரக் கொத்து ஒழுங்கு முறைப்படி வரிசைப்படுத்தப்பட்டுள்ளதால் தேவையான விபரங்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகொள்ளல் சாதனங்களை தெரிவுசெய்யும்போது கவனிக்கவேண்டிய முக்கிய அம்சங்கள்

1) அறவிடும் கட்டணமும் ஏற்படும் செலவும்

2) தகவலின் முக்கியத்துவம்

3) தகவலின் அந்தரங்கத் தன்மை

4) விரைவான செய்திப் பரிமாற்றம்

5) தொடர்பு கொள்ளல் சாதனங்களின் கிடைப்பனவு

தொடர்பாடல் முறையானது அதிகரித்த விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக புதிய புதிய கண்டுபிடிப்புகளைத் தொடர்ந்து மேலும் மேலும் அதிகரிக்கத் தொடங்கி யுள்ளது எதிர் காலத்தில் கணனிகள் ரொபோக்கள் (இயந்திர மனிதன்) ஆகிய வையே தொடர்பாடல் துறையில் பாரிய செல்வாக்கை ஏற்படுத்தக் கூடும். 2000 ஆண்டளவில் பழையகாலத்து தொடர்பு முறைகள் கைவிடப்பட்டு முற் றிலும் கணனிகளுடன் சேர்ந்த தொடர்பாடல் இயங்கும் ஒரு நிலையைக் கா ணக் கூடியதாக இருக்கும் என எண்ணக் கூடிய அளவுக்கு அதன் வளர்ச்சி அதிகரித்துக் கொண்டு வருகின்றது.

இலகுவான இனிய சமையலுக்கு வழிகாட்டும்

Rinnai (றிணய்) Gas அடுப்புக்களின்

ஏக விற்பனைப் பிரதிநிதிகளான

எம்மை நாடுங்கள்

முகமதலி அப்துலலி

5-7, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

நிறுவனங்களும் அதன் மூலதனத்திற்கு பங்களிப்பு செய்தோரும்

ச. சசிகலா
வருடம் 13
(வர்த்தகம்)

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

அரசாங்கம் 60%

ஊழியர்கள் 10%

அரசநிறுவனங்கள் 30%

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

இலங்கை மத்திய வங்கி

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

யூனியன் அஸ்யூரன்ஸ் லிமிட்டட்

ஏய்க்கன் ஸ்பென்ஸ் அன் கம்பனி லிமிட்டட்

காசல் கம்பபச் அன் கம்பனி லிமிட்டட்

மேர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டட்

விற்றோல் பௌஸ்ரட் லிமிட்டட்

ஆசிய அபிவிருத்தி வங்கி

சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம்

சி. ரீ. சி. ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டட்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டட்

மூலதன அபிவிருத்தி முதலீட்டுக் கம்பனி லிமிட்டட்

ஜேம்ஸ் பின்லே என்ற நிறுவனம்
இலங்கை வர்த்தக வங்கி

சிலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டட்

சிலிங்கோ லிமிட்டட்
த பினன்ஸ் கம்பனி லிமிட்டட்
புளுடைமன்ஸ் அன் சிலிங்கோ ரவல்ஸ் லிமிட்டட்

மூலதன அபிவிருத்தி முதலீட்டுக் கம்பனி லிமிட்டட்

இலங்கை வங்கி
மக்கள் வங்கி
தேசிய அபிவிருத்தி வங்கி
ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
இலங்கை அரசு

பெல்வத்தை சீனிக் கம்பனி

Booker Agricultural Invesment of U. K.
Common wealth development corporation of U. K.
Kerry engineering ltd of Hong Kong. L. T. D.
Charted state bank.
Hong Kong shan ghai banking Corporation.
Bank of Ceylon

வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சாரக் கம்பனி

இலங்கை மின்சார சபை
நகர அபிவிருத்தி அதிகார சபை
மின்விநியோகத்தை கையளித்த உள்ளூராட்சி மன்ற அமைப்புக்கள்

வரையறுக்கப்பட்ட லங்கா பிறிமா (இலங்கை) கம்பனி

வரையறுத்த சிங்கப்பூர் பிறிமா கம்பனி
வரையறுத்த இந்தோனேசியா பிறிமா கம்பனி

வரையறுக்கப்பட்ட கொழும்பு டிறைடொக்ஸ்

துறைமுக அதிகார சபை
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
தேசிய சேமிப்பு வங்கி
பொது மக்கள்.

துறைமுக முகாமை ஆலோசனைச் சேவைகள் குழு

இலங்கைத் துறைமுக அதிகார சபை
இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனம்
சிலோன் சிப்பிங் லைன்ஸ் லிமிட்டட்
கொழும்பு டொக்கியாட் லிமிட்டட்
சிலோன் போட்சேவிஸஸ் லிமிட்டட்
சிலோன் அசோசியயேஷன் ஒவ் ஸ்டீமர் ஏஜன்ஸ்

சிலோன் டாங்கர்ஸ் லிமிட்டட்

இலங்கைக்கப்பற் கூட்டுத்தாபனம்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

லங்கா போட்சேவிஸஸ் லிமிட்டட்

இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனம்
அரசு

ஏயர்லங்கா லிமிட்டட் (AIR LANKA LTD)

இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
இலங்கை வங்கி
அரசு

வரையறுத்த கவரோடுகள் கம்பனி லிமிட்டட்

இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம்
நெறியாட் கம்பனி யப்பான் லிமிட்டட்
நிச்சிமான் கம்பனி யப்பான் லிமிட்டட்

வரையறுத்த லங்கா ஓடுகள் லிமிட்டட்

அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்
வரையறுத்த சுவர் ஓடுகள்
நெதர்லாந்து அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்
தேசிய அபிவிருத்தி வங்கி

மில்கோ

கிராமிய பால் உற்பத்தியாளர்
பொது முதலீட்டாளர்

தொலைத் தொடர்புத் திணைக்களம்

இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த கேபிள் வயலஸ் கம்பனி
இலங்கை அரசு
சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம்

பிரதேசக் கிராமிய அபிவிருத்தி வங்கி

மத்திய வங்கி
4 சுதேசிய வணிக வங்கிகள் (இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வர்த்தக வங்கி, ஹட்டன் நசனல் வங்கி)
கூட்டுறவுச் சங்கங்கள்

உருவாக்கப்படவுள்ள ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
தேசிய அபிவிருத்தி வங்கி
இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
அரசு
மத்திய வங்கி

லங்கா சீமெந்து லிமிட்டட்

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
பொதுமக்கள்

அரச அச்சகக் கூட்டுத்தாபனம்

அரசு

கட்டிடப் பொருள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

அரசு
ஊழியர்

தேசிய அபிவிருத்தி வங்கி

மத்திய வங்கி
மக்கள் வங்கி
இலங்கை வங்கி
அரசு

FOR ALL YOUR MULTI NEEDS

THE BEST

Rasavinthoddam Road,

Jaffna.

சுங்கத் தீர்வையற்ற வர்த்தகக் கடைத் தொகுதிகள்

இ. மரிஷா ஜெஸ்மின்
வருடம் 12 (வர்த்தகம்)

வரைவிலக்கணம்

வெளிநாடுகலிருந்து பொருட்களைச் சுங்கத்தீர்வை இன்றி இறக்குமதி செய்து அப்பொருட்களைத் தகுதியுடைய ஆட்களுக்கு அன்னியச் செலாவணிக்கு விற்பனை செய்யும் கடைகளைக் கொண்ட பகுதியே சுங்கத் தீர்வையற்ற வர்த்தகக் கடைத் தொகுதிகள் என அழைக்கப்படும்.

தோற்றம்

இலங்கையில் முதலாவது சுங்கத்தீர்வையற்ற வர்த்தகக் கடை 1970 இல் கொழும்பு கோட்டையிலுள்ள சதாம் வீதியில் இலங்கை கொட்டேல் கூட்டுத்தாபனத்தால் உருவாக்கப் பட்டது இதனைத் தொடர்ந்து 1972 இல் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலயத்தில் இன்னுமொரு சுங்கத்தீர்வையற்ற கடை ஆரம்பிக்கப்பட்டது ஆனால் இவை பூரணமான கடைகளாக அமையவில்லை, இவற்றில் பல குறைபாடுகள் காணப்பட்டன.

1) இக்கடைகளில் சிகரெட், குடிபானங்கள் போன்ற ஒருசில பொருட்களே விற்கப்பட்டன.

2) இப்பொருட்களுக்கு முற்றாகத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படவில்லை சுமார் 25% மான வரி விதிக்கப்பட்டது.

3) இக்கடைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு விமானப் பயணிகள், கப்பற்பயணிகள் போன்ற ஒருசிலர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்,

இலங்கையில் சகல வசதிகளையும் கொண்ட பூரணமான தீர்வையற்ற கடை 1981 ஒக்டோபர் 30 இல் கொழும்பு கொள்ளுப்பிட்டி என்னுமிடத்தில் நிறுவப்பட்டது.

தீர்வையற்ற கடைகளில் விற்பனை செய்யப்படும் சில பொருட்கள்

இங்கு சகல மின்சார, வீட்டுப் பாவனைப் பொருட்கள் உட்பட பல்வேறுவிதமான பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

1) தொலைக்காட்சிப் பெட்டி
2) வீடியோ, கசற், டெக்
3) ரேப் றெக்கோடர்
4) கமரா
5) குளிர்சாதனப்பெட்டி
6) ஆடைகள்
7) வெளிநாட்டுக் குடிவகைகள்

தீர்வையற்ற கடைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்யத் தகுதியுடையவர்கள்

தற்போது இக்கடைகளில் பின்வரும் சிலரே பொருட்களைக் கொள்வனவு செய்யத் தகுதியுடையோராகக் கருதப்படுகின்றனர்.

1) உல்லாசப் பயணிகள்
2) வெளிநாடு சென்று குறைந்தது 90நாட்களேனும் தங்கி நாடு திரும்பிய இலங்கையர்
3) இலங்கையிலுள்ள பிறநாட்டு ராஜதந்திரிகள்
4) இலங்கையில் தற்காலிக தங்குமிட அனுமதி பெற்று வதியும் வெளிநாட்டவர்

தகுதியுடைய ஒருவர் கொள்வனவு செய்யக்கூடிய பொருட்களின் பெறுமதி

1) 90 நாட்கள் வெளிநாட்டில் தங்கியிருந்து நாடு திரும்பியிருப்பின் 2500/- பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்யலாம். 90 நாட்கள் தங்கியிருந்து தீர்வைக்குரிய பொருட்கள் எதனையும் தன்னுடன் எடுத்து வராவிட்டால் ரூபா 3750]- பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்யலாம்,

2) 90நாட்களுக்குமேல் 365நாள்வரை வெளிநாட்டில் இருந்திருப்பின் 12500/- இற்குச் சமனான பொருட்களைக் கொள்வனவு செய்யலாம்

3) 365 நாட்களுக்கு மேற்பட தங்கியிருந்தால் ரூபா 25000/. தொகைக்கு பொருட்களைக் கொள்வனவு செய்யலாம்
   * இலங்கைக்கு வந்து 90 நாட்களுக்குள் இச்சலுகையைப் பயன்படுத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்யலாம்.

தீர்வையற்ற கடைகளும் அவற்றின் நிர்வாகமும்

ஒவ்வொரு தீர்வையற்ற கடைகளும் வெவ்வேறுபட்ட நிறுவனங்களினால் நிருவகிக்கப்படுகின்றன.

1) கொழும்பு கோட்டை சதாம் வீதியில் உள்ள கடையின் நிர்வாகம் இலங்கை கொட்டேல் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

2) கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமைந்துள்ள கடைகள் Gobu; Oreant Company (Cey) Ltd. இனுல் நிர்வகிக்கப்படுகிறது.

3) கொழும்பு கொள்ளுப்பிட்டியாவிலிருந்து தற்போது கொம்பனித் தெருவிற்கு மாற்றப்பட்டுள்ள கடைகளின் நிருவாகம் Ceylon Shiping Lines Ltd. இனுல் மேற்கொள்ளப்படுகிறது.

தீர்வையற்ற கடைகளை நிறுவியுள்ள தனியார்துறை அரசதுறை நிறுவனங்கள்

தீர்வையற்ற கடைகள் பலவற்றைத் தனியாரும், அரசதுறையினரும் ஏற்படுத்தியுள்ளனர். அவையாவன,

1) சிங்கர் சிறிலங்கா லிமிட்டெட்

2) சென் அன்ரனீஸ் கொண்சிலிடேற்றெட் லிமிட்டெட்

3) யூனி வோக்கஸ் லிமிட்டெட்

4) சிறிலங்கா அரசவர்த்தக (புடைவைக்) கூட்டுத்தாபனம்

5) சிறிலங்கா அரசவர்த்தக (பொது) கூட்டுத்தாபனம்

அண்மையில் தீர்வையற்ற கடைகளில் ஏற்பட்ட பிரதான மாற்றங்கள்.

1) கொழும்பு கொள்ளுப்பிட்டியாவில் இருந்த வர்த்தக கடை தற்போது கொழும்பு கொம்பனித் தெருவிலுள்ள Trans Asian Hotel Ltd. கட்டிடத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

2) வெளிநாட்டிலிருந்து திரும்பி 180 நாட்களுக்குள் பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டுமென்ற கட்டுப்பாடு 90 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது

3) கொள்வனவு செய்த பொருட்களுக்கான கொடுப்பனவு அந்நியச்செலவாணி பணமாகவும், பயணிகள், காசோலையாகவும், இலங்கையில் வதியாதோரின் அந்நியநாணயக் க/கு இல்எழுதப்பட்ட காசோலையாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனுல் தற்போது பயணிகள் காசோலை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

4) கடவுச் சீட்டு வைத்திருப்பவர்கள் மட்டுமே உட்பிரவேசிக்க முடியும்.

5) நுழைவுக் கட்டணம் 20 /= வாக அறவிடப்படுகிறது.

தீர்வையற்ற கடைகளின் அனுகூலங்கள்

தீர்வையற்ற கடைகளை நிறுவியதன் மூலம் நாட்டிற்கு பலநன்மைகள் ஏற்பட்டுள்ளன அவையாவன,

1) உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிக்கும்

2) இங்கு மலிவான விலையில் பொருட்கள் விற்பனை செய்வதால் அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ளலாம்

3) வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர் தமக்கு வேண்டிய வெளி நாட்டுப் பொருட்களை இலங்கையில் கொள்வனவு செய்வதால் அந்நியச் செலாவணியை மீதப்படுத்தலாம்.

4) இலங்கையருக்குப் புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன. இதனால் வாழ்க் கைத்தரம் உயர்வடைகிறது.

5) வெளிநாட்டுப் பொருட்களை மலிவான விலையில் இலங்கையர்கள் கொள்வனவு செய்து பயன்படுத்துவதால் எமது நாட்டவரின் வாழ்க்கைத்தரம் அதிகரிக்கும்.

தீர்வையற்ற கடைகளின் பிரதிகூலங்கள்:

தீர்வையற்ற கடைகளினால் நன்மை ஏற்பட்ட போதிலும் தீமைகளும் ஏற்படுவதை அறியக்கூடியதாகவுள்ளது.

1) இறக்குமதி செய்யும் பொருட்களின் மீது தீர்வை விதிக்காமையால் அரசின் வரி வருமானம் வீழ்ச்சியடைகிறது.

2) இறக்குமதிக்காக அதிகளவு அந்நிய செலாவணியைச் செலவிட வேண்டி உள்ளது.

3) உள்நாட்டவர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பி இங்கு பொருட்களைக் கொள்வனவு செய்வதனால் உள்ளூர் உற்பத்தி பாதிப்படைகிறது.

---

* கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவினால் 1988ம் ஆண்டின் முடியும் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த செயற்திட்டங்கள் 183 ஆகும். இதில் 164 செயற்திட்டங்களிற்கு ஒப்பந்தங்கள் கைசாத்திடப்பட்டன. இவற்றில் 101 செயற்திட்டங்கள் இயங்குகின்றன.

வாடகைக் கொள்வனவு முறை கணக்குகள்

HIRE PURCHASE ACCOUNTS

T. Rajaratnam, B. A Hons
Licenciate Certificate (I.C.A. of S. L.)
Lecturer,
Technical College,
Jaffna.

பொருட்களை விற்பனை செய்வதில் பல முறைகள் பின்பற்றப்படுகின்றன. அவை யாவன காசுவிற்பனை. கடன்விற்பனை, ஒப்படைவிற்பனை, விற்பனை இன்றேல் திருப்பி அனுப்புதல், எதிர்கால விநியோகத்திற்கான நிகழ்கால விற்பனை, வாடகைக் கொள்வனவு முறை விற்பனை என்பவையாகும். எனவே வாடகைக் கொள்வனவு முறை விற்பனை, என்பது பொருள் விற்பனை முறையில் ஒரு வகையாகும்

வாடகைக் கொள்வனவு முறை விற்பனை என்பது பொருளை விற்பனை செய்யும்போது அதற்குரிய முழுப்பணத் தொகையும் ஒரே முறையில் செலுத்தப்படுவதில்லை. இதற்குரிய கொடுப்பனவுகள் பொருள் வாங்குபவரின் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப பகுதி பகுதியாக செலுத்தப்படுவதாகும். இதனைக் கடன் விற்பனை மற்றும் மற்றைய வகை விற்பனை முறைகளிலிருந்தும் முற்கியமாக வேறுபடுத்தப்படுவது யாதெனில் பொருள் விற்கப்பட்டவுடன் அப்பொருளின் பூரண உரிமை பொருள் வாங்குபவருக்கு சென்றடைந்துவிடும். அத்துடன் இவ்வாறு பொருள் வாங்குபவர்கள் பணம் செலுத்தாது விடின், நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தே பணத்தைப் பெறலாம். ஆனால் வாடகைக் கொள்வனவு முறை விற்பனையில், பொருள் வாங்குபவர் அதற்குரிய முழுப்பணத் தொகையும் செலுத்திய பின்பே பொருள் அவருக்குச் சொந்தமாகும். அவ்வாறு தவணைக் கட்டணம் ஏதாவது ஒன்று செலுத்தத் தவறும் பட்சத்தில் பொருளை விற்பனை செய்தவர் அதைப் பறிமுதல் செய்வதற்கு உரித்துடையவர் ஆவார். உதாரணமாக, மணியம் என்பவர் தொலைக்காட்சிப்பெட்டிகளைக் காசுக்கும், வாடகைக் கொள்வனவு முறை விற்பனையிலும் விற்பனை செய்பவர் ஆவார். தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை 15000]- ரூபாவுக்கு கொள்முதல் செய்து அதனைக் கொள்விலையில் $33\,^1/_3$ % இலாபம் வைத்து வாடகைக்கொள்வனவு முறை விற்பனையில் பின்வரும் ஒப்பந்தப்படி "துரை" என்பவருக்கு 1-1-85 ல் விற்பனை செய்கின்றார். இதன்படி உடனடிக்கட்டணம் 5000/- ரூபாவும் 30-6-85 ல் 5000/- ரூபாவும், 31-12-85 ல் 5000/- ரூபாவும், மீதி 30-6-86 லும் செலுத்தப்பட வேண்டும். எனவும் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே பொருளை வாங்கும் துரை என்பவருக்கு தொலைக்காட்சிப் பெட்டியின் உரிமை 30-06-86 ல் கடைசிக் கட்டணம் செலுத்தப்பட்ட பின்பே சொந்தமாகும். இதற்

குப் பதிலாக ஏதாவது ஒரு தவணைக் கட்டணம் துறையினுல் செலுத்தத் தவறும் போது மணியத்திஞல் தொலைக்காட்சிப்பெட்டிக்கு எவ்வித கொடுப்பனவும் செய்யாமலே பறிமுதல் செய்யமுடியும், அத்துடன் மேலும் பல விடயங்களையும் இவ் உதாரணத்திலிருந்து அறிவதற்கு முடியும். அதாவது. இதன் கொள்விலை 15000/- ரூபா வாடகைக் கொள்வனவு முறை விற்பனை விலை 15000 + (15000/- × $^1/_3$) = 15000 + 5000 = 20000/- ரூபாவாகும். இதில் 5000/ = ரூபா இலாபமாகும். மேலும் இத்தொலைக்காட்சிப் பெட்டியை உடன் காசுக்கு விற்பனை செய்யும்போது தொலைக் காட்சிப்பெட்டியின் விலை வாடகைக் கொள்வனவு முறை விற்பனை விலையிலும் குறைவாகவும் கொள்விலையிலும் கூடியதாக இருக்கும். எனவே வாடகைக் கொள்வனவு முறை விற்பனையில், கொள்விலை, கைக்காசுவிலை, வாடகைக் கொள்வனவு விற்பனை விலை என மூன்று விலைகள் இருக்கும் உடன்காசு விற்பனை விலைக்கும், வாடகைக் கொள்வனவு விற்பனை விலைக்கும் இடையேயுள்ள வேறுபாடு வட்டியாகக் கருதப்படுகின்றது.

வாடகைக் கொள்வனவு விற்பனை சம்பந்தமான கணக்குகள் எவ்வாறு கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகின்றது என்பது முக்கியமாகும், இன்று உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளில் மிக முக்கியமான விற்பனை வகைகளில் ஒன்ருகக் கருதப்படுகின்றது. வளர்ந்துவரும் நாடுகளிலும் இவ்வகையான விற்பனை அதிகரித்து வருகின்றது எனவே கணக்கேடுகளில் பதிவு செய்வதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் பயன்படுத்தப்படுகின்றன இங்கு 2 பிரதான முறைகள் விளக்கப்படுகின்றது. அத்துடன் விற்பனையாளர் ஏட்டிலும் கொள்வனவாளர் ஏடுகளிலும் இது பதியப்படுகின்றது. இவற்றில் பிரதானமாக விற்பனையாளர் ஏட்டில் பதியும்போது பெறப்பட்ட பணம் மட்டுமே விற்பனையாகக் கருதப்பட்டு, பணம் பெறப்படாத பகுதியை வாடிக்கையாளர் கையில் உள்ள இருப்பு என கொள்விலையில் கணக்கெடுக்கப்பட்டு பதிவதாகும். (இது இறுதி இருப்பு போன்றது).

தரப்பட்ட உதாரணத்தின்படி விற்பனையாளர் மணியத்தின் ஏட்டில் பதியும் போது அதற்குரிய பதிவுகள் பின்வருமாறு அமையும்.

கொள்வனவு க/கு வரவு 15000

காசு க/கு செலவு 15000

(கொள்வனவின் போது உடனடியாகப் பணம் செலுத்தும்போது)

1-1-85 ல் காசுக் க/கு வரவு 5000

வாடகைக் கொள்வனவு விற்பனை க/கு செலவு 5000

(வாடகைக் கொள்வனவு விற்பனையில் உடனடிக் கட்டணம் பெறப்பட்டது

30-9-85 ல் காசுக் க/கு வரவு 5000

வாடகைக் கொள்வனவு விற்பனை க/கு செலவு 5000

(1ம் தவணைக் கட்டணம் பெறப்பட்டது)

31-12-85ல் காசுக் க/கு வரவு 50000

வாடகைக் கொள்வனவு விற்பனை க/கு செலவு 5000

(2ம் தவணைக் கட்டணம் பெறப்பட்டது)

30-06 86 ல் காசுக் க/கு வரவு 5,000

வாடகைக் கொள்வனவு விற்பனை க/கு செலவு 5,000
(இறுதிக் கட்டணம் பெறப்பட்டது)

கொள்வனவு க/கு

1-1-85	காசு	15 000	31-12-85	வியாபார கணக்கு மாற்றம்	15000
		15 000			15000

வாடகைக் கொள்வனவு விற்பனைக் க/கு

31-12-85	வியாபாரக் க/கு மாற்றம்	15 000	1-1-85	காசு	5 000
			30-6-85	காசு	5 000
			31-12-85	காசு	5 000
		15 000			15 000

மணியத்தின் 31-1285 ல் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபார இலாபநட்ட க/கு

கொள்வனவு	15000	வாடகை கொள்வனவு விற்பனை	15 000
மொத்த இலாபம் கீ/கொ/செ:	3 750	வாடிக்கையாளர் கையில் உள்ள இருப்பு	3 750
	18 750		1 8750
		மொத்த இலாபம் கீ/கொ/வ	3 750

பணம் செலுத்தாதது ரூபா 5000

இதில் இலாபம் 5,000 × ¼ (1 250)

வாடிக்கையாளர் கையிலுள்ள இருப்பு 3 750

86ம் ஆண்டிற்கான கணக்கு

வாடகைக் கொள்வனவு விற்பனை க/கு

31-12-86	வியாபார க/கு மாற்றம்	5 000	30/6/86	காசு	5 000
		5 000			5 000

மணியத்தின் 31;12 86 ல் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபார இலாப நட்ட க/கு

வாடிக்கையாளர் கையிலுள்ள இருப்பு	3750	வாடகை கொள்வனவு	
மொத்த இலாபம் கீ/கொ/செ.	1250	விற்பனவுக் க/கு	5 000
	5000		5 000
		மொத்த இலாபம் கீ.கொ/வ	1 250

இம்முறையில் கொள்வனவாளர் தரவேண்டிய பணம் அவர் கணக்கில் காட்டப் படாது அவர் தரவேண்டிய தொகை வாடிக்கையாளர் கையில் உள்ள இருப்பாகக் காட்டப்படுகிறது. (இது அடுத்த வருட ஆரம்ப இருப்பாக வரும்)

இரண்டாம் முறை: இதன்படி முழுவிற்பனையும் அந்தஆண்டே விற்பனையாக கருதப்பட்டு கொள்வனவு செய்தவர் இன்னும் தரவேண்டிய பணம் சொத்தாகக் காண்பிக்கப்படும் அத்துடன் அதில் உள்ள இலாபம் தேருத இலாப ஒதுக்காக ஏற்பாடு செய்யப்பட வேண்டும் உதாரணப்படி:-

1-1-85 ல் கொள்வனவு க/கு வரவு 15,000

காசுக் க/கு செலவு 15,000

(தொலைக்காட்சிப்பெட்டி கொள்வனவு செய்யப்பட்டது.)

1-185 ல் துரை க/கு வரவு 20,000

வாடகைக் கொள்வனவு விற்பனை க/கு செலவு 20,000

(துரைக்கு விற்பனை செய்யப்பட்டது)

1-1-85 ல் காசுக் க/கு வரவு 5000

துரை க/கு செலவு 5000

(உடனடிக் கட்டணம் பெறப்பட்டது).

30-6-85 ல் காசுக் க/கு வரவு 5000

துரை க/கு செலவு 5000

(1ம் தவணைக் கட்டணம் பெறப்பட்டது)

31-12-85ல் காசுக் க/கு வரவு 5000

துரை க/கு செலவு 5000

(2ம் தவணைக் கட்டணம் பெறப்பட்டது)

30-6-86 ல் காசுக் க/கு வரவு 5000

துரை க/கு செலவு 5000

(இறுதிக் கட்டணம் பெறப்பட்டது)

கொள்வனவுக் க/கு

1-1-85	காசு	15000	31-12-85	வியாபார கணக்குக்கு மாற்றம்	15 000
		15000			15 000

துரை க/கு

-1-85	வாடகைக் கொள்வனவு விற்பனை	20,000	1-1-85	காசு	5 000
			30-6-85	காசு	5 000
			31-12-85	காசு	5 000
				மீ.கி.கொ-செ	5 000
		20000			20 000
1-1-86	மீ. கி. கொ. ல.	5000	30-06-86	காசு	5 000
		5000			5 000

வாடகைக் கொள்வனவு விற்பனை க/கு

3-12 85	வியாபாரக் க/கு மாற்றம்	20 000	1/1/85	துரை	20 000
		20 000			20 000

மணியத்தின் 31-12-85 ல் முடிவடைந்த ஆண்டுக்கான
வியாபார இலாப நட்டக் க/கு

கொள்வனவு	15 000	விற்பனை	20 000
மொத்த இலாபம் கீ. கொ. செ.	5 000		
	20 000		20 000
		மொத்த இலாபம் மீ, கீ. கெ. வ.	5 000
தேறாத இலாப ஒதுக்கம்	1 250		

தேறாத இலாப ஒதுக்கு க/கு

3 - 12-85	மீ-கீ.கொ.செ.	1 250	31-12-85	இலாப நட்ட க/கு	1 250
		1 250			1 250
31-12-86	இலாப நட்ட க/கு	1 250	1-1-86	மீ.கீ.கொ,வ	1 250

மணியத்தின் 31-12-86 ல் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபார இலாபநட்ட க/கு

கொள்வனவு	—	விற்பனை	—
	-		-
		தேறாத இலாப ஒதுக்கு	1 250

31-12-85 ல் தேறாத இலாப ஒதுக்குக் கணிப்பீடு

$$\frac{5000}{133\frac{1}{3}} \times 33\frac{1}{3} = \frac{5000}{4} \times 1 = 1\,250$$

கொள்வனவாளர் ஏட்டில்

முதலாம் முறை:-

1-1-85 ல் தொலைக்காட்சிப் பெட்டி க/கு வரவு 5,000

காசுக் க/கு செலவு 5,000

(உடனடிக் கட்டணம் செலுத்தி தொலைக்காட்சிப் பெட்டி பெறப்பட்டது)

30-6-85 ல் தொலைக்காட்சிப் பெட்டி க/கு வரவு 5,000

காசுக் க/கு செலவு 5,000

(1 வது தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டது)

31.12-85 ல் தொலைக்காட்சிப் பெட்டி க/கு வரவு 5,000

காசுக் க/கு செலவு 5,000

(2 வது தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டது)

30-6-86 தொலைக்காட்சிப்பெட்டி க/கு வரவு 5,000

காசுக் க/கு செலவு 5,000

(இறுதிக் கட்டணம் செலுத்தப்பட்டது-)

தொலைக்காட்சிப் பெட்டி க/கு

1-1.85	காசு	50,00	31.12,85	மீ.கீ கொ.செ	15,000
30-6-85	காசு	5,000			
31 12.85	காசு	5,000			
		15,000			15,000
30.6,86	மீ.கீ,கொ,வ.	15,000	31-12-86	மீ.கீகொ,செ	20,000
	காசு	5,000			
		20,000			20,000
1.1.87	மீ.கீ.கொ.வ.	20,000			

31.12.85 ல் தொலைக்காட்சிப்பெட்டி மீதி 15000/- ரூபா இருந்தபோதும் இதற்குப் பெறுமானத் தேய்வு கணிக்கும்போது முழுப் பெறுமானத்தில் அதாவது 20000/- ரூபாவுக்கும் கழிக்கவேண்டும்.

இரண்டாவது முறை:

1.1-85 ல் தொலைக்காட்சிப்பெட்டிக் கணக்கு வரவு 20,000.

விற்பனையாளர் கணக்கு (மணியம் கணக்கு) செலவு 20,000

(வாடகைக் கொள்வனவு விற்பனை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது.)

1.1-85 ல் விற்பனையாளர் கணக்கு வரவு 5,000

காசுக்கணக்கு செலவு 5,000

(உடனடிக் கட்டணம் செலுத்தப்பட்டது)

30-6-85 ல் விற்பனையாளர் கணக்கு வரவு 5,000

காசுக்கணக்கு செலவு 5,000

(1 வது தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டது)

31-12-85 ல் விற்பனையாளர் கணக்கு வரவு 5,000

காசுக்கணக்கு செலவு 5,000

(2 வது தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டது.)

30-6 86 ல் விற்பனையாளர் கணக்கு வரவு 5,000

காசுக் கணக்கு செலவு 5,000

(இறுதிக்கட்டணம் செலுத்தப்பட்டது)

விற்பனையாளர் (மணியம்) கணக்கு

1-1-85	காசு	5,000	1-1-85	தொலைக்காட்சிப்பெட்டி	20,000
30-6-85	காசு	5,000			
31-12-85	காசு	5,000			
31-12-85	மீ.கி.கொ.செ.	5,000			
		20,000			20,000
30-6-86	காசு	5,000	1-1.86	மீ.கீ.கொவ.	5,000
		5,000			5,000

தொலைக்காட்சிப் பெட்டி கணக்கு

1-1-85	விற்பனையாளர் க/கு	20,000	31-12-85	மீ.கீ.கொ.செ	20,000
		20,000			20,000
1-1-86	மீ.கி.கொ.வ	20,000			

வாடகைக் கொள்வனவு விற்பனைக் கணக்குகள் இன்னுமொரு முறையாகவும் பதிவு செய்யப்படுகின்றன. அதாவது ஏற்கனவே கூறப்பட்டது போன்று இதில் கொள் விலை, கைக்காசுவிலை, வாடகைக் கொள்வனவு விற்பனை விலை என மூன்று வகையான விலைகள் இதில் பயன்படுத்தப்படுகின்றது, எனவே கைக்காசு விலைக்கும், வாடகைக் கொள்வனவு விற்பனை விலைக்கும் இடைப்பட்ட தொகை வட்டியாகக் கருதப் படும் என ஏற்கனவே கூறப்பட்டது. இவ்வாறு கூறப்பட்ட வட்டியை கணக்கிடுவதும் அதைப் பதிவு செய்வதும் முக்கிய பிரச்சனையாகக் கருதப்படுகின்றது. பரீட்சைகளில் வாடகைக் கொள்வனவு விற்பனை முறைகளில், செலுத்தப்படும் கட்டணமும் வட்டி வீதமும் தந்து கைக்காசு விலையைக் கணக்கிட்டுப் பதிவு செய்யும் படியும் கேட்கப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் வட்டித் தொகை கணக்கிட்டு கைக்காசு விலை கணக்கிட்டு கணக்கேடுகளில் பதிவு செய்யவேண்டும்.

உதாரணம்:

1985 ஜனவரி 1ல் ஆறுமுகம் வாடகைக் கொள்வனவு முறையில் பாலன் என்பவரிடம இருந்து மோட்டார் சைக்கிளைப் பெற்றுக்கொண்டார். உடனடிக் கட்டணமாக 4,000/- ரூபாவும், மீதி ஒவ்வொன்றும் 8,000/- ரூபா கொண்ட மூன்று அரையாண்டுத் தவணைக் கட்டணத்தில் செலுத்தப்படவேண்டுமெனவும், முதலாவது தவணைக் கட்ணம் செலுத்த வேண்டிய திகதி யூன் 30, 1985 என உடன்படிக்கையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆண்டுக்கு 10 வீதம் வட்டி செலுத்தப்படுகின்றது என்ற அடிப்படையில் கைக்காசு விலையையும் ஏனைய பேரேட்டுக் கணக்குகளையும் காட்டுக.

இவ்வாறான கணக்குகளில் முதலில் வாடகைக் கொள்வனவு விற்பனை விலை கணிக்கப்படவேண்டும். இதன்படி

உடனடிக் கட்டணம்		4,000
தவணைக்கட்டணம்	8,000 × 3	24,000
வாடகைக் கொள்வனவு விலை		28,000

இதில் உடனடிக் கட்டணம் 4000/- ரூபா செலுத்தப்படுவதால் கைக்காசு விலையில் இருந்து இதைக் கழித்தே வட்டி கணிக்கப்பட வேண்டும். மேற்கூறப்பட்ட கணக்கில் கைக்காசுவிலை கணிப்பிடுவதற்கு வட்டித்தொகை கணிக்கப்படவேண்டும் அத்துடன் இவ்வட்டித்தொகை மூன்று தவணைக் கட்டணங்களிலும் செலுத்தப்படும்- தொகைகளிலேயே உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே கடைசிக் கட்டணமான 8,000/ வில் 6 மாதத்திற்கான 10 வீதம் வட்டி அடங்கியுள்ளது. எனவே இதன்படி $\left(\frac{8,000}{110} \times 10\right)$ ஒரு வருட வட்டி கணிப்பிடலாம்; ஆனால் 6 மாததிற்கு வட்டி

காணப்பட வேண்டுமாதலால் $\frac{8,000}{105} \times 10$ எனக் கணக்கிட்டு 8,000/- ரூபாவில் வட்டியாகச் செலுத்துகின்ற தொகையைக் கணக்கிடலாம்.

இதன்படி காசுவிலையை கணக்கிடுதல்.

தவணைகள்	இறுதிமீதி	தவணைக்கட்டணம்	முழுத்தொகை	வட்டி	ஆரம்ப மீதி
3	...	8,000	8,000	380	7,620
2	7,620	8,000	8,000	744	14,876
1	14,876	8,000	8,000	1,088	21,788

∴ கைக்காசு விலை = 21788 + 4000 = 25788

விற்பனையாளர் ஏட்டில் பதிவுகள் வருமாறு

ஆறுமுகம் க/கு வரவு 25,788

வாடகை கொள்வனவு விற்பனை க/கு செலவு 25,788

(வாடகைக் கொள்வனவு அடிப்படையில் விற்கப்பட்டது.)

1-1-85 ல் காசுக் கணக்கு வரவு 4,000

ஆறுமுகக் கணக்கு செலவு 4,000

(உடனடிக் கட்டணம் பெறப்பட்டது.)

30-6-85 ல் ஆறுமுகம கணக்கு வரவு 1,088

வட்டி கணக்கு செலவு 1,088

(6 மாதத்திற்கான வட்டி கணக்கிடப்பட்டுள்ளது)

30-6-85 ல் காசுக் கணக்கு வரவு 8,000

ஆறுமுகம் கணக்கு செலவு 8,000

(1 வது தவணைக்கட்டணம் வட்டியும் சேர்த்து செலுத்தப்பட்டுள்ளது)

31-12-85 ல் ஆறுமுகம் கணக்கு வரவு - 744

வட்டி கணக்கு செலவு 744

(1-6-85 - 31-12.85) வரை வட்டி கணக்கிடப்பட்டு பதியப்பட்டது)

31-12-85 ல் காசுக்கு கணக்கு வரவு 8,000

ஆறுமுகம் கணக்கு செலவு 8,000

(2ம் தவணைக் கட்டணமும் வட்டியும் சேர்த்து செலுத்தப்பட்டுள்ளது-)

30-6-86 ல் ஆறுமுகம் கணக்கு வரவு 380

வட்டிக் கணக்கு செலவு 380

(1-1-86 - 30-6-86 வரை வட்டி கணக்கிட்டு பதியப்பட்டது)

30-6-86 ல காசுக்கணக்கு வரவு 8000

ஆறுமுகம் கணக்கு செலவு 8000

(இறுதிக் கட்டணமும் வட்டியும் சேர்த்து செலுத்தப்பட்டது)

ஆறுமுகம் கணக்கு.

1-1-85	வாடகைக் கொள்வனவு விற்பனை	25 788	1-1-85	காசு	4 000
30-6-85	வட்டி	1 088	30-6-85	காசு	8 000
31-12-85	வட்டி	744	31-12-85	காசு	8 000
			31-12-85	மீ.இ.கொ.செ	7 620
		27 620			27 620
1-1-86	மீ.இ.கொ.வ.	7 620	30-6-86	காசு	8 000
30-6-86	வட்டி	380			
		8 000			8 000

வட்டிச் கணக்கு

31-12-85	இலாப நட்ட கணக்கு	1 832	30-6-85	ஆறுமுகம்	1 088
			31-12-85	ஆறுமுகம்	744
		1 832			1 832
31-12-86	இலாப நட்ட கணக்கு	380	30-6-86	வட்டி	380

வாடகைக் கொள்வனவு விற்பனைக் கணக்கு

31-12-85	வியாபார க/குக்கு மாற்றம்	25 788	1-1-85	ஆறுமுகம்	25 788
		25 788			25 788

கொள்வனவாளர் ஏட்டில் பதிவுகள்

1 1-85 மோட்டார் சைக்கில் கணக்கு வரவு 25,788

பாலன் கணக்கு செலவு 25,788

(வாடகைக் கொள்வனவு முறையில் கொள்வனவு செய்யப்பட்டது)

1-1-85 ல் பாலன் கணக்கு வரவு 4 000

காசுக்கணக்கு செலவு 4,000

(உடனடிக் கட்டணம் செலுத்தப்பட்டது.)

30-6-85 வட்டிக் கணக்கு வரவு 1,088

பாலன் கணக்கு செலவு 1,088

(வட்டி கணக்கிட்டு பதியப்படுகிறது.)

30-6-85 ல் பாலன் கணக்கு வரவு 8,000

காசுக்கணக்கு கணக்கு செலவு 8,000

(1 வது தவணைக் கட்டணமும் வட்டியும் செலுத்தப்பட்டது.)

31-12-85 ல் வட்டிக்கணக்கு வரவு 744

பாலன் கணக்கு செலவு 744

(வட்டி கணக்கிட்டுப் பதியப்பட்டுள்ளது)

31-12-85 பாலன் கணக்கு வரவு 8,000

காசுக் கணக்கு செலவு 8,000

(2ம் தவணைக் கட்டணமும் வட்டியும் செலுத்தப்பட்டது)

30-6-86 வட்டிக் கணக்கு வரவு 380

பாலன் கணக்கு செலவு 380

(வட்டி கணக்கிட்டு பதியப்பட்டது)

30-6-86 பாலன் கணக்கு வரவு 8,000

காசுக் கணக்கு செலவு 8,000

(இறுதி தவணைக் கட்டணமும் வட்டியும் செலுத்தப்பட்டது)

பாலன் கணக்கு

1-1-85	காசு	4 000	1-1-85	மோட். சைக்கிள்	25 788
30-6-85	காசு	8 000	30-6-85	வட்டி	1 088
30-6-85	காசு	8 000	31-12-85	வட்டி	744
31-12-85	மீ.கீ-கொ.செ.	7 620			
		27 620			27 620
30-6-86	காசு	8 000	1-1-86	மீ.கீ கொ.வ	7 620
			3 -6-86	வட்டி	380
		8 000			8 000

மோட்டார் சைக்கிள் கணக்கு

1-1-85	பாலன்	25 788	31-12-85	மீ.கீ.கொ.செ.	25 788
		25 788			25 788
1-1-86	மீதி கீ. கொ. வ.	25 788			

வட்டிக் கணக்கு

30-6-85	வட்டி	1 088		இலாப நட்ட க/கு	1 832
31-12-85	வட்டி	744			
		1 832			1 832
30-6-86	வட்டி	320		இலாப நட்ட க/கு	320

✱ உத்தரவாதத்தால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கொழும்பு பீலிஸ முறிகள் கம்பனி ஆரம்பத்தில் கொழும்பு தரகர் சங்கத்தின் உபவிதிகளிற்கமையவே செயற்பட்டு வந்தது. ஆனால் 1988 ஒக்டோபரில் இருந்து தனக்கென புதிய உபவிதிகளை நடைமுறைப்படுத்துகிறது.

பங்குடமைக் கலைப்பு

இ. அனெற் செல்வினி
வருடம் 13 (வர்த்தகம்)

1890ம் ஆண்டுப் பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின் படி இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் மூலதனமிட்டு நல்லெண்ண அடிப்படையில் இலாபத்தை நோக்கமாகக் கொண்டு அமைந்த அமைப்பான பங்குடமையானது தனது வியாபார நடவடிக்கைகளை முற்று முழுதாக முடித்துக் கொள்கின்ற நிலையே பங்குடமைக் கலைப்பு எனப்படுகிறது. ஒரு பங்குடமையானது பல காரணங்களினால் கலைக்கப் படுகிறது.

சட்டப்படி பங்குடமையொன்று தொடர்ச்சியாக நட்டத்தை அனுபவித்து வந்தாலும் நாட்டின் பொதுச் சட்டத்திற்கு முரணான நோக்கத்தைக் கொண்டு இருந்தாலும், ஒரு பங்காளன் தொழில் செய்யும் வலுவை இழந்திருந்தாலும், பங்காளன் ஒருவன் புத்தி சுயாதீனமற்றவனாக இருந்தாலும். பங்குடமையைக் கலைப்பது நீதியானதும் நியாயமானதும் என்று நீதிமன்றம் கருதினாலும் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் அப்பங்குடமையானது கலைக்கப்படும்.

ஒப்பந்தம் எதுவுமில்லாத சந்தர்ப்பத்தில் ஒரு பங்குடமையானது ஒரு பங்காளன் பங்குடமையினைக் கலைக்க விரும்புவதாகக் கூறினாலும், பங்குடமை சட்டவிரோதமானதாக அமைந்தாலும், ஒரு பங்காளன் இறந்தாலும், ஒரு பங்காளன் முறிவடைந்தாலும், பங்குடமையின் நோக்கம் நிறைவேற்றப்பட்டாலும், பங்குடமையின் காலம் முடிவடைந்தாலும் அது கலைக்கப்படும்.

பொதுவாகப் பங்காளர்களுக்கு இடையில் காணப்படும் ஒப்பந்தமானது முரண்பட்டதாக இருக்கும் போது முரண்பாடுகள் இருக்கும் போது அம்முரண்பாடுகள் தீர்க்கப்படாதவிடத்து, மட்டும் நீதிமன்றக் கட்டளைப்படி முழுமையாகப் பங்குடமை கலைக்கப்படும் பங்குடமை முழுமையாகக் கலைக்கப்படும் போது பங்காளரின் உடன்பாட்டிற்கேற்ப மூலதனக் க/கு நடைமுறைக் க/கு வெளியாரின் கடன் க/கு என்பவற்றில் காணப்படும் செலவு மீதிகளைத்தீர்க்கப் பங்குடமையின் சொத்துகள் பயன்படுத்தப்படும்.

ஒரு பங்குடமை நிறுவனமானது பின்வருமாறு தனது பொறுப்புகளைக் கொடுத்துத் தீர்க்கும் :

i. *பங்குடமைக் கலைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது கலைத்தல் செலவுகள் ஏற்படும். எனவே இவற்றை முதலில் கொடுத்துத் தீர்க்க வேண்டும்.*

ii. நிறுவனத்தில் பங்காளராய் இல்லாத வெளியாரின் கடன்களைக் கொடுத்துத் தீர்க்க வேண்டும்.

iii. பங்குடமை நிறுவனத்தின் பங்காளர்கள் நிறுவனத்தில் ஈடுசெய்த மூலதனத் திற்குப்புறம்பாக மேலதிகமாக வழங்கி இருக்கும் கடன்களையும் முற்பணங் களையும் கொடுத்துத் தீர்க்க வேண்டும்.

iv. பங்குடமையின் பங்காளர்களின் இறுதி மூலதனக் க/கு மீதி அதாவது பங்கா ளரின் மூலதனக் க/கு மீதியுடன் நடைமுறைக் க/கு இலாப நட்டம் என்ப வற்றையும் சேர்த்த இறுதி மூலதன மீதியைக் கொடுத்துத் தீர்க்கவேண்டும்.

பங்குடமைக் கலைப்பினை மேற்கொள்ளும் போது கட்டாயமாகப் பங்குடமையின் சொத்துகள் விற்கப்படல் வேண்டும் அல்லது பங்காளர்கள் அவற்றைப் பொறுப் பேற்க வேண்டும். வெளியார் கடன்களும், பங்காளரின் மேலதிகக் கடன்களும் கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டும். இவ்வாறு கடன்களைத் தீர்த்த பின் காணப் படுகின்ற தேறிய தொகை பங்காளரின் மூலதனத்தை ஈடு செய்யக் கூடியவாறு அமைந்திருக்கும்.

பங்குடமைக் கலைப்பின் போது நிறுவனத்தின் சொத்துக்கள் அனைத்தும் திரவ நிலையில் உள்ளன என்று கூற முடியாது. எனவே திரவத்தன்மை அற்ற சொத்துக்களைத் திரவத்தன்மை உடையவைகாக மாற்றுவதற்குத் தேறிய பணக் க/கு தயாரிக்கப் படும். இத்தேறிய பணக் க/கின் வரவுப் பக்கத்தில் காசு மீதி, வங்கி மீதி தவிர்ந்த திரவத்தன்மையற்ற சொத்துகள் மாற்றப்படும் அத்துடன் பங்குடமைக் கலைப்புச் சம்பந்தமான செலவீடுகளும் பதியப்படும் தேறிய பணக் க/கின் செலவுப் பக்கத்தில் நிலையான சொத்துகளின் பெறுமானத் தேய்வு ஒதுக்கங்கள் அறவிடமுடியாக் கடன் ஒதுக்கம் திரவத்தன்மை அற்ற சொத்துகளிலிருந்து தேறும் பெறுமதி என்பன பதிவு செய்யப்படும் இறுதியில் தேறிய பணக் க/கு மீதி பங்காளர் ஒவ்வொருவரினதும் மூலதனக் க/கிற்கு மாற்றப்படும்.

கணக்குப் பதிவுகள் :

i காசு வங்கி தவிர்ந்த ஏனைய சொத்துக்களின் புத்தகப் பெறுமதியைத் தேறிய பணக் க/கில் வரவிலும் குறிப்பிட்ட சொத்துக் க/கில் செலவிலும் பதிதல் வேண்டும் அதேவேளை நிலையான சொத்துகளுக்கான பெறுமானத்தேய் வொதுக் கத்தையும் அறவிட முடியாக் கடன் ஒதுக்கத்தையும் குறிப்பிட்ட ஒதுக்கக் க/கில் வரவிலும் தேறிய பணக் க/கில் செலவிலும் பதிதல் வேண்டும்.

ii. நிறுவனத்தின் சொத்துக்களை விற்பனை செய்யும் போது கிடைக்கும் பணத்தைக் காசு அல்லது வங்கிக் க/கில் வரவிலும் தேறிய பணக் க/கில் செலவிலும் பதிதல் வேண்டும் அதே வேளை சொத்துகள் விற்கப்படாது பங்காளர் எவரா வது அவற்றைப் பொறுப்பேற்று இருந்தால் அதனைப் பங்காளர் மூலதனக் க/கில் வரவிலும் தேறிய பணக் க/கில் செலவிலும் பதிதல் வேண்டும்.

iii. பங்குடமைக் கலைப்பின்போது ஏற்படும் கலைத்தல் செலவுகளைத்தேறிய பணக் க/கில் வரவிலும் காசு அல்லது வங்கிக் க/கில் செலவிலும் பதிதல் வேண்டும்.

iv. கடன் கொடுத்தோருக்கான கடன்களைக்கொடுத்துத் தீர்க்கும்போது கடன் கொடுத்தோர் க/கில் வரவிலும், காசு அல்லது வங்கிக் க/கில் செலவிலும் பதிதல் வேண்டும். பங்காளர் கடன் கொடுத்தோரின் கடன்களைப் பொறுப் பேற்றுக் கொண்டால் கடன் கொடுத்தோர் க/கில் வரவிலும் குறிப்பிட்ட பங்காளரின் மூலதனக் க/கில் செலவிலும் பதிதல் வேண்டும்.

கடன் கொடுத்தோரின் கடனுக்காக வட்டி ஏதேனும் வழங்கி இருந்தால் அவ்வட்டியைத் தேறிய பணக் க/கில் வரவிலும் கடன் கொடுத்தோர் க/கில் செலவிலும் பதிதல் வேண்டும். இதேபோல் கடன் கொடுத்தோரிடம் இருந்து கழிவைப் பெற்று இருந்தால் அதனைக் கடன் கொடுத்தோர் க/கில் வரவிலும் தேறிய பணக் க/கில் செலவிலும் பதிதல் வேண்டும்.

v. தேறிய பணக் க/கு மீதி இலாபம் அல்லது நட்டத்தைக் காட்டும் தேறிய பணக் க/கு மீதி இலாபத்தைக் காட்டுமாயின் தேறிய பணக் க/கில் வரவிலும் பங்காளர் மூலதனக் க/கில் செலவிலும் பதிதல் வேண்டும். தேறிய பணக் க/கு நட்டத்தை காட்டுமாயின் பங்காளர் மூலதனக் க/கில் வரவிலும் தேறிய பணக் க/கில் செலவிலும் பதிதல் வேண்டும்.

vi. பொது ஒதுக்கம் போன்றவை ஏதேனும் இருப்பின் அதனைப் பங்காளரிடையே இலாப நட்ட விகிதப்படி பிரித்துப் பங்காளரின் மூலதனக் க/கிற்கு மாற்றுதல் வேண்டும் இவ்வாறு மாற்றும்போது பொது ஒதுக்கக் க/கில் வரவிலும் பங் காளர் மூலதனக் க/கில் செலவிலும் பதிதல் வேண்டும்,

vii. பங்காளரின் மேலதிகக் கடன்களையும் கொடுத்துத் தீர்த்தல் வேண்டும் இறுதி யில் மூலதனக் க/கு மீதியும் காசு அல்லது வங்கிக் க/கின் மீதியும் சமப்பட்ட வையாக அமையும். பங்காளரின் மூலதனக் க/கு மீதிகள் செலவு மீதிகளாகக் காணப்பட்டால் அவற்றைப் பங்காளர் மூலதனக் க/கில் வரவிலும் காசு அல்லது வங்கிக் க/கில் செலவிலும் பதிந்து க/குப் புத்தகங்கள் மூடப்படும்.

எந்த வொரு பங்காளரது மூலதனக் கணக்கிலாவது வரவு மீதி காணப்பட்டால் இவ்வரவு மீதியை அப்பங்காளர் காசாகக் கொண்டு வருதல் வேண்டும். இவ்வாறு அத்தொகையைக் கொண்டுவர முடியாதவராக அதாவது முறிந்தவராக அப்பங்காளர் காணப்பட்டால் ஒப்பந்தத்தில் நட்டப்பகிர்வு இலாபநட்ட விகிதப்படி என்று கூறப் பட்டிருந்தால் மட்டுமே இலாப நட்ட விகிதப்படி ஏனைய பங்காளர் அந்நட்டத்தைப் பொறுப்பேற்க வேண்டும். ஒப்பந்தம் எதுவும் இல்லாத சந்தர்ப்பத்தில் 1904 இல் இங்கிலாந்தில் இடம் பெற்ற வழங்கு ஒன்றின் தீர்ப்பான "காணர் எதிர் மறே" தீர்ப்பைப் பின்பற்றிப் பங்காளரின் மூலதன விகிதப்படி அந்நட்டத்தை ஏனைய பங் காளர்கள் பொறுப்பேற்கும் போது முறிவடையாத பங்காளர் மூலதனக் க/கில் வரவிலும் முறிவடைந்த பங்காளர் மூலதனக் க/கில் செலவிலும் பதிதல் வேண்டும்

"X" பங்குடமையின் 31-12-88 இல்

ஐந்தொகை

பொறுப்பு		தொகை	சொத்து		தொகை
உரிமையாண்மை			நிலையான சொத்து		
மூலதனம்:- P	400 000		காணி கட்டடம்	400 000	
Q	300 000		மோட்டார்	150 000	
R	100 000	8 000 000	இயந்திரம்	200 000	
நடைமுறைக் கணக்கு: P		(10 000)	தளபாடம்	50 000	800 000
Q		7 500			
R		2 500			
பொது ஒதுக்கம்		25 000	நடைமுறைச்சொத்து		
நீண்டகாலக் கடன்			சரக்கிருப்பு	100 000	
கடன் Q		50 000	கடன்பட்டோர்	50 000	
நடைமுறைக்கடன்		125 000	வங்கி	50 000	200 000
		1 000 000			1 000 000

P, Q, R என்ற பங்காளர்கள் இலாப நட்டங்களை $^2/_3 : ^4/_5 : ^2/_6$ என்ற விகிதத்தில் பங்கிடுகிறார்கள் "X" பங்குடமை நிறுவனத்தைப் பங்காளர்கள் கலைக்கத் தீரமனித்ததுடன் க/குகளை முடிப்பதற்குப் பின்வரும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள்.

காணி கட்டடம் 200 000/- வாகவும் மோட்டார் 100 000/- வாகவும் இயந்திரம் 125 000/- வாகவும் விற்பனை செய்தல், தளபாடத்தை 40 000/- விலையில் P உம் சரக்கிருப்பை 80 000/- விலையில் Q உம் எடுத்துக் கொள்ளல், கடன் பட்டோரை ஐந்து வீதம் அறவிட முடியாக் கடன் நீக்கி R பொறுப்பேற்றல், Q இன் கடன் கொடுத்துத் தீர்த்தல்.

கடன் கொடுத்தோருக்கு 123 000/- கொடுத்து க/கு தீர்த்தல் பங்குடமைக்கு ஏற்பட்ட கலைத்தல், செலவு 40 000/- கொடுத்தல்.

தேறிய பணக் கணக்கு

காணி கட்டிடம்	400 000	வங்கி க/கு:	
மோட்டார்	150 000	காணி கட்டிடம்	200 000
இயந்திரம்	200 000	மோட்டார்	100 000
தளபாடம்	50 000	இயந்திரம்	125 000
சரக்கு	100 000	P மூலதன க/கு:	
கடன்பட்டோர்	50 000	தளபாடம்	40 000
கடன் வட்டி	5 000	Q மூலதன க/கு:	
கலைத்தல் செலவு	40 000	சரக்கு	80 000
		R மூலதன க/கு:	
		கடன் பட்டோர்	47 500
		கடன் கொடுத்தோர் கழிவு	2 000
		நட்டம் மூலதனக் க/கு:	
		P	148 333
		Q	178 000
		R	74 167
	995 000		995 000

வங்கிக் கணக்கு

மீதி கீ. கொ. வ:	50 000	Q கடன்	55 000
தேறிய பணக் க/கு:		கலைத்தல் செலவு	40 000
காணி கட்டிடம்	200 000	கடன் கொடுத்தோர்	123 000
மோட்டார்	100 000	மூலதனக் க/கு: P	202 619
இயந்திரம்	125 000	Q	54 381
	475 000		475 000

மூலதனக் கணக்கு

	P	Q	R		P	Q	R
நடைமுறை கணக்கு	10 000			மீதி கி. கொ. வ.	400 000	300 000	100 000
தேறிய பணக் கணக்கு தளபாடம்	40 000			பொது ஒதுக்கம்	9 259	11 111	4630
தேறிய பணக் கணக்கு சரக்கு		80 000		நடைமுறைக் கணக்கு		7 500	2500
தேறிய பணக் கணக்கு கடன் பட்டோன்			47 500	P Q மூலதனக் கணக்கு			14 587
தேறிய பணக் கணக்கு நட்டம்	148 333	178 000	74 167				
R மூலதனக் கணக்கு	8 307	62 30					
வங்கி கணக்கு	202 619	54 381					
	409 259	318 611	121 667		409 259	318 611	121 667

கணக்கியல் எண்ணக்கருக்களால் உருவாகும் நடைமுறைப் பிரச்சனைகள்

சி. இமாக்குலேற்று
வருடம் 13 (வர்த்தகம்)

பொருளாதாரத்தில் வளங்கள் வரையறுக்கப்பட்டவை. வரையறுக்கப்பட்ட வளங்களால் மனிதனுக்குத் தேவைப்படும் பண்டங்களையும சேவைகளையும் உற்பத்தி செய்கையில் அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்படுகின்றது. நிறுவனம் ஒன்றின் மூலமாக பண்டங்களும் சேவைகளும் நிரம்பல் செய்யப்படும் பொழுது அந் நிறுவனத்தின் வளங்களை மிகத்திறமையாக முகாமைப்படுத்தப்பட வேண்டியது அவசிய மாகும். இந்த உற்பத்தித் தொழிற்பாட்டுடன் தொடர்புடைய நிதிசம்மந்தமான கருமங்களைச் செயற்படுத்தல் கணக்கியலில் நடைபெறுகின்றது. வர்த்தக நிறுவன மொன்றின் நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள், நிலைமாற்றங்கள் ஆகிய வற்றைப் பதிதல், வகைப்படுத்தல் பொழிப்புரை கூறுதல், பகுத்தாய்தல், வியாக்கி யானம் கூறல் ஆகிய செயற்பாடுகளே கணக்கீடு ஆகும்.

வியாபார நிறுவனம் ஒன்றில் ஏற்படும் வளமாற்றங்கள் அகக்காரணிகளாலும், புறக்காரணிகளாலும் ஏற்படுகின்றன. இந்த அகப்புறக் காரணிகள் நிலையற்ற தன் மைகளைக் கொண்டவை. அடிக்கடி மாறும் தன்மையுடையவை. நிலையற்ற காரணி களின் வளங்கள் மீதான பாதிப்புகளையே கணக்கியல் அடிப்படையாக வேண்டி நிற்கின்றது. ஆனல் கணக்கியலன் பொதுத்தன்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டு மாயின், வளமாற்றங்களின் விளைவுகளைச் சரியான முறையில் ஒப்பீடு செய்ய வேண் டுமாயின் சிலவரையறைகள் அவசியமாகின்றன. இவ்வரையறைகள் பின்பற்றப்படும் போதுதான் நியாயமான தகவல்களைக் கணக்கியலூடாக வெளிப்படுத்த முடியும். இவ்வரையறைகளுள் கணக்கியல் எண்ணக் கருக்களும் அடங்கும்.

பொருளாதார அலகொன்றில் கணக்கீட்டு அறிக்கை தயாரிக்கையில் பின்பற்ற வேண்டிய ஆரம்ப நியதிகள், சட்டதிட்டங்கள், வழக்காறுகள், ஆகியன கணக்கியலின் எண்ணக்கருக்களும் மூடிவகளும் என அறிமுகம் ஆகின்றன. இவ்வாறன எண்ணக் கருக்கள் முக்கியப்படுவது பொருளாதார அலகொன்றைத் தயார் செய்யும் நிதி அறிக்கை பற்றிய வேறுபட்ட கொள்கைகளைத் தவிர்த்துக் கொள்ளவும், அதன் மூலம் ஒருமைத் தன்மையைப் பாதுகாத்துக் கொள்ளவும், தயாரித்துக் கொள்ளும் அறிக் கைகள் மூலம் காட்டப்படும் விஞ்ஞாபனத்தை உரிய கட்சிக்காரர் இலகுவாகப் புரிந்து கொள்ளவும் அதிலிருந்து முடிவுகளைப் பெறவும் ஆகும்.

சில சமயங்களில் கணக்கியல் எண்ணக்கருக்களின் நிலையற்ற தன்மைக்கான காரணம் பொருளாதார அலகின் இயல்பு, அதன் நோக்கம், கணக்காளரின் அனுபவங்கள் விஞ்ஞாபனத்தைப் பெறும் கட்சியாளரின் தேவைகளும் சட்டத் தேவைகளும் பொருளாதார சமூகக்காரணிகளால் வேறுபடுவதனாலாகும். நிலையற்ற பொருளாதாரமொன்றில் கணக்கியலானது நிலையற்ற விடயமாக அமைவது இவ்வாறு வேறுபடும் தன்மைக்கு ஏற்ப அமைவதனாலாகும். இதனால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் கணக்கீட்டு எண்ணக்கருக்கள் எதிர்காலத்தில் வேறுபடவும், புதிய எண்ணக்கருக்கள் தோன்றவும் முடியும். நிகழ்கால உபயோகத்திலுள்ள கணக்கியல் எண்ணக்கருக்களால் பல நடைமுறைப்பிரச்சனைகள் உருவாகின்றன.

கிரய எண்ணக்கருவில் கணக்கியலில் ஒரு வியாபார நடவடிக்கை தொடர்பாக உண்மையில் எவ்வளவு தொகை உட்படுத்தப்பட்டதோ அத்தொகையின் அளவிற்கு அதாவது கொள்விலையிலே பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு கொடுக்கல் வாங்கல் தொடர்பில் உண்மையில் உட்படுத்தப்படும் தொகையே அதன் கிரயம் எனப்படும். நிலையான சொத்துக் கொள்வனவு தொடர்பில் இது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நிலையான சொத்து ஒன்று என்ன விலையில் கொள்வனவு செய்யப்படுகின்றதோ அந்த விலையே அதன் ஆயுட்காலம் வரையிலான கொள்விலைப் பெறுமதியாக கருதப்படுகிறது. சந்தைப் பெறுமதியில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படினும் அவை கவனத்திற்கு எடுக்கப்படுவதில்லை.

மேலும் இச்சொத்துக்கள் பல ஆண்டுகள் பாவிக்கப்படுவதால் அதன் பெறுமான இழப்புக்கள் ஆண்டுதோறும் கணிக்கப்பட்டு பெறுமானத்தேய்வு ஒதுக்கல் கணக்குகளுக்கு உட்படுத்தப்படுகின்றது. நேர்கோட்டுமுறையில் பெறுமானத் தேய்வு செய்யும் போது சொத்தின் ஆரம்ப காலங்களிலும் இறுதிக்காலங்களிலும் உற்பத்தி கூடிய காலங்களிலும் உற்பத்தி குறைந்த காலங்களிலும் ஒரே அளவு தொகையே பெறுமானத்தேய்வாக கணிப்பிடப்படுகின்றது. மேலும் நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு கணிப்பிடும்போது அதன் ஆயுட்கால முடிவில் மற்றுப் பெறுமதியற்ற நிலை காணப்படுகின்றது. இவைகள் நடைமுறையில் பிரச்சனையாக உள்ளது. இறுதிக்காலத்திலும் சொத்துக்கு ஒரு குறிப்பிட்டளவு இறுதிப்பெறுமதி இருக்கும். நேர்கோட்டு முறையில் கணிப்பிட்டால் இவ்வாறான பிரச்சனைகள் ஏற்படும்.

பண அளவீட்டு எண்ணக்கருவில் பணமானது நிலையான அலகல்லாவிடினும் அது ஒரு அலகாக இவ்வெண்ணக்கருவால் கருதப்படுகிறது. எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் ஏதாவது பணப்பெறுமதியைத் தொடர்புபடுத்தி மதிப்பீடு செய்வதன் பிரச்சனையையும், பண அலகின் செயற்பாட்டுத்திறன் மாறுபடுவதால் (விசேடமாக பணவீக்கம் ஏற்பட்ட நிலையில்) எழும் பிரச்சனைக்கும் ஏற்ப நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளும் பற்றிய உண்மையான நிலை வெளிக்காட்டப்பட மாட்டாது. இதில் உள்ள குறைபாடாகும். பிற்போடப்பட்ட கொடுப்பனவுகள், எதிர்கால ஒப்பந்தங்கள் முதலீடு. நிலையான சொத்து போன்றவை பணத்தின் உறுதிப்பாட்டிலேயே நிகழ்கின்றன. பணத்தின் பெறுமதி என்றும் மாறாது என்ற அடிப்படையில் கணக்கீடுகள் செய்யப்படுவது இவ்வெண்ணக் கருவால் உருவாகும் நடைமுறைப் பிரச்சனையாக உள்ளது.

மரபுகளில் ஒன்ருன குறைந்துக் கூறலின் படி கணக்கியலில் இரண்டு வெவ்வேறு பட்ட பெறுமதிகளில் எதைக்கொள்வது எனும் பிரச்சனை எழும் போது குறைந்த பெறுமதியே எடுத்துக் கொள்ளப்படுகின்றது. உதாரணமாக இறுதி இருப்பானது கொள்விலை சந்தைவிலை என்பவற்றில் எந்த விலை குறைவோ அந்த விலையே எடுத்துக் கொள்ளப்படுகிறது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நட்டம் (அறவிடமுடியாக் கடன்) நட்டமாகவும் காட்டப்படுகிறது. ஆனுல் கைகூடாத இலாபம் எதற்கும் கணக்கு வைப்பது கிடையாது. எனவே குறைந்த பெறுமதியைக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் போது அது நடைமுறையில் பிரச்சனையை உருவாக்குகிறது.

மேலும் பாதுகாப்பு எண்ணக்கருவில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் என எதிர் பார்க்கப்படும் நட்டங்களுக்காக ஒதுக்கப்படும் போது உதாரணமாக ஐயக்கடன் களுக்காக ஏற்பாடு செய்யும் போது குறிப்பிட்ட காலத்தில் அந்நட்டம் ஏற்படாத சந்தர்ப்பங்கள் வருவதும் குறைபாடாக காணப்படுகிறது. நட்டம் ஏற்படாதகாலங் களிலும் ஒதுக்கங்கள் செய்யப்படுகின்றன. இது நிறுவனத்தின் உண்மையான இலா பத் தக் காட்டமாட்டாது.

தற்போதுள்ள கணக்கு முறைகள் பணத்தின் நாளாந்த பெறுமதிக் குறை வையோ பணவீக்கத்தையோ எடுத்துக் காட்டக்கூடிய முறையில் இல்லை. நிலையான சொத்துக்களின் திரண்ட பெறுமானத் தேய்வுகளை அவற்றின் கொள்விலையில் கழித்து அத்தொகையை உண்மையான பெறுமதியைக் காட்டுகிறோம். இது உண்மை நிலையைக் காட்டுவதாக இல்லை. ஏனெனில் இப்புத்தக விலை சந்தைவிலையுடன் பெரிதும் மாறு பட்டதாக இருப்பதைக் காண்கிறோம் இதே போன்று நடைமுறைச் சொத்துக் களிலும் பிரச்சனைகள் உண்டு கடன்பட்டோரில் ஐயக்கடன் ஒதுக்கம் செய்வதால் ஐயக்கடன் ஏற்படாத காலங்களில் அது உண்மையான தொகையைக் காட்டமாட் டாது. மேலும் இறுதி சரக்கிருப்பிலும், கொள்விலை ஆகிய இரண்டில் எது குறை வானதோ அதே கணக்கில் எடுத்துக் காட்டப்படுகிறது. எனவே இவ்வாறு தயாரிக் கப்பட்ட கணக்குகள் ''சரியானவையா'' என்பது ஒரு பெரிய கேள்விக் குறியாகும். இவ்வாறு பல நடைமுறைப் பிரச்சனைகள் கணக்கியல் எண்ணக்கருக்களினுல் உரு வாகின்றன.

- உத்தரவாதத்தால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கொழும்பு பிணை முறிகள் கம்பனி ஆரம்பத்தில் கொழும்பு தரகர் சங்கத்தின் உப விதிகளிற்கமையவே செயற்பட்டு வந்தது. ஆனல் 1988 ஒக்டோபரில் இருந்து தனக்கென புதிய உபவிதிகளை நடைமுறைப்படுத்துகிறது.

- வழங்கப்படக்கூடிய திறைசேரி உண்டியல்களின் பெறுமதி 35,000 மில்லியனில் இருந்து 40,000 மில்லியனுக 11.8.88 ல் இருந்து அதிகரிக்கப்பட்டுள்ளது.

விகிதப் பகுப்பாய்வு
RATIO ANALYSIS

யோ. அன்ரனட்சாந்தி
வருடம் 13 (வர்த்தகம்)

ஒரு நிறுவனத்தின் நிதிச் செயற்பாட்டினை பகுப்பாய்வு செய்வதற்காக அந்நிறுவனத்தின் உள்ளக, வெளியக நிதி அறிக்கையிலிருந்து முறையாக விகிதங்களைத் தயாரித்தல் விகிதப்பகுப்பாய்வு எனப்படும். விகிதப் பகுபாய்வினை மேற்கொள்வதன் மூலம் ஒரு நிறுவனம் தனது தொழிலில் உள்ள இன்னொரு நிறுவனத்துடன் அல்லது தனது கடந்தகாலச் செயற்பாட்டுடன் நடப்பாண்டுக் காலச் செயற்பாட்டினை ஒப்பிட்டு நோக்க முடியும்.

விகிதப் பகுப்பாய்வினை பின்வரும் மூன்று வகைகளாகப் பிரித்து ஆராய முடியும்

(அ) இலாபத் தன்மை விகிதங்கள்

(ஆ) திரவத்தன்மை விகிதங்கள்

(i) குறுங்காலம் (ii) நீண்டகாலம்

(இ) முதலீட்டு விகிதம்

(அ) இலாபத்தன்மை விகிதங்கள்

இவ்விகிதங்கள் நிறுவனத்தின் இலாபத் தன்மையினை மதிப்பீடு செய்யப் பயன்படுத்தப்படும். இங்கு கணிப்பிடப்படும் விகிதங்கள் பின்வருமாறு. குறிப்பாக முக்கியமான விகிதங்களாவன.

1) ஈடுபடுத்திய முதல் மீதான வருவாய் வீதம்

$$\text{முதலீட்டு வருவாய் வீதம்} = \frac{\text{தொழிற்படு இலாபம்}}{\text{தொழிற்படு சொத்துக்கள்}}$$

2) $$\text{சொத்துச் சுழற்சி விகிதம்} = \frac{\text{விற்பனை}}{\text{தொழிற்படு சொத்துக்கள்}}$$

3) $$\text{தொழிற்படு இலாப வீதம்} = \frac{\text{தொழிற்படு இலாபம்}}{\text{விற்பனை}} \times 100$$

மேற்கூறிய 3 முக்கிய விகிதங்களை விட பின்வரும் விகிதங்களும் இலாபத்தன்மையை மதிப்பிட கணிப்பிடலாம்:

4) $\frac{\text{விற்பனை}}{\text{நடைமுறைச் சொத்துக்கள்}}$

5) $\frac{\text{விற்பனை}}{\text{நிலையான சொத்துக்கள்}}$

6) $\frac{\text{விற்பனை}}{\text{இருப்புக்கள்}}$

7) $\frac{\text{விற்பனை}}{\text{திரவச் சொத்துக்கள்}} \times 100$

8) $\frac{\text{தொழிற்சாலைச் செலவு}}{\text{விற்பனை}} \times 100$

9) $\frac{\text{சந்தைப்படுத்தல் செலவு}}{\text{விற்பனை}} \times 100$

10) $\frac{\text{நிர்வாகச் செலவு}}{\text{விற்பனை}} \times 100$

11) $\frac{\text{மூலப்பொருள் செலவு}}{\text{விற்பனை}} \times 100$

12) $\frac{\text{ஊழியர்செலவு}}{\text{விற்பனை}} \times 100$

13) $\frac{\text{உற்பத்தி மேந்தலை}}{\text{விற்பனை}} \times 100$

ஆ) திரவத்தன்மை விகிதங்கள் அல்லது கடன்தீர்க்கும் தன்மை விகிதங்கள்

திரவத்தன்மை விகிதங்களைக் குறுங்காலம், நீண்டகாலம் எனப் பாகுபடுத்தி நோக்கலாம்.

குறுங்காலம்:-

நிறுவனத்தின் குறுங்கால நிதி ஸ்திரத்தன்மையை மதிப்பீடு செய்வதற்கு நிதிப் பகுப்பாய்வாளர், முதலீட்டாளர், வங்கி, கடன் கொடுத்தோர் ஆகியோரால் பின்வரும் முக்கிய விகிதங்கள் கணிப்பிடப்படுகின்றன:

1) நடைமுறை விகிதம் $= \frac{\text{நடைமுறைச் சொத்து}}{\text{நடைமுறைப் பொறுப்பு}}$

இவ்விகிதம் 1.8 : 1 க்கும் 2:1 க்கும் இடையில் இருந்தால் சிறந்ததாகும்.

2) விரைவு விகிதம் or அமில விகிதம் $= \frac{\text{விரைவுச் சொத்து}}{\text{நடைமுறைச்சொத்து}}$

(விரைவுச்சொத்து = நடைமுறைச் சொத்து – இருப்பு)

இவ்விகிதம் 0.8: 1 தொடக்கம் 1:1 இடையில் இருந்தால் உத்தமமான நிலையைக் காட்டும்.

வங்கி மேலதிகப்பற்று பொதுவாக நடைமுறைப் பொறுப்பினுள் அடக்கப்பட்டிருக்கும். இது குறுங்காலத்தில் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது. ஆயின் விரைவு விகிதம் பின்வருமாறு கணிப்பிடலாம்.

விரைவு விகிதம் $= \frac{\text{விரைவு சொத்து}}{\text{நடைமுறைச்சொத்து - வங்கி மேலதிகபற்று}}$

(3) இருப்புச் சுழற்சி விகிதம் $= \frac{\text{விற்ற சரக்கின் கொள்விலை}}{\text{சராசரி இருப்பு}}$

(4) கடன்பட்டோரிடம் பணம் வசூலிக்கும் காலம் $= \frac{\text{கடன்பட்டோர்}}{\text{நாளாந்தக்கடன் விற்பனை}}$

$\left(\text{நாளாந்த கடன் விற்பனை} = \frac{\text{கடன் விற்பனை}}{365} \right)$

(5) கடன் கொடுத்தோருக்கும் பணம் செலுத்தும் காலம் $= \frac{\text{கடன் கொடுத்தோர்}}{\text{நாளாந்த கடன் கொள்வனவு}}$

$\left(\text{நாளாந்த கடன் கொள்வனவு} = \frac{\text{கடன் கொள்வனவு}}{365} \right)$

நீண்டகாலத் திரவத்தன்மை

நீண்டகாலத் திரவத்தன்மை விகிதங்கள் நீண்டகால நிதி ஸ்திரத்தன்மையினை மதிப்பீடு செய்வதற்கு உதவுகின்றன. இதற்குப்பல விகிதங்கள் கணிப்பிடப்படும். அவை பின்வருமாறு

(அ) இணைப்பு விகிதம் = $\frac{\text{நிலையான வருமானத்தை உழைக்கும் முதல்}}{\text{சாதாரண பங்குதாரர் நிதி}}$

(சாதாரண பங்குதாரர் நிதி = சாதாரண பங்குகள் + ஒதுக்கம்)

(ஆ) பங்குதாரரது முதல் சொத்துக்கள் விகிதம் = $\frac{\text{சாதாரண பங்குதாரர் + முன்னுரிமைபப்பங்கு + ஒதுக்கம்}}{\text{மொத்த சொத்துக்கள்}}$

(இ) கடன் முதல் சொத்துக்கள் விகிதம் = $\frac{\text{நீண்டகாலகடன் + நடைமுறைப் பொறுப்பு}}{\text{மொத்த சொத்துக்கள்}}$

(ஈ) வட்டிப்பாதுகாப்பு விகிதம் = $\frac{\text{வரி, வட்டி கழிக்குமுன் இலாபம்}}{\text{காலப்பகுதிக்கான வட்டி}}$

இங்கு இணைப்பு விகிதம் கூடுதலாக இருக்குமாயின் நிறுவனம் ஸ்திரமில்லாமல் இருக்கின்றது எனலாம்.

(இ) முதலீட்டு விகிதங்கள்

முதலீட்டு விகிதங்கள் முக்கியமாகத் தயாரிக்கப்படுவது ஏனெனில் நிறுவனத்தின் ஸ்திரத்தன்மையினை அறிவதற்கும், எதிர்கால முதலீட்டு வாய்ப்பினை அறிவதற்கும் ஆகும். இங்கு பின்வரும் விகிதங்கள் கணிப்பிடப்படுகின்றன.

(அ) பங்கு ஒன்றுக்கான உழைப்பு = $\frac{\text{வரிக்குப்பின் இலாபம் - முன்னுரிமை பங்குலாபம்}}{\text{வழங்கப்பட்ட சாதாரண பங்குகளின் எண்ணிக்கை}}$

(ஆ) பங்குலாப விளைவு = $\frac{\text{பங்கின். முகப்பெறுமதி × பங்குலாப வீதம் (சா.ப.இலா)}}{\text{பங்கின் சந்தை விலை}}$

(இ) பங்குலாபப் பாதுகாப்பு = $\frac{\text{வரிக்குப்பின் இலாபம்- முன்னுரிமை பங்குஇலாபம்}}{\text{சாதாரண பங்கு இலாபம்}}$

(ஈ) விலை உழைப்பு விகிதம் = $\frac{\text{பங்கின் சந்தை விலை}}{\text{பங்கொன்றிற்கான உழைப்பு}}$

(உ) உழைப்பு விளைவு = $\frac{\text{பங்கொன்றிற்கான உழைப்பு × 100}}{\text{பங்கின் சநதைவிலை}}$

(ஊ) மூலதன இணைப்பு விகிதம் = $\frac{\text{முன்னுரிமை பங்கின் ச.பெ. + நீ. கா, கடன்}}{\text{உரிமை முதலில் சந்தைப் பெறுமதி}}$

விகிதப் பகுப்பாய்வின் நன்மைகள்

1) எண்களை மட்டும் ஒப்பிட்டுப்பார்ப்பதைவிட எண்களின் உருவையும் தொடர்பையும் அறிவதற்குக் கணக்கு விகிதப்பகுப்பாய்வு பயன்படுகின்றது

(2) காலப்போக்கில் நிலைபத்திறனும் நிதிநிலைமையும் எவ்வாறு அமைகின்றன என்று ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு கணக்குவிகிதப் பகுப்பாய்வு பயன்படுகின்றது.

3) கணக்கீட்டு விகிதங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம், வரவு, செலவு, இலாபம் இவற்றிற்கிடையேயுள்ள தொடர்பைப் பற்றித் தெளிவாக அறிந்திட இயலும்.

4) கணக்கு விகிதங்களில் முக்கியமானவை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானிக்கவும், நடைமுறையில் கணக்கு விகிதங்கள் திட்டமிட்டபடி அமைகின்றனவா என்பதனை அறியவும் கணக்குவிகிதப் பகுப்பாய்வு உதவும்

5) ஒரே தொழிலில் ஈடுபட்டிருக்கும் பல நிறுவனங்களின் செயல்படும் திறனை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் கணக்கு விகிதங்கள் உதவும்.

6) வெவ்வேறு தொழிலில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களின் இலாபத்தினை ஒப்பிட்டுப்பார்க்க இவ்வகையான கணக்கு விகிதப் பகுப்பாய்வு உதவும்.

7) சில சமயங்களில் கணக்கு முறையிலேற்படும் தவறுகளையும், நிறுவனத்திலிருக்கும் வேலையாளர்களின் மோசடிகளையும் கண்டுபிடிக்க உதவுவதோடு சிறந்த கட்டுப்பாட்டினை மேற்கொள்ள உதவும்.

8) செலவுக் கட்டுப்பாட்டினைத் திறம்பட இயக்குவதற்கும் கணக்கு விகிதப்பகுப்பாய்வு உதவும்.

விகிதப்பகுப்பாய்வின் குறைபாடுகள்

1) கணக்கீட்டுக் கொள்கைகள் நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபடலாம்.
உ+ம்; பெறுமானத்தேய்வு, இருப்பு மதிப்பீடு:

2) பணவீக்க நிலையைக் கவனத்தில் கொள்ளாதுவிடின் கடந்த காலச் செயல்திறனை இவ்வாண்டுடன் ஒப்பிட்டு நோக்க முடியாது.

3) நிறுவனத்திற்கு நிறுவனம் செலவுக் கணக்கியல் (Cost Accounting) முறைகளில் உள்ள வேறுபாடு விகிதப் பகுப்பாய்வினை மேற்கொண்டு நிறுவனங்களை ஒப்பீடு செய்தலைத் தரமிழக்கச் செய்யும்.

4) சில சமயங்களில் கணக்கு விகிதங்கள் முகாமையாளரின் தேவைக்கேற்றவாறு நெகிழ்வானதாக அமைவதில்லை.

❋ ஏற்றுமதி உற்பத்திக் கிராம (மக்கள்) கம்பனிகளின் விவசாயப் பொருட்களைக் கொண்டதாகக் கொழும்பில் "Agro Mart" எனும் பொருட்காட்சி நடத்தப்பட்டது

ஒழுங்கு படுத்தும் கணக்கு

(மீதிகளை இணைக்கும் கூற்றுடன்)

ம. ஆன் பிலோமினா

வருடம் 13 (வர்த்தகம்)

தொழில் நிறுவனங்களில் கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் தொடர்பாக பரிட்சைமீதியில் ஏற்படக்கூடிய தவறுகளை இலகுவாக கண்டறிந்து திருத்திக் கொள்வதற்காக தயாரிக்கப்படுகின்ற கணக்குகளையே ஒழுங்கு படுத்தும் கணக்கு என்கின்றோம். அதாவது நிறுவனம் ஒன்றில் முதற் பதிவு ஏடுகளில் பதிவு செய்யப்பட்டு பின் பேரேட்டுக் கணக்கிற்கு மாற்றப்பட்டு பெறப்பட்ட மீதிகளை கொண்டு தயாரிக்கப் பட்ட பரீட்சைமீதி சமப்படாத சந்தர்ப்பத்தில், அதற்கான காரணத்தை அறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட பதிவுகள் அனைத்தையும் மீளாயவு செய்வது தவிர்க்க முடியாதது ஆகும். இவ்வாறான நிலைமைகளை கூடியவரை தவிர்த்துக் கொள்வதற்காக கணக்கியல் அறிஞர்களால் மேற்கொள்ளப்படுகின்ற கணக்குகளே இவ் ஒழுங்குபடுத்தும் கணக்காகும். இக்கணக்கு கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் தொடர்பாக ஏற்படும் தவறுகளை இலகுவாகக் கண்டறியும் நோக்கமாக தயாரிப்பதாகும் இவ் ஒழுங்குபடுத்தும் கணக்குக் தயாரித்து சமப்படுத்தியபின் தயாரிக்கப்படும் பரிட்சைமீதி சமப்படாது இருப்பின் அதற்கான காரணம் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் தொடர்பானது அல்ல என்ற முடிவுக்கு வரலாம்.

இதன் அடிப்படையில் ஒழுங்குபடுத்தும் கணக்குகளை தயாரிப்பதற்காக தொழில் நிறுவனங்கள் பேரேட்டுக் கணக்குகளை மூன்று வகையாகப் பிரிக்கின்றன. அவையாவன.

i. கடன்பட்டோர் பேரேடு (விற்பனைப் பேரேடு)

ii. கடன் கொடுத்தோர் பேரேடு (கொள்வனவுப் பேரேடு)

iii. பொதுப் பேரேடு

என்பனவாகும். கடன் விற்பனை தொடர்பான பதிவுகள் கடன்பட்டோர் ஏட்டிலும், கடன் கொள்வனவு தொடர்பான பதிவுகள் கடன் கொடுத்தோர் ஏட்டிலும், இடம்பெறுகின்றன. இவை தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகள் பொதுப் பேரேட்டில் பதியப்படும். இப்பேரேட்டில் விற்பனை கணக்கு, கொள்வனவுக்கணக்கு உட்பட கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் அல்லாத கணக்குகள் அனைத்தையுமே இப்பேரேடு கொண்டிருக்கும். இதனால் இதனை பெயரின் பேரேடு எனவும் அழைப்பர்

விற்பனைப் பேரேட்டினில் உள்ள கடன்பட்டோர் கணக்குகள் அனைத்திற்குமாக சேர்த்து ஓர் ஒழுங்குபடுத்தும் கணக்கினைத் தயாரிப்பதன் மூலம் விற்பனைப் பேரேட்டிற்கு ஓர் பரிட்சைமீதி தனியாக தயாரிக்கப்படுகின்றது. விற்பனைப் பேரேட்டிலுள்ள கடன்பட்டோர் கணக்குகள் அனைத்தையும் கூட்டி பெறப்படும் மீதிகளின் கூட்டுத்

தொகையும், மொத்த கடன்பட்டோர் மீதியும் சமனாக இருத்தல் வேண்டும் இரு மீதிகளும் ஒன்றாக இல்லாவிடில் விற்பனைப் பேரேட்டில் தவறு உண்டு என்பதை உணர்ந்துகொள்ள முடியும். கடன்பட்டோர் ஒழுங்குபடுத்தும் கணக்கினை தயாரிக்கும் பொழுது முதற்பதிவேடுகளில் இருந்து நேரடியாகத் தயாரிப்பதே சிறந்ததாகும்.

கடன்பட்டோர் ஒழுங்குபடுத்தும் கணக்கிற்கு அவசியமான தகவல்களும் பெற்றுக் கொள்ளும் வழி முறையும்:-

கடன் விற்பனை	—	விற்பனை நாளேடு
உள்முகவருதி	—	உள்முகவருதிகள் நாளேடு
வருமதி உண்டியல் மறுக்கப்பட்ட வருமதி உண்டியல்	—	வருமதி உண்டியல் நாளேடு
பெற்ற காசு, காசோலை	—	காசேடு
மறுக்கப்பட்ட காசோலை	—	காசேடு
கொடுத்த கழிவு	—	காசேட்டின் கழிவு நிரல்
அறவிட முடியாக் கடன் (மாறு பதிவு)	—	பொதுவான நாட்குறிப்புபேடு

பொதுப்பேரேட்டில் உள்ளவாறான ஓர் கடன்பட்டோர் ஒழுங்கு படுத்தும் கணக்கின் மாதிரி வருமாறு:-

பொதுப்பேரேட்டில்,

விற்பனைப் பேரேட்டு ஒழுங்குபடுத்தும் க/கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
ஆரம்பமீதி	×××	ஆரம்ப மீதி (சிறிய அளவு)	×××
கடன் விற்பனை	×××	உள்முக வருதி	×××
மறுக்கப்பட்ட காசோலை	×××	பெற்றகாசு	×××
மறுக்கபபட்ட வருமதி உண்டியல்	×××	வருமதி உண்டியல்	×××
மறுத்த கொடுத்த கழிவு	×××	கொடுத்த கழிவு	×××
காலம் கடந்த கடன் வட்டி	×××	பதிவழித்த நட்டக்கடன்	×××
வரைவுக்கட்டணம்	×××	மீளப்பெற்ற நட்டக் கடன்	×××
நட்டக்கடன் திருப்பிபெறல்	×××	மாறுபதிவு (வரவுமீதி)	×××
கடன்படுநருக்கு திருப்பி செலுத்தல்	×××	மீ. கீ. கொ, செ.	×××
மாறுபதிவு (செலவு மீதி)	×××		
மீ கீ. கொ. செ.	×××		
	×××		×××
மீ கீ. கொ. வ.	×××	மீ. கீ. கொ. வ.	×××

மேற் கூறப்பட்டவாறே கொள்வனவுப் பேரேட்டில் உள்ள கடன்கொடுத்தோர் கணக்குகள் அனைத்திற்குமாக சேர்த்து ஓர் ஒழுங்குபடுத்தும் கணக்கினைத் தயாரிப்பதன் மூலம் கொள்வனவுப் பேரேட்டிற்கும் ஓர் பரீட்சை மீதி தனியாக தயாரிக்கப்படுகின்றது. கொள்வனவுப் பேரேட்டிலுள்ள கடன்கொடுத்தோர் கணக்குகள் அனைத்தினையும் கூட்டி பெறப்படும் மீதிகளின் கூட்டுத்தொகையும், மொத்தக்கடன் கொடுத்தோர் மீதியும் சமனாக இருத்தல் வேண்டும். இருமீதிகளும் ஒன்றாக இல்லாவிடில் கொள்வனவுப் பேரேட்டில தவறு உண்டு என்பதை அறிந்துகொள்ள முடியும். விற்பனைப் பேரேட்டினில் கூறப்பட்டவாறே கடன் கொடுத்தோர் ஒழுங்குபடுத்தும் கணக்கு ஆனது பொதுப்பேரேட்டிலுள்ள தரவுகளைக் கொண்டே தயாரிக்கப்படுகின்றது. இக்கணக்கினை பொதுப்பேரேட்டிள்ள தகவல்களைக்கொண்டு தயாரிப்பதைவிட முதற் பதிவேடுகளில் இருந்து நேரடியாக தயாரிப்பதே சிறந்ததாகும்.

கடன் கொடுத்தோர் ஒழுங்குபடுத்தும் கணக்கிற்கு அவசியமான தகவல்களும் பெற்றுக்கொள்ளும் வழிமுறையும்.

கடன் கொள்வனவு	— கொள்வனவு நாளேடு
வெளிமுகவருதிகள்	— வெளிமுகவருதிகள் நாளேடு
சென்மதி உண்டியல் மறுக்கப்பட்ட சென்மதி உண்டியல்	— சென்மதி உண்டியல் நாளேடு
பெற்ற கழிவு	— காசேட்டின் கழிவுநிரல்
கொடுத்த காசு, காசோலை மறுக்கப்பட்ட காசோலை	— காசேடு
மாறுபதிவு	— பொதுவான நாட்குறிப்பு ஏடு

பொதுப்பேரேட்டிலுள்ள ஓர்கடன் கொடுத்தோர் ஒழுங்குபடுத்தும் கணக்கின் மாதிரி வருமாறு:

பொதுப்பேரேட்டில்;

கொள்வனவு பேரேட்டு ஒழுங்குபடுத்தும் கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
ஆரம்பமீதி (சிறிய அளவு)	XXX	ஆரம்ப மீதி	XXX
வெளிமுகவருதி	XXX	கடன் கொள்வனவு	XXX
கடன்கொடுனருக்கு கொடுத்தகாசு	XXX	மறுக்கப்பட்டதற்காக மீள வழங்கிய காசோலை	XXX
சென்மதி உண்டியல்	XXX	மறுக்கப்பட்ட செல் உண்டியல்	XXX
மாறுபதிவு (வரவு மீதி)	XXX	நிராகரிக்கப்பட்ட பெற்றகழிவு	XXX
மீ. கீ. கொ. செ.	XXX	காலம்கடந்த கடனுக்கான சென்மதி வட்டி	XXX
		சென்மதி வரைவுக் கட்டணம்	XXX
		கடன்கொடுனரிடமிருந்துதிருப்பிப்பெற்ற காசு	XXX
		மாறுபதிவு (செலவு மீதி)	XXX
		மீ. கீ. கொ. செ.	XXX
	XXXX		XXXX
மீ. கீ. கொ. வ.	XXX	மீ. கீ. கொ. வ.	XXX

குறிப்பு:

மேலே காட்டப்பட்ட பொதுப்பேரேட்டில் உள்ள விற்பனைப் பேரேட்டு ஒழுங்கு படுத்தும் கணக்கு, கொள்வனவுப் பேரேட்டு ஒழுங்குபடுத்தும் கணக்குகளிலுள்ள ''மாறுபதிவு'' என்பதன் சுருக்குப்பற்றி நாம் ஆராய்தல் அவசியமானதாகும். அதாவது பேரேடுகளை முற்றாகப் பிரித்து கட்டுப்பாட்டுக் கணக்குகளை மேற்கொண்டு வருகின்ற வியாபார நிறுவனங்கள் கடன்பட்டோர், கடன் கொடுத்தோரை ஒழுங்கு படுத்துவதற்காக அவர்களது உண்மை நிலையை மதிப்பீடு செய்தல் அவசியமானதாகும். ஆண்டு முடிவில் ஒரு குறித்த நபர் கொள்வனவுப் பேரேட்டிலும், விற்பனைப் பேரேட்டிலும் தோற்றம் அளிப்பாராயின் எந்த ஏட்டில் குறைவானதொகை உள்ளதோ அந்த ஏட்டில் உள்ள அந்நபரின் கணக்கு ரத்துச்செய்யப்பட்டு, கூடுதலான தொகை காட்டுகின்ற ஏட்டுக்கு மாற்றுவது ''மாறுபதிவு'' எனப்படுகின்றது. உதாரணமாக ஒரு குறித்த நபர் கடன்பட்டோர் கடன்கொடுநர் ஏடுகள் இரண்டிலும் வருகின்ற சந்தர்ப்பத்தில், கடன்பட்டோர் தொகையிலும் பார்க்க கடன் கொடுத்தோர் ஏட்டில் உள்ள தொகை குறைவாக, காணப்பட்டால் கொள்வனவுப் பேரேட்டில் உள்ள அவரது க/கு ஆனது ரத்துச் செய்யப்பட்டு கூடுதலான தொகையை காட்டுகின்ற விற்பனை பேரேட்டிலுள்ள குறித்த நபர் கணக்கிற்கு மாற்றம் செய்யப் பட வேண்டும்.

இவ்வாறே விற்பனைப் பேரேட்டினில் பொதுப்பேரேட்டு ஒழுங்கு படுத்தும் கணக்கும் கொள்வனவுப் பேரேட்டில் பொதுப்பேரேட்டு ஒழுங்குபடுத்தும் கணக்கும் தனித்தனியாக பதியப்பட்டிருக்கும். இங்கு தயாரிக்கும் பொதுப்பேரேட்டு ஒழுங்குபடுத்தும் கணக்கு ஆனது, பொதுப் பேரேட்டாளன் தயாரிக்கும் விற்பனைப் பேரேட்டு ஒழுங்கு படுத்தும் கணக்கின் பக்கம் மாறிய பதிவைக் கொண்டிருக்கும். இவ்வாறே கொள்வனவுப் பேரேட்டில் தயாரிக்கப்படும் பொதுப் பேரேட்டு ஒழுங்கு படுத்தும் கணக்கு ஆனது, பொதுப் பேரேட்டிலுள்ள கொள்வனவுப் பேரேட்டு ஒழுங்கு படுத்தும் கணக்கின் பக்கம் மாறிய பதிவைக் கொண்டிருக்கும்.

ஒழுங்குபடுத்தும் கணக்கின் மீதியையும் விற்பனை, கொள்வனவு பேரேடுகளில் கடன்படுநர், கடன்கொடுநர் கணக்குகளில் இருந்து திரட்டப்பட்ட பதிவுகளின் மீதிகளையும் ஒப்பிடும்போது அவை இரண்டும் சமமாக இருத்தல் வேண்டும். எனினும் கணக்கீடு செய்யும்போது ஏற்படக்கூடிய தவறுகளினால் மீதிகள் இரண்டும் சமப்படாமல் இருக்கலாம் அவ்வாறு இவ்விரு மீதிகளும் சமப்படாத சந்தர்ப்பத்தில் இவ் மீதிகள் இரண்டையும் சமப்படுத்துவதற்கு ஒரு ''கூற்று'' தயாரித்தல் அவசியமாகும். இக்கூற்றானது ஒழுங்கு படுத்தும் கணக்கின் மீதியையும், பேரேட்டு மீதிகளையும் ஒப்பீடு செய்து இணக்கும் கூற்றாக அமைந்திருக்கும். இக்கூற்றினை பின்வரும் ஓர் கணக்கின் உதவியுடன் விளக்கக்கூடியதாக இருக்கின்றது.

வரையறுத்த விஜேத் கம்பனியின் 30-6-86 ல் மூன்று மாதங்களுக்கான கணக்குகளை சரிபார்த்தபோது கடன்பட்டோர் கணக்குகளைப் பேணிவருகின்ற விற்பனைப் பேரேட்டிலுள் கணக்குப் பதிவாளர் தெரிவித்த மீதியான 47000 ரூபா பொதுப் பேரேட்டிலுள்ள ஒழுங்குபடுத்தும் கணக்குடன் ஒப்பிடும்போது வேறொரு மீதியைக் காட்டியது. இதற்கு காரணம் வருமாறு,

1) விற்பனை நாளேடு 800/- ஆல் கூட கூட்டப்பட்டிருந்தது

2) உட்திரும்பிய சரக்கு ஏடு கூட்டி மறுபக்கத்திற்கு கொண்டு செல்லும்போது 2685 ரூபாவிற்கு பதிலாக 2865/- ரூபா எனப் பதியப்பட்டிருந்தது.

3) பொதுப்பேரேட்டு பகுதியிலிருந்து விற்பனைப் பேரேட்டுக்கு விற்பனை என அறிவிக்கப்பட்ட படிவத்தில் 1000 ரூபாவிற்குப் பதிலாக 100 ரூபா என எழுதப்பட்டு இருந்தது.

(4) பதிவழித்த அறவிடமுடியாக் கடன் ஒன்று விற்பனைப் பேரேட்டில் பதியப்படவில்லை. இது 800 ரூபா ஆகும்.

) விற்பனைப் பேரேட்டு பகுதியிலுள்ள ஒரு நபர் கணக்கு மீதி 200 ரூபா கவனத்தில் கொள்ளப்படவில்லை.

தயாரிக்குக.

1) கடன்பட்டோர் மீதியுடன் இணக்கும் கூற்று

2) திருத்திய விற்பனைப் பேரேட்டு ஒழுங்குபடுத்தும் கணக்கு

3) விற்பனைப்பேரேட்டில் திருத்திய கடன்பட்டோர் மீதி

30-6-86 இல் விற்பனைப் பேரேட்டு மீதியுடன் இணக்கும் கூற்று

விபரம்	தொகை	தொகை
விற்பனை பேரேட்டு மீதி (தனிநபர் கணக்கு மீதி)		4 7000
கூட்டுக: விற்பனை நாளேட்டில் கூட்டிப் பதிந்தது.	800	
விற்பனைப் பேரேட்டில் குறைத்துப் பதிந்தது.	900	
கவனத்தில் கொள்ளப்படாத நபர்கணக்கு	200	1 900
		48 900
கழிக்குக: கூட்டிப் பதிந்த உட்திரும்பல்	180	
பதிவழித்த அறவிடமுடியாக்கடன்	800	(980)
ஒழுங்குபடுத்தும் கணக்கு மீதி (திருத்துவதற்கு முன்)		47 920

சீராக்கப்பட்ட கடன்படுநர் ஒழுங்குபடுத்தும் கணக்கு

மீ. கி. கொ. வ.	47 920	விற்பனை நாளேட்டில் கூட்டிப்பதிந்தது	800
கூட்டிப்பதிந்த உட்திரும்பல்	180	மீ. இ. கொ. செ.	47 300
	48 100		48 100
மீ. கி. கொ. வ.	47 300		

சீராக்கப்பட்ட விற்பனைப்பேரேட்டுக் கணக்கு (தனிநபர் கணக்கு)

மீ. கீ. கொ. வ.	47 000	பதிவழித்த அறவிடமுடியாக்கடன்	800
குறைந்துப்பதிந்தது	900	மீ. இ. கொ. செ.	47 300
கவனத்தில் கொள்ளப்படாத நபர் கணக்கு	200		
	48 100		48 100
மீ. கி. கொ. வ.	47 300		

நடைமுறையில் ஒழுங்குபடுத்தும் கணக்குகள் தயாரிப்பதன் மூலம் ஒரு நிறுவனம் பின்வரும் அனுகூலங்களை பெறமுடிகின்றது.

1) ஒழுங்குபடுத்தும் கணக்குகளைத் தயாரிப்பதால் எவ்வேட்டில் பிழைகள் உண்டு என்பதை இலகுவாகக் கண்டறியக் கூடியதாக இருக்கிறது.

(2) பேரேட்டினைப் பராமரிக்கும் லிகிதர்கள் பிழைகளைத் தேடுவதில் நேரத்தினை வீணாக்க வேண்டிய அவசியம் ஏற்படாது.

(3) ஒவ்வொரு ஏட்டினையும் பராமரிக்கும் லிகிதர்கள் தங்கள் வேலைகளை ஒழுங்காகவும், நேர்மையாகவும் செய்கிறார்களா என்பதை இவ்வொழுங்குபடுத்தும் கணக்கைத் தயாரிப்பதன் மூலம் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

(4) வியாரத்தின் முகாமையாளர்கள் வியாபாரத்தினைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான தகவல்களைச் சுலபமாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. உதாரணம் கடன்பட்டோர் மீதி, கடன்கொடுத்தோர் மீதி.

(5) முடிவுக்கணக்குகளைத் தயாரிப்பதற்குத் தேவையான மொத்தத்தொகைகளை இலகுவாக பெறக்கூடியதாக இருக்கிறது.

❋ 1988 மார்ச் 24ந் திகதியிலிருந்து இலங்கையில் தீர்க்கும் வீட்டு செயற்பாட்டில் புதியதொரு முறை நடைமுறைக்கு வந்துள்ளது. இதுவரை காலமும் ஆட்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த தீர்க்கும் வீட்டு செயற்பாடு கணனிமயப்படுத்தப்பட்டு தன்னியக்கப்படுத்தப்பட்டுள்ளது.

மாற்றுண்டியல்

லா. லீனு
வருடம் 12 (வர்த்தகம்)

கடன் அடிப்படையில் ஒருவனுக்குப் பொருட்கள் வழங்கும் போது அவற்றைக் கொள்வனவு செய்தவன் கடன் பட்டவன் ஆகின்முன். கடன்பட்டவன் தான் கடனுகப் பெற்ற பொருட்களுக்கான காசைத் திருப்பிச் செலுத்த இயலாத சந்தர்ப்பத்தில் ஓர் உண்டியலை ஒப்புக் கொள்ளலாம்,

கடன் கொடுத்தோன் தனக்கு வருமதியான தொகையினைக் குறிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் தரவேண்டுமென எழுத அதனைக் கடன்பட்டவன் தருவதாக ஒப்புக் கொள்ளல் உண்டியல் ஒப்புக் கொள்ளலாகக் கருதப்படும்.

1927 ம் ஆண்டின் பிரிவு 3 ல் மாற்றுண்டியலுக்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது.

"ஒரு நாணய மாற்றுண்டியல் என்பது ஆளொருவரால் இன்னொருவருக்கு முகவரி இடப்பட்டு வழங்குபவரால் ஒப்பமிடப்பட்டு எவருக்கு முகவரி இடப்பட்டதோ அந்த ஆளை, நிச்சயமான ஒரு தொகைப் பணத்தைக் கோரிக்கையின் மேல், அல்லது நிர்ணயிக்கப்பட்ட அல்லது தீர்மானிக்கப்படக் கூடிய எதிர்காலத்தில், குறித்துரைக்கப்பட்ட ஆளொருவருக்கு அல்லது அவரது கட்டளை கொண்டவருக்கு அல்லது காவுநருக்குச் செலுத்தும்படி தேவைப்படுத்தும் நிபந்தனை அற்ற எழுத்திலான ஒரு கட்டளையாகும்".

மாற்றுண்டியல் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்.

1) வியாபாரத்தின் போது பயன்படுத்தப்படும்.
2) கடனாக வழங்கிய பணத்தினை மீளப்பெறும் போது பயன்படுத்தப்படும்.
3) ஒப்படை வியாபாரங்களில் சரக்கிருப்புக்குப் பிணையாகப் பயன்படுத்தப்படும்
4) நட்புடையோனுக்கு உதவிப்பணத்தை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும்.

வியாபாரத்தின் போது பயன்படுத்தப்படும் மாற்றுண்டியல்களை உள்நாட்டு வியாபார நடவடிக்கைகளில் பயன்படுத்துவோமாஞல் அம் மாற்றுண்டியல்களை உள்நாட்டு மாற்றுண்டியல் என்றும், பிறநாட்டு வியாபார நடவடிக்கைகளில் பயன்படுத்துவோமாஞல் அம்மாற்றுண்டியலை வெளிநாட்டு மாற்றுண்டியல் என்றும் அழைக்கப்படும்.

மாற்றுண்டியல் கைமாற்றப்படக்கூடிய ஓர் ஆவணமாகும் எனவே மாற்றுண்டியலில் பின்வரும் திறத்தினர் பங்கு கொள்கின்றனர்,

1) வரைவோன்.
2) வரைவுணி

3) பெறுணி (பணத்தைப் பெறுபவர்)

4) காவி (சந்தர்ப்பத்தில் ஒப்படைக்கும் உரிமையைப் பெறுபவர்)

5) எதிர்காலக்காவி (காலம் முதிர்வுறும் போது உண்டியலை வைத்திருப்பவர்)

மாற்றுண்டியலில் பயன்படுத்தப்படும் ஏடுகள்

மாற்றுண்டியல மூலம் கொடுக்கல் வாங்கல்கள் பெருமளவில் நடைபெறும் போது மாற்றுண்டியல் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கு இரு நாளேடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

1) வருமதி உண்டியல் ஏடு.

2) செலுமதி உண்டியல் ஏடு.

மாற்றுண்டியல் ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னரே இது தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் பதிவு செய்யப்படும். ஒப்புக் கொள்ளப்பட்ட மாற்றுண்டியலானது சட்டரீதியான ஆவணமாக அமைய வேண்டுமாயின் அதற்குரிய பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்டு வரைவுணியினால் ஒப்புக்கொள்ளப் பட்டதென ஒப்பமிடப்படுதலும் வேண்டும்.

மாற்றுண்டியல் கொடுக்கல், வாங்கல் செய்யப்படும் வழிமுறைகள்

விற்போன் மாற்றுண்டியலை வரைந்து வரைவுணியிற்கு அனுப்பியதன் பின்னர் வரைவுணி அதனை ஒப்புக்கொள்கிறான். வரைவுணி அதனை ஒப்புக் கொண்டு வரைவோனுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும். இவ்வாறு ஒப்புக் கொள்ளப்பட்ட மாற்றுண்டியல் தொடர்பாக வரைவோன் மேற்கொள்ள வேண்டிய நான்கு செயல் முறைகள் உள்ளன. அவையாவன

1) முதிர்வுக் காலம் வரை உண்டியலைத் தன்வசம் வைத்திருத்தல்.

2) வேறு ஒரு முகவருக்குச் சாட்டுதல் செய்தல்.

3) நிதி நிறுவனங்களில் கழிவுக்கு மாற்றுதல்.

4) உண்டியலை இளைப்பாறச் செய்தல்.

மாற்றுண்டியல் மறுக்கப்படுதல்:

இது இரண்டு வழிகளில் மறுக்கப்படுகின்றது.

1) ஒப்புக் கொள்ளாமையினால் மறுக்கப்படல் :-

ஒப்புக்கொள்ளாமையால் மறுத்தல் பற்றி மாற்றுண்டியல் சட்டப்பிரிவு 43 கூறுகிறது.

2) கொடுப்பனவைச் செய்யாது விடுதலால் மறுக்கப்படல்.

கொடுப்பனவைச் செய்யாது விடுவதனால் உண்டியல் மறுக்கப்படுதல் பற்றி மாற்றுண்டியல் சட்டப்பிரிவு 47 கூறுகின்றது.

உண்டியல் மறுக்கப்பட்டதால் ஏற்படும் செலவுகள்.

மாற்றுண்டியல் சட்டப்பிரிவு 57 ல் செலவு பற்றி கூறுகின்றது. உண்டியல் ஒன்று கொடுப்பனவு மறுக்கப்பட்டுள்ள நிலையில் அதனை வைத்திருப்பவர் அதற்குப் பொறுப்பான எந்த ஒரு நபரிடமிருந்தும் செலவை அறவிடலாம். இதன்பின் யார் பணம் கொடுத்தாரோ அவர் தனக்கு முன்னுள்ள கட்சிக்காரரிடமிருந்து அறவிடலாம். இப்படியே இது தொடர்ந்து கொண்டு செல்லும். இறுதியில் இப்பொறுப்பு பொறுப்பேற்ற நபர்மேல் சுமத்தப்படும்.

முதிர்வு காலம் வரை தன் வசம் வைத்திருத்தல்,

முதிர்வு காலம்வரை தன்வசம் வைத்திருத்தல் என்னும் போது கடன் கொடுத்தவன் அந்த உண்டியலைத் தானே வைத்திருந்து குறித்த தவணை வந்ததும் அதைக் கடன்பட்டவனிடம் சமர்ப்பித்து தனக்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

கணக்கு வைக்கும் முறைகள்

1) உண்டியலைப் பெற்றுக் கொள்ளும் போது
   வருமதி உண்டியல் க / கு வரவு.
   கடன்படுநர் க / கு செலவு

2) தவணைத் திகதியில் மறுக்கப்பட்டால்
   கடன்படுநர் க / கு வரவு.
   (மறுப்பறிவிப்புச் செலவுடன்)
   வருமதி உண்டியல் க / கு செலவு.
   காசுக் க / கு (மறுப்பு அறிவிப்புச் செலவு) செலவு

3) முதிர்வு திகதியில் உண்டியல் மீட்கப்பட்டால்.
   காசு க / கு வரவு
   வருமதி உண்டியல் க / கு செலவு

சாட்டுதல் செய்தல்.

சாட்டுதல் செய்தல் எனும்போது கடன் கொடுத்தவன் இவ்வுண்டியலை வேறொரு நபருக்கு சாட்டுதல் செய்வதைக் குறிக்கும்.

கணக்கு வைக்கும் முறைகள்.

உண்டியலைப் பெறும் போது
வருமதி உண்டியல் க / கு வரவு.
கடன்படுநர் க / கு செலவு.

சாட்டப்படும் போது
சாட்டப்பட்டோன் க / கு வரவு.
வருமதி உண்டியல் க / கு செலவு.

மறுக்கப்படும் போது

கடன்படுநர் க / கு (மறுப்பு அறிவிப்புச் செலவுடன்) வரவு

சாட்டப்பட்டோன் க / கு (மறுப்பறிவிப்புச் செலவுடன்) செலவு.

வங்கியில் கொடுத்துக் கழிவுடன் உண்டியல் மாற்றப்படும்போது:

உண்டியல் பெறும்போது

வருமதி உண்டியல் க / கு வரவு

கடன்படுநர் க / கு செலவு.

வங்கியில் கொடுத்து மாற்றும் போது

வங்கிக் க / கு வரவு

வருமதி உண்டியல் க / கு செலவு

(உண்டியலின் முகப்பெறுமதியில்)

வங்கியில் கழிவுடன் மாற்றும் போது

உண்டியல் மாற்றல் கழிவு க / கு வரவு

வங்கி க / கு செலவு

உண்டியல் மறுக்கப்படும் போது

கடன் படுநர் க / கு (மறுப்பறிவிப்புச் செலவுடன்) வரவு

வங்கி க / கு (மறுப்பறிவிப்புச் செலவுடன்) செலவு

உண்டியல் புதுப்பித்தல்

உண்டியலைப் புதுப்பித்தல் என்பது காலம் முதிர்வடையும் போது பணக் கொடுப்பனவு செய்யப்படாத உண்டியலுக்கு மாற்றீடாகப் புதிய உண்டியல் ஒன்றை ஒப்புக் கொள்ளுதலும் வரைவுணியின் வேண்டுகோளுக்கிணங்க பழைய உண்டியலைக் காலம் முதிர்வதற்கு முன்னர் புதிய உண்டியலொன்றை ஒப்புக் கொள்தலையும் குறிக்கும் இவ்வாறு உண்டியலைப் புதிதாக ஒப்புக் கொள்வதற்கு வரைவோனால் விருப்பூட்டும் போது அவ்வரைவுணியினால் உண்டியலுக்கான காகிதாதிகள் கட்டணம், முத்திரைக் கட்டணம், காலம் கடந்த கடனுக்கான வட்டி (உண்டியல் கழிவு செய்யப்பட்டிருந்தால்) உண்டியல் கழிவுத் தொகை, புதிய உண்டியலை வரைவதற்கான செலவு ஆகியவை செலுத்தப்படல் வேண்டும் எனவே புதிய உண்டியல் மேற்குறிப்பிட்ட செலவுகளை உள்ளடக்கி வரையப்படும்.

உண்டியலை இளைப்பாறச் செய்தல்

ஒப்புக் கொள்ளப்பட்ட உண்டியலானது கால முதிர்வுக்கு முன்னர் ஒப்புக் கொண்ட நபரினால் உரிய பணத்தினைச் செலுத்திப் பொறுப்பிலிருந்து நீங்குதல் உண்டியல் இளைப்பாறச் செய்தல் எனப்படும். இவ்வாறு உண்டியலை இளைப்பாறச் செய்யும் போது முன் விடுவித்தற்கழிவு வழங்கப்படும். இதற்கு க / குப் பதிவு பின்வருமாறு

காசுக் க / கு வரவு

விடுவிக்கப்பட்ட கழிவு க / கு வரவு

வருமதி உண்டியல் க / கு செலவு

உண்டியலைப் பிணையாக வைத்து முற்பணம் பெறல்

வருமதி உண்டியல் ஒன்றினைப் பிணையாக வைத்து அதன் முகப்பெறுமதியில் ஏதுமொரு பெறுமதியை வங்கியிலிருந்து கடனாகப் பெற்றுக் கொள்ளுதல் உண்டியலைப் பிணையாக வைத்து முற்பணம் பெறுதல் எனப்படும். இது தொடர்பாகப் பின்வரும் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

உண்டியல் முற்பணக் க / கு வரவு

வருமதி உண்டியல் க / கு செலவு

(உண்டியலின் முகப் பெறுமதி)

காசுக் க / கு வரவு

உண்டியல் முற்பணக் க / கு செலவு

(முற்பணம் பெறுதல்)

வட்டிக் க / கு வரவு

உண்டியல் முற்பணக் க / கு செலவு

(வங்கியினால் அறவிடப்பட்ட வட்டி)

காசுக் க / கு வரவு

முற்பண உண்டியல் க / கு செலவு

(உண்டியல் முதிர்வுற்றதும் வங்கியிலிருந்து மீதித் தொகை பெற்றுக் கொள்ளுதல்)

உதவி உண்டியல்

முன் மதிமானமற்ற பணத் தேவைக்கு நண்பர் ஒருவரைக் கொண்டு ஒப்புக் கொள்ளப்படச் செய்யப்பட்ட உண்டியல் உதவி உண்டியல் எனப்படும். இவ்வகை உண்டியல் வங்கியில் கொடுக்கப்பட்டு கழிவு செய்யப்படலாம். மேலும் இவ் உண்டியலை வரைவோன் அதனைக் கழிவு செய்ததன் பின்னர் பெறும் தொகையில் ஒரு பகுதியினை ஒப்புக் கொண்டவனுக்குக் கொடுப்பது இதில் காணக்கூடிய பண்பாகும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் கழிவுக் கட்டணத்தை இருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்

ஒப்புக் கொண்டோனின் (வரைவுணி) ஏடுகளில்
கொடுக்கல் வாங்கல்களைப் பதிதல்.

ஒருவர் தனது கடன் கொடுநர் சார்பாக ஒரு மாற்றுண்டியலை ஒப்புக் கொள்கிறார். அப்பொழுது அவரின் ஏடுகளிலுள்ள பதிவுகள் பின்வருமாறு

கடன் கொடுநர் க / கு வரவு

சென்மதி உண்டியல் க / கு செலவு

உண்டியலுக்குப் பணத்தைச் செலுத்துதல்

சென்மதி உண்டியல் க / கு வரவு

காசுக் க / கு செலவு

உண்டியல் மறுக்கப்படுதல்

சென்மதி உண்டியல் க / கு வரவு

கடன் கொடுநர் க / கு செலவு

குறிப்பு :-

உண்டியல் ஒன்று மறுக்கப்படும் பொழுது உண்டியலின் முகப்பெறுமதி மாத்திரமன்றி மறுக்கப்பட்ட உண்டியல் கழிவு, காலம் கடந்த கடனுக்கான வட்டி, அறிவித்தற்கான கட்டணம் ஆகிய அனைத்துக்குமாக உண்டியல் வரைவுனர் மீண்டும் கடன் கொடுநராகின்றார்.

உண்டியலை இளைப்பாறச் செய்வித்தல்

சென்மதி உண்டியல் க / கு வரவு

பெற்ற இளைப்பாற்றுவித்தல் கழிவு செலவு

காசுக் க / கு செலவு

---

* கொள்வனவாளரால் நாம் கொள்வனவு செய்யும் பொருட்களிற்கும், சேவைகளிற்கும் விலைக்கழிவைக் பெறக்கூடிய முறையில் பயன் படுத்தப்படும் அட்டைகளே கழிவு அட்டைகளாகும். இவ் அட்டையை Cash Discount (PVT) Company Ltd என்ற நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

* வரையறுக்கப்பட்ட லங்கா பிறிமா (இலங்கைக்) கம்பனியின் பங்கு முதலுக்குப் பங்களிப்புச் செய்துள்ள கட்சியினர்

(1) வரையறுக்கப்பட்ட சிங்கப்பூர் பிறிமா கம்பனி

(2) வரையறுக்கப்பட்ட இந்தோனிசியா பிறிமா கம்பனி

(3) இலங்கை அரசு.

"தேசிய வருமானம்" என்ற கண்ணோட்டத்தில் அதை மதிப்பீடு செய்வதில்

இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளில் காணப்படும் குறைபாடுகளும் அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகளும்

ஜெ. அகல்யா
வருடம் 12 (வர்த்தகம்)

பொருளியலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததும், பயன் நிறைந்ததுமான ஆய்வாக தேசிய வருமானம் பற்றிய ஆய்வானது அமைந்துள்ளது. நாட்டில் திட்டமிடுதலை மேற்கொள்வதற்கும், காலப்போக்கில் ஏற்படுகின்ற பொருளாதார வளர்ச்சியினை அறிந்துகொள்வதற்கும், துறைகளுக்கிடையே ஏற்படுகின்ற வளர்ச்சியினை ஒப்பிட்டு நோக்குவதற்கும், பொருளாதார வளர்ச்சி வீதத்தினை வெவ்வெறு நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்குவற்கும் தேசிய வருமான மதிப்பீடானது பெரிதும் உதவுகின்றது. மேலும் ஒரு நாட்டினது முக்கிய பொருளாதார பிரச்சனைகளான வேலையின்மை, பணவீக்கம் போன்றவற்றினை விளக்கவும், மதிப்பீடு செய்யவும் இன்றியமையாததுடன் ஒரு நாட்டினது வேலைமட்டம், வருமானமட்டம் போன்றவற்றினை நிர்ணயிக்கும் அடிப்படை சக்திகளை சரியாக விளங்குவதற்கும், தேசிய வருமானம் பற்றிய ஆய்வு முக்கியமானதாகும்.

தேசிய வருமானம் என்பதனை பின்வருமாறு வரையறுக்கலாம்

"குறிக்கப்பட்ட ஒருகால அளவினுள் ஒரு நாட்டினுல் அல்லது பொருளாதாரத்தினுல் உற்பத்தியாக்கப்பட்ட முடிவுப்பொருள்கள், சேவைகளின் (இறுதிப்பொருள் சேவைகள்) பணரீதியான மொத்தப் பெறுமதியே" தேசிய வருமானம் எனப்படுகிறது எனினும் இத்தகைய வரைவிலக்கணத்திலிருந்து சற்று மாறுபட்டதாக ஒரு நாட்டினுல் என்பதற்குப் பதிலாக குறிக்கப்பட்ட காலப்பகுதியில் ஒரு நாட்டு பிரஜைகளினுல் உற்பத்தி செய்யப்பட்ட எல்லா இறுதிப் பொருட்கள், சேவைகளதும் பணரீதியாக தேறிய பெறுமதிகளைக் குறிக்கிறது எனலாம். இதனைப் பின்வருமாறு குறியீடுகளின் அடிப்படையில் விளக்க முடியும்.

மொத்த தேசிய உற்பத்தி $= p_1q_1 + p_2q_2 \ldots + p_nq_n = pq$ இங்கு $q_1q_2 \ldots q_n$ என்பது பொருளாதாரம் ஒன்றிலிருந்து n வரையுள்ள சேவைகளது மொத்த எண்ணிக்கையினை அல்லது பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், சேவைகளின் மொத்த எண்ணிக்கையினை குறிக்கிறது. p_1p_2 pn என்பது ஒன்றிலிருந்து n வரையுள்ள பொருட்கள், சேவைகளது விலைகளைக் குறிக்கின்றது. எனவே பொருளாதாரத்தின் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், சேவைகளினது மொத்த எண்ணிக்கையினை அவற்றினது விலைகளால் பெருக்கி கூட்டும்போது அது தேசிய வருமானத்திற்குச் சமனுக இருக்கும்.

தேசிய வருமானமானது மூன்று வழிகளில் மதிப்பிடப்படுகின்றது. உற்பத்திவழி, வருமான வழி, செலவுவழி என்ற மூன்று முறைகளிலும் மதிப்பிடப்படுகின்றது. இலங்கையில் வருமான வழியில் கணிப்பிடப்படுவதில்லை. உற்பத்தி வழியிலும் செலவு,

வழியிலுமே கணிப்பிடப்படுகின்றது. உற்பத்தி வழியில் கணிப்பிடும்போது கிடைக்கின்ற பெறுமதி சந்தைவிலை மொத்த தேசிய உற்பத்தி என அழைக்கப்படும். இது காரணிச் செலவினிலேயே இருக்கும். வருமானவழியில் கணிப்பிடும்போது கிடைக்கின்ற பெறுமதி மொத்த தேசிய வருமானம் எனப்படும். இதுவும் காரணிச்செலவுப் பெறுமதியிலேயே அமைந்திருக்கும். செலவு வழியில் கணிப்பிடும்போது கிடைக்கின்ற பெறுமதி மொத்த தேசிய உற்பத்தி மீதான செலவு என அழைக்கப்படும். இது சந்தை விலையிலான பெறுமதியாக இருக்கும். ஒரே விடயத்தினை மூன்று வழிகளாலும் கணிப்பிடுவதனால் இந்த மூன்று பெறுமதிகளும் ஒன்றிற்கொன்று சமனாகவே இருக்கும்.

தனிப்பட்டவர்கள், தமது வருமானங்களை இலகுவாகக் கணிப்பது போன்று தேசிய வருமானத்தினை இலகுவில் கணித்தறிய முடியாது, தேசிய வருமானத்தை கணக்கிடும்போது பொதுவாக எழும் முக்கிய பிரச்சினை புள்ளி விபரத்தவறுகள் ஆகும். ஒரு நாட்டின் தேசிய வருமானத்தைக் கணிக்கும்போது உற்பத்தி பற்றிய முழுமையான புள்ளிவிபரங்களின்மை, போலியான தகவல்களை வழங்குவதனால் நம்பத்தகுந்த புள்ளிவிபரங்களின்மை போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளில் சகல பொருளாதார துறைகளிலிருந்தும் போதிய அளவிற்கு நம்பக்கூடியதான புள்ளிவிபரங்களை பெறக்கூடியதாகவுள்ளது. ஆனால் குறைவிருத்தி நாடுகளிலே தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாத குறைபாடு ஏற்படுகின்றதால் போதியளவிற்கு நம்பத்தகுந்த புள்ளிவிபரங்களைப்பெற இயலாத நிலமை ஏற்பட்டு விடுகின்றது.

தேசிய வருமானக் கணிப்பீட்டிற்குள் சட்டரீதியான உற்பத்திகள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. ஆனால் சட்டரீதியற்ற பொருட்களும், சேவைகளும் ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. உதாரணமாக சட்டவிரோத நடவடிக்கைகளான கள்ளக்கடத்தல், சூதாடுதல், சட்டவிரோதமாக மதுபானம் வடித்தல், போதைப்பொருட்கள் தயாரித்தல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஆனால் இவை ஆக்ககாரணிகளைப் பயன்படுத்துகின்ற நடவடிக்கையே. எனவே இவ்வுற்பத்திகளும் ஒரு நாட்டின் தேசிய வருமான கணிப்பீட்டிற்குள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய உற்பத்திகளாகும். ஆனால் இவைபற்றி புள்ளிவிபரம் கிடையாது.

தேசிய வருமானம் என்பது குறிப்பிட்ட வருடத்திற்குரிய பொருட்கள், சேவைகளது உற்பத்திப் பெறுமதியாகும். ஆனால் குறிப்பிட்ட வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களனைத்தும் அவ்வருடத்திலேயே சந்தைப்படுத்தப்படுவதில்லை. அதே போன்று அவ்வருடத்தில் சந்தைப்படுத்தப்பட்டவை முன்னைய வருடங்களில் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் இருக்கலாம். உதாரணம் விவசாயிகள், தமது அறுவடை காலத்தில் தானியங்களின் விலை குறைவாக இருப்பதால், அவற்றை இருப்பில் வைத்து விலை கூடிய காலங்களில் சந்தைப்படுத்துவது வழக்கம். இத்தகைய உற்பத்தி நடவடிக்கைகள் இலங்கைபோன்ற குறைவிருத்தி நாடுகளிலேயே பெருமளவில் காணப்படுகின்றன. இத்தகைய பிரச்சினைகளினால் குறிப்பிட்ட வருட உற்பத்தியை திட்டவட்டமாகக் கணிக்க முடியாதுள்ளது. எனவே குறிப்பிட்ட வருட உற்பத்திகளை கணிப்பதற்கு முன்னைய உற்பத்திகளை கழித்து சந்தைப்படுத்தப்படாத உற்பத்திகளை கூட்ட வேண்டும்.

இரட்டைக் கணிப்பீடென்ற தவறு ஏற்பட்டுவிடுதல் குறைவிருத்தி நாடுகளில் ஒரு பெரும் பிரச்சனையாகும். இலங்கையிலும் பொதுவாக இத்தவறுனது இடம் பெறுகிறது. உதாரணம் பெருந்தோட்டத்துறை ஆகும். ஒரு விடயத்தினை ஒரு தடவைக்குமேல் கணிப்பீடு செய்வதையே இரட்டைக் கணிப்பிடல் என்று கூறுவர். ஏனெனில் இங்கு சிறப்பான முறையில் கணக்குகளைக் கணிப்பீடு செய்யத்தகுந்த கணக்காளர்கள் போதிய அளவு கிடைக்காமையும் இத்தவறு ஏற்படுவதற்கு ஒரு காரணமாகும், இவ்வாறு கணிப்பீடு செய்யப்படல் உண்மையில் நாட்டில் ஏற்பட்ட உற்பத்தியிலும் பார்க்க கூடுதலான உற்பத்தியாகவே கணிக்கப்படும். இது தவறான தாகும் இதனை தீர்ப்பதற்கு இரண்டு வழிகள் உள்ளன.

முதலாவது முறை: இறுதிப்பொருட்கள், சேவைகளை கவனத்தில் கொள்ளல்
இரண்டாவது முறை: பெறுமதி கூட்டப்படல் முறையினைக் கையாளல்.

பெறுமதி கூட்டப்படுகின்ற முறையினை பின்வருமாறு கணிப்பிடலாம், குறிப்பிட்ட துறையின் உற்பத்தித்துறையிலிருந்து அக்குறிப்பிட்ட துறையானது ஏனைய துறைகளிடம் இருந்து பெற்ற துறைகளின் பெறுமதிகளைக் கழிப்பதன் மூலம் பெறுமதி கூட்டப்பட்ட முறையானது குறிப்பிட்ட துறையின் உண்மையான உற்பத்தியினை எடுத்துக்காட்டும்.

மற்றும், பணப்பெறுமதிகள், மாறுபடுவதனல் நாட்டின் உற்பத்தி அதிகரித்த பொழுதும், நாட்டின் விலைமட்டம் அதிகரித்தால் உற்பத்திகளதிகரித்ததாக முடிவினைப் பெறுவர். இத்தவறினை நீக்குவதற்காக மாறு விலையில் தேசிய உற்பத்தியை அளவிடுவர். ஆனல், தேசிய உற்பத்தி சுருக்கியைத் தயாரிக்கும் பொழுது அடிப்படை ஆண்டினை மாற்றினல் பணப் பெறுமதியில் மாற்றங்களை அறியமுடியாது. எனவேதான் இலங்கையிலும் 1982ம் ஆண்டினையே அடிப்படையாகக்கொண்டு தேசிய வருமானம் கணிப்பிடப்படுகின்றது.

மேலும் நிலையான சொத்துகளிலிருந்து வருமானம் பெறும் பிரிவினர் தமது வருமானங்களை மிகைப்படுத்திக் கூறுவதனுலும் தவறு ஏற்படுகின்றது. உற்பத்தி வழிக்கணக்கீட்டில் மொத்த தேசிய உற்பத்திக்கும், தேறிய தேசிய உற்பத்திக்கும் உள்ள வேறுபாடு முக்கியமானதாகும். பொருட்களை உற்பத்தி செய்யும்போது இயந்திரங்களுக்கு தேய்வு ஏற்படுகின்றது. இவற்றினையும் கணக்கில் எடுத்தால்தான் உண்மையான உற்பத்தியினை பெறமுடியும். பெறுமானத்தேய்வினை கணிப்பிடுதல் என்பது இலகுவான காரியமல்ல பல குறைவிருத்திநாடுகளில் பெறுமானத்தேய்வு என்பது கணக்கிடப்படுவதில்லை. மொத்த தேசிய உற்த்தியிலிருந்து பெறுமானத் தேய்வினைக் கழித்தால் தேறிய தேசிய உக்பத்தியினைப் பெற்றுக்கொள்ளலாம். உண்மையில் தேறிய தேசிய உற்பத்தியே ஒரு நாட்டின் மக்களால் பாவிக்கப்படும் ஒரு உற்பத்தி ஆகும்.

ஒரு நாட்டின் உற்பத்திக் காரணிகளாது உழைப்பு அல்லது உற்பத்தி முழுவதும் அந்நாட்டினது புவியியல் எல்லைக்குள் மட்டும் நடைபெறுவதில்லை, ஒரு நாட்டினது உற்பத்திக் காரணிகளில் ஒரு பகுதி வெளிநாட்டு உற்பத்தியிலும் ஈடுபட்டு இருக்கலாம். இதேபோன்று வேறு நாடுகளில் உற்பத்திக் காரணிகளில் ஒருபகுதி இக்குறிப்பிட்ட நாட்டின் உற்பத்தியிலும் ஈடுபடலாம்.

உதாரணமாக வெளிநாட்டு மூலதனம், ஊதியம் போன்றவை இலங்கையில் உற்பத்தியில் ஈடுபட்டிப்பது போன்று இலங்கையில் மூலதனம், ஊழியம் போன்றவை வெளிநாடுகளின் உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கின்றன. இதனால் குறிப்பிட்ட நாட்டில் வெளிநாட்டு உற்பத்திக் காரணிகளது உற்பத்தியினை நீக்கி வெளிநாட்டிலுள்ள குறிப்பிட்ட நாட்டினது உற்பத்திக் காரணிகளின் உற்பத்தியினைக் கணித்தல் கடினமானதாகும்.

தேசிய உற்பத்தித்தரவுகள் எல்லா உற்பத்திகளுக்கும் சமமான பெறுமதியினையே கொடுக்கின்றன. ஆனால் இவை சமூகத்திற்கு வேறுபட்டளவில் நன்மைகளை வழங்குகின்றன. உதாரணமாக போர் தளபாட உற்பத்தியும் பாடசாலைகளின் அமைப்பும் சமூகத்திற்கு வேறுபட்ட நலன்களை வழங்கும். எனவே இவற்றுக்குப் பெறுமதிகளை வேறுபடுத்தியே வழங்கவேண்டும். இந்த அடிப்படையிலேயே பொருளாதார நல அளவீடென்ற (M. E. W.) புதிய குறிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி பின்வரும் மூன்று பெறுமானங்களைக் கூட்டி விடுதல் வேண்டுமெனவும் குறிப்பிடுகின்றன நீண்டகால பாவனை கொண்ட பொருட்களின் உற்பத்தி, அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற சமூகத்திற்கு நன்மை தரும் செலவினங்கள் (பாதுகாப்பு செலவும்) சூழல் மாசடைதலால் ஏற்படக்கூடிய செலவுகள் போன்ற மூன்று விடயங்களையும் தேசிய உற்பத்தியிலிருந்து கழித்துவிடுதல் வேண்டுமெனவும், நீண்டகால பாவனைப் பொருட்களின் உற்பத்தியில் ஒரு வருடத்திற்கான பாவனைப் பெறுமதி, சம்பளம் பெறுத சேவைகளின் பெறுமதி, தொழிலாளரின் ஓய்வு நேரத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்பு என்ற மூன்றினையும் தேசிய உற்பத்தியுடன் கூட்டி விட வேண்டுமென்று (Robin Nordas) போன்ற அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர் இதனால் சமூக நலனையும் அளவிடலாமென்றனர்.

குறிப்பிட்ட வருடத்தில் உற்பத்திக் காரணிகள், பெறும் வாடகை, கூலி, வட்டி, இலாபம் என்பவற்றின் கூட்டுத்தொகையே வருமான ரீதியிலான தேசிய வருமானமாகும். இங்கு ஒருவர் பெறும் சம்பளம், நிறுவன இலாபம், தனிப்பட்ட முதலாளியின் இலாபம், வீடுகட்டிய வாடகை போன்ற விடயங்கள் இதில் கவனிக்கப்படுகின்றன. ஆனால் ஓய்வுகால நிதி, வறியோர் நிவாரண நிதி போன்றவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. ஏனெனில் இவை குறிப்பிட்ட வருட உற்பத்திக்காக வழங்கப்பட்டதல்ல. எனவேதான் இவற்றினைக் கணக்கில் எடுப்பதில்லை. வருமான வழியிலான தேசிய வருமானத்தைக் கணிப்பிடுவது மிகவும் சிக்கலான விடயமாகும். இதனால் பல குறைவிருத்தி நாடுகளில் இம்முறையில் தேசிய வருமானக் கணிப்பீடு இடம்பெறுவதில்லை. ஆகவே தேசிய வருமானக் கணிப்பினால் பல நன்மைகள் அமைந்திருப்பினும் அவற்றை சரியான வழியில் கணிப்பது, இன்னும் நடைமுறை உலகில் சிக்கலாகவே உள்ளது.

✱ 1988 ஓகஸ்ட் மாதத்தில் தேசிய சேமிப்பு வங்கி சேமிப்பாளர் வீட்டுக் கடன் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. இத்திட்டத்தில் சுயதொழில் புரிவோரும், வருமானவரி செலுத்தாதோருமே சேர்ந்து கொள்ள முடியும்.

இலங்கையின் சர்வதேச வர்த்தகம் பற்றிய போக்கு

ஆக்கம்: க. கலாகரன் (B. B. A (சிறப்பு)

இலங்கையின் சர்வதேச வர்த்தகமானது ஏற்றுமதி வியாபாரம், இறக்குமதி வியாபாரமாகிய இரு பகுதியை உள்ளடக்குவதாய் அமையும்.

(A) ஏற்றுமதி கட்டமைப்பு

இலங்கை அந்நிய செலாவணி உழைப்பின் நோக்கை முக்கியமாக கொண்டு ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபடுகையில் அதன் ஏற்றுமதி வருமானத்தில் பங்கு பெறும் விடயங்கள் வழங்கும் பங்கின் அடிப்படையில் கட்டமைப்பை வருமாறு இரண்டாகப் பிரிப்பர்.

(அ) மரபு ரீதியான ஏற்றுமதி கட்டமைப்பு.

(ஆ) மரபு ரீதியற்ற ஏற்றுமதி கட்டமைப்பு.

இங்கு "மரபு ரீதியான கட்டமைப்பு" எனும் போது அது குடியேற்ற ஆட்சியாளரான பிரித்தானியர் காலத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை, றப்பர், தெங்குப் பொருள் அவை சார்ந்த ஏற்றுமதி என்பவற்றை உள்ளடக்குவதாய் அமையும்.

"மரபு ரீதியற்ற கட்டமைப்பு" எனும் போது மரபு ரீதியான ஏற்றுமதி தவிர்ந்த ஏற்றுமதிகளான தயாரித்த ஆடை, பெற்றோலிய உற்பத்தி, இரசாயான உற்பத்தி, பழவகைகள், நீர்த்தாவரம், மதுபானம், புகையிலை, உலோக, உலோகமல்லா உற்பத்தி, தோல், றப்பர் உற்பத்திகள், கனிப்பொருட்கள், சிறு விவசாய பொருள், மர தளபாடம், ஆபரணங்கள், பொறி பொருத்துக்கள் என்பவற்றை உள்ளடக்குவதாக அமைகின்றது.

அண்மைக் காலத்தில் இவற்றின் பங்களிப்பை ஏற்றுமதி வருமானத்தில் நோக்கின்,

ஆண்டுகள் :	1970	1977	1980	1983	1984	1985	1986	1987	1988
மரபு ரீதியான ஏற்றுமதி:	89	73.9	56.6	52.1	56.7	48.7	41.9	38.2	37.4
மரபு ரீதியற்ற ஏற்றுமதி:	11	26.1	43.4	47.9	43.3	51.3	58.1	61.8	62.6
மொத்தம் :	100	100	100	100	100	100	100	100	100

ஆதாரம் : மத்திய வங்கி அறிக்கை

இலங்கையை நோக்கின் மத்திய வங்கியினால் ஏற்றுமதி கட்டமைப்பானது வருமாறும் 4 வகுதிகளாக பாகுபடுத்தப்படுகிறது.

1) வேளாண்மை ஏற்றுமதிகள்.
2) கைத்தொழில் ஏற்றுமதிகள்.
3) கனிப்பொருள் ஏற்றுமதிகள்.
4) ஏனையவை.

இவற்றின் போக்கை நோக்கின்.

	வகை ஏற்றுமதி தொகுதி	1977	1980	1983	1984	1985	1986	1987	1988
A)	வேளாண்மை ஏற்றுமதி	80	61.6	58	6 .4	52.5	46.3	42.4	42.8
	(i) தேயிலை	53	35.1	33,1	42.3	33.2	27.2	25.9	26.3
	(ii) இறப்பர்	14	14.7	11·4	8.8	7.1	7.7	7.1	7.9
	(iii) தெங்கு	7	7	7.6	5.7	8.5	7	5.2	3.3
	(iv) சிறுவிவசாயப் பொருள்	6	4.8	5.9	3.7	3.8	4.4	4.2	[illegible]
B)	கைத்தொழில் ஏற்றுமதி	14	31.2	3.51	34.3	38.6	46.6	48.6	48.3
	(i) புடவையும், துணிவகையும்,	2	10.3	18.9	20.2	21.8	28.3	31.3	30.4
	(ii) பெற்றோலிய உற்பத்தி	9	17.7	10.7	8.8	10.7	6.9	6.3	4.8
	(iii) ஏனையவை	3	3.2	5.6	5.3	6,1	11.4	11.0	13.1
C)	கனிப்பொருள் ஏற்றுமதி	5	4.5	4.5	2.5	3.2	3.5	4.4	[illegible]
	(i) இரத்தினக்கல்.	4	3·8	3.7	1.9	2.4	2.2	3.5	4.4
	(ii) ஏனையவை.	1	0.7	0.8	0.6	0.8	1.3	0.9	1.2
D)	பகுபடா ஏற்றுமதி	1	2,7	2.8	2.8	5.6	3.7	[illegible]	[illegible]
	மொத்தம்	100	100	100	100	100	100	100	100

இவற்றின் அடிப்படையில் இலங்கையின் ஏற்றுமதி கட்டமைப்பு மாற்றங்களை நோக்கின், 1970 – 1977 வரையும் உயர்வாய் அமைந்த வேளாண்மை ஏற்றுமதிகள் தொடர்ச்சியாக 1977 க்குப் பின் குறைந்து வர கைத்தொழில் ஏற்றுமதிகள் அதிகரித்து வருவதைக் காணலாம். எனவே மரபு ரீதியான ஏற்றுமதி பங்களிப்பு குறைவடைந்து வந்து 1988 ல் 37.4 % ஆகவும் அமைய மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் 62.6 % ஆகவும் அமைந்து மரபு ரீதியான ஏற்மதிகளை விட மிக கூடுதலாய் அமைய இலங்கை மரபு ரீதியான (விவசாய) ஏற்றுமதி கட்டமைப்பில் இருந்து மரபு ரீதியற்ற(கைத்தொழில்) கட்டமைப்பை சார்ந்து கொள்கிறது என கொள்ளலாம்.

இதற்கு காரணம் ஏற்றுமதி மூலம் அந்நிய செலாவணி சம்பாத்தியத்தை அதிகரிக்க மரபு ரீதியற்ற கைத்தொழிலை விருத்தியாக்க அரசாங்கம் 1977 இன் பின் மேற்கொண்டு வரும் பொருளாதாரக் கொள்கைகளும், நிறுவன ரீதியான ஆதரவுகளும், நிவாரணங்களும், ஊக்குவிப்புக்களும் ஆக அமையும், அவையாவன,

1) ஏற்றுமதி கைத்தொழிலை ஊக்குவிக்க தாராள பொருளாதார கொள்கை வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், வெளிநாடடு முதலீட்டு மதியுரைக் குழு உருவாக்கப்பட்டமை.

2) ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தல்.

3) ஏற்றுமதி அபிவிருத்தி சபை உருவாக்கப்பட்டமை.

4) ஏற்றுமதி உற்பத்தி கிராம அமைப்பு உருவாக்கம்.

5) 1985 - 1987 காலப் பகுதிக்கென தேசிய ஏற்றுமதி அபிவிருத்தி திட்டம் உருவாக்கம்.

6) ஏற்றுமதி சுங்க தீர்வை தள்ளுபடித்திட்டம். ஏற்றுமதி வரி விலக்கு ஜனாதிபதி பரிசில் திட்டம்.

இலங்கையில் மரபு ரீதியற்ற ஏற்றுமதியில் சுதந்திர வர்த்தக வலயத்தில் இடம்பெறும் ஆடை தயாரிப்பு என்பன முக்கியம் பெறுவதாக அமைகையில் இவற்றுக்கான மூலப் பொருட்கள், தொழில் நுட்பம், சாதனங்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாலும் உள் நாட்டு வளங்களின் பயன்பாடு குறைவாய் அமைவதாலும் உள் நாட்டு உற்பத்திக்கு அவை வழங்கும் பங்களிப்பு குறைவாய் உள்ளது. ஆனல் மரபு ரீதியான ஏற்றுமதியின் பங்கு குறையினும் உள்நாட்டு உற்பத்திக்கு அவற்றின் பங்கு கூடுதலாகும்.

இறக்குமதி கட்டமைப்பு:

இலங்கையானது அரிசி, மா, சீனி போன்ற அன்றாட நுகர்வுக்கும், உள்நாட்டு உற்பத்திக்கான மூலப் பொருட்களான பெற்றோலியம், வளமாக்கி போன்ற இடைநிலைப் பொருட்களுக்கும், இயந்திரம், பொறி பான்ற முதலீட்டுப் பொருள் தேவைக்கும் இறக்குமதியில் தங்கியுள்ளது. இலங்கையில் நடைமுறைக்கு வந்த அரசாங்கம் மேற்கொண்ட தாராள பொருளாதார கொள்கைகளால் இலங்கையின் இறக்குமதி கட்டமைப்பில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றது. அதனை, நோக்கின்,

இறக்குமதி தொகுதி	1977	1978	1979	1980	1981	1982	1983	1984	1985	1986	1987	1988
நுகர்வுப் பொருள்	42	38	35	29,9	26.2	20.5	25.5	23.2	27.0	22.5	22.8	24.5
இடைநிலை பொருள்	44	38	41	45.7	50.9	51.6	47.7	50.0	48.2	52.4	57.2	56.9
முதலீட்டு பொருள்	12	23	24	24.0	22.6	27.6	26.5	25.6	19.6	19.4	18.7	17.0
ஏனையவை	1	1	1	0.3	0.4	0.3	0.3	1.2	5.2	5.7	1.3	1.6
மொத்தம்	100	100	100	100	100	100	100	100	100	100	100	100

A) நுகர்வு அல்லது முடிவுப் பொருள் தொகுதி;

இது மக்களின் அன்றாட நுகர்வுக்குப் பயன்படும். அரிசி, மா, சீனி, விலங்கு பண்ணை, மீன் போன்ற தயாரித்த உணவு வகை, குடிபானங்கள், புடவை போன்றவற்றை உள்ளடக்கும். இத் தொகுதி 1977 இல் 43% மாக அமைந்தது. 1982 வரை தொடர்ச்சியாகக் குறையக் காரணம், துரித மகாவலித்திட்டத்தினால் நெல் உற்பத்தி அதிகரித்தமையும் பிறிமா ஆலைக்கு கோதுமை தானிய இறக்குமதி கூட கோதுமை மா இறக்குமதி குறைந்தமை

1986, 87, 88, இல் இது முறையே இறக்குமதியில் பெறும் பங்கு 22.5%, 22.8%, 24.5%, என அதிகரித்து செல்லக் காரணம்,

- வடக்கு கிழக்கு பகுதிகளின் நெல் உற்பத்தி பாதிப்பால் நெல் இறக்குமதி அளவு அதிகரித்து.
- நெல்லின் இறக்குமதி விலை அதிகரிப்பு.
- சீனி இறக்குமதி அளவு குறையினும் விலை அதிகரிப்பால் இறக்குமதி செலவு கூடியமை.
- கோதுமை மா இறக்குமதி அளவு அதிகரித்தமை.
- பால், பால் உற்பத்திப் பொருளின் இறக்குமதி பெறுமதி அதிகரித்தமை
- ஏனைய ஆடை இறக்குமதி போன்ற குடிபான இறக்குமதி அளவு அதிகரித்தமை.

B) இடைநிலைப் பொருள் தொகுதி:

இதனுள் உள்நாட்டு உற்பத்திக்கு பயன்படும் பெற்றோலியம், இரசாயனப் பொருள், வளமாக்கி, கோதுமை, தானியம், புடவை துணி, தான் உற்பத்திகள் அடிப்படை உலோகங்கள் என்பன உள்ளடக்கப்படும். இதன் போக்கை நோக்கின், 1977 ல் இருந்து 1988 வரையும் தளம்பல் அடைந்து செல்வதாய் அமையினும் 1977 இன் பின் இது இறக்குமதியில் பெறும் பங்களிப்பு அதிகரித்து வருகின்றது. இதற்கு காரணம் ஊக்குவிப்பு வலயத்தில் உள்ள ஆடை தயாரிப்புக்கான துணி இறக்குமதி அதிகரிக்கின்றமை, கோதுமை தானிய இறக்குமதி அதிகரிக்கின்றமை, இராசயானப் பொருள், வளமாக்கி போன்றவற்றில் இறக்குமதிகளும் அதிகரித்தமை, பெற்றோலிய இறக்குமதி சற்றுக் குறையக் காரணம், உலக சந்தையில் பெற்றோலிய விலை 1986, 87, 88, களில் குறைந்தமை.

C) மூதலீட்டுப் பொருள் தொகுதி:

இதனுள் பொறிகள், இயந்திரம் போக்குவரத்துக் கருவி, கட்டப்பொருள் போன்றவை அடங்கும். இது 1977 ல் இறக்குமதியில் 12% அமைந்தது. ஆனல் 1978 79, 80, ல் சடுதியாக 23%, 24%, 24% என அதிகரிக்க காரணம் 1977 ல் மேற்கொண்ட தாராள மயமாக்கல், தனியார் மயமாக்கல் வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு, துரித மகாவலித் திட்டம் என்பவற்றின் வளர்ச்சியால் கட்டப்பொருள், இயந்திரம், பொறி போக்குவரத்துக் கருவி போன்ற இறக்குமதி அதிகரித்தமை எனினும் 1983 காலங்களிலிருந்து தொடர்ச்சியாகக் குறைந்து வந்து 87, 88 இல் முறையே 18,77 % 17% என வீழ்ச்சியடையக் காரணம் அண்மைக்கால இலங்கையின் பொரளாதார மந்த நிலைகளினால் இவற்றின் இறக்குமதி அளவுகள் வீழ்ச்சியடைந்தமை.

ஜனசக்தி திட்டம்

ஆ. வினிஷியா சுரேந்தினி

வருடம் 13 (வர்த்தகம்)

ஜனசக்தித் திட்டம் அல்லது வறுமைத்தணிப்புத் திட்டம் என்று இன்றைய அரசாங்கத்தால் அறிமுகம் செய்யப்பட்ட இத்திட்டம் அரசாங்கத்தின் ஒரு மூலதார நிகழ்சித் திட்டமாகும் இது இலங்கையின் அரசியல் பொருளாதார சமூக முறைமைகளைப் பாதித்துள்ள அடிப்படைப் பிரச்சனைகளை நாடளாவிய முறையில் அணுக முயலுகின்றது. குறிப்பாக பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு, பணவீக்கம், சென்மதிநிலுவை ஆகிய பொருளாதார அம்சங்கள் மீது அக்கறை கொண்டதாக இத்திட்டம் ஆக்கப்பட்டுள்ளது. வறுமையை நீக்குவதற்கு மட்டுமல்ல இலங்கை வேண்டி நிற்கும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காகவும், மனித வளங்களில் அதிகரித்த முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த வகையிலும் ஜனசக்தி திட்டம் பலன் அளிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.

குடியேற்ற நாட்டு ஆட்சிக் காலத்திலே இலங்கை மக்களிடம் வறுமைக்கு வித்திடப்பட்டதாயினும் இலங்கை பெற்றுக் கொண்ட அரசியல் சுதந்திரம் பொருளாதார சமூக துறைகளில் ஒரு பிரிநிலை கோடாக அமைந்து புதிய மாற்றங்களுக்கும் அணுகு முறைகளுக்கும் இடமளிக்கத் தவறியதன் காரணமாக 1948 - 1989 வரையான காலப் பகுதியே இலங்கையில் வறுமை வளர்த்தெடுக்கப்பட்ட காலம் என கருத்து தெரிவிக்கப்படுகின்றது. முழுமையான வறுமையின் விளைவாக அதன் சமூக அரசியல், பொருளாதார விளைவுகள் கொள்கை வகுப்பாளரின் ஆழமான அக்கறையை ஈர்க்கும் அளவுக்கு பூதாகரமான தோற்றம் பெற்றுள்ளதன் வெளிப்பாடே ஜனசக்தித் திட்டம் எனக் கருதப்படுகின்றன்து. மேலும் திரு சுனில் பஸ்டியன் இத்திட்டம் இன்று வறுமைத் தணிப்பை விட சமூக கொந்தளிப்பை தணிக்கும் ஓர் திட்டமாக கருதப்படலாம் எனக் குறிப்பிட்டதும் இங்கு கருத்திற் கொள்ளத்தக்கது.

வறுமையும் அது தொடர்பான பிரச்சனைகள் காரணமாக பெறுமதி மிக்க மனித வளம் உட்பட ஏனைய வளங்களும் விணடிக்கப்பட்டு வந்தன என்பதும் இது அபிவிருத்தியை கடினப்படுத்தி வருகின்றது என்பதும் நாம் அனுபவ ரீதியாக கண்ட உண்மைகள். எனவே திறமையைப் பெருக்கி பொருளாதார வளர்ச்சியை துரிதப் படுத்த வேண்டுமெனில் இலங்கை சில அமைப்பு முறையான சீராக்கங்களை மேற்கொண்டே தீர வேண்டும் எனினும் இவ் வழிமுறைகளில் வருமான அதிகரிப்பு, வேலை வாய்ப்பு பெருக்கம் ஆகியன ஏற்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கும் மாற்றமுறும் நிலவரங்களுக்கேற்ப தமது வருமானம் ஈட்டும் மூலங்களை மாற்றியமைக்கும் தகைமையை தனவந்தரும் உயர் மத்திய வகுப்பினரும் கொண்டிருப்பர். ஆனால் ஏழைகளும், கீழ் மத்திய வகுப்பினரும் இச்சக்தியைப் பெற்றிருப்பதில்லை. எனவே இச் சீராக்கங்களின் விளைவாக இவர்களின் வாழ்க்கை மட்டங்கள் பாதிப்புறுகின்றன

ஆகவே இவர்கள் இத் தாக்கங்களிலிருந்து பாதிக்கப்பட வேண்டும் இலங்கையில் இங்ஙனம் பாதிப்புறக் கூடியோரின் தொகை நாட்டுமக்களிற் பெருந்தொகையினராக இருக்கின்றது. எனவே அமைப்பு முறைச் சீராக்கல் என்ற சந்தர்ப்பத்தில் இத்தகையோருக்கு உதவும் ஏற்பாடாக ஜனசக்தித் திட்டம் அமைய வேண்டுமென எதிர்பார்க்கப் பட்டது.

சத்துணவின்மை சுகாதாரக் கேடு சமூகரீதியான பின்னடைவு என்பன காரணமாக உற்பத்தித்திறனை இழந்து நிற்கும் நாட்டு மக்களுக்கு உணவு, உடை போன்ற அடிப்படைத் தேவைகளை மட்டுமன்றி நிலையான வேலை வாய்ப்பினையும், வருமானங்களையும் வழங்கும் வகையில் ஒழுங்கு படுத்தப்பட்ட துறை ஒன்று விரிவு அடையும் வரை வினைத்திறன் மிக்க சுய வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரும் வகையில் ஜனசக்தித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

ஜனசக்தித் திட்டம் வறிய வறிய குடும்பங்கள், அவற்றைக் கொண்ட குழுக்கள், குழுக்களைக் கொண்ட சமூகம் என்ற படிமுறையினை அச்சாணியாகக் கொண்டு அபிவிருத்தி செய்முறையை அறிமுகப் படுத்தியுள்ளது. இவர்களின் திறமைகளை உற்பத்தி நோக்கில் திருப்பும் போது வறுமை தணிக்கப்படுவதோடு அபிவிருத்தியும் மேம்படுத்தப்படலாம் எனக் கருதுகின்றது. மனிதனுக்கும் அவனது வாழ்க்கை நிலைக்கும் அந்தஸ்து அளிக்க விரும்புகின்றது. இலங்கையரசினால் முன்னர் முன் வைக்கப்பட்ட நலன்புரி திட்டங்களின் வரிசையில் இதுவுமொன்று என சிலர் கருதினும் அவற்றிற்கும் இதற்குமிடையே நாம் ஒரு தெளிவான வேறுபாட்டைக் காணக் கூடியதாக உள்ளது. இது ஒரு தனி செயல்முறையாகவன்றி முழு அரசு பொறிமுறையும் ஜனசக்தி திட்டத்துடன் இணைந்திருப்பதை காண முடிகிறது. குக்கிராமம், கிராமம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, மாவட்டம் தேசிய நிலை என்ற நிலையாக வளர்ந்து சென்று கொள்கைத்திட்டமிடல் அமைச்சு என்ற வகையில் நாட்டின் பிரதம நிர்வாகியான ஜனாதிபதியுடன் இணைகின்றது. எல்லா அமைச்சுக்களிலும் எல்லாப்பகுதியிலும் இது முன்னெடுக்கப்பட வேண்டியதாக உள்ளது.

ஜனசக்தி திட்டத்தின் செயற்பாட்டுடன் ஒரு செயற்பாட்டுக்கென பாராளுமன்ற கூட்டம் இயற்றப்பட்டுள்ளது, இதனை செயல்படுத்துவதற்காக ஆணையாளராக திரு. சுசில் சிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். முன்னர் இடம் பெற்ற நலன்புரி திட்டங்களில் இடம் பெற்ற பணிக் குழு முறையிலான தெரிவு முறைக்குப்பதிலாக அப்பிரதேச மக்களே சுயதிர்வு முறையில் வறிய குடும்பங்களைத் தெரிவு செய்யும் முறை இத்திட்டத்தில் குறிப்பிடக் கூடிய தொரு அம்சமாகும். வருமான ரீதியாக மாதம் 700 /= குறைந்த வருமானமுடைய குடும்பங்கள் வறிய குடும்பங்களாக தெரிவு செய்யப்படும். இந்த வகையில் உணவு முத்திரை பெற்றோரிடம் இருந்து 181749 ஜனசக்தி குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டன.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உரித்துக் கொடைகளையும் முதலீட்டு கூறொன்றையும் உள்ளடக்கி மாதாந்தம் 2500 /= வழங்குவதன் மூலம் இரண்டாண்டு கெடுக்குள் வறுமையை ஒட்டுவதே ஜனசக்தித் திட்டத்தின் குறிக்கோளாகும். இதில் 1458 /= நுகர்வுக் கூறாகவும், 1042 /= முதலீட்டுக் கூறாகவும் அமையும். ஒவ்வொரு வறிய குடும்பத்தையும் நன்கு திட்டமிட்ட அபிவிருத்தி ஒழுங்

குத் தளமொன்றில் 2500 /= பெறுமதியான வளங்களுக்கு உரிமையாக்கும் முறை யாகவே இது உள்ளது எனலாம். முதலீட்டு கூறு ஒவ்வொரு வறிய குடும்பத்தினதும் கணவன் மனைவி பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்பு க/கு ஒன்றில் வைப் புச் செய்யப்படும். இது இரண்டாண்டுகளில் 25,000 = திரளும் குடும்ப விருப்பத் திற்கேற்ப வருவாய் உழைக்கும் முதலீட்டுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்படும் போது வங்கியிடமிருந்து ஜனசக்தி வைப்பை இத்தொகையினை பிணையாகவும் முற்பணமாக வும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் வங்கியின் கண்ணோட்டத்தில் முதலீட்டுத் திட்டம் வளமுள்ளது எனக் காணப்பட்டால் இத்தொகையின் மும்மடங்குக்குச் சம மான தொகைவரை மேலதிக நிதியிட்டமாக பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் உண்டு அத்துடன் ஜனசக்தி திட்ட நலன்களை பெறுவோர் ஒன்றிணைந்து தமது மூலதனத்தை ஒன்று சேர்த்து பெரிய முயற்சி ஒன்றினை ஆரம்பிக்கவும் முடியும். இதற்கான வழி காட்டல்களை வழங்க பல நிறுவனங்கள் தயார் நிலையில் இருக்க வேண்டுமென இத் திட்டம் எதிர்பார்க்கப்படுகின்றது.

நுகர்வுக் கூறான 1458 /= இரு பிரிவாக பிரிக்கப்படுகின்றது. ஒன்று 1000 /= ஆகவும், மற்றது 458 /= இருக்கும். 1000 /= க்கு ஜனசவியபத்த (Janasaviapatha) என்ற கூப்பன் வடிவம் வழங்கப்படும், உள்ளூர் கூட்டுறவுக் கடையில் ஜனசக்திப் பொருட்கூடையில் இருந்து 1000 /= க்கான பொருள் நுகர்வை அவ் ஜனசக்தி குடும் பம் செய்ய வேண்டும். மிகுதி 458/ = வும் சொந்த விருப்பப்படி நுகர்வுத் தேவை களுக்கோ அன்றி சேமிப்புக்கோ பயன்படுத்தலாம். அல்லது அதில் ஒரு பகுதியை நுகர்வாகவும் வேறுபகுதியை சேமிப்பாகவும் பயன்படுத்தலாம். அல்லது ஜனசக்தி குடும்பம் விரும்பின் தமது நுகர்வுக் கூறின் ஒரு பகுதியை ஓராண்டின் பின் வட்டி யுடன் பணமாக பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளும் இத்திட்டத்தில் காணப் படுகின்றன. நுகர்வு நேரடியாக இல்லாது உற்பத்தி பயிற்சி என்பதன் ஊடாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கூறின் சிறப்பான செயலாற் றத்திலே ஜனசக்தி திட்டத்தில் வெற்றி தங்கியுள்ளது. ஜனசக்தி பொருட்கூடைக் கான பொருட்களின் உற்பத்தியில் இவ் ஜனசக்தி குடும்பங்கள் பங்குபற்ற வேண்டு மென எதிர்பார்க்கப்படுகின்றது. Saragam Program என்ற உற்பத்தியுடன் தொடர் புடைய திட்டத்தில் மாதத்தில் 24 நாட்களுக்கு ஜனசக்தி குடும்பம் தனது ஊழி யத்தை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் உற்பத்தியின் நன்மை அவர்களுக்கு சொந்தமாக்கப்படும்.

தற்போது உணவு முத்திரை பெறும் 2.3 மில்லியன் பேர் ஜனசக்தி ஆரம்ப உரிமைப் பத்திரத்தைப் பெற்றுள்ளனர். இதுமுன்னர் கூறப்பட்ட ஜனசவியத்தவாக கருதப்படலாகாது. திட்டமிட்ட பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில் நலவுரித் தாரிகள் தெரிவு செய்யப்பட்ட பின்பே அது வழங்கப்படும். வறியோரில் வறி யோரே நலன் பெறுவோரில் முதன்மை பெறுவோராக இருக்கும் வகையில் தெரிவு நடைமுறை அமைந்திருத்தல் வேண்டும் என குறிப்பிடபட்டுள்ளது. நாட்டில் காணப்படும் மொத்தம் 273 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் குறைந்தது 28ல் ஆவது (குறிப்பாக 25 நிர்வாக மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில்) உற்பத் தியுடன் தொடர்புடைய Saragam Program ஆரம்பிக்கப்பட வேண்டுமென இத் திட்டம் எதிர்பாக்கின்றது. 1990 ம் ஆண்டு ஜனவரியில் இது படிப்படியாக 273 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டுமெனவும் எதிர் பார்க்கப்படுகின்றது.

இத்திட்டத்தினால் ஏற்படக்கூடிய பொருளியல் விளைவுகள் இத்திட்டத்திற்கு நிதியளிப்பு பெறும் வகையில் தங்கியுள்ளது. பாதீட்டின் வாயிலாக மேற்கொள்ளும் ஏனைய செலவுகளை குறைத்தல், புதிய வருமான வழிகளை கைக்கொள்ளல். வங்கியற்ற துறையினரிடமிருந்து கடன் பெறல் வங்கித் துறையினரிடமிருந்து கடன் பெறல் பிறநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ளல் என்ற ஐந்து வழிமுறைகள் ஊடாக நிதியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இவற்றுள் பாதீட்டு செலவின் சேமிப்பும், வங்கியல்லாத் துறையினரிடமிருந்து கடன் பெறலும் மட்டுமே பணவீக்கத் தாக்கத்தை ஏற்படுத்த மாட்டா. ஏனையவை கேள்வி விரிவுக்கேற்ப உள்ளூர் உற்பத்தி அதிகரிக்காத பட்சத்தில் அல்லது காலம் தாழ்த்தும் போது ஜனசக்தித்திட்டத்தின் நன்மைகளை பணவீக்கம் உறிஞ்சிவிட வழிவகுப்பனவாக அமையும்.

எவ்வாறெனினும் ஜனசக்தித்திட்டம் நிவாரணமளிக்கும் திட்டங்களுள் மிகச் சிக்கலான வடிவைக் கொண்ட ஒன்றாக உள்ளது. மனிதவளம் முக்கியத்துவம் பெற்றதோடு வறுமை ஒழிப்பும் அதன்மூலம் அபிவிருத்தியை கொணரும் வகையில் ஒரு அபிவிருத்தித் திட்டமாகவும் இது காணப்படுகின்றது. நுகர்வை உற்பத்தியின் வெளியீட்டுடன் இணைக்க இத்திட்டம் முற்படுகின்றது மறுபுறம் வறிய மக்கள் குறிப்பிட்டதொரு தொகை விளங்கலுக்கு உரிமையாளராக்க விரும்புகின்றது.

மேலும் இத்திட்டத்தின் வெற்றி அதன் செயலாகத்தின் வேகத்திலும் தங்கியுள்ளது. அரசியல் சமூக நிலைகாரணமாக செயறபடுத்துவதிலுள்ள தாமதம் குறிப்பாக உற்பத்திதுறை வளர்ச்சியுடன் இணைந்த நுகர்வுக்குப் பதிலாக நுகர்வுக்கூறை மட்டும் வழங்கி வருமாயின் மறுபகிர்வு, வறுமை ஒழிப்பு, என்பதற்குப் பதிலாக வறுமையை மறுபகிர்வு செய்து நாட்டின் வாழ்க்கை மட்டத்தை மேலும் தாழ்த்துவதாகவே இது அமைய முடியும்.

The Most Economical Scooter

L M L VESPA

V. K. RAJARATNAM
95, STANLEY ROAD
JAFFNA.

பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டத்தின் பொருளாதார விளைவுகள்

இ. அனற் பிறேமலதா
வருடம் 1ll (வர்த்தகம்)

"இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் பிரகாரம் தேசிய வாழ்வின் அமைவுகளுக்கெல்லாம் சமூக, பொருளாதார, அரசியல் நீதியால் வழிநடத்தப்படுவனவாக அமைந்த ஒரு சமூக ஒழுங்கு முறையைச் செவ்வையான முறையில் ஆக்கிப் பாதுகாப்பதும், மக்களின் சேமநலனை மேம்படுத்துவதும், போதிய உணவு, உடை, வீட்டுவசதி, வாழ்க்கை நிலைமைகளில் தொடர்ச்சியான சீர்திருத்தம் ஓய்வு நேரத்தை முழுமையாக துய்தல், சமூக கலாச்சார வாய்ப்புகள் என்பன உட்பட எல்லா பிரஜைகளும், அவர்களது குடும்பத்தினரும் போதியளவு வாழ்க்கைத் தரத்தை அனுபவித்தல்" என்ற இந்த அரச கொள்கைக் கோட்பாட்டு நெறியினை மனதிற்கொண்டு, எமது புதிய ஜனாதிபதி மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் பொருட்டு சில திட்டங்களை அமுலுக்கு கொண்டு வந்துள்ளார். அத் திட்டங்களில் வறுமையை ஒழிப்பதற்கான ஜனசவியத்திட்டமும் அதனுடன் இணைந்த ஒன்றான மாணவர்களுக்கான இலவச மதியஉணவுத்திட்டமும் முக்கியம்பெற்றுள்ளன

அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும், வறுமையை நீக்குவதற்கும் மனித வளங்களில் அதிக முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்ற உணர்வின் பெயரில் இலங்கை அரசாங்கத்தினால் இன்றைய மூலதார அபிவிருத்தித் திட்டங்கள் வகைப் படுத்தப்படுகின்றது. இந்த வகையிலேயே "ஜனசவிய" திட்டம் உதயமாகியது. இத்திட்டத்தின் சிறப்பியல்பு யாதெனில், நாட்டின் வறுமையை நீக்குவது எப்படி என்ற கேள்விக்குப் பல கோணங்களில் இருந்தும் ஆராய்ந்து அவற்றின் மூலம் தீர்வு காண்பதாகும். இது ஒரு தனி நிலையாக அன்றி, அரசின் ஏனைய எல்லா செயல்முறைகளுடன் இணைந்ததாக உள்ளது. இந்த வகையில் தான், மாணவர் மத்தியில் உணவின்மையையும், போஷாக்கின்மையையும் நீக்கி, அவர்களுக்கு சத் துணவு வழங்கும் திட்டமாக, இலவச மதிய உணவுத்திட்டம் 1989 ம் ஆண்டு அரசினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டமானது 1940 ம் ஆண்டில் முதல் முறையாக இலவசக் கல்வித்திட்டத்துடன் ஆரம்பமாகவேண்டிய ஓர் திட்ட மாகும். இத்திட்டம் அக்கால அரசியல், பொருளாதார, நெருக்கடிகள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் சில காலத்திற்கு மாணவர்களுக்கு பாலும், பணிசும் மதிய உணவாக கொடுக்கப்பட்டது. இது சத்துணவாக அமையாததன் காரணத்தினாலும், பலஊழல்களினாலும் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெறவில்லை இதனால் இத்திட்டமும் கைவிடப்பட்டது. இக்குறைகளை எல்லாம் நிவர்த்திக்கும் முகமாக 1989 ம்ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இலவசமதிய உணவுத்திட்டம்

இத்திட்டத்தினால் நாட்டின் 32 கல்வி மாவட்டங்களைச் சேர்ந்த சகல சிறிய பெரிய, அரச, அரசநன்கொடை பெறும் பாடசாலைகளிலும், கல்விபயிலும் மாணவர்கள் பயன் அடைந்து வருகின்றனர். ஒரு மாணவனுக்கு 800 கிராம் கலோரி பெறுமானம் கொண்ட 3 ரூபா பெறுமதியான உணவு ஒருநாளுக்கு வழங்கப்படுகின்றது. இத்திட்டத்திற்கு ஒருநாள் செலவாக அரசாங்கம் ஆறுகோடி ரூபாவைச் செலவிடுகின்றது. இத்திட்டம் பள்ளிச்சிறார்களுக்கு நல்லதொரு ஊட்டம் மிகு சத்துணவை வழங்குவதோடு, அப்பிரதேச மக்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் இலாபம் பெறவும் ஊக்கமளிக்கின்றது.

இத்திட்டம் தொடர்பாக சில பொதுவான அம்சங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. அதாவது அவ்வப் பிரதேசங்களில் கிடைக்கக்கூடிய உணவுப் பண்டங்களாகவும், உணவுத் தரமும், சுத்தமும், ஊட்டமும் நிறைந்ததாகவும் அமைய வேண்டும் என்பதாகும்,

அத்துடன் பாடசாலை ரீதியில் இது தொடர்பான நிர்வாகம் அமையும் எனவும், இத்திட்டத்திற்குப் பாடசாலை அதிபரே முழு நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருப்பார். இவருக்கு உதவியாக ஐந்து பேர் கொண்ட ஓர் குழுவை நியமித்து சகல நிர்வாகங்களும் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் மதிய உணவிற்கு எனத் தனியான காசேடு, பொருட்பதிவேடு, சிட்டைகள், கணக்கறிக்கைகள், உறுதிச் சீட்டுக்கள் பற்றுச் சீட்டுகள்யாவும் பேணப்பட்டு, இத்திட்டம் தொடர்பான திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். அத்துடன் ஒரு மாதத்திற்கான சராசரி செலவும் கணிப்பிடப்பட வேண்டும். இதன்படி 1600 மாணவர்களைக் கொண்ட ஒரு பாடசாலைக்கு ஒரு மாதத்திற்கான சராசரி செலவாக 98,000 ரூபா ஒதுக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் விளைவுகளைப் பொளாதார ரீதியில் ஆராய்வோமேயானால் இலங்கைப் பொருளாதாரத்தில் கிராமிய விவசாயத்துறை உற்பத்திப் பொருட்களுக்கு புதிய கேள்வியை ஏற்படுத்தும் ஓர் வாய்ப்பினைப் பெற்றுள்ளது. இவ்வுற்பத்தி விரிவு வேலைவாய்ப்பின்றி இருக்கும் பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதாயிற்று, இதுகாலம் வரை கிராமிய விவசாயத் துறையின் உற்பத்திகள் சந்தை வாய்ப்புகளைப் பெறுவதில் பல இடர்பாடுகளை எதிர்நோக்கி வந்துள்ளது. இத்திட்டத்தினால் இது தவிர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடக் கூடியதொரு உண்மையாகும். ஏனெனில்கிராமிய மட்டத்திலே காணப்படும் பாடசாலைகள் அவ்வப் பிரதேசங்களிலே தமது தேவைக்கான நுகர்வினை மேற்கொள்கின்றன. குறிப்பாக பயறு, உழுந்து, கௌப்பி சோயா, அரிசி, கிழங்குவகை, பலாக்கொட்டை, வெங்காயம், வாழைப்பழம், தேங்காய், காய்கறிகள் போன்றவற்றிற்கான புதிய கேள்வியை ஏற்படுத்துவதாக இம் மதிய உணவுத்திட்டம் அமைந்துள்ளது. அத்துடன் மீன், இறால், முட்டை, பால் என்பனவும் சத்துணவாகக் கொள்ளப்படுவதால் இவற்றிற்கான கேள்வியும் அதிகரித்துள்ளது.

இத்திட்டத்தினால் இப்பொருட்களுக்கு தோன்றியுள்ள புதிய கேள்வி பரிமாற்று நடவடிக்கைகளையும் விரிவு படுத்தியுள்ளது. அத்தோடு புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும், புதிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இததிட்டம் ஏதுவாக அமைந்துள்ளது, மொத்த தேசிய வருமான அடிப்படையில் மொத்த தேசிய உற்பத்தி சமன் மொத்த தேசிய செலவு என்ற கூற்றின்படி ஆறுகோடி ரூபா செலவாகும் பட்சத்தில் ஆறுகோடி ரூபா பெறுமதியான உற்பத்தியும் நடைபெறுகின்றது.

மதிய உணவுத் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டதால் இதுவரை பயன்படுத்தப் படாமல் இருந்த உற்பத்திக் காரணிகள் பயன்படுத்தப்படவும், புதிய உணவுப்பயிர் களைப் பயிரிடத் தலைப்படவும், புதிய பண்ணை முயற்சிகளில் ஈடுபடவும், நாட்டின் மொத்த உற்பத்தியை அதிகரிப்பதற்கும் இத்திட்டம் வகைசெய்துள்ளது. இதனால் விரணாகிப் போய்க்கொண்டிருந்த நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பன தமது இலக்கை எய்துவதற்கு இத்திட்டம் துணைபோகின்றது. இதனால் நிலத்தில் கூடிய உற் பத்திகள் நிகழ்கின்றன. அதிக முயற்சியாளர்கள், தோன்றுவார்கள் குறிப்பாக தோன்றியுள்ள புதிய கேள்விகேற்ப பாத்திர உற்பத்தி, விறகு உற்பத்தி. என்பவற் றிற்கான முயற்சிகள் தோற்றுவிக்கப்படவும், நாட்டின் பொருளாதாரத்தில் குறிப் பிட்ட ஓர் மாற்றத்தை ஏற்படுத்தவும் இத்திட்டம் ஊக்கமளிக்கின்றது,

போஷாக்கு உணவுத்திட்டம் என்ற வகையில் அறிமுகப்படுத்தபட்ட இத்திட்ட புரதச்சத்து நிறைந்த, அதே சமயம் எம் நாட்டவரால் புறக்கணிக்கப்பட்ட சில உணவுப் பொருட்களை உண்ணும் பழக்கத்திற்கு சமுதாயம் ஈர்க்கப்பட்டுள்ளது, எதிர்கால மனித வளமான, பாடசாலை மாணவர்களுக்கு உணவைப் போஷாக்கிற் காக வழங்குவதன் மூலம், எதிர்கால உற்பத்தி நிலைமைகளில் ஆற்றல் மிகுந்த ஊழியத்தைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புக் கிட்டுமெனவும், உடல், உள ரீதியான மனிதவளம் மேம்படுத்தப்படும் எனவும் உற்பத்தி ஆற்றல் அதிகரிக்கவும், ஆயுட்காலம் அதிகரிக்கவும், இறப்பு வீதம் குறைவடைந்து நாட்டின் அபிவிருத்தி குறிப்பிட்ட ஒருபடி முன்னேற்றத்திற்கும் இத்திட்டம் உதவியாக உள்ளது. அத்துடன் ஏழை பணக்காரன் என்ற பேதமின்றி எல்லோரும் உணவுரீதியில் சமசந்தர்ப்பம் பெற்று சகல மாணவர்களும் உற்சாகமாக கல்வி கற்று எதிர்காலநலனை எய்தவும் இத்திட் டம் துணை செய்கின்றது.

மேற்கூறிய பொருளாதார மாற்றங்களின் படி நாட்டின் பொருளாதாரம் பாரிய எதிர்பார்க்கையை அடையாவிடினும் குறிப்பிட்ட ஓரளவு சாதகமான விளை வுகளை எதிர்நோக்கவும் இத்திட்டம் வழிவகுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்

இத்திட்டத்தின் மூலம் பொருளாதார துறை மட்டுமல்ல, சமுகநலத் துறை களும் பெரும் விருத்தி அடைந்துள்ளன. மாணவர்களிற்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி பாகுபாடின்றி ஒரே மனப்பான்மை கொண்டவர்களாகத் திகழவும். ஒற்றுமையான சமுதாயமாகவும் வாழ இத்திட்டம் வழி வகுத்துள்ளது. அத்துடன் மாணவர் பாடசாலையில் தினமும் செலவிடும் சிற்றுண்டிகளுக்கான செலவும் இப்போது மீதப்படுத்தப் படுகின்றது. இதனால் பள்ளிச் சிறார்கள் சிறந்த சேமிப்புப் பழக்கமுள் ளவர்களாகத் திகழவும் இது உதவுகின்றது. எதிர் காலத்தில் ஆரோக்கியமான சமு தாயம் உருவாகவும் நோயின்றி சுகதேகிகள் என்ற நிலையில் வாழவும், வைத்திய செலவுகளை மீதப்படுத்தவும் இத்திட்டம் வகை செய்கின்றது.

எனினும் இத்திட்டத்தினால் ஒரு சில பாதகமான நிலைமைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதாவது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தினால் புதிதாக, அதிகரித்துள்ள கேள்விக்கேற்ப உற்பத்தி அதிகரிக்கப்படாத விடத்து. அஃது உணவுப் பொருட்களுக்கான விலைகளைக் கூர்மையாக அதிகரிக்கச் செய்வதாக உள்ளது. இது நாட்டின் பணவீக்க நிலையைத் தோற்றுவிக்கலாம். அத்துடன் நாட்டின் வாழ்க்கைச் செலவு உயர்ந்து, வாழ்க்கைத்தரம் பாதிக்கப்படும்.

மதிய உணவு வழங்கும் திட்டத்தில் வழங்கப்படும் உணவு, இறக்குமதிப் பொருட்களில் இருந்து தயாரிக்கப்படுமிடத்து அந்நடவடிக்கையானது நாட்டின் இறக்குமதிச் செலவினை அதிகரிக்கும், இதனால் நாடு சென்மதி நிலுவையில் பாதகமான ஓர் விளைவை எதிர்நோக்க வேண்டி வரும், குறிப்பாக பசுப்பாலின் நிரம்பல் குறைவினால், பால்மாக்களை உபயோகிப்பதாலும், கடலை' கோதுமை மாப்பண்டங்கள் வழங்குவதாலும் இறக்குமதிப் பொருட்களின் நுகர்வு அதிகரிக்சின்றது, எனினும் தற்போது எம் நாடு எதிர்நோக்கியுள்ள இக்கட்டான இக்கால கட்டத்தில் ஒரு நாளுக்கு ஆறுகோடி ரூபாவினை சேவை மனப்பான்மையோடு ஒதுக்குவது பொருளாதார ரீதியில் தற்போதைய காலகட்டத்தில் மறுக்கப்பட வேண்டியதொன்றாகும் அத்துடன் மாணவர்களின் உணவற்ற ஒரு நிலை இது தொடர்பான வீண் விரயங்களை ஏற்படுத்தும் போது தேவையற்ற விடயமாகவே இருக்கும். அத்துடன் ஆறு கோடி ரூபாவை ஒரு முதலீட்டில், அதனால் பலர் கூடுதலான வேலைவாய்ப்பை பெறுவதோடு பெருமளவு இலாபத்தையும் பெற்றுக் கொள்ளலாம் என்பது இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியது ஒன்றாகும்.

✻ கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் முயற்சிகளில் 1988 இறுதிவரையில் 54626 பேர் வேலை வாய்ப்பை பெற்றனர். இவ் ஆண்டில் ஆணைக்குழுவின் தொழில் முயற்சிகளின் மொத்த ஏற்றுமதி வரவுகள் 9546 மில்லியன் ரூபாவாகும்

யாழ். நகரில் ஜவுளி சமுத்திரம் சீமாட்டி

நாளுக்கோர் புதுமை நாடுவது உண்மை
இவற்றை அளிப்பதுதான்

சீமாட்டி

எம்மிடம் திருமண வைபவங்களுக்கு ஏற்ற

✻ கூறைச் சேலைகள்
✻ பட்டு, வேட்டி சால்வைகள்
காஞ்சிபுரம், ஆரணி
தஞ்சூர், மணிப்புரி
✻ சாறிகள்
✻ பிளவுஸ் பீஸ்
✻ றெடிமேட் ஆடைகள்
✻ சேட்டிங் சூட்டிங்

எம்மிடம் கிடைக்கும்.

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

பொருளாதார அமைப்பு முறைகள்

மை. ரேஸ்மேரி
வருடம் 12 (வர்த்தகம்)

அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளான என்ன பொருளை, எந்தளவு, எப்படி, யாருக்காக உற்பத்தி செய்தல் என்பன எல்லாச் சமூகங்களுக்கும் பொதுவானவையாக காணப்படுகின்றது. அதாவது பெருகிவரும் மனிதத்தேவைகளோடு வரையறுக்கப்பட்ட வளங்களை ஒப்பீடு செய்யும் போது பற்றுக்குறை ஏற்படுகின்றது. இதன் காரணமாக அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் உருவாகின்றன. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் எல்லாச் சமூகங்களுக்கும் பொதுவாகக் காணப்பட்டாலும் எல்லாச் சமூகங்களும் இவற்றைத் தீர்ப்பதற்கு ஒரே முறையில் தீர்வு காண்பது இல்லை. தீர்வு முறையானது சமூகங்களுக்கு சமூகம் வேறுபட்டுக் காணப்படும். இவ்வாறு அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஒவ்வொரு சமூகங்களும் கையாளும் வழிமுறையின் அடிப்படையிலேயே வேறுபட்ட பொருளாதார முறைமைகள் தோன்றுகின்றன.

மனித வரலாற்றின் ஆரம்ப காலகட்டங்களில் சமூகங்களுடையே சுதந்திரப் பொருளாதார முறைமை நிலவியது. ஆரம்ப காலகட்டத்தில் சமூகத்தின் உறுப்பினன் என்ற முறையில் மனிதன் தன் கடமைகளைச் செய்தபோது, மனித இனத்தின் பரஸ்பர நன்மைக்காகவே அவன் தன் கடமைகளைச் செய்தான். இத்தகைய பொருளாதாரத்தில் பொருளாதார, சமூகரீதியான ஏற்றத்தாழ்வுகள் இருக்கவில்லை. இச் சமூகத்தின் அடிப்படை உற்பத்திக்காரணிகள் யாவும் கூட்டுரிமையாக பொது நன்மைக்காக பயன்படுத்தப்பட்டன. அனைத்து மக்களும் சமமாக மதிக்கப்பட்டு, சமத்துவமான நிலையில் இயங்கி உற்பத்திகளை மேற் கொண்டனர், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை தம்மிடையே சமமாகப் பங்கீடு செய்துகொண்டனர். இங்கு வளங்களைத் தங்கள் உடமையாகக் கொண்டு அது காரணமாக தொழிலாளர் உழைப்பை சுரண்டுவதற்கு ஒரு குழுவினர் இராமையால் தற்காலக் கருத்துப்படி அங்கு "வர்க்க" வேறுபாடு நிலவவில்லை. அச்சமூகம் சுரண்டல் இல்லாத ஒரு சமூகமாகக் காணப்பட்டது. இத்தகைய தன்மைகளைக் கொண்டதாக எதுவித கட்டுபாடும் இன்றி சமத்துவமாகவும் சுதந்திரமாகவும் இயங்கி வந்த சமூகமே சுதந்திரப் பொருளாதார முறைமை என அழைக்கப்பட்டது.

காலப்போக்கில் உற்பத்திக்குரிய சீரான துணைக்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டமையோடும், விவசாயத்தினதும் விலங்கு வேளாண்மையினதும் அபிவிருத்தியோடும் உற்பத்தித்துறை வளர்ச்சியடைந்தது; உற்பத்தி செயற்பாங்குகள் திட்டமுறையாக்கப்பட்டன. அதே சமயம் சமுதாயம் முதிர்ச்சி நிலையை எய்தியது. இவற்றின் காரணமாக சுதந்திரப் பொருளாதார முறைமை மாற்றமடையத் தொடங்கியது. இதன் காரணமாக அடிமைப் பொருளாதாரம் உருவாகத் தொடங்கியது.

இம்முறைமையில் சமூகங்களுக்குத் தலைவனாக அரசன் தோன்றினான். இங்கு தொழிற்பிரிப்பும், விசேட திறமைகளின் விருத்தியும் ஏற்படத் தொடங்கியது. முன்னைய பொருளாதாரத்தில் காணப்பட்ட சமூக உடைமைகள் அனைத்தும் அரசு உடைமைகளாக மாற்றப்பட்டன. அரசு உற்பத்தி முயற்சிகளுக்கு வேண்டிய தொழிலாளர்களை அடிமைகளாகப் பெற்று உற்பத்தி முயற்சிகளை மேற்கொண்டது. இங்கு "வர்க்க" வேறுபாடு நிலவத் தொடங்கியது. தொழிலாளர்கள் சுரண்டப்பட்டனர். மனிதன் மனிதனாலேயே சுரண்டப்படும் முறை உருவாகியது. இவ்வகையில் அடிமை முறையின் தோற்றத்துடன் சமூகம் பல்வேறு வர்க்கங்களாகப் பிரிய ஆரம்பித்தது, உற்பத்திமுறைகள், உற்பத்திக்காக உழைப்பைப் பயன்படுத்தும் வழிகள், சமூகச் செல்வத்திலும் வருமானத்திலும் இருந்து மக்களுக்கு உரித்தாகும் பங்குகள் என்பவற்றுடன் உள்ள தொடர்புகளுக்கேற்ப ஒரு வர்க்கம் மற்றைய வர்க்கத்தினின்று வேறுபடத் தொடங்கியது. இவ்வாறு மனிதர்கள் அடிமைகளாகக் கருதப்பட்டு உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட பொருளாதார முறைமை அடிமைப் பொருளாதாரம் என அழைக்கப்பட்டது.

நாகரீகம் வளர்ச்சியடையத் தொடங்க தமது சரீரம் சம்பந்தப்பட்ட வரையிலே கட்டுப்பாடுகளில் நின்று விடுபட்ட ஒரு வர்க்கத்தினர் படிப்படியாக உருவாகினர். மேலும் வயலிலே மண்கட்டிகளை உடைத்துப் பரப்புவதற்காக இரும்பாலான கொழுதட்டுப் போன்ற பல துணைக்கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டமை காரணமாக, உற்பத்தி முறையில் ஏற்பட்ட மாற்றங்களானவை அடிமைமுறையின் படிப்படியான வீழ்ச்சியை துரிதப்படுத்தின. இதன் காரணமாக நிலமானிய முறைமை தோற்றம் பெற்றது. இப் பொருளாதார முறைமையின் முக்கியகாரணியாக நிலம் காணப்படுகின்றது. நில உடைமையாளன் தனது நிலத்தின் ஒரு பகுதியை குடியானவர்களுக்கு வழங்கிவிட்டு அதற்காக அவர்களிடமிருந்து குறிப்பிட்ட காலத்திற்கு உழைப்பைப் பெற்றுக்கொண்டான். நிலங்களைப் பெற்ற குடியானவர் தமது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவற்றில் உற்பத்தியை மேற்கொண்டனர். மேலும் இம் முறைமையில் மேற்கொள்ளப்பட்ட சிற்றளவு உற்பத்தி முறையின் நோக்கம், தனிப்பட்ட பெருமக்களின் கட்டுப்பாட்டிலிருந்து மாவட்ட சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவது ஆகும். இதன் வழி, நாட்டின் முழுப்பொருளாதாரமும் தன்னிறைவு அடைய பல பிரிவுகளாக வகுக்கப்பட்டன. அத்தகைய ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு பெருமகனின் கட்டுப்பாட்டிலும் கொண்டுவரப்பட்டது. இதன் வழி, சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சியைக் காட்டிலும் மரபின் அடிப்படையிலான ஆட்சியே இங்கு நிலவியது.

காலம் செல்லச் செல்ல விவசாயிகளுக்கிடையேயும் தொழிலாளர்களுக்கிடையேயும் தொழிற்பிரிப்பு உருவாகியது. மானியமுறை வளர்ச்சிபெற உள்நாட்டிலும், சர்வதேசரீதியிலும் வர்த்தகம் வளர்ச்சி பெறத் தொடங்கியது. அத்துடன் நாணய முறையும் வளர்ச்சி பெறத்தொடங்கியது. இச் சமுதாயத்தில் வெவ்வேறு நோக்கங்களைக் கொண்ட பல்வேறு வகுப்பினர் உருவாகினர். நகர்ப்புறங்களில் வாழ்பவர்கள் கிராமப்புறங்களில் வாழ்பவர்களை சுரண்டத் தொடங்கினர். இதனால் முரண்பாடுகள் ஏற்பட்டு மானிய முறைமைப் பொருளாதாரம் வீழ்ச்சியுறத்தொடங்கியது. சந்தைகள் விரிவடையத் தொடங்கியதுடன் பணமும் புழக்கத்திற்கு வர முன்னைய உற்பத்தித் தொடர்புகள் முக்கியமற்றதாகிவிட்டது. சில அன்னியராக்கத்தின் மூலமும், சில நாடுகளில் புரட்சிகள் மூலமும், சிலநாடுகளில் படிப்படியான மாற்றங்கள் மூலமும் மானிய முறைமை மறைந்து அதிலிருந்து தற்கால பொருளாதார முறைமைகள் தோன்றின. தற்கால பொருளாதர முறைமைகளை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

முதலாளித்துவப் பொருளாதார முறைமை:

மானியமுறை பொருளாதாரம் வீழ்ச்சியுற உருவாகிய பொருளாதார முறைமையே முதலாளித்துவ பொருளாதார முறைமை ஆகும். அதாவது பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் தனிப்பட்ட உடமைகளை உரிமையாக்கிக்கொண்ட முதலாளிகளின் ஆதிக்கத்தின் கீழ் அவர்களது கட்டுப்பாட்டில் கூலிக்கு அமர்த்தப் படும் தொழிலாளர்களைக் கொண்டு நடாத்தப்படும் முறையே இதுவாகும்.

1776 ம் ஆண்டு ''அடம்ஸ்மித்'' எனும் பொருளியல் அறிஞரால் வெளியிடப்பட்ட நாடுகளின் செல்வம் எனும் நூலிலுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே இப்பொருளாதார முறைமையின் இயல்புகள் வரையறுக்கப்பட்டன. இதன்படி தனியார் இலாப நோக்கமுடையவர் என்பதால் கூடிய இலாபத்தை பெறும் வகையில் இவர்கள் உற்பத்தியில் ஈடுபடுவார்கள். அதனால் பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் தனியாரினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இதில் அரச தலையீடு இருக்கக் கூடாது எனவும் கூறப்பட்டது. இக்கருத்துக்களை அக்கால அரசுக்கள் ஏற்றன- இவ்வரசுக்களில் பிரதானமாக இங்கிலாந்து இக்கருத்துக்களை கடைப்பிடித்தது.

இம்முறையினால் முதலுடையவனுடைய கட்டுப்பாட்டினுள் முழு உற்பத்திகளும் காணப்பட்டன முதலுடையவர் திறமைமிக்க தொழிலாளர்களை கூலிக்கு அமர்த்தி தேவையை அனுசரித்து உற்பத்திகளை மேற்கொண்டனர். இதனால் தொழிற்பிரிப்பு போட்டிகள், கடன்கள், வங்கிகள், பணப்புழக்கம், சந்தைகள் என்பன தேசிய அடிப்படையில் வளர்ச்சியுறத் தொடங்கியது. இத்தகைய முதலாளித்துவ முறைகளைப் பின்பற்றியும் நாடுகள் அனைத்தும் முதலாளித்துவ முறைமையின் அடிப்படைப் பண்புகளைக் கொண்டிருந்தனவே ஒழிய ஒரே முகமான வளர்ச்சியை அடைந்தன எனக்கூறமுடியாது. இம்முறைமையின் பிரதான பண்புகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

முதலாவதாக இம்முறைமையில் தனியார் சொத்துடைமையே காணப்படுகின்றது. அதாவது தனியார் சொத்துக்களை வைத்திருக்கவும் தாம் விரும்பியவாறு அவற்றை உற்பத்தி முயற்சிகளிலோ அல்லது நுகர்விலோ பயன்படுத்தவும் உரிமை உடயவர்களாக காணப்பட்டனர்.

இரண்டாவதாக இங்கு உற்பத்தியாளர்கள் தனியாராக காணப்படுவதால் இலாப நோக்கமுடையவர்களாக காணப்படுகின்றனர். அதாவது உற்பத்தி நுகர்வு அனைத்தும் தனியார் தெரிவின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும்.

மூன்றாவதாக உற்பத்தி முயற்சிகள் தனியார்வசம் இருப்பினும் சிலபொதுத் தேவைகளை அரசு பூர்த்தி செய்கின்றது. அதாவது பொருளாதார சமூக வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் அரசு ஈடுபடுகின்றது உதாரணம்:- கல்விச்சேவை, சுகாதார சேவை, போக்குவரத்துச் சேவை, நீர்ப்பாசனம்.

நான்காவதாக இப்பொருளாதாரமானது தான் எதிர்நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளை சந்தையில் நிலவும் கேள்வி நிரம்பல்களால் நிர்ணயிக்கப்படும் விலைகளின் அடிப்படையில் அதாவது விலைப்பொறிமுறை மூலம் தீர்க்கப்படுகின்றது.

அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு அடிப்படைக் காரணமாக அதாவது வழிகாட்டியாக விலைகாணப்படுகின்றது. உற்பத்திக் காரணிகளுக்கும், உற்பத்திப் பண்டங்களுக்கும் உள்ள விலைஏற்ற இறக்கங்களைக் கொண்டே எதனை, எவ்வளவு உற்பத்தி செய்தல் என்பது நிர்ணயிக்கப்படுகிறது. உற்பத்தியாளன் இலாப அடிப்படையிலேயே உற்பத்தியினை மேற்கொள்வான். உச்ச இலாபத்தினை உற்பத்தியாளர் பெறவேண்டுமாயின் மிகக்குறைந்த செலவில் உற்பத்தியை செய்யவேண்டும். அத்துடன் மிகக் கூடிய விலையில் விற்பனையை மேற்கொள்ள வேண்டும். இவ்விரண்டு தொழிற்பாடுகளுக்கும் வழிகாட்டியாக விலை தொழிற்படுகின்றது. அத்துடன் வருமான வேறுபாட்டுக்கு இணங்க நுகர்வோர் விலையின் ஊடாகத் தெரிவை மேற்கொள்கின்றனர். தெரிவின் அடிப்படையிலேயே உற்பத்தியும் மேற்கொள்ளப்படுகின்றது. இவை அனைத்திற்கும் விலையே காரணமாக அமைகின்றது. இதனால் தான் "அடம் ஸ்மித்" முதலாளித்துவப் பொருளாதார முறைமையின் கட்புலனாகத் தன்மை விலைப்பொறிமுறை எனக் கூறினார். மேலும் வருமானப் பங்கீட்டுக்கும் விலை மூல காரணியாகக் காணப்படுகின்றது. இவை காரணமாக இப்பொருளாதாரம் விலைப் பொருளாதாரம் எனவும் அழைக்கப்படுகின்றது.

இத்தகைய பொருளாதார முறைமையின் வளர்ச்சிக்கு நுகர்வோர் தெரிவும் தனிமனித சுதந்திரமும் உற்பத்தியாளரிடையே நிலவும் போட்டியும் காரணமாக இருந்தும் இவற்றில் பல குறைபாடுகளும் காணப்பட்டன. சிறப்பாக தனியார் இலாப நோக்கமுள்ளவராக இருப்பதால சமுதாயத் தேவைகளைப் புறக்கணிக்கின்றனர். அவற்றுக்காக சாதனங்களை ஒதுக்கீடு செய்யவில்லை. அத்துடன் ஒரு வர்க்கம் கூடிய இலாபம் பெற மறு வர்க்கம் குறைந்த இலாபம் பெற்றது. இதன் காரணமாக முதலாளி, தொழிலாளி எனும் வர்க்க பேதங்கள் உருவாகியதுடன் முதலாளி வர்க்கத்தினால் தொழிலாளி வர்க்கம் சுரண்டப்படும் நிலையும் உருவாகியது. மேலும் தனியாரது இலாப நோக்கம் சமூக விரோத நடவடிக்கைகளுக்கு வழிவகுப்பதாகக் காணப்பட்டது இதன் காரணமாக பொருளாதாரத்தில் பணவீக்கம் ஏற்படத் தொடங்கியது. இப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி உறுதியாக வைத்திருக்கவும், வளர்ச்சியை ஏற்படுத்தவும் அரச நடவடிக்கை இங்கு இன்றியமையாததாகக் காணப்பட்டது.

சமவுடமை அல்லது சோசலிசப் பொருளாதார முறைமை:

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாகத் தோன்றியதே சமவுடமைப் பொருளாதார முறைமை ஆகும்., இது ஒரு சமூக அரசியல் பொருளாதார மாற்றமாகும், அதாவது உற்பத்தி வளங்களை தேசிய மயமாகக் கொண்ட அரசு திட்டமிட்ட அடிப்படையில் உற்பத்தியில் ஈடுபட்டு பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் ஒரு முறையாக இது காணப்பட்டது. இம் மாற்றத்திற்கு காக்ஸ், ஏஞ்ஜெல்ஸ், லெனின், ஸ்டாலின் போன்றவர்கள் முக்கியம் பெறுகின்றனர். இவர்களுள் கால்மாக்ஸ் என்பவரே இப் பொருளாதார முறைமைக்கு முதன் முதலில் வித்திட்டவர் ஆவார். இவர் தனது மூலதனம் எனும் நூலில் முதலாளித்துவப் பொருளாதார முறைமை பிழையென்றும் இது பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது என்றும் கூறினார். இதற்கு தனியார் சொத்துடமையே காரணம் எனவும் கூறினார். எனவே தனியார் சொத்துடமைகள் அனைத்தும் அரச உடமைகளாக மாற்றப்பட வேண்டும் எனவும், அரசே உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கருத்துக்களை முன்வைத்தனர். இதன்

காரணமாக 1917ம் ஆண்டு ஒக்டோபரில் ஏற்பட்ட ரஷ்யாவில் புரட்சி காரணமாக முதலாவது சமவுடமைப் பொருளாதாரம் அங்கு தோன்றியது. சமவுடமை பொருளாதார முறைமையின் பிரதான பண்புகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

முதலாவதாக அடிப்படை உற்பத்தி வளங்கள் அனைத்தும் சமூகத்தின் சார்பில் அரச உடமையாக அதாவது சமூக உடமையாக இருத்தல் வேண்டும்.

இரண்டாவதாக இப் பொருளாதாரத்தின் உற்பத்திகள் சேவை நோக்கம் கொண்டவையாக காணப்படுதல் வேண்டும்.

மூன்றாவதாக இப் பொருளாதாரத்தின் உற்பத்தி முயற்சிகள் அனைத்தும் அரசின் வசம் காணப்படும். அதாவது அரச முயற்சி காணப்படுவதுடன் உழைப்புக்கு ஏற்ப நாட்டு வருமானம் அனைவர் மத்தியிலும் சமமாகப் பங்கிடப்படும்.

நான்காவதாக இப்பொருளாதாரம் எதிர் நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை இந்நாடுகளில் அதிகாரிகள், நிபுணர்கள் போன்றோரை உள்ளடக்கிய ஒரு திட்டமிடல் குழு மூலம் தீர்க்கப்படுகிறது. அதாவது மத்திய திட்டமிடல் முறையின் கீழ் தீர்க்கப்படுகின்றது.

இம்முறைமையில் உற்பத்திக் காரணிகள் சமூகத்தின் சார்பில் அரச உடமையாகக் காணப்படினும் தனியார் சொத்துடமை இல்லையெனக் கூறமுடியாது. மிகக் குறைந்தளவு உடமை தனியாரது சார்பிலும் உண்டு. இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களும், சேவைகளும் கூட்டுறவு அடிப்படையில் குறித்த விலைகளின் ஊடாக மக்களிடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றது. ஆகவே இங்கு கூட்டுறவு முக்கிய பங்கை வகிக்கின்றது. அத்துடன் விலைக்கட்டுப்பாடும் நிலவுகின்றது. மேலும் இம் முறைமையில் முதலாளித்துவ பொருளாதாரத்தில் காணப்பட்ட குறைபாடுகளை தீர்க்கக் கூடியதாக இருந்தது. அப்படியிருந்தும் இம்முறையிலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. இதில் முக்கியமாக கட்சிக்கட்டுப்பாட்டைக் குறிக்கலாம். இது சர்வதிகார போக்கிற்கு வழி வகுத்தது. இதன் காரணமாக இவ்வமைப்பில் அதிகாரப் போட்டிகள் ஏற்பட்டு தனி மனித சுதந்திரம் புறக்கணிக்கப்பட்டது.

கலப்பு பொருளாதார முறைமை:

அபிவிருத்தியடைந்த நாடுகளின் கீழ் குடியேற்றங்களாக காணப்பட்டு பின்பு சுதந்திரம் அடைந்த நாடுகள் முதலாளித்துவ, சோசலிச பொருளாதார முறைமைகள் இரண்டையும் ஒரே நேரத்தில் பின்பற்றின. இதன் காரணமாக உருவாகியதே கலப்புப் பொருளாதார முறைமை ஆகும். அதாவது தனியார் தொழில் துறையில் காணப்படும் ஊக்கம் உற்சாகத்துடன் பொது நலனுக்குத் தேவையான தொழில்களிலும் அரசு ஈடுபட்டு செயற்படும் ஒரு அமைப்பு இதுவாகும். இது முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பண்புகளையும் கொண்டதாக காணப்படும். இதன் பிரதான பண்புகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

முதலாவதாக இப்பொருளாதாரத்தின் சொத்துடமைகளின் ஒரு பகுதி தனியாரிடமும், மறுபகுதி அரசிடமும் காணப்படும்.

இரண்டாவதாக இங்கு நடைபெறும் உற்பத்தி முயற்சிகளில் ஒரு பகுதி இலாப நோக்கத்துடனும், மறுபகுதி சேவை நோக்கத்துடனும் நடைபெறுகின்றது

மூன்றாவதாக இங்கு நடைபெறும் உற்பத்தி முயற்சிகளில் தனியார் துறை, அரசாங்கத்துறை, கூட்டுறவுத்துறை எனும் மூன்று துறைகளால் மேற்கொள்ளப்படுகின்றது.

நான்காவதாக இப் பொருளாதார எதிர் நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளை முதலாளித்துவப் பொருளாதார முறைமையின் தீர்வு முறையான மத்திய திட்டமிடல் மூலமும் தீர்க்கின்றது.

இன்றைய உலகில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் கலப்புப் பொருளாதார முறைமையே பின்பற்றுகின்றன. மனித வரலாற்றின் தொடக்கம் முதல் இறுதிவரை ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக உலகத்தில் மேற்கூறிய பொருளாதார முறைமைகள் தோன்றின. இம் முறைகள் சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டதாக வரையறுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல ஆண்டு காலமாக ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாகவே தற்கால உலகில் நடைமுறையில் உள்ள பொருளாதார முறைமைகள் இன்றுள்ள நிலைமைக்கு விருத்தி அடைந்துள்ளன. மேலும் சொத்துரிமை பற்றிய தொடர்புகள், அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் ஆகிய இரண்டு சிக்கல்களையும் விடுவிப்பதற்கு கையாளப்படும் பல்வேறு முறைகளுக்கேற்ப மேற் கூறப்பட்ட பொருளாதாரங்கள் எவ்வாறு வேறுபடுகின்றன, என்பதை இங்கு காணக் கூடியதாக உள்ளது.

"வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க'

சம்பூரண சலவைக்கு நுரைவளம் கூடிய
மில்க்வைற் நீல சோப்பை வாங்கி உபயோகியுங்கள்
25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில்
உள்ள திருக்குறளை வெட்டி அனுப்பி
அழகிய மூவர்ண திருவள்ளுவர் படத்தையும்,
ஸ்ரிக்கர் ஒன்றையும்
பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

'மில்க்வைற் தொழிலகம்'

யாழ்ப்பாணம்

525/2 காங்கேசன்துறை வீதி,
த. பெ இல. 77
யாழ்ப்பாணம்

தொலைபேசி: 23233

செந்தமிழில் செம்மை யாக்கம்

ஒரு மாணவியின் கண்ணோட்டம்

வ. யுகசாந்தி
வருடம் 12 (கலை)

தரணியிலே தமிழ் மொழியை தாய் மொழியாக கொண்ட தமிழர்கள் இந்தியாவில் முதன்மையாகவும் இலங்கையில் இரண்டாவது பெரும்பான்மையினராகவும் வாழ்ந்து வருகின்றனர். இந்த தமிழர்களின் தாய்மொழியான தமிழ் மொழியில் இந்திய நாடு வர்த்தக ரீதியான தேவை கருதி 1981ம், 1983ம் ஆண்டுகளில் வரிவடிவ மாற்றங்கள் சிலவற்றை மேற்கொண்டது. அதனை தொடர்ந்து அதன் அண்மை நாடான இலங்கையிலும் “தாயை தொடர்ந்த சேய் போன்று, அம்மாற்றத்தை கொண்டுவரவேண்டுமென அரசியலாளரின் பின்னணியில் அறிஞர் சிலரால் முன் வைக்கப்பட்ட கருத்தினை ஏற்றும், எதிர்த்தும் பல கருத்துகள் வெளிவந்தவண்ணமுள்ளன, இதற்காக அண்மையில் சவரிமுத்து அடிகளார் தலைமையின் யாழ் மறைக்கல்வி நிலையத்தில் நடந்த கருத்தரங்கு இங்கு குறிப்பிடத்தக்கது அதே நேரம் இதில் அக்கலறகாட்ட வேண்டிய யாழ் பல்கலைக் கழகம் பராமுகமாக இருப்பதும் கவலைக்குரியது இதற்கிடையில் அமைச்சர் தேவராஜ் அவர்கள் எழுத்து மாற்றம் பற்றிய விரிவான அறிக்கை ஒன்றை பாராளுமன்றத்தில் முன் வைக்கபோவதாக அறிவித்துள்ளார். வடக்கு, கிழக்கில் உள்ள அறிஞர்களை கலந்தாலோசியாமலே அறிக்கையை அவசர அவசரமாக சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் என்ன? 30 7.1989 முரசொலி வாரமலரில்உமாமகேஸ்வரன் அவர்கள் கேட்டிருப்பது சிந்திக்கத்தக்கது.

எந்தவொரு எழுத்திற்குமே வரிவடிவம்! ஒலி வடிவம் ஆகிய மொழி வடிவங்கள் உள, அதற்கு விதி விலக்கல்லாத தமிழ் எழுத்தும் எழுத்துக்களின் பிறப்போட்டம்! வளியோட்டம் என்பவற்றில் ஒரு இனிமையான முறையில் அமைக்கப்பட்டு ஓசைகளின் அடிப்படையில் தோன்றியது. அத்தகைய தமிழ் எழுத்தின் வரிவடிவத்தில் அண்மையில் இந்திய நாடு கீழ்வரும் மாற்றங்களை செய்தது. ஆகார உயிர் மெய்களின் ணா, னா, றா என்பவற்கு பதிலாக ணா, னா, றா, என்பன புகுத்தப்பட்டது. ஐகார உயிர் மெய்களின் ணை, னை, ளை, லை, அகற்றப்பட்டு ணை. னை ளை. லை புகுத்தப்பட்டது. இந்த மாற்றங்களை பற்றி இந்தியாவில் உள்ள பல பல கருத்துக்களை தெரிவித்துள்ளனர். தமிழ் எழுத்துக்கள் தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட திருத்தங்கள் முழுமையானவை அல்ல எனக் கூறும் பேராசிரியரும் மொழியியல் வல்லுநருமான டாக்டர். கி. வெங்கட சுப்பிரமணியம் அவர்கள் இதனால் யாப்பிலக்கணத்தில் பல பிழைகள் ஏற்படும் என்றும் இந்த மாற்றங்கள் இன்னும் சிறிது நிதானமாக ஆராயப்பட்டு தெளிவோடு முழுமை பெற்றிருந்தால் எல்லோரதும் மகிழ்ச்சிக்கும் உட்பட்டிருக்க கூடும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஓர் ஆய்வுக் களத்தில் பரந்து பட்ட அறிஞர்களின் கூட்டாலோசனையில் செய்ய வேண்டிய ஒரு காரியத்தை ஒரு சில அரசியல்வாதிகளின் உணர்ச்சி வெளிப் பாட்டால் தென்னிந்தியாவில் பிரசாரப் படுத்தப்படும் எழுத்து சீர்திருத்தத்தை ஈழத்திலும் பிரகடனப் படுத்தப்பட வேண்டுமென்ற அவசரத்தின் அர்த்தம் புரிய வில்லை? என்று கேட்கும் ஈழத்து சிவானந்தன் அவர்கள், தமிழின் பிறப்பியலை கண் ணுற்ற வேற்று மொழி அறிஞர் தமிழ் மாணவராய், ஆராய்ச்சியாளராய் மாறு தற்கு ஓசை ஒலியெலாம் ஆன தமிழ் வடிவமே காரணம் எனக் காட்டி கண்ணுக்கு பாரம், காதுக்கு தாக்கம், கருத்துக்கு வீக்கம் என்றெல்லாம் கணக்கெடுத்து உரு வாக்கிய எழுத்தில் சுருக்கம் உருக்கம் என்று சொல்லிக்கொண்டு மாற்றம் விளை வித்தல் மொழிக்கு ஊறு விளைவிக்கும் என்று முடிக்கிறார்.

ஆனல் உயிருள்ள அனைத்திற்குமே வளர்ச்சி இருப்பது போன்று மொழிக் கும் வளர்ச்சி வேண்டும் எனக்கூறும் அறிஞர் சிலர், இன்றைய அறிவியல் துறை யின் பரந்துபட்ட கருத்துக்களை வெளியிடும் முழுமையான ஆற்றல் தமிழிற்கு இல்லை அது பின் தங்கிவிட்டது என்கின்றனர். அத்தோடு தமிழ் எழுத்துக்களை சீர் செய் வதால் தட்டச்சுப் பொறிகளில் அமைப்பதற்கு இயைபான ஒரு மொழியாக தமிழ் ஒருபடி முன்னேற்றம் அடைகின்றது, எனச் செப்பி எந்த மொழி தான் மாறவில்லை 'தேவநகரி' யாகவில்லையா? ருமேனியா 'சிரிலிக்' ரோமன் எழுத்தாகவில்லையா? என வினவுகின்றனர். வ. இராசையா அவர்கள் மேற்சொன்ன மாற்றங்களோடு உகர ஊகார உயிர் மெய்களிலும் மாற்றம் வேண்டுமென்று கூறியிருக்கிறார்.

''தேவநகரி'' யான மோடி போன்றும். ரோமன் ஆன ருமேனிய சிரிலிக் போன்றும் மலேசிய, இந்தோனேசிய மொழிகளில் மாற்றம் வந்துவிட்டால் இலக் கண வரம்பு மட்டுமன்றி தமக்கென சுயபாஷை வடிவமே இல்லாத அவ்வெழுத் துக்கள் போன்று வந்திட வேண்டுமா செந்தமிழும்? என வினவும் பண்டிதர் மு. கந்தையா (B. A) அவர்கள் ஒலி வடிவத்தில் வேறுபாடு இருப்பது போலவே, வரி வடிவத்திலும் வேறுபாடு இருத்தல் வேண்டும் என்கிறார்.

கரவெட்டி சூரன் ஏகாம்பரமோ ''எழுத்து சீர் திருத்தத்தினல் அச்சுப் பொறிகளை இலகுவாக அமைக்க முடியுமென்பதை ஒரு கருத்தாக கூறுகிறார்கள். விஞ்ஞானம் வளர்கிறதேயொழிய இன்றுடன் நின்றுவிடும் என்று நாம் கவலையுற வேண் டியதில்லை. விஞ்ஞானம் வளரும் போது எந்திரங்களும் அவற்றினை ஆக்கும் திறனும் வளருமே ஒழிய தேய்ந்து போய்விடமாட்டா என்பது உண்மை'' என்று தெளிவு படுத்துவதோடு தமிழில் அறிவியல் நூல்கள் எழவில்லையா என வினவி விபுலானந் தரின் ''யாழ் நூலை'' ஆதாரமாக்குகிறார். அதேவழியில் பண்டிதர் க. சச்சிதானந்தன் (B. A. M. Phill) அவர்கள் கணணிப் பொறிமுறை வளர்ச்சி மிக வேகமாக செல் கிறது. ஒரு சொல்லை உச்சரிக்க அதை அப்படியே கணணி எழுதுங்காலம் மிக விரைவில் வரும். அதற்கிடையில் சீர்திருத்தம் அவசியமா? என கேட்டிருக்கின்றார்.

பண்டிதர் வீ. பரந்தாமன் எழுத் தெளிமைக்காக திருத்தம் வேண்டுவோரி டம் இப்படி வினவுகிறார். அந்நேரக்கிலேயே கண்டுபிடிக்கப்பட்ட சுருக்கெழுத்து (Short hand) முறையை இவர்கள் அறியாரோ? அம்முறையை குழந்தைகட்கும் கற் பித்து விடல் வேண்டுமென்பாரோ? சொன்னவற்றை எழுத்தில் பதித்துதரும் கணனி தொலையச்சுக் கருவி வந்துவிட்ட இக் காலத்தில் முயற்சி சிக்கனம் இதனினும்

வேண்டுமோ? தொடர்ந்தும் அவரே "ஒரோருகால் பொறியில் எழுதிவிட்ட எழுத்தை பொறி மனித முயற்சி வேண்டாதே தனது ஆற்றலால் தானே எழுதி தரும் என்பதை நுண்ணறிவுடையோரும் பௌதிகம் கற்று, பொறியல் தெரிந்து பொறிமுறை நயம் கணித்தோரும் விளங்குவர்.'' எனவும் முடிக்கிறார்.

கவிஞரும், பிரபல எழுத்தாளருமான முருகையன் அவர்களோ வடமொழி குறி (ᵕ) போன்ற ஒரு சில மாற்றம் புகுத்தக் கூடியதாக இருப்பினும், அதன் காரணமாக உலகத்திலுள்ள அத்தனை தமிழர்களும் எழுத, படிக்க தெரியாதவர் களாகி விடுவார்கள் என்கிறார். தொல்காப்பியர், அவர் பின் வந்த பவணந்தி முனிவர் போன்றோர் வரி வடிவ எழுத்தில் மாற்றம் வேண்டாது வழங்கி வந்தன ரென்றால் அதற்கு காரணம். முன்னோர் எழுதிய வரன்முறை வழுவாது வரி வடி வம் வழங்கி வருதல் தான் காரணம். எனக்கூறும் சீர் திருத்த எதிர் வாதிகள் சிலர் திருத்தத்தினால் தமிழின் தொன்மைச் சிறப்பு அழியுமென்றும், சங்ககாலம் தொடக்கம் 20 ம் நூற்றாண்டு வரையான இலக்கியம், தமிழ், சமயம், சாத்திரம், சோதிடம், தோத்திரம் போன்ற நூல்கள் பின்னையோரால் கற்கமுடியாமல் போகு மென்றும் ஆகவே மாற்றத்தில் நன்மையிற் தீமையே அதிகமென்றும் விளக்குகின்றனர்.

இப்போது மட்டும் ஏன் சீர் திருத்தம். நாம் மட்டும் தான் தமிழிலுள்ள பிழைகளை கண்டு களைத்தெறியும் அறிவுள்ளவர்களா? நம் முன்னோர் அது பற்றி சிந்திக்கவில்லையா? எனக்கேட்கும் சிந்தனையாளன் இவர்கள் இத்திருத்தங்களை இரட் டைக் கொம்பு (ே) வந்த காலத்தில் ஏன் செய்யவில்லை? எதையுமே துருவி துருவி ஆராயும் அறிஞர் சித்திலெப்பை போன்றோரிற்கு வரி வடிவ வழுக்கள் தென்பட வில்லையா? வடமொழி குறிகளை பயன்படுத்தலாம் என கூறிய முற்போக்குவாதி கி. வ. ஜகந்நாதன் அவர்கள் தன்னுடைய கலைமகள் இதழில் ஏன் அந்த குறிகளை பயன்படுத்தவில்லை? அதுமட்டுமன்றி தமிழ் எழுத்து மாற்றத்தில் தமிழக முன்னால் முதல்வர் எம். ஜி இராமச்சந்திரன் காட்டிய அக்கறை கூட, எந்நேரமும் திராவிடம் தமிழ் என்றே தன் மூச்சாய் உள்ள இந்நாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி காட்டவில்லை? என்றெல்லாம் பல படச் சிந்திக்கலாம். இதற்கெல்லாம் காரணம் அவர்கள் யாரும் தமிழ் எழுத்து வடிவம் கட்டாயமாக மாற்றப்பட அல்லது சுருக்கப்பட வேண்டிய தென்றென்று நினைக்கவில்லை.

வீரமாமுனிவர் போன்றோர் விரும்பிக்கற்ற கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன்தோன்றி மூத்த தமிழ் எம்மொழி. சீரிளமை குன்றாத குறையெதுவும் இல்லாத எம்மொழிக்கு சீர் தேவையா? திருத்தம் வேண்டுமாவென சிந்தித்தோ மானால் அதிகமாற்றமும் சிரமுமில்லாத திருத்தங்கள் ஏற்க கூடியனவாகவே இருக் கின்றன. உதாரணமாக ஞ என்பதற்கு னா என்பதால் அச்சியந்திரற்கு ஏற்றதாக எழுத்து சுலபமாகின்றது இதை படிப்பதும் அவ்வளவு கடினமல்ல என்பது அண் மைக்கால இந்திய நூல்களை எல்லா நாடுகளிலுமுள்ள தமிழர்களும் வாசிப்பதிலிருந்து அறிந்து சொல்லக்கூடியதாக இருக்கின்றது. இருப்பினும் இதுவே சாட்டாக வைத்து தமிழ் வரி வடிவத்தின் முழுமையையே பாழடிக்க கூடிய திருத்தங்களை வெளியிடு வது வரவேற்புக்குரிய விடயமன்று. மாணவர்களாகிய நாம் நம்முன்னோர் அளித்த அருஞ்செல்வத்தை பேணிப் பாதுகாப்போம். தமிழ் நெறிதழைக்க, தரணியெல்லாம் பரவ, உழைப்போம்.

புறநானூற்றின் ஊடாக சங்ககால மக்களின் வாழ்க்கை

யே. எழிலரசி
வருடம் 12 (கலை)

சங்ககால இலக்கியங்களில் முதன்மையானதும் தொன்மை வாய்ந்ததும் பழந்தமிழ் நாட்டின் அரசியல், பொருளியல், கலை, கலாச்சாரங்களை எடுத்துக் காட்டுவதும் புறநானூறு நூல் என்றால் அது மிகையாகாது. இந்நூலிலே வன்மை வாய்ந்த வள்ளல்களையும், வீரம் செறிந்த அரசர்களையும், ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோரையும், மறத்தமிழ் குலங்களையும், குடிகளையும் காணலாம். சுருங்கக் கூறின் கலைமகளும் திருமகளும் களிநடம் புரிந்த பழந்தமிழ் நாட்டை புறநானூற்றில் காணலாம்.

புரவலரும் புலவரும்;

முற்கால தமிழ் மன்னரிற் பலர் பொன்மலர் நாற்றம் உடைத்தது போன்று புவிச்செல்வத்தோடு கவிச்செல்வமும் உடையோராக விளங்கினார்கள். முத்தமிழ் நாட்டை ஆண்ட மூவேந்தர் சிலர் பாடிய பாடல்கள் புறநானூற்றில் காணப்படு கின்றன. நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன் கவிபாடும் திறம் பெற்றவன் மக்களாகப் பிறந்தோரெல்லாம் கல்விகற்று மேம்படல் வேண்டும் என்ற ஆசையை அம்மன்னன் ஒரு பாடலால் அறிவிக்கின்றான்.

"உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"

என்ற பாடல் தெட்ட தெளிவாக இதனைக் காட்டுகின்றது புறநானூறு அரசர்களதும், புலவர்களதும் நட்பையும், நல்லுறவையும் வெள்ளிடை மலையாக எமக்குக் காட்ட கோப்பெருஞ் சோழனை நோக்குவோமானால், அவர் கவி பாடும் திறமை பெற்றதோடு தமிழ் அறிந்த புலவர்களை தக்கவாறு போற்றியவர். சோழன் செல்வத்தில் திளைத்திருந்தாலும் பிசிராந்தையர் என்னும் தமிழ்ப் புல வரையே உயிர் நண்பராக கொண்டார். இம்மன்னன் உலக வாழ்க்கையை துறந்து உண்ணு நோன்பை மேற்கொண்ட போதும் அவர் பிசிராந்தையர் வருவார் வருவா ரென வழிமேல் விழி வைத்துக் காத்திருப்பதுடன் தன் அருகிருந்த அன்பரிடம்,

செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன்" என்று அகம் குழைந்து கூறினார்.

இவ்வாறு ஏங்கி நல்லுயிர் நீங்கினன். நிகழ்ந்ததை அறிந்த பிசிராந்தை யார் தானும் நோன்பிருந்து சோழன் உயிரைத் தேடி ஆவி துறந்தார்.

புலவர் வாழ்க்கை:

பண்டைப் புலவர்கள் தம்மை மதியாத மன்னர் அளித்த கொடையை அறவே வெறுத்தார்கள். பெருந்தச்சாத்தனார் என்ற புலவர் கடிய நெடுவேட்டுவனைக் காணச் சென்றார். அவனை உரிய காலத்தில் பரிசில் வழங்காது காலந்தாழ்த்தினான்! அது கண்ட சாத்தனார்.

'முற்றிய திருவின் மூவர் ஆயினும்
பெட்பின்றீதல் யாம் வேண்டலாமே'' என்றார்

கல்வியின் பெருமையறிந்து பேணிக் கொடுக்கின்ற கொடையையே யாம் பெறுவோம். அன்பற்றவர் முடியுடை வேந்தராயினும் அவர் அளிக்கும் கொடையை ஏற்றுகொள்ளோம் என்று கூறி அவனை விட்டு அகன்றார்,

பெருஞ்சித்தரனார் என்ற புலவர் அதிகமானைக் காணச் சென்றார். அவன் புலவரை மதிக்கும் பண்புள்ளவனாயினும் அரச பணியில் ஈடுபட்டிருந்ததால் புலவருக்குரிய பரிசை மற்றொருவரிடம் கொடுத்து அனுப்பினார். இப்பரிசை கண்ட புலவர் சீற்றம் கொண்டு '' என்னை யாரென்று நினைத்தான் அதிகமான்? அவனைக் கண்டு பரிசு பெறவந்தேன் அன்றிப் பாராமுகமாக அவன் கொடுக்கும் பொருளை கொண்டு போக வந்தேனல்லேன். யான் கல்வியின் சுவையறிந்து அன்புடன், அரசன் தினையளவு பொருள்தரினும் அதனைப் பெரிதாக ஏற்று மகிழ்வேன் '' என்று உணர்ச்சி ததும்பப் பாடினார்.

முற்காலப் போர் முறை:

பகைமையும் போரும் எக்காலத்தும் உண்டு. முற்காலப் போர் முறைகளிற் சிலவற்றைப் புறநானூற்றிலே காணலாம். அக்காலத்தில் ஓர் அரசன் மற்றரசன் நாட்டின்மீது படையெடுத்தால் நாட்டில் வாழும் நல்லுயிர்களை நாசமாக்கக் கருதுவதில்லை எனவே.

பசுவும் பார்ப்பனரும் பெண்டிரும் ......

என்னும் புறப்பாடலினூடாக பசுக்களையும் அறவோரையும், பெண்களையும் பிணியாளரையும் போர் நிகழும் இடத்தை விட்டு ஓடி ஒதுங்கும்படி பறை சாற்றி விட்டே படை எடுப்பு நிகழும். ஆனால் இன்றைய நிலையில் எத்திறத்தாரும் போரின் விளைவால் உயிர்துறப்பது கண்கூடு இன்னும் வீரரல்லாதோர், புறங்காட்டி ஓடுவோர் புண்பட்டோர் மேலும் படைக்கலம் செலுத்தல் ஆகாது என்பது பழந்தமிழர் கொள்கை.

சங்ககாலப் பெண்கள்.

இக்காலத்தில் கலையுணர்வு பெற்ற பல பெண்மணிகள் தமிழ் நாட்டில் வாழ்ந்தார்கள். ''பேதமை என்பது மாதர்க்கு அணி கலம்' என்பது பழந்தமிழர் கொள்கையன்று என்பதற்கு புறநானூறு சான்றாகும். செவ்விய கவிபாடும் திறமை பெற்ற பெண் பாலர் பாடிய அருமை சான்ற பல பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. வெண்ணிற் குயத்தியர் ஒக்கூர் மாசாத்தியர், பொன் முடியார் போன்றோரோடு அரசர்களாலும் அறிஞர்களாலும் பாராட்டப் பெற்ற ஔவையார் ஆகியோர்கல்வியிற் சிறந்த பெண் புலவர்களாவார் ஆகவே ஆண் பெண் ஆகிய இருபாலருமே முற்காலத்தில் கல்வி அறிவால் மேம்பட்டிருந்தார்கள்.

வீரத் தாய்மார்கள்:

வெம்மை சான்ற போர்க்களத்தில் அஞ்சாது நின்று அமர் புரியுமாறு தாம் பெற்ற அருமை மைந்தரை அனுப்பிய வீரத்தாய்மாரும் அக்காலத்தில் விளங்கினர். மாற்றார்க்குப் புறம் கொடாது மார்பிலே புண்பட்டு இறந்த மைந்தனது மேனியைக் கண்ட நிலையில் பெற்ற போதினும் பெரிதுவக்கும் இன்பம் அடைந்தாள் ஒரு தாய். மற்றொரு வீரமாது முதற்போரிலே தமையனை இழந்தும் மறுநாட் போரிலே தலைவனை இழந்தும் மனந்தளராதவளாய் தன் குலங்காக்க இருக்கும் அருமந்த பிள்ளையை அன்போடு அழைத்து, வாளைக் கையிலே கொடுத்து, போர்க்களத்தை நோக்கி அவனை விடுத்தாள்.

மக்கள் வாழ்க்கை :

'மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி' என்றவாறு முற்கால மக்கள் மன்னனையே பின்பற்றி நடக்க முயன்றார்கள் என்ற செய்திகளைப் புறநானூறு கூறுகின்றது. அரசன் கடமையை அறிவிக்கும் புறநானூறு பாட்டு ஒன்று இக்கருத்தை தெளிவாக் குகின்றது. பிள்ளையைப் பெற்று வளர்ப்பது தாயின் கடமை. அவனை அறிவுடைய வனாக்குவது தந்தையின் கடமை ஒழுக்க நெறியில் நிறுத்துவது அரசன் கடமை என்றும் பொன் முடியார் என்ற புலவர் திறம்படப் பாடியுள்ளார்.

அரசன் அறநெறி தவறாது ஆண்டு வந்தால் குடிகளுக்கு எவ்வகைக் கவலையும் இல்லை என்பதும், அவன் அறநெறி தவறினால் மழை பருவத்திற் பெய்யாது, பசியும் பிணியும் குடிகளை வருத்தும் என்பதும் பழந்தமிழர் கொள்கை, இதனாலேயே 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்ற வாசகம் எழுந்தது.

இன்னும் வாழ்க்கைகுரிய சிறந்த நெறிகளை எல்லாம் எடுத்து ஓதுகின்ற புறநானூறு, எல்லோரும் கடைப்பிடித்தற்குரிய ஓர் அறத்தினை திட்டவட்டமாகக் கூறுகின்றது

"பல் சான்றீரே! பல் சான்றீரே!
நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

என்ற அறிவுரையை கடைப்பிடித்தல் தமிழ் மக்கள் கடனாகும்.

குறுநில மன்னர் :

புறனூற்றிலே புகழப்படுகின்ற குறுநில மன்னர்கள் முறையே பேகன், பாரி, கடிய நெடு வேட்டுவன், ஆய் ஆண்டிரன், வல்வில் ஓரி, அதிகமான், குமணன் கொற்றவன் பெருநன்னி ஆகியோரேயாவார், இச்சிற்றரசரில் சிலர் பேரரசரினும் சாலப் புகழ் பெற்று விளங்கினார்கள். அறிஞரை ஆதரித்துப் போற்றினர். பாண்டிய நாட்டிலுள்ள பறம்பு மலையையும் அதனையடுத்த முந்நூறு ஊர்களையும் ஆண்டுவந்தான் பாரி. இவன் நல்ல வள்ளல் தன்மையுடையவன். அவன் மனதில் அமைந்த அருளுக்கு, சங்கு கரையில்லை. அவன் நாவில் இல்லை என்ற சொல்லே இல்லை. பாரியின் பெருந் தன்மையைப் பொய்யறியாக் கபிலர்,

"மடவர் மெல்லியர்
கடவன் பாரி கைவண்மையே"

அதாவது அறிவில்லாதவராயினும் சரி, புல்லிய குணவியல்புகளைக் கொண்டவராயினும் சரி பாரியிடம் சென்றால் அவர்களுக்கு மனமுவந்து பரிசில் வழங்கியே அனுப்புவான் என்று கூறினர்.

பொதிய மலைத் தலைவனாக விளங்கிய ஆய் எனும் மன்னன் வறுமையால் வாடி வந்தவர்கள் தாயினும் சாலப்பரிந்து ஆதரித்ததாயின் அவன் பெருமையை முடமோசியார்

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்
அறிவிலை வணிகன் ஆய் அலன்"

என்று அவன் மனப்பான்மையைக் கூறுகின்றார். இவ்வாறு பண்டைய கால மன்னர்களின் கவித்திறமையையும், வாரி, வாரி வழங்கும் கொடைத் திறமையையும் வர்ணித்துக்கொண்டே போகலாம். இப்படியான ஓர் இலக்கியக் கேணியாக விளங்கும் புறநானூறு பழமையைத் துருவுவோர்க்கு பல பொருள் நிறைந்த பண்டாரமாகவும், தமிழ் கூறும் நல் உலகிற்கு குறிக்கோள் காட்டும் மணி விளக்கமாகவும் மிளிர்கின்றது. இத்தகைய பெரு நூலைத் தமிழ் மக்களாகிய நாம் போற்றிப் படித்து இன்பமும் பயனும் எய்துவோம்.

மனம் மகிழும் தங்க நகைகளை
விரும்பிய டிசைன்களில்

உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்

நியூ சாந்தி ஜுவல்லர்ஸ்

167, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இறைவனின் வார்த்தை

ச. மேரி தயாளினி
வருடம் 12 (வர்த்தகம்)

மனிதனின் வார்த்தை அதாவது பேசும் ஆற்றலே மனிதனை மற்ற படைப்புப் பொருட்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. அவனே எல்லாப் படைப்புப் பொருட்களுக்கும் மேலானவனாக அமைகிறான். பேசும் வார்த்தையின் வழியாகத்தான் மனிதன் தன் உள்ளாழத்தில் கருவுறும் எண்ணக்குவியல்களை வெளிப்படுத்துகின்றான். தனது கருத்துக்களை மற்றவர்களோடு பரிமாறிக் கொள்கிறான். அவர்களோடு உறவை வளர்க்கின்றான். ஆகவே மனிதன் பேசும் வார்த்தை மெய்மைப் பொருளின் ஒலி முறை சார்ந்த அடையாளமாகும் (Phonetiesing) அடையாளம் என்ற முறையில் மனிதன் பேசும் வார்த்தை அது குறித்துக்காட்டும் பொருளையும் அதன் விளக்கத்தையும் சுட்டிக் காட்டுகின்றது.

கிரேக்க மொழியில் 'லோகோஸ்' (Logos) அல்லது 'ரேமா' (Rema லூக் 2:15) என்பது ஒரு பொருளையோ, நிகழ்வையோ குறிக்கலாம். (லூக் 1:37) சாதாரண வழக்கில் இச்சொல் பலவற்றைக் குறித்தது. அதாவது உச்சரிக்கப்பட்ட ஒரு சொல் மனிதனுடைய உள்ளாழத்தில் உருவாகும் சிந்தனை "சிந்திக்கும் ஆற்றல்" (reasoning) போன்றவற்றைக் குறிக்கப்பயன்படுத்தப் படுகின்றது. ஸ்தோயிக் என்னும் கிரேக்க தத்துவக் கொள்கை உலக அமைப்பின் உள்ளார்ந்த விதியைக் குறிப்பிட லோகோஸ் என்ற சொல்லைப்பயன்படுத்தியது.

இந்து மரபில் "வாக்" (vak) என்னும் வடமொழி (சமஸ்கிருதம்) பயன்படுத்தப்படுகிறது. இது வெறும் பொருளையோ, பொருளற்ற வெறும் தொனியையோ, உட்சிந்தனையை வெளிக்கொணரும் ஒருவகைப் பொருள் அல்லது சாயலையோமட்டும் குறிப்பதல்ல; மாறாக இது இறை வெளிப்பாட்டையே குறிக்கின்றது. தொடக்கத்திலிருந்தே 'வாக்' இருந்ததாகச் சொல்லப்படுகின்றது.

நம் தந்தையாகிய இறைவனும் தம் மக்களுடன் உரையாடுகிறார். தம் மக்களுடன் உரையாடுதல் கடவுளின் குணங்களில் ஒன்று இறைவன் தம் மக்களுடன் உரையாடுவதன் வாயிலாகத் தம்மைச் சொல்லிலும் செயலிலும் வெளிப்படுத்துவதாக 2ம் வத்திக்கான் சங்கம் குறிப்பிடுகின்றது. சொல் என்பது இங்கு இறைவனின் வார்த்தையை குறிக்கின்றது இது இறைவனைப் பிரதிபலிக்கின்றது.

எமது மறைநூலுக்கு அடிப்படையாக இருப்பதும் இறைவனின் வார்த்தையே பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என 72 நூல்களைத் தன்னுள் அடக்கியுள்ள இவ்வேதாகம நூலானது, மனிதர் விளங்கிக் கொள்ளும்படி மனித ஆசிரியர்களால் சுதந்திரமாக அவர்கள் இயல்புக்கும், இலக்கிய மரபுக்கும் ஒப்ப எழுதப்பட்டாலும் இது பரிசுத்த ஆவியினால் இறையூக்கம் பெற்றவர்களாலேயே எழுத்து வடிவம் கொடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இம்மறை நூலில் உள்ள இறை வெளிப்பாட்டு உண்மைகள் எதிலுமே பிழையோ, தவறோ காணமுடியாது எனவே அதை படிக்கும் அனைவரும் பரிசுத்த ஆவியின் ஏவுதலால் படிக்கும் போது அது இன்றும் அவர்கள் வாழ்வுக்கு உயிராக மாறும் இறைசக்தியைக் கொண்டுள்ளது

எனவே இவற்றிற்குத் தனி மதிப்புண்டு இவற்றின் ஆக்க சக்தி அளவிடற்கரியது. அது உயிருள்ளது.

எனவே தான் புனித சின்னப்பர்

''தேவ வார்த்தை உயிருள்ளதும், சக்தியுள்ளதும், இருபுறமும் கருக்குள்ள வாளிலும் அதி கூரானதுமாயிருக்கின்றது.'' (எபி : 4 : 12 என்று கூறுகின்றார்.)

மீட்புச் செயலுக்கு தொடக்கமும், முடிவுமாக இருப்பதும் இவ் இறைவார்த்தையே உலகப் படைப்பில் இந்த இறைவார்த்தை ஈடுபாடு கொண்டிருந்தது. ஆற்றலுடைய இவ்வார்த்தையினாலே அனைத்தும் படைக்கப்பட்டன. ''ஆண்டவருடைய வார்த்தையால் வானங்கள் உண்டாயின அவருடைய சொல்லால் வான அணிகள் எல்லாம் உருவாயின'' (சங் : 36 : 2) ''வல்லமை மிக்க இவ்வார்த்தையே உலகனைத்தையும் தாங்குகின்றது'' (எபிரே 1 : 3)

இறைவார்த்தையின் ஆக்கச்செயல்களை தூய இராயப்பர் அழகாகச் சித்தரிக்கின்றார். ''கடவுளுடைய வார்த்தையால் தான் தொடக்கத்திலிருந்தே வானமும நிலமும் உள்ளன. நிலம் நீரினின்றும் நீராலும் தோன்றி நிலைபெற்றுள்ளது. ....
ஆனால் இப்போதுள்ள விண்ணும் மண்ணும் நெருப்பினால் அழிக்கப்பட அதே வார்த்தையால் தான ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன''. (2 இரா 3 : 5 - 7)

மனித வாழ்வுக்கு பொருள் கொடுப்பதும் இறைவனின் வார்த்தையே இதுவே அவன் நடக்கும் பாதையைக் காட்டும் விளக்கு செல்லும் வழிக்கு வெளிச்சமும் இவ் வார்த்தை தான் மனிதர்களுடைய வாழ்க்கைக்கு மீட்பளிக்கும் ஞானமும் இதுவே 'இந்த வார்த்தை வளமுள்ள விதையாகும். விசுவாசமுடன் ஏற்றுக் கொண்டவர்களின வாழ்வு இவ்வுலகிலும், மறுவுலகிலும் கனி கொடுக்கும்'' (லூக் : 8 : 4-15) இறை வார்த்தை மனித வாழ்வுக்கு ஆறுதலும், நம்பிக்கையும் அளிக்க வல்லது. அதுமட்டுமல்லாது மனித ஆன்மாவிற்கு ஊட்டமளிப்பதாக இருக்கிறது ''மனிதன் அப்பத்தினால் மட்டுமன்றி இறைவனுடைய வாயினின்று வரும் ஒவ்வொரு வார்த்தையினாலும் உயிர் வாழ்கிறான்'' என எழுதியிருக்கின்றது; (மத் : 24 : 25) என்று நமது ஆண்டவரே கூறுகின்றார்.

மனிதனை உண்பிப்பது வயலில் விளைந்தவையன்று மாறாக கடவுளின் வார்த்தையே என ஞானாகமத்தின் ஆசிரியர் கூறுகிறார்.

'' மழையும் பனியும் வானின்று இறங்கித் திரும்பிச் செல்லாது,
பூமியை நனைத்துச் செழிப்பாக்கி முளையரும்பச் செய்து
விதைப்பவனுக்கு விதையும், உண்பவனுக்கு உணவும் தருகிறது.
அவ்வாறே நம் வாயினின்று புறப்படும் வார்த்தையும்
அது பயன் தராமல் நம்மிடம் திரும்பாது
தாம் விரும்பியதைச் செய்து முடிக்கும்
எதற்காக நாம் அனுப்பினோமோ அதை நிறைவேற்றும்'' (இசை 55 : 10 - 11)
என்கிறார் இசையாஸ் இறைவாக்கினர்.

மனித வாழ்க்கைக்கு இவ்வார்த்தை எவ்வளவு அவசியம் என்பதை இல்லாமை பஞ்சத்திற்கு ஒப்பீடு செய்து பேசுகின்றார் ஆமோஸ் இறைவாக்கினர்.

"இதோ நாட்கள் வருகின்றன அப்போது நாட்டில்
பஞ்சம் அனுப்புவோம். அது உணவு கிடைக்காத
பஞ்சமோ, நீரில்லா வறட்சியோ அன்று ஆண்டவரின்
வார்த்தையைக் கேட்காதிருக்கும் பஞ்சமே'

(ஆமோஸ் : 8 11)

இவ்வார்த்தை முதலில் இறைவெளிப்பாட்டையே குறிக்கின்றது. அதாவது ஊழியூழிக்காலமாக மறைந்திருந்த மறைபொருளை இறைவன் இவ்வார்த்தையினால் மானிடர்க்கு வெளிப்படுத்தினார். தமது மீட்பின் திட்டத்தை வார்த்தையின் வழியாக வெளியாக்கினார். எனவே வார்த்தை எவ்வாறு இறைவெளிப்பாடாகும் என்றும் எவ்வாறு நம்பிடம் வருகிறது. என்றும் ஆராய்ந்து சிந்திப்போம்.

பழைய ஏற்பாட்டில் கடவுள் மக்களோடு பேசியபோது அவர் தம்மை வெளிப்படுத்துவதைக் காண்கிறோம். அவர் அங்கு தம் மக்களுக்கு வார்த்தை வழியாகவே தம்மை வெளிப்படுத்துகின்றார். இவற்றிற்கு முன்னதாக இறைவன் ஒன்றுமில்லமையிலிருந்து உலகை உண்டாக்கினார், அதாவது தமது ஒரு சொல்லினாலே உலகம் அனைத்தையும் உருவாக்கினார். அதே வார்த்தையின் வழியாகவே மீட்புச் செயலிற்கு வாக்கு கொடுக்கின்றார். இறைவனுடைய அன்பும், கருணையும், ஆற்றலும் இவ்வார்த்தையின் மூலமாக வெளிப்படுவதைக் காண்கிறோம். மீட்பின் வரலாற்றிலே உடன்படிக்கை மூலமாக இறைவனின் வார்த்தையானது இஸ்ராயேல் மக்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. பலகைகளில் பொறிக்கப்பட்ட இவ்வார்த்தை இஸ்ராயேல் மக்களின் வாழ்விற்கு அமைப்பு நிலை ஆதாரமாகவும், மக்கள் பால் கடவுள் கொண்டுள்ள அன்பிற்கு அடையாளமும் வெளித்தோற்றமாகவும் உள்ளது.

வரலாற்று நிகழ்வுகளில் தமது திருவுளத்திட்டம் வெளிப்படுத்தப்படுவதை எண்பிக்க இறைவன் சில இறைவாக்கினர்களைத் தெரிந்து அவர்களின் வழியாக "இறைவாக்கு" உரைக்கின்றார். அவர்கள் முழங்கிய வார்த்தைகள் எப்பொழுதும் இனிய மொழிகளல்ல மாறாக பயங்கரச் செய்திகளையும் எடுத்துரைத்தன. பயமின்றி தங்களுககு இறைவன் கொடுத்த செய்தியை வார்த்தையாக முழங்கினார்.

"ஆண்டவர் தனது கையை நீட்டி என் வாயைத்தொட்டு
"இதோ நம் வார்த்தைகளை உனது வாயில் ஊட்டினோம்.
பிடுங்கிப் பறிக்கவும், இடித்துத் தகர்க்கவும்.
அழித்து ஒழிக்கவும், கவிழ்த்து வீழ்த்தவும்,
கட்டி உயர்த்தவும், நட்டு வைக்கவும்,
மக்களினங்கள் மேலும் அரசுகள் மேலும்
இதோ உன்னை ஏற்படுத்துகின்றோம்" என்றார் (எரே 1 : 9 - 10)

"உம்முடைய வார்த்தை நெருப்பைப் போன்றதன்றோ? கற்பாறையை நொறுக்கும் சம்மட்டியைப் போன்றதன்றோ? என்கிறார் ஆண்டவர் (எரே 23 : 29) என எரேமியாஸ் ஆண்டவரின் வார்த்தையின் ஆற்றலை வர்ணிக்கின்றார்.

இவ்வாறு கடவுளின் வார்த்தை உலகில் இறைவாக்கினர்கள் வழியாகச் செயல்பட்டது. பழைய ஏற்பாட்டில் கடவுள் பலவிதங்களில் மக்களோடு பேசிய போது ஓரளவு மட்டுமே தம்மை வெளிப்படுத்தினர். கடவுளின் வார்த்தையை திறந்த உள்ளத்தோடு வரவேற்றோர்க்கு அது வாழ்வின் ஒளியாக வெளிப்படுத்தப்பட்டது. அவர்களின் எதிர்காலத்திற்கு வாக்குறுதி கொடுத்தது.

"பற்பல முறையிலும் பல்வேறு வகையிலும் முற்காலத்தில்
இறைவாக்கினர் வாயிலாக நம் முன்னோரிடம் பேசிய கடவுள்
நாம் வாழும் இவ்விறுதி நாட்களில் நம்மிடம்
தம் மகனின் வாயிலாகவே பேசியுள்ளார்.
இவரை எல்லாவற்றிற்கும் உரிமையாளராக்கினர்.
இவர் வழியாகவே உலகங்களை எல்லாம் படைத்தார்.
கடவுளின் மாட்சிமையின் சுடரொளியாகவும்
அவருடைய உள்ளியல்பின் சாயலாகவும் விளங்கும் இவர்,
தம்முடைய வல்லமை மிக்க வார்த்தையால்
எல்லாவற்றையும் தாங்கி வருகிறார் "(எபிரே 1:1 - 3)

இவ்வாறு மனுவுரு எடுத்த வார்த்தையாகிய கிறிஸ்துவில் இறைவன் முழுமையாகத் தம்மை எமக்கு வெளிப்படுத்தினர் என்கிறார் புனித சின்னப்பர்.

கிறிஸ்துவினால் அன்பு செய்யப்பட்டவரும் அவரது அப்போஸ்தலருமான புனித அருளப்பர் தமது திருமுகத்தின் வழியாக இந்த உயிரளிக்கும் வார்த்தையை - வார்த்தையானவரை - தாம் தொட்டு அனுபவித்ததாகக் கூறுகின்றார்.

"ஆதிமுதல் இருந்ததை, நாங்கள் கேட்டதை
கண்ணால் பார்த்ததை உங்களுக்கு அறிவிக்கிறோம்.
அதை நாங்கள் நோக்கினோம். கையால் தொட்டுணர்ந்தோம்
நாங்கள் அறிவிப்பது உயிரின் வாக்கு
அந்த உயிர் வெளிப்படுத்தப் பட்டது!
அதனை நாங்கள் கண்டோம்.
அதற்குச் சான்று பகர்கிறோம், ...
... ... எங்களுக்குள்ள நட்புறவோ
பரமதந்தையோடும், அவர் மகன் இயேசுக் கிறிஸ்துவோடும்
உள்ளதாகும், நம் மகிழ்ச்சி நிறைவு பெற
இதனை எழுதுகிறோம்" (அருள் *1 : 1 - 4*)

இவ்வாறு புனித அருளப்பர் தாம் அனுபவித்த வார்த்தையானவரோடு நாமும் உறவு கொண்டு வாழ்வு பெற வேண்டும் என்று அழைக்கின்றார்.

இந்த யேசுக் கிறிஸ்துவின் வருகையில் மட்டுமே நிறைவான இறைவெளிப்படுமே கிட்டியது. மனுவுருவாகிய இயேசுக் கிறிஸ்துவின் (இறை) வார்த்தை, வரலாற்றிற்கு வழிகாட்டும் ஆற்றல் கொண்டது என்ற முறையில் மட்டும் பறைசாற்றப்படவில்லை; மாறாக உயிராற்றலுடன் வரலாற்றில் தோன்றிச் செயல்படும் ஒரு மனித உருவாகப் பறைசாற்றப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் இயேசுக் கிறிஸ்து 'வார்த்தை' என்று அழைக்கப்படும் போது இது தந்தையாகிய இறைவனின் உள்ளார்த்த சிந்தனையின் உச்சரிப்பு என்பதைக் குறிக்கவில்லை' மாறாக இறைவன் தம்மையே உலகிற்கு பகிர்ந்தளிப்பதை குறிக்கின்றது.

ஞானமும் ஆழ்தன்மையும் கொண்ட இவ்வார்த்தையினையே (Logos) அருளப்பர் யூதருக்கும் புற இனத்தவர்களான கிரேக்கர்களுக்கும் கிறிஸ்துவை அறிமுகம் செய்து வைக்க சிறந்த சொல் எனக் கொள்கிறார். வார்த்தை யூதருக்கு இறைவனின் படைப்பாற்றலையும், ஞானத்தையும் குறித்தது எனக் காண்கிறோம். இந்த ஞானம் ஓர் ஆளாக உருவகம் செய்யப்பட்டுள்ளது. இது இறைவல்லமையைக் குறித்தது. வார்த்தை என்ற சொல் கிரேக்கருக்குப் பொருள் செறிந்ததாக இருந்தது. 'கெரகிலிற்றசிங்' கருத்துப்படி வார்த்தை தான் அனைத்தையும் ஒழுங்கு படுத்தும், அடக்கி ஆளும் சக்தி, பிலோ (Philo) என்பவரின் கருத்துப்படி வார்த்தையே உலகில் மிகவும் பழையது. அதன் வழியாகவே அனைத்தையும் படைத்தார். ஆகவே அருளப்பர் 'வார்த்தை' என்ற பதத்தை இவ்வாறு கையாள்கிறார்.

> ''ஆதியிலே வார்த்தை இருந்தார்.
>
> அவ்வார்த்தை கடவுளோடு இருந்தார்.
>
> அவ்வார்த்தை கடவுளாயும் இருந்தார். (அரு 1 : 1)

என அருளப்பர் அழகாகத் தம் படைப்புக்களில் வர்ணித்துள்ளார்.

''ஆதியிலே வார்த்தை இருந்தார்'' ஆதியிலே என்பதற்கு ஆதியாகமத்தில் ''காலத்தின் தொடக்கத்தில்'' என்பது பொருள். அருளப்பர் அதே சொலலிற்கு 'காலம் துவங்கும் முன்னே' என்று பொருள் கொடுக்கின்றார். ஆதியிலே இறைவன் இருந்தார். காலத்தின் தொடக்கத்தில் அவர் பிறந்ததாகவோ; தோன்றியதாகவோ; உருக்கொண்டதாகவோ; உருப்பெற்றதாகவோ கூறப்படவில்லை. ஆனால் காலத்தின் தொடக்கத்திலேயே அவர் இருந்தார் எனவே அவர் காலத்தின் தொடக்கத்திற்கு முந்தியவர்; காலத்தைக் கடந்தவர்; நித்தியர் இவ்வாறு ஆதியிலே வார்த்தை இருந்தார் என்பதிலிருந்து வார்த்தையானவரின் நித்திய தன்மை வெளிப்படுத்தப் படுகின்றது.

''வார்த்தை கடவுளோடு இருந்தார்'' வார்த்தையாக உலகிற்கு வந்த கிறிஸ்து கடவுளோடு இருந்தார். அவர் கடவுளின் ஒரு பகுதியல்ல; அவரின் வெறும் பிரதிபலிப்புமல்ல அவர் ஒரு தனி ஆள் அவ்வார்த்தைக்கும் கடவுளுக்கும் இடையில் நித்தியத்திற்கும் நெருங்கிய தொடர்பு, உறவு இருந்தது. கடவுளோடு அவர் இணைந்து இருந்ததினால் வார்த்தையான கிறிஸ்துவே தந்தையைப் பற்றி உலகிற்கு வெளிப்படுத்தத் தகுதி பெற்றவரானார் இயேசு தந்தையை வெளிப்படுத்துபவர் மட்டுமல்ல அவரே இறை வெளிப்பாடுமாகும்.

''அவ்வார்த்தை கடவுளாயும் இருந்தார்'' என்று அருளப்பர் கூறுகின்றார். நித்தியத்திலிருந்தே கடவுளிடமிருந்த இவ்வார்த்தையிடம் கடவுளின் எல்லா பண்பு களும் காணப்பட்டன. கடவுளின் தன்மைகள் அனைத்தும் அவரிடம் துலங்கின. இவ் வார்த்தையின் தெய்வீக தன்மையூடாகவே இறைவனுடைய வாக்குறுதிகளின் இறுதிச் செயலாக்கமும் உறுதிப் பாடுமாக இயேசுக் கிறிஸ்து காட்டப்படுகின்றார்.

''வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடிகொண்டார்
அவருடைய மாட்சிமையை நாங்கள் கண்டோம் (அரு 1 : 14)

என அருளப்பர் கூறும் அளவில் வார்த்தை உலகில் தோன்றினார். ஆகவே நற்பு தற்கரிய சான்றாகவும் தோன்றுகிறார். மனிதர்களிடம் இறைவனால் அனுப்பப்பட்ட வார்த்தையே இயேசுக் கிறிஸ்து, அந்த வார்த்தையாகிய கிறிஸ்துவே மனித உரு வில் நம்மிடையே தோன்றினார், அவரே நமது மீட்பின் செய்தியாகி எமக்கு மீட் பின் செய்தியைத் தந்தார். இவர் வழியாகவே நமக்கு மீட்பின் செய்தி அளிக்கப்ப டுகிறது.

தொன்று தொட்டு மனித மீட்பின் காரணராக விளங்கும் இறைவன் இன் றும் காலத்தின் குறிகளினூடாக மட்டுமல்ல தம் உயிருள்ள வார்த்தை வழியாகவும் பேசிக்கொண்டே இருக்கிறார். இந்த உண்மையான விடுதலை தந்து வாழ்விக்கும் மீட் பின் செய்தியை நாம் கேட்கின்றோமா? அந்த நற்செய்தி தரும் மதிப்பீடுகளை நாம் எமது வாழ்வாக்குகிறோமா?

நாம், வார்த்தையாகி நம்மிடையே மனுவுரு எடுத்த கிறிஸ்துவையும் அவ ரது வாழ்வு காட்டும் மதிப்பீடுகளையும் எமதாக்கி, அவர் காட்டிய பாதையாம் அன்பு, மன்னிப்பு, இரக்கம், பழிக்குப்பழி வாங்காமை, நீதி, உண்மை ஆகிய பாதையை விரும்பித்தேடி நடப்போமாகில் எம்மத்தியில் உண்மையான விடுதலையையும், சமா தானத்தையும் அனுபவிப்போம் எனவே இறைவனின் வார்த்தையை உயிரளிக்கும் வாழ்விக்கும் வளமளிக்கும் வார்த்தையாக எம் வாழ்வில் உயிர் பெற்று வளரச் செய்வோமாக.

---

* பணச்சந்தையில் ஐந்தாவது உபசந்தையாக மத்திய வங்கி மீள் கொள்வனவுச் சந்தையை 18.1.88 ல் இருந்து ஆரம்பித்துள்ளது வர்த்தக வங்கிகள் தேசிய சேமிப்பு வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அபிவிருத்திநிதிக்கூட்டு ஸ்தாபனம், ஊழியர் சேம லாப நிதியம் போன்றன அங்கத்துவ நிறுவனங்களாகும்.

* வீதி அபிவிருத்தி அதிகாரசபை (Road Development and Contraction (Pvt) Company Limited ஆக மாற்றப்பட உள்ளது.

விஞ்ஞான முறையும் விஞ்ஞான முறையில் நோக்கலும்

யோ றெசிற்று
வருடம் 13 (வர்த்தகம்)

''அனுபவ சோதனைகளால் பொய்ப்பிக்கக் கூடிய அறிவே விஞ்ஞானமாகும்' என்று கார்ள் பாப்பர் விஞ்ஞானத்திற்கு வரைவிலக்கணம் தருகின்றார். விஞ்ஞானங்களை ஆராயும் போது ஆய்வினது இலட்சியம் ஒழுங்கான அறிவைப் பெற வேண்டும் என்பதாகும், ஏனெனில் ஒழுங்கான அறிவைப் பெற முயலும் விஞ்ஞானம் திருப்திகரமான விளக்கத்தை முன்வைக்கிறன். உலகத்தில் காணப்படும் பல்வேறு பட்ட காலங்களிலும் நிகழும் பல்வகை நிகழ்வுகளையும் அவதானித்து சேகரித்து வகைப்படுத்தி அவற்றிற்கிடையே காணப்படும் தொடர்புகளையறிந்து ஒழுங்குபடுத்திய அறிவே விஞ்ஞானமாகும். இவ்வாறு அறிவை ஒழுங்கு செய்ய விஞ்ஞானிகள் கையாளும் முறைகளே விஞ்ஞான முறையாகும்.

நவீன விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தின் பொருட்டு அறிவைப் பரீட்சிப்பதற்கு விஞ்ஞானத்தில் கைக் கொள்ளப்பட்ட நியாயித்தல் முறை இப்போது எல்லாத்துறைகளிலும் கைக்கொள்ளப்படுகின்றது. எனவே விஞ்ஞான முறை முக்கியமான விஞ்ஞானக் கொள்கைகளுக்கும், விதிகளுக்கும் காரணம் காட்ட முற்படும் நியாயித்தல் முறைபற்றிய ஆராய்ச்சியைக் குறிக்கும். விஞ்ஞான ஆய்வு முறைகளில் பாரிய புரட்சி செய்த கலிலியோவின் கூற்றின் பிரகாரம் ''தர்க்க ரீதியிலோ அல்லது மற்றைய வழிகளிலோ கண்ட முடிவு எதுவாயினும் இயற்கை நிலையில் அல்லது ஆய்வு கூட நிலையில் பரிசோதனை செய்து அப்பரிசோதனையில் கண்ட விளைவு முன்பு கண்ட முடிவுகளை ஒத்துள்ளதா என்று ஒப்பீடு செய்வதே விஞ்ஞான முறையாகும்'' என்றார்.

இவ்விஞ்ஞான முறையானது ஓர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பல கருது கோள்களை உருவாக்குதல், அவற்றை நோக்கல், பரிசோதனை ஆகியவை மூலம் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல், அல்லது திருத்தியமைத்தல் ஆகிய செயன்முறைகளைக் கொண்டிருக்கின்றன. விஞ்ஞான முறையின் படிமுறைகள் வருமாறு.

i) நேர்வுகளை முதன் முறையாக நோக்கல்.

ii) பிரச்சினையைத் தெளிவாக வரையறுத்தல்.

iii) ஏற்ற தரவுகளைத் திரட்டல்.

iv) கருது கோளை உருவாக்குதல்.

v) கருது கோளை வாய்ப்பு பார்த்தல் அல்லது பரிசோதித்தல்.

vi) கருது கோளை உறுதிப்படுத்தல்.

vii விதி கொள்கைகளை அமைத்தல்.

ஒரு தோற்றப்பாடு அல்லது நிகழ்வு ஏன் நிகழ்கிறது? எவ்வாறு நிகழ்கிறது? போன்ற வினாக்கள் விஞ்ஞானிகளின் மனதில் எழுகின்றன. எனவே விஞ்ஞான முறையானது ஓர் பிரச்சனையை நோக்கி அதை இனங்காண்பதிலிருந்து எழுகிறது. மனிதனது சிந்தனைக்கு பிரபஞ்சம் முழுவதுமே உட்படுவதால் இப்பிரபஞ்சத்தில் அவனுடைய அறிவுத் தொகுதியைப் பொறுத்த வரையில் தெரியாத விடயமொன்று புலப்படும் நிலையிலேயே பிரச்சனை தோன்றுகின்றது

உ+ம்: சேர் C.V ராமன் விஞ்ஞானம் பெற இங்கிலாந்திற்குப் போகும் போதும் வரும் போதும் கடல் நீரானது அழகான நீல நிறமாக இருப்பதைக் கண்டு அவ்வாறு இருக்கக் காரணம் என்னவெனச் சிந்திக்கலானார்.

விஞ்ஞானிகள் தாம் வரையறுக்கும் பிரச்சனைகளுக்கான தொடர்பினை அது சம்மந்தமான நேர்வுகளிலிருந்து எளிமையாக அறிவது சாத்தியமற்ற ஒன்று எனவே நோக்கப்பட்ட பிரச்சனை தொடர்பான தகவல்களைத் திரட்டிக கொள்ளலும் அத்தரவுகளின் தொடர்புகளை விளக்குவதற்கான தற்காலிக விளக்கங்கள் கருது கோள்களென அழைக்கப்படுகின்றன.

உ+ம்; இவ்வாறு சிந்தித்து அதற்கான காரணத்தைக் காண ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் கனடாவிலுள்ள வில்ஸன் மலைகளின் மீது பனிக்கட்டி பாறை பாறையாக உறைந்திருப்பதனையும் அது பச்சையும் நீலமும் கலந்த நிறமாக இருப்பதனையும் கண்டார். இது அவர் திரட்டிய தகவலாகும். பனிக்கட்டியைக் கையில் எடுத்ததும் அது நிறமில்லாதிருந்தது. இதிலிருந்து பனிக்கட்டி ஒளி படுவதன் காரணமாகவே அதற்கு நிறமுண்டாவதாக அவர் முடிவு செய்தார். இது தற்காலிக விளக்கமான கருது கோளாகும்.

கருதுகோள்களை அமைப்பதன் மூலம் ஓர் பிரச்சனைக்கான விளக்கத்தை ஏற்படுத்துவதற்கு வழி கோரப்படுகின்றது. ஒரு பிரச்சனை தொடர்பாக பல்வேறு விஞ்ஞானிகளால் பல்வேறு விதமான கருதுகோள்கள் உருவாக்கப்படலாம். பிரச்சனைக்கான தீர்வினைக் காண்பதற்குத் தற்காலிக விளக்கங்களாக அமைக்கப்பட்ட கருது கோளுடன் தொடர்பான வேறு நேர்வுகளை விஞ்ஞானி தேடுகிறார். அதாவது கருது கோள் உண்மையாக இருப்பதற்கு அவை எவ் அம்சங்களை நிறைவு செய்ய வேண்டுமென்பதை விஞ்ஞானி உணர்கிறார். இவ்வாறு கருது கோளிலிருந்து எதிர்வு கூறலைப் பெறுதல் விஞ்ஞான முறையின் அடுத்த படிமுறையாகும்.

உ+ம்: ஒளி பல பொருட்களில் பட்டுத் தெறிப்பதால் பல நிறங்கள் தோன்றும் என்ற எதிர்வு கூறலை சேர் C.V ராமன் வெளியிட்டார்.

கருதுகோளிலிருந்து பெறப்படும் எதிர்வு கூறல்கள் இயற்கை நேர்வுடன் பொருந்துகிறதா அல்லது இல்லையா என்பதை வாய்ப்பு பார்க்கும் நோக்குடன் விஞ்ஞானி அடுத்த படிமுறையாக பரிசோதனை நோக்கல் என்ற முறைகளைக் கையாள்கிறான்.

உ + ம்: மேற்கூறப்பட்ட எதிர்வு கூறலை வெளியிட்ட சேர் C.V ராமன் அவர்கள் சூரிய ஒளியைக் கருவியின் மூலம் பார்த்தால் 7 நிறங்கள் தோன்றும் என்ற முறையை கவனத்தில் கொண்டு சூரிய ஒளியை நீரின் வழியாகச் செல்லும் படி செய்து கருவியின் மூலம் பார்த்த போது புதிய நிறங்கள் தோன்றின.

எதிர்வு கூறலில் பெறப்பட்ட அம்சங்களும் நோக்கல், பரிசோதனை மூலம் பெறப்பட்ட அம்சங்களும் பொருந்துமாயின் அவ் எதிர்வு கூறல்கள் உண்மையாகும். பொருந்தாவிடில் அவை பொய்யாகும். வாய்ப்பு பார்க்கப்பட்டு ஏற்கப்பட்ட கருதுகோள் அடுத்து மெய்ப்பிக்கப்பட வேண்டும்.

உ + ம்: நிறங்கள் தோன்றின. சில வேளை சில நிறங்கள் சிதறுண்டு இல்லாதிருக்கின்றதோ என சந்தேகிக்கிறார். அதனால் பல நிறங்களாகப் பிரிக்க முடியாத தனி நிறமான ஊதா ஒளியை நீரினூடாகச் செலுத்திப் பார்த்த போது அந்நிறத்தோடு பச்சையும் நீலமும் தோன்றலாயின. இதுவே விளைவு எனப்படுவது அடுத்து வெவ்வேறான தனி நிற ஒளிகள் வெவ்வேறான புதிய நிறங்களை உண்டாக்குவதையும், ஒரே தனி நிறம் வெவ்வேறு பொருள்களின் வழியாகச் செல்லும் போது வெவ்வேறாக மாறுகின்றதென்பதையும் கண்டு பிடித்தார்.

குறிக்கப்பட்ட நேர்வு அல்லது நிகழ்வு ஒன்றினைக் குறித்த ஒரு கருதுகோளை ஏற்படுத்தவல்லது என்றும் வேறு எந்தக் கருதுகோளும் அக்குறிப்பிட்ட நேர்வுகளை ஏற்படுத்த தகுதியற்றது. என்பதை மறை வழியிலும் எடுத்துக் காட்டுவது கருதுகோளை மெய்ப்பித்தல் அல்லது நிலைநாட்டல் ஆகும். அமைக்கப்பட்ட கருதுகோள் வாய்ப்புப் பார்த்தல், மெய்ப்பித்தல் ஆகியவற்றில் ஏற்புடையதாயின் இதுவரை தற்காலிக விளக்கமாக இருந்த கருதுகோள் நிரந்தர உண்மையாக ஏற்றுக் கொள்ளப்படும் அடுத்து நோக்கல் ஆய்வு முறையை நோக்குவோம்.

நோக்கல்:-

ஒரு நிகழ்வு இயல்பாக நிகழ்கின்ற போது அதனை குறிக் கோளுடன் அவதானிப்பது நோக்கல் ஆகும். இயற்கையிலுள்ள நேர்வுகளை உற்று நோக்குவதன் மூலமாகத்தான் இயற்கை பற்றிய அறிவு பெறப்படுகின்றது. இப்படி நிகழ்வுகளை உற்று நோக்கும் போதே குறிப்பிட்ட நேர்வு ஏன் நிழ்கின்றது? அவை ஏன் அவ்வாறு நிகழ வேண்டும் என்ற கேள்விகள் ஆய்வாளரின் மனதில் எழுகின்றன. இதிலிருந்து ''விஞ்ஞான ஆய்வுகளின் ஆரம்ப நிலையே நோக்கலாகும். என்ற முடிவுக்கு வரலாம்

ஆனல் ஆய்வின் ஆரம்ப நிலையில் மட்டுமன்றி தரவுகளைத் திரட்டுகின்ற போதும் கருதுகோள்களை வாய்ப்புப் பார்க்கின்ற போதும் கருதுகோளை மெய்ப்பிக்கின்ற போதும் நோக்கல் கையாளப்படுகிறது. கண்களின் பார்வை மட்டுமன்றி அவ

தானித்தல், உணர்தல், கேட்டல் எல்லாமே நோக்கலாகும் நோக்கலின் போது நிகழ்ச்சிகளில் நாம் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்துவது இல்லை. குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் எவ்வாறு தம்மை வெளிப்படுத்துகின்றனவோ அவ்வாறு அவற்றை நாம் விளங்கிக் கொள்கிறோம்.

விஞ்ஞான நோக்கல் செம்மையாக அமைய அது பின்வரும் விடயங்களை அல்லது பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

1) தெரிவு நெறி

இயற்கையை அல்லது இயற்கையிலுள்ள நேர்வுகளை நோக்கும் போது அங்கு கருதுகோளே அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அத்தோற்றப்பாட்டிலுள்ள நேர்வுகள் அனைத்தையும் தெரிவு செய்யாது அத்தோற்றப்பாட்டுடன் தொடர்புடைய சில நேர்வுகளை மட்டும் தெரிவு செய்து நோக்குலே தெரிவு நெறியாகும். எனவே கருதுகோள் விஞ்ஞான நோக்கலை வழிப்படுத்துகிறது

2) பூரண அறிவு

நோக்கல் எத்துறையில் மேற்கொள்ளப்படுகிறதோ நோக்குபவர் அத்துறை பற்றியதும் இதனுடன் தொடர்புடைய துறைகள் பற்றிய அறிவையும் பெற்றிருத்தல் வேண்டும்.

உ+ம்: நவீன கணனி ஒன்றின் செயற்பாட்டுத்திறனை கணனியியல் நிபுணரினாலேயே அறிய முடியும் அதில் தவறு ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதனைத் திருத்தவும், அவராலேயே முடியும்.

புலன்களுக்கூடாகப் பெறப்படும் புலன்பதிவுகளின் கருத்துக்களை நன்கு புரிந்துகொண்டு பிரச்சனைக்குரிய சரியான தீர்வினை அல்லது விளக்கத்தைப் பெறுவதற்கும் இதுவே அடிப்படையாக அமைகிறது.

3 அகக்காட்சித் திறன்

புலன்களின் உதவியின்றி உள்ளத்தின் மூலம் நிகழ்ச்சிகளில் உள்ள அம்சங்களை அறிந்து கொள்ளல் அகக்காட்சித்திறன் எனப்படும்.

உ+ம் நியூட்டன் என்ற விஞ்ஞானி அகக்காட்சித் திறனின் விளைவாகவே அப்பிள்பழம் கீழே விழுந்த நிகழ்வை கோள்களின் நிலைக்கு ஒப்பிட்டு அவையிரண்டும் ஈர்ப்பின் விளைவாக நிகழ்கின்றன என்பதை அறிந்து கொண்டார்.

இத்திறனைப் பெற்றிருந்ததாலே ஒரு பிரச்சனையுடன் தொடர்புடையவற்றை வெளிப்புற நிலைகளில் இருந்து பிரித்து அறிந்து கொள்ள முடியும்.

4 புலன்களின் செம்மை

விஞ்ஞான நோக்கலை மேற்கொள்பவரது புலன் செவ்வனே இயங்குதல் வேண்டும். அவ்வாறு இயங்கத் தவறின் புலன்பதிவுகள் நிறைவின்றியும் உறுதியற்றும் காணப்படும்.

உ+ம்: கண்ணைப் பொறுத்த மட்டில் தூரப்பார்வை, கிட்டப்பார்வை, நிறக்குருடு, போன்றவற்றால் பாதிப்புறும் ஒருவர் நோக்கலைத்திறம்பட மேற்கொள்ள முடியாது.

5 நடுநிலை மனப்பான்மை.

விஞ்ஞான நோக்கலில் மனம் முக்கிய இடத்தை வகிப்பதால் ஒருவரது விருப்பு, வெறுப்பு என்பவை ஒரு கொள்கையை உறுதிப்படுத்துவதற்குரிய ஆதாரங்களைத் தேடுகின்ற போது பக்கச்சார்பாகச் செயற்படுவதற்கு இடமளிக்கும். எனவே நோக்கல் தவறானதாக அமையும். இதைத் தவிர்ப்பதற்கே நடுநிலை மனப்பான்மை முக்கியமான பண்பாக கணிக்கப்படுகிறது. ஒரு கருதுகோளை உறுதிப்படுத்த ஆதாரங்களைத் தேடும்போது அது தொடர்பான சாதகமான காரணிகளிற்கும், பாதகமான காரணிகளிற்கும் சம முக்கியத்துவம் அளித்து அதனடிப்படையில் செயற்படுவதே நடுநிலை மனப்பான்மையாகும்.

அடுத்து கருவி மூலம் நோக்கலை எடுப்போம் நிகழ்ச்சிகள் இயல்பாக நிகழும் போது ஒரு குறிப்பிட்ட நோக்குடன் அவற்றை கருவி மூலம் அல்லது கருவியின் துணையுடன் பார்ப்பின் அது கருவி மூலம் நோக்கல் ஆகும்.

உ+ம்: i) நுண்ணுயிர்களை நுணுக்குக்காட்டியினூடாகப் நோக்கல்

ii) தொலை நோக்கி மூலம் நட்சத்திரங்கள் கோள்கள் என்பவற்றை நோக்கல்.

கருவி மூலம் நோக்கலை, நோக்கலில் ஒரு வளர்ச்சி பெற்ற முறையாகக் கருதலாம். கருவி மூலம் நோக்கும் போது சரியான முடிவினைப் பெற பின்வரும் நிபந்தனைகள் அவசியம்.

i) கருவிகளை உபயோகிப்பவர் அத்துறையில் பூரண அறிவுடையவராய் இருத்தல் வேண்டும்.

ii) கருவிகள் தொடர்பாக பூரண பயிற்சி உடையவராய் இருத்தல் வேண்டும்.

iii) கருவிகள் நுட்பமானவையாகவும் சரியாகவும் அமைதல் வேண்டும்.

கருவி மூலம் நோக்கலை மேற்கொள்கையில் பின்வரும் பயன்பாடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

i) நோக்கல் புலத்தை விரிவடையச் செய்தல்

எமது புலன்களின் ஆற்றல் ஒரு வரையறைக்குட்பட்டது.

உ ம்: i) மனிதக் காதானது 20 Hz - 20000 Hz அலைநீளமுள்ள ஒலிகளை மட்டுமே கேட்கக்கூடியதாயுள்ளது.

ii) மனிதக் கண்பார்வையின் எல்லை முடிவிலித் தூரமாகும் என கொள்கையளவில் கூறினாலும் தெளிவான பார்வை ஒரு எல்லைக்குட்பட்டே இருக்கும். அத்துடன் கட்புலனால் சிக்கலான ஒளியமைப்புக்களையும் நுண்ணுயிர்களையும் அவதானிக்க முடியாது. மேலும் சூரிய ஒளியிலுள்ள ஏழு நிறங்களை மட்டுமே உணர முடியும்.

எனவே நிறமாலைகாட்டி, நுணுக்குக்காட்டி, தொலைக்காட்டி என்பவற்றைத் துணையாகக் கொண்டு நோக்கல் புலத்தை விரிவடையச் செய்யலாம்.

ii) விஞ்ஞான கருவிகள் திட்டவட்டமான அவதானத்திற்கு அடிப்படையாக அமைகின்றன. எமது புலன்களினால் பெறப்படும் முடிவு செம்மையானதாயும், உறுதி யானதாகவும் இருக்காது ஓரளவிறகு சரியானதாகவே இருக்கும்.

உ+ம்: i) எமது மெய்யுணர்வின் மூலம் உடல் வெப்பநிலையை அவதானித்தால் அதிலிருந்து திட்டவட்டமான வெப்ப நிலையைக் கூற முடியாது. அதே சமயம் உடல் வெப்பமானியைப் பாவிப்பதன் மூலம் சரியான தகவலைப் பெறுவது மட்டுமன்றி உறுதியாகவும் திட்டவட்டமாகவும் அறிந்து கொள்ளலாம்.

ii) இதயத்துடிப்பினை ஸ்டெதஸ்கோப் மூலம் தெளிவாக உணரலாம். இதயத் துடிப்பில் உள்ள குறைபாட்டையும் அறியலாம்.

iii) புலன்களால் அளந்தறிய முடியாத நிகழ்வுகளை கருவிகள் மூலம் திட்டவட்டமாக அறியலாம்.

உ+ம்: ஒரு கம்பியினூடாக மின்சாரம் செல்கிறதா அல்லது பாய்கிறதா என்று புலன்களால் அறியமுடியாது. ஆனால் ஒரு அம்பியர் மானியைப் பாவிப்பதனூடாக மின்சாரம் பாய் வதையும் எவ்வளவு அலகு பாய்கிறது என்பதையும் அறியலாம்.

❋ வெளிநாட்டு வியாபாரத்தில் ஏற்றுமதியாளருக்கும், இறக்குமதியாளர்க்கும் இடையில் பொருட்களுக்கு விலை இடுவதன் மூலம் ஏற்படும் உடன்படிக்கையே இன்கோரம்ஸ் (Incoterms) என அழைக்கப்படும்

சமூக விஞ்ஞானத்தில் புள்ளிவிபரவியலின் பங்கு

பெ. யூலியற் வதனி
வருடம் 13 (வர்த்தகம்)

விஞ்ஞானம் என்ற பதம் இன்று பரந்த பொருளில் கையாளப்படுகிறது. கி.பி. 16ம் 17ம் நூற்றுண்டுவரை இயற்கைத்துறைகளையே விஞ்ஞானம் என ஏற்றுக் கொண்டனர். கி.பி 18ம் நூற்றுண்டில் இருந்தே சமூகத்துறைகளையும் அறிவியற்றுறைகளாக ஏற்றுக் கொள்ளத் தொடங்கினுர்கள். எனவே சமூக விஞ்ஞானங்கள் மிக நீண்ட காலத்திற்குப் பின்பே விஞ்ஞானங்களாக அங்கீகரிக்கப்பட்டன. இவ்வாறு அண்மைக் காலங்களில் விஞ்ஞானம் என ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக விஞ்ஞானம் பற்றியும், இந்த விஞ்ஞானத்தின் செம்மையான ஆய்விற்கும், அதன் வளர்ச்சிக்கும் உதவுகின்ற புள்ளிவிபர முறையின் முக்கியத்துவம் பற்றியும் ஆராய்வோம்.

சமூக விஞ்ஞானங்கள் எனப்படுபவை சமூகம் பற்றி ஆராயும் துறைகளாகும். அது சமூகம், தனிமனிதன், அவன் நடத்தைகள், விருப்பு வெறுப்புக்கள், அவனேடு தொடர்புபட்ட அம்சங்கள் என்பன பற்றி ஆராயும் துறைகளைக் குறிக்கும். பொருளாதாரம், வர்த்தகம், சமூகவியல், மானிடவியல், வரலாறு, அரசியல் போன்றன சமூக விஞ்ஞானத்திற்குள் உள்ளடங்கும் துறைகளாகும். சமூக விஞ்ஞானத்தில் செம்மையான ஆய்வுகளை மேற்கொள்வதில் பல இடர்பாடுகள் தோன்றுகின்றன.

1. சமூகத்துறைகள் அகவயப்பண்பு வாய்ந்தவையாகவும், பகுத்து, வகுத்து, தொகுத்து ஆராயக்கூடிய வாய்ப்புக்கள் குறைவாகவும் அமைந்துள்ளன.

2. தனிமனித நடத்தைகள், அவனேடு தொடர்புபடும் அம்சங்களை உள்ளடக்கியதாக விடய இயல்புகள் அமைவதால், பொதுமைப்பாடுகள் உறுதியற்றன ஆகும். எனவே எதிர்வுகூறல் நிச்சயத் தன்மைவாய்ந்தது அல்ல.

3. ஆய்வாளனும் ஆய்வு செய்யப்படும் விடயமும் ஒன்ருக அமைவதால் நடுநிலை மனப்பான்மையைப் பேணுதல் கடினமானதாகும்.

4. சமூக நிகழ்ச்சிகளை நிர்ணயிக்கும் காரணிகள் பலதாகவும், தெளிவற்றதாகவும் அமைவதால் ஆய்விற்கு வேண்டிய தகவல்களைப் பெறுவதில் பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

5. சமூகத்துறைகளில் ஆய்வை ஒரே நேரத்தில் உடன்பாடாகவும், எதிர்மறையாகவும் மேற்கொள்ள முடியாது.

எனவே இத்தகைய சமூக விஞ்ஞான ஆய்வுகளில் ஏற்படும் இடர்பாடுகளைத் தவிர்க்கும் நோக்குடன் புள்ளிவிபர முறை அறிமுகமானது எனலாம். புள்ளிவிபரவியலின் வளர்ச்சி வேகத்தால் சமூக விஞ்ஞானங்களின் வளர்ச்சி வீதமும் அதிகரித்து வந்துள்ளது.

புள்ளிவிபர முறை என்பது சமூதாயப் போக்குகளையும் இயற்கைப் போக்குகளையும் ஆராய்வதற்கும், ஆராய்ச்சிகளிலும் நிர்வாகத்திலும் முடிவுகள் எடுப்பதற்கும் ஆதாரங்களைக் காண்பதற்கும் கையாளப்படும் ஒரு வகை விஞ்ஞான ஆய்வு முறையாகும். இயற்கை விஞ்ஞான ஆய்வில் பரிசோதனை எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றதோ, அதேபோன்று சமூக விஞ்ஞான ஆய்வில் புள்ளிவிபர முறை முக்கியத்துவம் பெறுகின்றது சமூகவிஞ்ஞானத்தில் எவற்றிற்கு எண் உருவம் தர முடியுமோ அங்கெல்லாம் ஆய்வுகளை நடாத்தத் துணை புரிவது புள்ளிவிபர முறையே ஆகும். புள்ளிவிபர முறை சமூகத்துறைகளிற்கு புறவயப்பண்பை வழங்குவதுடன் அவற்றை நன்கு பகுத்து, வகுத்து, தொகுத்து ஆராயக்கூடிய துறையாகவும் மாற்றுகின்றது.

புள்ளிவிபர முறை பின்வரும் அடிப்படையில் அமையும் போது செம்மையான முடிவுகளைப் பெறல் இலகுவாகின்றது.

1. ஆய்விற்கு எடுக்கப்பட்ட விடயத்தில் எத்தகைய ஈடுபாடோ மனலயிப்போ இல்லாது நடுநிலை வகித்தல் வேண்டும்.

2. உண்மையை எடுத்துக்கொள்ளல் வேண்டும்; தான் நம்பியவற்றைக் கூறக்கூடாது.

3. கையாளும் முறைகளை ஒப்பிட்டுப் பார்த்து, சரியானதைக் கண்டுபிடித்து, தகுந்த முறையை தக்க ரீதியில் கையாளல் வேண்டும்.

4. நோக்கம் தூய்மையானதாக இருக்க வேண்டும்.

இத்தகைய புள்ளிவிபர முறை பின்வரும் பயன்பாடுகளை சமூக விஞ்ஞானத்திற்கு வழங்குகின்றது.

1. தரவுகளைத் திரட்டி மாதிரிகளாகக் கொண்டு பல கருத்துக்களை விபரிக்க புள்ளிவிபர முறை உதவுகின்றது. சமூக விஞ்ஞானங்களில் தரவுகளைப் பெறுவதற்குப் பெரும் பாலும் மாதிரித்தேர்வு முறை பயன்படுகின்றது. திரட்டப்பட்ட தரவுகளை ஒழுங்கு படுத்தவும், அட்டவணைகள் வரைபுகள் மூலம் விளக்கவும், ஒப்பிடவும், புள்ளிவிபர முறை உதவுகின்றது.

உதாரணமாக குடித்தொகைக் கணிப்பீட்டை எடுத்துக்கொண்டால் ஒரு குறிப்பிட்ட காலக் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு குடிசன அதிகரிப்பு' வீழ்ச்சி, பிறப்பு வீதம், இறப்பு வீதம், மதம், மொழி பற்றிய விடயங்களை விபரிப்பதாகப் புள்ளிவிபர முறை அமைகின்றது. இதேபோல் வங்கி அறிக்கைகளிலும் உள்நாட்டு வருமானம், வருமான ஏற்றத் தாழ்வுகள், உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு, கைத் தொழில் அபிவிருத்தி, சுகாதாரத் துறைகள், விவசாயத் துறைகள் போன்ற சமூகத்துடன் தொடர்புபடும் அம்சங்களை விபரிப்பதாகப் புள்ளிவிபர முறை அமைகிறது.

2. விஞ்ஞான முறையின் சிறப்பு பண்பான எதிர்வுகூறல் பண்பை சமூக விஞ்ஞானங்களிற்கு புள்ளிவிபர முறை அளித்துள்ளது, திரட்டிய தரவுகளை வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் நிகழப்போகின்ற விளைவுகளையும், மாற்றங்களையும், முன் கூட்டியே அறியக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. திட்டமிடல், பொருளாதாரம், அரசியல், காலநிலை ஆகிய துறைகளில் இப்பயன்பாடு முக்கியம் பெறுகின்றது.

உதாரணம் :- சனத்தொகைக் கணிப்பீட்டை எடுத்துக்கொண்டால் எதிர் காலத்தில் சனத்தொகை எவ்வளவு இருக்கும் என்றும், அதன் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்றும் தற்பொழுது உள்ள புள்ளிவிபரங்களை வைத்துக் கொண்டு கூறுதல்.

3. திரட்டிய தரவை வைத்துக்கொண்டு நீண்டகால நோக்கில் கொள்கைகளை, விளக்கங்களை அமைக்க புள்ளிவிபர முறை உதவுகின்றது. சிக்கலான ஆய்வுகளில் பரந்தளவிலான விளக்கத்தைப் பெற இம்முறை பயன்படுகின்றது. இத்தகைய பயன் பொருளியல், சமூகவியல், அரசியல் போன்ற துறைகளில் பொது முடிவைப் பெற உதவுகின்றன.

4. எதிர்வுகூறும் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு எதிர் காலத்திற்கான திட்டமிடலை மேற்கொள்ள புள்ளிவிபர முறை பயன்படுகின்றது. திரட்டப்பட்ட மாதிரியை தரவுகளாக எடுத்துக்கொண்டு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று திட்டமிட உதவுகின்றது

உதாரணமாக :- அரசின் ஐந்து ஆண்டுத் திட்டம், பத்து ஆண்டுத் திட்டம் துரித மகாவலித் திட்டம் என்பவை புள்ளிவிபரத்தை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற திட்டங்களாகும்.

5. பெறப்பட்ட தரவுகளை வைத்துக் கொண்டு அதனூடாக என்ன விளைவு நிகழப்போகின்றது. என வெளிப்படுத்தவும், குறிப்பிட்ட விளைவுகளை வைத்துக் கொண்டு அவற்றிற்கான காரணங்களை விளக்கவும் இம்முறை உதவுகின்றது. காரணகாரிய பயன்பாட்டை பொறுத்தவரை பரிசோதனையே சிறந்த முறையாக இருந்தாலும் சமூக விஞ்ஞான ஆய்வில் புள்ளிவிபர முறையும் சிறந்த முறையாகக் கருதப்படுகின்றது.

உதாரணமாக :- தேசிய வருமானப் பற்றுக்குறை, மெய்வருமான வீழ்ச்சி, போன்றவற்றில் புள்ளிவிபர முறையின் காரணகாரியத் தொடர்பு பயன்படுத்தப்படுகின்றது.

6. திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஓர் குறிப்பிட்ட காலத் தரவுகளை இன்னுமொரு காலப்பகுதியுடன் ஒப்பிடுவதற்குப் புள்ளிவிபரங்கள் பயன்படுகின்றது. பொருளாதாரம், சனத்தொகை மதிப்பீடு போன்றன இவ்வாறு ஆராயப்படுகின்றது.

சமூக விஞ்ஞானத்தில் நிகழ்வுகளை கட்டுப்படுத்த கூடியாததால் ஆய்வுகூடப் பரிசோதனையை மேற்கொள்ள முடியாது எனவே நிகழ்ச்சிகள் இயல்பாக நிகழும் போது அவை பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டு சமூக விஞ்ஞானங்கள் கருதுகோளை ஆக்கவும், உறுதிப்படுத்தவும், சரி பார்க்கவும் புள்ளிவிபர முறை உதவுகின்றது.

உதாரணமாக :- கேள்வி நிரம்பல் கோட்பாடு குறைந்து செல்லும் விளைவு விதி என்பவை புள்ளிவிபர முறையின் அடிப்படையில் விளக்கப்படுகின்றன. மேலும் குடிசன மதிப்பீடு, வாழ்க்கைச் செலவு, வாழ்க்கைத் தரம், உணவு உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி போன்ற சமூக நடத்தைகளை விளக்குவதிலும் புள்ளிவிபரவியல் பெரும் பங்கு வகிக்கின்றது.

றெடிமேட்
சென் பீற்றர்
ஜகா
றங்குலர்
யாணிஹறு
கொட்ரேய்
டெனிம்
ரவுசர்கள்

ஆடவர் ரசனைக்கேற்ற

அலங்காரப் பொருட்கள்

மொத்தமாகவும் சில்லறையாவும்
பெற்றுக்கொள்ளலாம்

கோல்ட்லீவ்
ஜவாரிஜே
லையன்
ஆம்ஸ்ரில்
ஜொன்சன்
சேட்வகைகள்

ஹப்பி
ரெக்ஸ்ற்

149, 168 நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

போன்: 24197

போன்: 22056

கிளை : 2ம், கட்டிடம்,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

கிளை : இல. 104
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 23794

செல்லையா சிவபாதலிங்கம்

வைரக்கல் நகை வியாபாரம்

ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்

220 A. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

NIPON

நிப்பொன்

* தளபாட விநியோகஸ்தர்கள்

131, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வணிகத்தளிர் மென்மேலும் புதுப்பொலிவுடன் வெளிவர

எமது நல்லாசிகள்!

ஹோம் நீட்ஸ்

Home Needs

278, 280, (402) K. K, S. Road,
JAFFNA.

Haran

Textiles & Fancy Goods

Palaly Road, (Thirunelvely Junction) Thirunelvely.

சேட்டிங், சூட்டிங், T சேட்
ஆண்கள் பெண்களுக்கான
றெடிமேட் ஆடைகளையும்
மங்களகரமான வைபங்களுக்குரிய
அன்பளிப்புப் பொருட்களையும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள

ஹரன்

ரெக்ஸ்ரைல்ஸ் அன் பான்சி குட்ஸ்

பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி.



Ravi
AND
Rajh Silks

Remember to visit

For your requirements of
SHIRTINCS, SUITINGS, SAREES,
READY MADE SHIRTS, TROUSERS,
& LADIES READY MADE ITEMS

Phone : 22378

77, Grand Bazaar,
" Ragu Raman Building "
JAFFNA.

தரம் மிக்க

சீ ஐ சீ பெயின்ற்

வினியோகஸ்தர்

த. இராசையா அன் சன்

T. RASIAH & Son

Dealers in : C I C PAINTS

23/10, Stanley Road,

Jaffna.

Phone ; 23898

RAJI ENTERPRISE

24, Modern Market,

Jaffna.

Wholesale & Retail Dealers

In

Ladies Gents

&

Children Apparels

For

UP TO DATE AND
MOST HIGH CLASS

Fashionable

Selection

Pleasse Visit:

G. S. Linganathan & Co.

Textiles Merchants

13, 14 Grand Bazaar,

Jaffna.

For Quality Video Filming

video vihons

353C, Clock Tower Road,
Wellington Junction,
Jaffna.

சிறந்த முறையில்

வீடியோ படம் பிடித்திட

வீடியோ விஹொன்ஸ்

வெலிங்டன் சந்திக்கும்
பெருமாள் கோவிலுக்கும் இடையில்

353 C, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

For your

Bridal Requirements

SHIRTING

SUITING

Baby Suits

New Design

SAREES

and all kinds of

Blouses

in any colours.

Rasi Silks

70, Modern Market (Inside),

Jaffna.

ராசி சில்க்ஸ்

70, நவீன சந்தை (உட்புறம்),

யாழ்ப்பாணம்.

திருமண வைபவங்களுக்கேற்ற

காஞ்சிபுரம், மணிப்புரி

பட்டு வேட்டி, சேட்டிங், சூட்டிங்,

பேபி சூட்

புதிய டிசைனின் சாறி வகைகள்

சாறிகளுக்கேற்ற

எல்லா நிற எல்லா வகையான

பிளவுஸ் துணிகள்

யாவற்றையும் பெற்றுக்கொள்ள

புதிய ராசியான

ஸ்தாபனம்

ஆடவர், மகளிர், சிறுவர்

சிறுமியர்க்குத் தேவையான

சகல

பாதணி வகைகளை

எண்ணம்போல்

தெரிவுசெய்திட

சிறந்த ஸ்தாபனம்

பிராங்

எம்போறியம்

(BATA)

16, (38) கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

தரமான

தமிழ்ப் படங்களை

வாடகைக்குப் பெறவும்

சிறந்த முறையில்

வீடியோ

படப் பதிவுகளுக்கும்

வீடியோ

விமல்

117, மானிப்பாய் வீதி,

ஐந்து சந்தி (மேல்மாடி)

யாழ்ப்பாணம்.

With the Best Compliments

of

Arul Electricals

ELECTRICAL CONTRACTORS
ENGINEERS & MERCHANTS

110, STANLEY ROAD,
JAFFNA.

கேக் தயாரிப்புக்குத் தேவையான
இறக்குமதி செய்யப்பட்ட

- சுல்தானஸ் (Four Crown Australian)
- கரண்ஸ் (Australian)
- வைற் நேசன்ஸ் (with Seed & Seedlese)
- ஈச்சம்பழம் Dates (white)

இலங்கையில் மிகவும் முன்னேடிகளால் தயாரிக்கப்பட்ட

- சாள்ஸ் தயாரிப்புக்கள் (Charles Products)
- செரிஸ், கண்டிபீல், ஜிஞ்சர், சவ்சவ்
- புள்தோசி, ஜாம் வகைகள்
- ரவை, பேக்கிங் பவுடர்
- ஐசிங் சுகர், சொல்ற் சுகா
- கஜு, கொக்கோ பவுடர்
- ஒஸ்ரேலியா மாஜரின்
- அஸ்ரா மாஜரின்
- அன்கர் பட்டர்

குளிர் பானத்திற்கேற்ற
இறக்குமதி செய்யப்பட்டதும்
உள்ளூர் தயாரிப்பும்

- கோடியல் ❧ எமல்சன் வகைகள்
- கேக் அலங்காரப் பொருட்கள் (Cake Decoration)
- அன்பளிப்புப் பொதிப் பேப்பர்

இறக்குமதி செய்யப்பட்டதும்
உள்ளூர் தயாரிப்பும்

- கேக் எசன்ஸ்
- கலரிங் வகைகள்

ஆகிய பொருட்களை ஒரே இடத்தில் மிக மலிவாகவும் தரத்தில் சிறந்தாகவும் பெற்றுக்கொள்ள

இன்றே நாடுங்கள் :

பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்

223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 24823

தலைமை அலுவலகம் :
18/1, டாம் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி ! 26235 & 549269

வணிகத்தளிருக்கு
எமது நிறுவனத்தின்
நல் வாழ்த்துக்கள்

வஸ்தியன் அச்சகம்

யாழ்ப்பாணம்.

அச்சக வேலைகளில் முன்னோடி

கலை, வர்த்தகக் கல்லூரி

★ C. C. A.

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

G. C. E. A/L கலை, வர்த்தக வகுப்புக்கள்
நடைபெறுகின்றன

எமது விரிவுரையாளர் குழு

பொருளியல்	—	வரதராஜன்
வர்த்தகம்	—	ரட்ணம்
கணக்கியல்	—	ஸ்ரீ
அளவையியல்	—	S. S- மனோகரன்
தமிழ்	—	குழந்தை
இந்து நாகரீகம்	—	கிருஷ்ணு
புவியியல்	—	சண்

பொருளியல் கல்வி நிலையம்

200, பிரதான வீதி, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

. வரதராஜன்

பிரத்தியேக வகுப்புகள்

கணக்கியல்

ஸ்ரீ

393/47, கோவில் வீதி. நல்லூர்,

பிரத்தியேக வகுப்புகள்

வர்த்தகம்

ரட்ணம்

211/21, கோவில் வீதி, நல்லூர்.